# மெஞ்ஞான

# பரிபூரணக்

# களஞ்சியம்.

1937.

841.6
மஞ்ஞா
SL|PR

கம்பளை
கி.மு.நல்லதம்பி பாவலர்
விட்டுச் சென்ற இந்நூல்கள்
அன்னாரின் ஞாபகார்த்தமாகக்
கொழும்புத் தமிழ்ச்சங்கத்திற்கு
அன்பளிப்பாக அன்னாரின்
குடும்பத்தாரால்
22.09.2002 அன்று
வழங்கப்பட்டது

நூரே இலாஹி.

# மெஞ்ஞான பரிபூரணக் களஞ்சியம்.

இஃது
முத்துப்பேட்டை
பிரஹ்மானந்த மெஞ்ஞான சொரூபர்
அல்காமில் ஆரிபுபில்லாஹி
**பீர் முஹம்மது மஸ்தான் பாவா**
அவர்கள் திருவாய் மலர்ந்தருளியது

இஃதை
கோயமுத்தூர் ஜில்லா, தாராபுரம் தாலுக்கா
அலங்கியம், வித்துவான்
சா. காதிறு சாஹிபு புலவரவர்களால்
இலக்கண மிலக்கியமியைப் பரிசோதித்து

கண்டி, சிலோன்
பிரஹ்மானந்த சங்கத்தாரின்
நன் முயற்சியால்,

சென்னை திருவல்லிக்கேணி
ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸில்
பதிப்பிக்கப்பட்டது.

(முதற் பதிப்பு.)
1937.

இதன் விலை ரூ. 1. சதம் 25. ரூ. 1-4-0.

Registered Copy-Right.

26802
841.6
100031
84



பீர் பாவா.

நூரே இலாஹி

## மெஞ்ஞான பரிபூரணக் களஞ்சியம்

# முகவுரை.

இப் பிரபஞ்சமானது! பிரகிருதி இயற்கையால் சமைந்த சகல தோற்றங்களும், பல வேறு பாடாகிய நாநாவித பஞ்சகிர்த்தியங்களும் நிறைந்த இப்பூவுலகத்தின் கண் இறைவனருளால் அவ்வக்காலத்தில் பல மதத்தலைவர்கள் தோன்றி அத்வைத மார்க்கங்களை மக்களுக்கு ஞாபகமூட்டி வந்திருக்கின்றனர். அத்துடன் ஒவ்வொரு மதத்தலைவர்களும் தாம் அடைய வேண்டிய உயர்வான லட்சியத்தை அடைந்து கண்ட அநுபவங்களை அருள் நிறைவான திருவருளால் அநேக அருமறை வாக்கியங்களில் நிறைத்தும், தாம் தாம் அடைந்த அநுபவ லக்ஷியத்தை மக்களனைவருமடைய வேண்டியே பொது வாக்கியங்களாகச் செய்தும் மனித சுபாவ மிழந்து மாக்களைப்போல் இழிந்த குணம் படைத்து மனம்போன போக்கிற் றிரிந்துழலும் துவித குணமுடைய யுவர்களுக்கு துவிதம் நீக்கி அத்வைத (தவ்ஹீதும்) எய்தி அருள்மய நிலையில் ஆநந்தித்து இரண்டறக் கலக்கும் இயல்பாகிய மகா ஞான தீபத்தை மலைமேல் யேற்றி வைத்தார்கள். இம்மகான்களின் நோக்கம் யாவும் ஒன்றிற் கொன்று முரண்பட்ட முறையாக இல்லை யென்பதை அநுபவ வாயிலாக அறிந்த அறிவிற் சிறந்த ஆன்றோர்கட்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும்.

இறையருளாலேற்பட்ட எண்ணிறந்த பிறவிகளில் மானிடப்பிறவியே மகா மேன்மை லட்சியத்தை யடையக் கூடியது. இம்மனிதப்பிறவியான மக்களிலநேகர் தன்னை யறிந்து தன் தகுதி நிலையடையும் தன்மையை இழந்து துவிதபாவனையால் ஸ்தூல பஞ்சமாப் பூத அறிவிற் சிக்குண்டு ஐயறிவுடைய மிருகாதிகளின் குணமாகிய சிற்றின்ப நுகர்ச்சியே பெரிதென வெண்ணி இரவு பகலாக இணைப்பட்டு தீபத்தில் விழுந்திறக்கும் விட்டிலைப்போல் திகைத்து விழுந்து மடியுந்தன்மையில் நம்முன்னோர்களாகிய மகாதவமுடைய மெய்யடியார்கள் தங்களின் அநுபவ ஞான முறைகளைக் கூறிய வேதாந்த நூல்களையுணர்ந்து நற்கதியடையும் மெய்வழி மார்க்கத்தை விடுத்து மனிதர்கள் ஒவ்வொரு சமுகமாகவும், ஒவ்வொரு வருணமாகவும் பேதப்படுத்திப் பிரிந்து மேலான வேதாந்த தத்துவ ஞான சிந்தனை மறந்து தாம் தாம் பின்பிற்றிய மதமே பெரிதென வெண்ணி லௌகீக வேறுபாட்டால் மதத் தர்க்கங்களும், மதத்துவேஷங்களும் மலிந்து மாதவமின்றி மாய்கையாலுழன்று மனித சமுகமானது நசித்து வருவதை யுணர்ந்து மனங்கசிந்து மக்கள்யாவரும் தன் சுயத்தை யடையவும் லட்சியத்திற்குறிய ஞான மார்க்கத்திலீடு படுவதற்குரிய" மெஞ்ஞான பரிபூர்ண களஞ்சியம் என்னும் இந்நூலைப் பரோபகாரமாய் வெளியிடத் திருவருளின் அநுக்கிரகத்தால் வெளியிட்டுள்ளேன்.

உயர்வான அருள்நிறைந்த உத்தமகுண தவத்தோர்களான தீர்க்கதரிசி நபிமார்கள் ஆரிபீன்கள் முதல் அத்வைத மகான்கள் அடங்கலும் அறிவுறுத்திய விஷயங்கள் யாவும் ஒன்றேயல்லாதுவேறில்லை. போதகர்களான மகான்கள் ஏகதத்துவமுள்ள இறைவனுக்கு எண்ணிறந்த நாமரூப பேதங்களை யேற்படுத்திய கற்பனைகள் யாவும், உயரிய



அறிவு நிலையாகிய எல்லையில்லா அருள் அமூர்த்தத்தை உபமான உபமேயங்களா லுணர்த்தி நாமரூப பேதமான துவித மிறந்து அத்வைத (தவ்ஹீது) உண்மைஞான நிலையை யடைவதற்கேதுவேயன்றி வேறில்லை.

"தன்னையறிந்தவன் தலைவனையடைவன்" யென்பது சகல மதங்களிலுமுள்ள முக்கியமான மூலவாக்கியமாகும். இவ்வழிக்கு இழுப்பதே இறையருள்கொண்ட இனத்தாருக்குடைய இனிய தொண்டாகும். மதவேறுபாடின்றி மார்க்கத்தின் மறைமுகமான மூல தத்துவ ஞான சூட்சங்களை உலக மக்களனைவோரும் எளிதிலுணர்ந்து தானடைந்த ஆத்மார்த்த லட்சியத்தை யடையுமாறு துவிதமற அத்வைத (தவ்ஹீது) நிலையை உணர்த்தி மக்களை அருளடையச் செய்வது துவிதபாவமிறந்த அத்வைத (தவ்ஹீது) நிலையையடைந்த அருளுடையோரின் அநுக்கிரகமாகும்.

ஆதலால் இந்நூலில் மக்கள் யாவரும் எளிதில் அப்பியாசித்து ஆத்ம ஞான ஸ்வாநுபூதி யடைவதற்குறிய அநேக அநுபவலட்சியமும், ஆத்மார்த்த அறிவின் விளக்கமும், அத்வைத(தவ்ஹீது) நிலையியல்பும், அருள் நிகழ்ச்சியும், அமூர்தகலை அநுபவமும், திருவருட்காட்சியும், மாயா மனம் லயப்படும் மார்க்கமும், இல்லறம் நடத்த இனிய சோடசமும், சந்தேக நீக்கமும், ஒழுக்கரத்தினமும், உயர் ஞான வினா விடையும், ஆநந்தக்களிப்பும், அருள் பெறுங் கண்ணிகளும், தாக்கற்ற ஞானத்தனிநிலைத்திரட்டும், வாக்கியம்பலதும் வருங்குணத்திருத்தமும், பத்தியாபத்தியம்பகர் யோகப்பியாசம், இறைவனருள் துதியும், இன்னருள் விளக்கமும், அருள்மிகு ஆன்றோர்கள் துதியும், நோக்கிப்பார்த்தவர் நூல் முறை தெளிவுங்கண்டு; தேறித் தெளிந்து மாத

வம் புரிய மாய்கை நீங்கி மனமருள் பெற்று தீதெல்லாம கன்று தினமருள் சுரக்கும் திருவருள் ஞானம் தினமது அடைய குருவருள் நாடிக்குணமுடன் சொன்னேன்.

இப்புத்தகத்தை ஊன்றிக் கவனித்து உண்மையறிந்து உயர்பக்திகொண்டு ஒழுகி நடப்பவர் தங்களுக்கு ஏகத்துவ மான எல்லையில்லா அருட்பெருஞ் சோதி அகண்டிதா கண்ட அருள் வெள்ளத்தில் அணையிலா ஆனந்தமடைவர்.

இன்னமும் உலகோர் உய்யுமாறு ஆத்மார்த்த ஞான போதனை களடங்கிய ஞான நூல்களை வெளிப்படுத்துவதற் கும், சாதனம்செய்யும் சாலீக் முமூக்ஷிக்களுக்கும், உறிய தவஸ்தான மென்னும் ஆச்சிரமம் ஒன்று அமைக்க யெண் ணங் கொண்டிருப்பதால் அதற்குவேண்டும்பொருளை அன் பர்கள் யாவரிடத்திலும் கேட்பதற்கு காலவசதியின்மை யால் இந்ததர்ம கைங்கரியத்திற்கு உதவிசெய்ய எண்ணும் அன்பர்கள் யாவரும் இந்நூலை வாங்கியும் தங்கள் மூலம் பிறருக்கு வாங்கிக் கொடுத்தும் பொருள் கொடுத்துதவினால் தங்கள் தங்கள் தரும கைங்கரியத்திற்குத் தக்க பலனை யடைவீர்கள்.

“ தர்மகாரியந்தானே அருள்தரும் இஹ்சான் செய் வார்க்கு இறையருள் இணங்கும். ” ஆமீன்.

மீராம் மக்காம்
தர்கா,
கண்டி, சிலோன்.

இங்ஙனம்,

பீர் முஹம்மத், காதிர்பாவா.

நூரே இலாஹி

ழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

மெஞ்ஞான பரிபூரணக் களஞ்சியம்

# விஷய அட்டவணை.


| விஷயம். | பக்கம். | விஷயம். | பக்கம். |
|---|---|---|---|
| முகவுரை .... | ரு | இரண்டறக் கலத்தல் | 71 |
| சாற்றுக்கவி - பாயிரம் | கூ | தன்தர மறிதல் .... | ஷெ |
| சிறப்புப்பாயிரம் .... | 1 | சங்கற்ப ஒடுக்கம் .... | ஷெ |
| கடவுள் வாழ்த்து .... | 9 | அகண்ட நிலையெய்தல் | ஷெ |
| குருவணக்கங்கள் .... | 11 | துவிதமற நிலைத்தல் .... | 72 |
| அறிவான தெய்வம்.... | 19 | சித்தத்தின் பெருமை | ஷெ |
| திருவாணு நந்தம் .... | 25 | குருவருள் நாடல் .... | ஷெ |
| சச்சிதா நந்தம் .... | 31 | பல நூல் கற்றல் .... | 73 |
| ஞான அனுபவச் | | உயர் குருவை | |
| சுருக்கம் .... | 34 | யடைதல் .... | ஷெ |
| சந்தேக விளக்கம் .... | 43 | சற்சீடனுகுதல் .... | ஷெ |
| அமிர்தகலை ஞானச் | | குருவருள் பெறல் .... | 74 |
| சுருக்கம் .... | 50 | காரியக் குரு .... | ஷெ |
| மனலயக் குறிப் | | காரணக் குரு .... | 75 |
| பனுபவமுறை .... | 55 | நூல் விசாரணை .... | ஷெ |
| சோடச ஞானச் | | திகைப்பின்றித் | |
| சுருக்சம் .... | 61 | திடம்பெறுதல் .... | 76 |
| காட்சி நிலை சுருக்கம் | 66 | வாசனைத் தொடர் .... | 77 |
| அத்வைத உண்மைப் | | கனவின் பற்றறல் .... | ஷெ |
| போதம் .... | 69 | ரவிமதி மறத்தல் .... | ஷெ |
| ஸ்தூலம் மறத்தல் .... | 70 | ஒடுக்க நிலை .... | 77 |
| மாயை விலக்கல் .... | ஷெ | அருள் மயக்கு .... | 78 |
| வேத உணர்வு .... | ஷெ | சாதனை வேண்டும் .... | ஷெ |
| அரூபவுணர்ச்சி .... | ஷெ | ஆசை வெறுத்தல் .... | 79 |

| விஷயம். | பக்கம். | விஷயம். | பக்கம். |
|---|---|---|---|
| அறிவின் மகிமை .... | 79 | ஐமணிக் கண்ணி .... | 136 |
| சாதிபேத விலக்கு .... | 80 | எந்நாள் கண்ணி .... | 139 |
| மாறுபி மானம் விடல் | ஷை | நந்தீஸ்வரிக் கண்ணி | 147 |
| கற்பைக் காத்தல் .... | 81 | ரஹ்மான் கண்ணி .... | 155 |
| உண்மைப் பக்தி .... | ஷை | யாரஹீம் கண்ணி .... | 159 |
| மரணத்தின் ரகசியம் | ஷை | லைலா மனோன்மணி கண்ணி .... | 167 |
| சிதாகாய நிலையின் பெருமை .... | 83 | ஆநந்தக் களிப்பு .... | 175 |
| யோக விதி .... | 84 | மனவசை வற தரித்தல் | 178 |
| அடயோகம் விலக்கல் | ஷை | சித்தந்தெளிய .... | 180 |
| சிவராஜயோக மகிமை | 85 | மனதோடு களித்தல் | 182 |
| ஒழுக்கரத்தினம் .... | 86 | ஞான மயில் களிப்பு | 184 |
| ஆநந்தக் களிப்பு .... | 89 | இறைவன் முனாஜாத்து | 187 |
| மெஞ்ஞான அருள் வளம் .... | 93 | வேத நாயகர் முனாஜாத்து | 191 |
| திரு மயக்கண்ணி .... | 104 | பொது விருத்தம் .... | 194 |
| அருண்மயக் கண்ணி | 112 | குத்துபு நாயகர் முனாஜாத்து .... | 195 |
| திருவாநந்தக் கண்ணி | 120 | பொது விருத்தம் .... | 198 |
| சைதன்னியக் கண்ணி | 124 | ஞான சல்லாப மணி. | 199 |
| தற்பரன் கண்ணி .... | 128 | | |


விஷய அட்டவணை முற்றிற்று.

---

நூரே இலாஹி.

செவ்வல்மா நகரம் மகாவித்துவான்

பல ஞான நூல் உரையாசிரியர்.

தமிழ் சாஸ்திர நிபுணர்

**M. A. நெய்னுன் முஹம்மது பாவலர்**

அவர்களால்

கொடுத்தருளிய

# சாற்றுக்கவி-பாயிரம்

## அறுசீர் ஆசிரிய விருத்தம்.

பருதிமதி ககனருசும் குறுசொடு லவ்குக்கலமும்
பஞ்ஞீர் ஆர்ந்த
கருங்கடலுந் தடவரையும் கண்ணகல் ஞாலம்முழுதும்
கவினச் செய்வான்

சுருதிறசூல் நூறுலஹ்மதை யருளிஅதன் பொருட்டால்
சுடரை யூன்றித்
திருமணியின் அமுதூட்டி ஜெனனமுத்தி யடைவதற்கு
சிரேஷ்ட நூலாய் 1

அஞ்ஞான விருட்டரைக்குட் கிடந்துழலும் அந்தகரின்
அகக்கண் யாவும்
விஞ்ஞானப் பரஞ்சோதித் திறவுகோல்கொடு திறந்து
வெளிச்சங் காட்டி

சுஞ்ஞான அத்துவித துவிதநிலை நேர்நேராய்ச்
சுடர்விட் டோங்க
மெஞ்ஞான பரிபூர்ணக் களஞ்சியமென் றொருபெரிய
விளக்கைத் தந்தார் 2

நத்தைகூலுளைந் துயிர்த்த ரத்னமணிக் குழாமிலங்கு
நன்னீ ரோடை
முத்துநகர் மஹான்காதிர் பாவாவின் தபோபலத்தின்
முத்தி மைந்தர்
சத்துச்சித் தானந்தவம் பொக்க வாராய்ந்து
தபோ தனத்தின்
வித்தைவிர விக்கொண்டு வானந்தக்கடல் மிதக்கு
மேன்மை யோகி 3

பெருங்குலத்திற் பெருஞ்ஜனத்திற் பெருந்தனத்தில்
பெரும்வாழ்விற் பிரியா ரேனும்
கருங்கடலிற் பிறந்தவரோ மீனுப்புக் கலவாத
காட்சி போலும்

அருகிருந்து மில்லையென வகிலத்தின் வாஞ்சையொரீஇ
அனந்த காலம்
ஒருங்குலக ஹவாநசித்து ஒருபொருளில் ஆசைகொண்ட
ஒப்பில் லாரே 4

மாற்றானை யிடும்பைசெயும் கன்னாசை யறக்கழீஇ
மடம்பூண் டுள்ள
காற்றான நுரைத்துநிற்ற மண்ணான தீயான
ககன மான

கூற்றான நப்சனைத்து மொன்றென்றாய் வென்றுஒன் றிற்
கொழீஇ நின்று
தோற்றாது தோற்றுவிற்கு சூக்குமத்தின் சுடர்தேக
சுபீட்சை கொண்டோா 5



சோலைவாய்ப் பூங்கீதக் கிள்ளைகள் பாடுங்காயல்
சுகிர்த ஞான
காலைகிரஹண தைக்கா நாயகராம் சாலிஹூவின்
கமல மோட்ச

வாலைரச மகரவட்ட குண்டலி மகாமன் மஹ்
மூதைக் கண்டு
ஆலைரசம் போலன்பர்கணங் களுக்கருள் பயக்கும்
ஆசா னம்மா 6

தொண்டிநகர் மோனகுரு மஸ்தானாயகர் கரத்தைத்
தொட்டு நின்று
அண்டினதா லநேகவரங்களைப் படைத்த கலீபாவாய்
அகிலத் துள்ளோ

கண்டிசிலோன் ஆதமலை உறைபீடங் கொண்டிலங்கும்
கனதி ராஜர்
எண்டிசையும் புகழாரிப் காமில்ஷெய்கு பீர்முஹம்ம
தெங்கள் பாவா. 7

இதுவுமது வேறு

## தாழிசை சந்த விருத்தம்.

இந்தநாயகர் திருமலர்வாயால் இசைகள்பேசிய ஞானங்கள்
சொந்தமான கடவுள்வாழ்த்து துரியமாங் குருவணக்கமும்
விந்தைபேரறிவான தெய்வம் விளக்கும் நிருவாணஆனந்தம்
சச்சிதானந்தம் ஞானஅநுபவச் சுருக்கம் சந்தேகவிளக்கமும் 8

மாவுல்ஹயாத் தமிர்தக்கலைஞானம் மனலய அநுபவமுறை
மாசற்றசோடச ஞானசுருக்கம் காட்சியின் நிலைசுருக்கமும்
அத்வைத உண்மைப் போதமு மதனெழுக்கரத்தின சாரமும்
ஆநந்தக்களிப்பு மெஞ்ஞானஅருள்வளம் ஆதிதிருமய கண்ணிகள்

அருள்மயதிருவானந்த சைதன்ய தற்பரக் கண்ணிகள்
ஐமணிஎந்நாள்கண்ணி நந்தீஸ்வரக்கண்ணி றஹ்மான்கண்ணியும்
யாறஹீம்கண்ணி மனோன்மணி முனாஜாத்தும் குருவினாவிடையும்
இத்தாதிஞான ரத்னாதிபுதயலின் இணையில்லா மணிநூலிதே.

ஆசைவைத் துணர்ந்தோர்க்கு மிதுஒரு ஆசானாக உதவிடும்
ஆரிபீன்களின் றஹ்மத்தாகிய அகமிய பிரபந்தமே [மே
ஒருமுறை பார்வையிட்டபேர்கள் ஒதுங்குந்தலம் ஜன்னத்தாகு
அருட்பிழம்பை தெரிந்துதேரினோர் ஆரிபுல் உஜூதாகுவர். 11

### மகுட விருத்தம்.

பூரணமா மலக்கூத்தை கண்டு நின்று
பூர்த்திபெற பரமர ஹஸியத்தை நம்மோர்
காரணக் காரியமாகக் காண வேண்டிக்
கைபிடி ஆசானதுபோல் இந்நூல் தன்னை
ஆரணவான்கள் வாழும் முத்துப் பேட்டை
ஆரிபொலி பீர்முகம்ம தாண்டகை சொல்
சீரணி இன்சான் காமில் நிரப்பமான
தேன் கலிமா சுலூக்குடைய வேதமாதோ. 12

### சோபனம்—ஸம்பூர்ணம்.

---

நூரே அமா.

# சிறப்புப் பாயிரம்.

### நேரிசை யாசிரியப்பா.

திருவா யருவாய்ச் சேர்முதற் கருவா
யருவா கியவுரு வருவுக் கருவா
யொளியா முருபா யோங்கிய பொருளாய்த்
தெளிவாம் பொருளாய்ச் சிறந்தமெய்ப் பொருளா
யணுவுக் கணுவா யாதியந்தப் பொருளாய்
நுணுகு நுட்ப நோக்கிற் கெட்டாதா
யடங்கலு மடங்கா தாகிய பொருளாய்த்
தடங்க லிலாதெலாந் தானும் பொருளா
யக்கர வர்த்தி யாம்பொரு ளொருமைச்
சக்கர வர்த்தி தான்றா னாகி
முன்னும் பின்னு முடிவில னாகி
யெண்ணிற் கால மிருப்பவ னாகிச்
சொலற்கரி தான சூட்சாதி சூட்சமா
யலற்கரு மறைவி லமர்ந்திருக் கையிற்றனில்
ஓமென்ற குன்னி னோசை முழங்கிடத்
தாமென்று வந்த தந்தையொளி முஹம்மது
தோன்றமற் றவையுந் துலங்கிய வுலகிற்
சான்றோ ராகத் தனிமறைக் கட்டளை
யிட்டு மாக்களை யிலங்குநன் மக்களாய்த்
திட்டப் படுத்தித் திருஞான மடையத்
தூதர்க ளனுப்பித் தொடர் பிடியாகச்
சாதனை கொள்ளத் தானனுப் பினனே
இம்முறை மறந்தா ரிம்முறை யனேகர்

செம்மை யாயினிச் செப்புவன் கேண்மி
னெண்டிசை புகழு மேற்றமா நன்னகர்
கண்டரக் கோட்டைக் கனகாம் புயத்தார்
ஷெய்கு மதாரின் சேயன் தாவூது சாஹிபு
வைகுங் கால வலசை கொண்டு
முத்துப் பேட்டை முனைவந் திரங்கிச்
சத்தியஞ் செயமெனத் தானற நடத்திக்
கதியே யிதுவெனக் கண்டிடு மக்களிற்
பதியாங் காதிறு பாவா வென்போர்
தலமா கியபுதூர் காதிறு சாஹிபு
குலமா மகளைக் குணமணஞ் செய்து
பத்து வருடம் பகர்சே யிலாதால்
நத்துமன முருகி நாட்ட மிகவாய்
வாடி வதங்கி மனங்கசி வாகித்
தேடித் தருமந் தினஞ்செய்து வருகையிற்
சந்நியாசிப் பக்கீர் தானொருவர் தோன்றிக்
காதிறே நீருங் கதிசேய் பெறுவர்
மூதறி வாம்பீர் முஹம்மதென் றிடும்பேர்
பாக்கியம் பெறுவீர் பலன்பெறு வீரென
வாக்கிய மியம்பி வந்தவர் போனார்
பெரியார் சொன்ன பெற்றியின் படியே
யரியார்க்குப் பிள்ளை யமலாய்ப் பிறந்தனர்
தேனபா லமுதத் திவ்விய குழந்தை
நோன்பான் மூன்றுநா ளுகர்பா லருந்திலைத்
தார்பெறுஞ் சீலர் தக்கநன் னபிபேர்
பீர்முஹம்ம தென்னப் பெரும்பே ரிட்டனர்
நாளொரு வண்ணம் பொழுதொரு மேனியா
யேழு வயது மினிதாய்க் கழிந்தது
பெற்றோர் கல்வி பிள்ளைக் குயிரென



வற்றா வரபு மதரஸத்தில் வைத்தன
ராரம்பக் கல்வி யாமதர ஸத்தின்
காரமாய்க் கல்வி கவனிக் காமன்
மற்றசி றாருடன் வழங்கிக் கொளாமலுஞ்
சற்று நேசத் தன்மையு மில்லாம
லிருப்பதைக் கண்ட வினிய தந்தை
மறுப்புடன் றமிழா மாண்புசேர் மொழியிற்
றிருப்பலா மெனவே திண்ணைப் பாடசாலையில்
விருப்பமாய் வைக்க விளைவே யில்லை
யிவ்வித மிருக்கு மினிதா நேர
முவ்வுல கம்புகழ் முஹம்மது சாலீஹ்
ஒலியுல்லாவு முயர் முத்துப் பேட்டை
நலிவில் லாம னத்தியே வந்தா
ரவரிடங் கொடுபோ யவுலி யாவே
யிவன்படிப் பிலனே யென்செய் வேனென
வழுதுகண் ணீரோ டழுது பதத்தினிற்
றொழுது சேயைத் தொந்தமொடு சரண்வைக்க
திருத்த முளாயுன் சேய்க்குக் கல்வி
கருத்தன் கொடுப்பான் காணுவீ ரென்ன
வுமிழ்நீர் கொடுத்தே யுகப்பா யனுப்பின
ரமிர்தம் பெற்ற வருஞ்சே யுடனையன்
வீடு வந்து விளம்புவார் மகனே
நாடிய படியே நடத்துவா னிறையோன்
பொறுமை யாயிருந்து புவியிற் காலத்
தருமமாய் நடத்தித் தான்சுகங் கொள்ளென்றார்
சொன்ன படியே தொடர்படுங் குடும்ப
நன்னய மாக நடத்தப் பினுங்கு
சென்றோர் கடையிற் சேர்ந்திருக்கு நாளி
னன்றோர் பெரியோர் நவிலு முபதேச

மணஞ்செய் யாமன் மாபெருந் தவத்தைத்
தினஞ்செய்து வந்தாற் றிருஞானம் விளையு
மென்று சொல்லி யெழிலி யோகவிதியுந்
தொன்று ஞானச் சுடர்நிலை தெளித்தார்
தன்மைபெறு யோக சாதனை யானது
நன்மைபெறு ஞான நல்வரம் பாமென
வாய் பேசாமன் மகத்தாஞ் சாதனை
யாய்வரு வாயென வறைந்த படியே
பக்குவஞ் செய்து பழகி வருகையிற்
றக்க குடும்பத்திற் றருந்தொல்லை மிகைப்பினாற்
பக்கத் தாவூது பாத்ஷா பாதந்
தக்கதாய் நினைத்துத் தான்போகு நேரம்
அன்பாம் பக்கீ ராகிய வொருவர்
தென்பாய் வரவே தீன்சலாஞ் சொல்லவு
மறுமொழி சொல்லி வார்த்தை யாடுவர்
திருமறைக் குடும்பச் செய்கட னீக்கித்
தொந்தம் விடுத்துத் துய்யதாந் தவத்தைச்
சந்ததஞ் செய்யச் சாமான் றருகிறேன்
பணஞ்சே ரும்முட பையினிற் கொள்ளுங்
குணஞ்சேர் துறவு கொள்ளும் போது
பையிற் போட்ட பகரருஞ் சாமான்
னுய்யக் காணா துரையாது சென்றிடுங்
கடறாண்டி யிலங்கை காணும் போதே
யுடலாந் துணையா மொருவர் கிடைப்ப
ரவருஞ் சிலநா ளாகத் துறவி
நவமா யாவார் நன்றறி யென்றார்
தார்சேர் பாவா தங்கட்பெய ரென்ன
னூர்மா ணிக்கப்பூ ருயர்பீர்ஷா வென்றார்
செய்ய துறவிச் சீர்நண்ப ரியாரெனின்



மொய்தாளை நைனா முஹம்மதென் றோர்ந்தே
யிலங்கை வந்தபி னிவையெலாங் கண்டு
தலங்களில் வாசந் தான்மிகச் செய்தே
பகற்றொழிலு நோன்பும் பதியிரவிற் றியானமுஞ்
சுகத்தடை பாரா தூக்கமாய்க் கொண்டு
குடும்ப சகோதரக் கொள்கைக் கடன்முடித்தே
யடும்பெருந் தாயா ரவர்விடை பெற்றுக்
கலியாண முகூர்த்தங் கடனெனச் சொல்ல
மெலிவாங் காரியம் வேண்டா மென்றே
ஈண்டிலங்கை வந்துவிட் டினிதூர் போகி
காண்டற் கரிய கனதவத் தொண்டி
மோனகுரு பாத முகந்து வணங்கித்
தான வகைகளைத் தனிமிகச் செய்தே
வருட்பெற் றிலங்கு மனேகதர் காக்கள்
விருப்பமாய்ப் போகியும் வினவுதத்து வார்த்தங்கள்
கலந்தும் விளைந்துங் கண்டுவரும் போ
மலிமஜ்தூப் ஞானி மகானிடம் போகச்
சொல்லுவார் தொடர்வினை தொலையத் துறவு
வல்லலை யறுக்க வருந்தவம் வேண்டு
மிரங்கு விரங்கி யியற்றொடு வென்னத்
தரங்குறை யாமற் சாற்றின ரன்றே
மீண்டுங் கொழும்பு வியனகர் வந்து
காண்டற் கரிய கனமாந் துறவி
நன்மைதாளை செய்கு நயினா முஹம்மது
தன்னிட மாகத் தானொன்று கூடி
முன்னும் பின்னு முறையுடன் கடற்கரை
தன்னிலும் பலவாந் தனித்த விடத்திலும்
நிஷ்டைகள் புரிந்து நியமங்கள் கொண்டு
கஷ்டமாந் தேசங்கள் காணயாத் திரையாய்ப்
பற்பல வனுபவம் பார்த்து நடந்துந்
தற்பல நிர்விகற்ப சமாதி கொண்டே
யிருக்கக் கண்டி யேற்றமா மென்று

திருக்கண் ணோட்டந் தேர்ந்து வளம்பெறுங்
கண்டிநகர் வந்து கனகாபி ஷேகஞ்சேர்
மண்டலமீரா மக்காம் பள்ளியிற்
சார்ந்திடுந் தர்காத் தராபதி ஷிஹாபுத்தீன்
ஆர்ந்தநல் லவுலியா வடங்கிய விடத்திற்
பக்கவோ ரறையிற் பதிவிடங் கொண்டு
தக்கதா யிருந்து தான்வரு கையிலே
அருந்தவ நிர்விகற்ப மாந்தவஞ் செய்தே
யருந்தவச் செயலி லப்போதைக் கப்போது
பக்குவ வமிர்தப் பாஞானம் பொங்கித்
தக்கதாங் கருத்திற் றானெழு மவைகளை
யுலகத் தவர்க ளுணர்வதற் காமெனத்
திலகமாம் பாக்கட் சேர்த்துவைத் திருந்து
செந்தமிழ்த் திருத்தஞ் செய்ய வேண்டி
வந்துகேட் டோர்க்கு மாட்டே னென்றே
யிந்தியா வினிலிருந் திதற்கொரு புலவன்
வந்துசீர் திருத்தம் வழங்குவா னெனவும்
வருங்கால வியல்பு வழங்கிய சீரான்
றருங்கொடை யாளன் சார்ந்த சீலன்
நற்குண நேய னபிமார் குணத்தன்
பற்பல நல்ல பாக்கியம் பெற்ற
வார்முக மதிலு மழகுதான் கொள்ளும்
பீர்முஹம்மது என்னும் பெருமா தவரே
தம்மா லியற்றுந் தகைஞான நூலை
நன்மா திரியாய் நாட்டவே யெண்ணக்
காற்று மழையுங் கலந்தது போலப்
போற்றும் புலவன் புகுந்தனன் கண்டியில்
வந்து சீர்ப் புலவன் மகான்றனைக் காணவே
தந்தா தரித்துத் தன்னூற்காட் டினரே
காட்டிப் புலவநான் கண்டதுபோல் வந்தீரென
நாட்டவிந் நூலை நயப்படுத் திடுமென
தாளைநைனா முஹம்மது தான்சொல்ஞா பகமாய்



நாளைப்போ லாமுன் னானடப்ப தொன்றுண்டு
வென்றுவென் குருசொன வெழின்மொழி பலித்தது
நன்றுநாம் புண்ணிய நலம்பெறுவ துடனே
தேசத்தோருந் தெரிந்திடின் மோட்சம்
வாசமா மென்று மதித்துப் புண்ணிய
நன்னபி ஹிஜ்ரி நலங்கொ ளாயிரத்து
முந்நூற் றைம்பான் மூவிரண் டாண்டி
லப்பிலாச் சமாதி லவ்வலீ ரைந்திற்
செப்பிய நூலைத் திருத்தியமைத் தனனே
ஞானானு பாவர் நயந்தமெய்க் குருமுனிற்
றேனாறும் பாவைத் திருத்தியவுட் பிரிவென்ன
நன்மை மெஞ்ஞான பரிபூரணக் களஞ்சியஞ்
சொன்மை யான தூயநூற் பெயரே
தாயக நூலிற் றான்சொலும் பிரிவா
யாய கடவு ளரும்பெறு வாழ்த்து
நபிக ணாயக நன்மையா வாழ்த்து
மபிமான குத்துபு வரும்பெரு வாழ்த்து
மின்னு மொலிமா ரிலட்சண வாழ்த்தும்
பன்னு மிறைபாற் பரிதாபங் கொள்ளல்
துய்ய ஞானானுபவச் சுருக்கத் துடனே
தையு ஞானச் சந்தேக விளக்கமு
மத்துவிதச் சுருக்கமு மமிர்தகலைச் சுருக்கமு
நத்துஞ் சோடச ஞானச் சுருக்கமும்
போத மனலயப் புறக்குறிப் பனுபவ
மாதி மெஞ்ஞான வருள்வளந் தானு
நீதியாங் காட்சி நிலைச்சுருக் கம்மும்
பன்னா ளிறையுடன் பரிதாபங் கொள்ளுதற்
கெந்நாட் கண்ணியு மிலங்கிடும் ரஹ்மான்
கண்ணியும் லைலாக் கண்ணியுந் திருமயக்
கண்ணியும் ரஹீமாங் கண்ணியு மருண்மயக்
கண்ணியுந் தற்பரன் கண்ணியு மைம்மணிக்
கண்ணியுஞ் சைதன்னியக் கண்ணிதிரு வானந்தக்

கண்ணியு மாநந்தக் களிப்புடன் மிகவாய்
மன்னிய ஞான மயிற்களிப் புடனே
வொழுக்கரத் தினமு முயர்ஞான சல்லாபம்
பழுக்குநான் முன்சொற் பாயிரத் துடனே
யடைவு படுத்தி யைவகை மிலட்சணத்
திடம் பெறச் செய்த சீராள ரெனில்
திங்கண் மும்மாரி சிறக்கப் பெய்யு
மங்கள வமரா வதியாறு பாயுந்
தேன்பலா வாழை திவ்விய மாங்கனி
தான்பல நெல்லுஞ் சர்க்கரைக் கரும்பு
மோங்கிய மாட முயர்கூட கோபுரந்
தாங்கிய நகராய்ச் சான்றோர் புகழும்
அலங்கிய நகரா மதிற்சேர் குடியாய்த்
துலங்கிய பரம்பரைத் தொல்புல மையாய்
நத்து மெவர்க்கு நலங்கொளப் புதுமைச்
சித்திரக் கவியுந் தெளிமுக் கவியு
நலமிக வாக நாட்டிய கீர்த்திப்
புலவர்கா திறுமீர்சேய் புண்ணியர் சாந்து
முஹம்ம துபாத்தியார் முயன்றருந் தவத்தாற்
சகம்புகழ் பெற்ற சந்ததி யாகி
மூதுரை யான முஹம்மதுநபி மாலை
சாது செயுங்குண சாந்த நாலு
மிஸ்லாம் விளக்க வினிவெண் பாவு
மஸ்லா முஹம்மது வணிபெறு பதிகமுஞ்
சன்மார்க்க முகியித்தீன் சங்கையார் பதிகமு
நன்மார்க்க முள்ள நாயக ரகவலு
மூவுலக சற்குரு முஹம்மதுநபி யுதயமும்
பாவினு லாய பலநூற் சொன்னோன்
ஆதியி னுதவி பூண்ட
காதிறு சாஹிபு கனந்தங்கும் புலவனே.

சிறப்புப் பாயிரம் முற்றிற்று.

---

நாரே அமா.

# மெஞ்ஞான பரிபூரணக் களஞ்சியம்.

## கடவுள் வாழ்த்து.

### கலிவிருத்தம் காப்பு.

உலகம்யாவையுமோர் சொலிலாக்கியே
கலகமிலாமலே காத்திடு மேகனே
நலமெஞ்ஞான பரிபூரணக் களஞ்சியஞ்
சொலவென்னுச் சிந்தைச் சுபத்திக்குக்காப்பதே.

### கோச்சகம்.

திருவே திருமணியே திக்கெல்லா நிறைந்து நின்ற
கருவே கருமணியே ககனோர்க்கெட்டாத கல்பே
யருவே விரிவாகி யறைந்தபடி தருங்கற்பகத்
தருவே களஞ்சியநூற் சாற்றுதற்குக் காப்பாமே.

### எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

1. அண்டபிண்ட மாய்நிறைந்த வொளியைப் போற்றி
அத்துவிதப் பிரமமமை நிலையைப் போற்றி
கண்டதெல்லாங் காணுமெய் யொளியைப் போற்றி
கருணையுட னன்புகொண்ட கருத்தைப் போற்றி

விண்டகண்ட மாய்நிறைந்த வொளியைப் போற்றி
விதிநெறியாய்ச் சமைந்தபர திருவைப் போற்றி
கொண்டறிவாங் கதிர்மதிபூ ரணத்தைப் போற்றி
குறித்தகுரு மணியை நிதம் போற்றினேனே.

2. ஆதிபிர மத்திலே யெல்லை யில்லா
வமாவாசி யானவன்பு செழிப்புற் றோங்கி
நீதிபரப் பிரமமாய் நிறைந்த சோதி
நேர்த்திமிக்க வடிவான வீசன் றன்னின்
காதியா கியவுலகு சமைய பூதக்
கன வெளியாய் நின்றசுடர் பலகாமத்தின்
சாதியாம் ரூபமே தங்கள் கொண்டு
தனிச்சுயமா நாமரூபந் தவிர்வோன் காப்பே.

கடவுள் வாழ்த்து முற்றிற்று.

---

# குரு வணக்கம்.

## வேத நபி நாயகக் குருமணித் துதி.

### எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

1. அஹதாகி யடிமுடியு மில்லா தாகி
யண்டமதி னிறைந்துநின்ற வருளே யாகி
வஹதாகிப் பல்லுயிர்க்குளுள் ளுயிரே யாகி
மகத்துவக்கா ரணக்கருவாய் வழிதுலங்கச்
சுகமாவா ஹிதாவாகிப் படர்ந்து லோகத்
தோற்றமா யிலங்கிநின்ற தூய்மைப் பேருய்ச்
சகந்திகழ மனவெளியாய் வந்துதிக்கும்
சற்குணஞ்சேர் நபிநாதர் தாட்கள் காப்பே.

### சந்த விருத்தம்.

2. ஆதியறி வானகுரு வன்புமணி தன்னைக்
ஆதியறி வானசுடர்க் கானமணித் தாளை
ஆதிநிலை யானவுயிர்க் கமர்ந்தருளைக் காக்க
ஆதிநிலை வேதந்தரு மன்புகுரு மணியே.

3. அருவுருவாய்ப் பல்லுயிரி னுனகரு விரிவாய்த் [யே
திருவுருவாய்த் திக்கனைத்துஞ் செறிந்தவருண் மணி
குருமணியே யாகுங்குத்தூஸ் கொளுஞ்சுடரை நாடி
மறுவிலரு ணிறைந்துமன மாண்புநல மணியே.

4. அருளின்முகி னிறைந்துவள ராலத்தவர் கட்கு
வெருவினல மார்க்கமதை விதைத்தபெரு மானுர்
கருத்தினிற் கண்டுநலக் கல்புதிறந் தாளக்
குருத்துவ மானகுத்தூஸ் குணமணியின் காப்பே.

5. நிற்குண நிறைந்த நிராமயத்தின் றவமே [கும்
சற்குணத்தாற் பக்தர்களைத் தயையாற்கரை சேர்க்
பற்குணத்தி னுலகமெல்லாம் பகரரிய சோதி
நற்குணமி குராசதனி னுதவத்து விதத்தரே.

---

## ஞானக்குரு முஹியித்தீன் ஆண்டகை துதி.

### எழுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

1. கண்மணியாகி யுலகங்க ளெவைக்குங்
கருதருங் குருவரு ளாகிக்
கண்மணி யாயொரு நன்மணி யாயமை
கடந்திடுந் தத்துவக் கடலின்
கண்மணி நிறைந்த காதிறு மணியைக்
கருத்தினில் வைத்தகக் கண்ணின்
கண்வழியாக நல்வழி தொடரக்
கதிதரு ஞானநன் மணியே.

### சந்த விருத்தம்.

2. தவமுடைய மெய்யருக்குத் தத்துவமாய்
நின்றிலங்குந் தரத்தி னேரே
தவமுடையர்க் குயர்ஞானச் சமுத்திரமாய்
வந்தமைந்த தயையி னேரே
தவநெறியை நன்முறையாய்க் காட்டிவைத்த
காதிறெனுந் தகைமை யோரே
தவநிலையாய் நின்றிலங்கும் மகாஞான
முஹியித்தீன் சங்கைப் பீரே.



### எழுசீர்க்கழி நெடிலடி யிரட்டை யாசிரிய விருத்தம்.

3. ஞானத்திற் பெரும்புக ழானநா தாந்தமணி
நாட்டமுற் றவர்க்கு நன்மை
நடத்தியே தீன்வழி சிறப்புடன் றிகழவே
நல்குங்கா ரியத்தி னமுதே
வானத்திற் காரணக் கர்த்தனே பொல்லாத
வல்லபப் பாச மான
வாசனை நசிக்கவே பூரணமாம் பக்தி
வருத்தியமு தூட்டி நின்று
பானத்தாற் றீர்ந்திடுந் தாகமது போலநற்
பக்குவஞ் செய்து வைத்துப்
பகருஞ் சீடர்க்கு நித்தியநினை வாய்நிற்கப்
பதிஞான மருளு மணியே
கானத்திற் சலமழைத் தோர்நபி பேரனே
கண்கொளாக் காட்சி பெற்ற
கண்ணியமிகு புண்ணிய நாதனே ஞானகுரு
கனயோக முஹியித் தீனே.

---

## நாகூர் ஷாஹுல் ஹமீது ஆண்டவர்கள் துதி

### எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

1. போதமுள வேதத்தி னபியாய் வந்த
புண்ணியரா முஹம்மதிற ஸூலுல்லாவின்
பாதமலர்ப் பேரராம் அசன்குத் தூஸின்
பாக்கிய மெல்லாந்திரண் டுருவாய் வந்து
நீதிபெறு நாகூர்ச்சிம் மாசனத்தி
னிறைஞான வாருதியாய் நிலைக்கப்பெற்றே
சாதிபெறு மானிடர்க ளுதிப்பர் கோடி
தபோதனர்கள் சூழ்காதி றெலியுல்லாவே.

நிரையசைக் கலித்துறை

2. திருவே திருமணி ஞானக் களஞ்சியத் தேனமுதே
தருவே குணநிறை கண்மணியே நல்ல தாயகமே
கருவே திருநிறை நாகூரின் கண்ணே கனதவங்கொள்
குருவே மதிநிறை ஷாகுல் ஹமீதெனுங் குத்பொலியே

நேரிசை வெண்பா

3. நாகூரில் வாழு நலநிறைந்த மாதவத்தான்
பாகூறுங் கஞ்சமலர்ப் பாதத்தான்—வாகூறும்
பூரணபிர் மத்தின் பொலிவித்தாய் வந்துதித்த
வாரணனை நாளுமற வாம்

---

## குணங்குடி வள்ளல் துதி.

எழுசீர்க்கழி நெடிலடி இரட்டை ஆசிரிய விருத்தம்.

1. வையகம் பொய்யென்று வெண்ணிமனப் பாசமெனும்
மட்டற்ற கட்ட விழ்த்து
மாதவத் தோன்கருணை கொண்டுமே நாட்டமதை
வருவித்துத் துறவு பூண்டு
மெய்யக நட்பெலாம் விழுங்கிடுந் தையலரை
வெறுத்துண்மை கண்ட நாதா
மேலுங்காற் றிலேகிழ் மாகப்பன் னீர்வருட
மிக்கதவம் புரிந்த நாதா
செய்யகப் பாசத்தினலே கடலி லடையாமற்
செயக்கொடியை நாட்டு தற்குத்
தீதான கருமம்வந் தடராமற் காத்துநற்
சேமமதை யீவ தற்கு
ஐயனே நின்பத நாடின பேர்கட்கு
எடையாத பதவி யுளதோ
ஐனெனுங் கல்வத்தி லுறையுங்குணங் குடிகொண்ட
அப்துல் காதிறு நாதரே.



## செய்கு முஹம்மது சாலிஹு நாயகர் துதி.

எழுசீர்க்கழி நெடிலடி இரட்டை ஆசிரிய விருத்தம்.

1. சீர்பெருகு மாடங்க ளோங்கிவளர் காயனகர்ச்
செல்வரா வந்து தித்துச்
சிறப்புடைய ஞானவழி தன்னிலே மிகுநேர்மைச்
சிகாமணியாம் உமறு ஹாஜி
பேர்பெருகு மொலியுல்லா தவந்திரண் டொன்றுருகப்
பிறந்திடுந் தைக்கா சாஹிபு
பெரியோரின்புத்திர ரானதவ சிரேஷ்டர்
பிரபல்ய முஹம்மது சாலீஹ்
பார்பெருகு நற்றவ நிறைந்தபெரு மானுகிப்
பக்குவம் பெற்ற மணியாய்ப்
பகரரி ஐனெனுங் கருவினு ளையமறப்
பழகியே தெளிந்த நாதர்
தார்பெருகுந் தீனேர்கள் கொண்டாடுங் குருவேயென்
றனையுங்கள் பதத்தில் வைத்தென்
ருய்சொல்லப் பிள்ளைக்குக் கல்விஹிதா யத்தாகத்
தங்குமெனச் சொன நாதரே.

---

## கல்வத்து நாயகர் துதி.

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

1. கீர்த்திபெறு மாதவத்தோர் குடிகொண்டோங்குங்
கெடிபுகழுங் கிழக்கரை நகரில் வாழுஞ்
சீர்த்திகல்வி மிகக்கொண்ட மாப்பிள்ளை லெப்பை
சேயராய் வந்துதித்துப் பருவமாகி

நேர்த்தி யரபுக் கல்வியது கற்றுத்தேர்ந்து
நெறிமுறையா மணஞ்செய்து கொண்டபின்னர்
மூர்த்தியாய் வருவதற்குத் துறவு பூண்டு
முழுநிலையாங் கல்வத்தில் முயன்றார்தானே.

2. முயன்றுமே நிர்விகற்ப சமாதி கொண்டு
மொழியுமெழு பானுண்டு முடிந்த சிலர்
இயன்றபல தேயங்களைச் சுற்றுமற்று
னியல் பரவுக்கல்வியிலே யேற்றமாகிப்
பயின்றுபே ரின்பமதைக் குடித்துமிக்க
பசியுளோர்க் கீந்துநல பலன்பெற்றேதான்
அயின்றகல் வத்து நாயகரே யென்னை
யாண்டருளும் அப்துல் காதர் அவுலியாவே.

---

## மோனகுரு ஷெய்கு மஸ்தான் ஒலி துதி.

### எழுசீர்க்கழி நெடிலடி இரட்டை ஆசிரிய விருத்தம்.

1. அறிவுநிறை விளக்கமில் லாக்காலந் தன்னிலே
அருளூடித் துணிவு கொண்டு
அணுவெதுவுந் தவிராமல் மார்க்கவொழுக் கங்களை
அறிந்தாசான் றன்னைத் தேடி
நெறிதவரா மாப்பிள்ளை லெப்பையா லீமிட
நிலைமையுப தேசம் பெற்றே
நேர்த்தி முறைகுறையாச் சுகூதுகண்டு மவுன
நித்திய விரதங் கொண்டு
குறிதவராத் தவயோக மானகுரு வருட்பெற்றுக்
கூடுஞ்சிவ யோகங் கண்டு
கூறுங்கை வல்லிய மானவகக் காட்சியைக்
குணமாகக் காட்டி வைத்தீர்



முறைதவராக் காலமதை யறியவடி யன்கனவில்
முந்துகருநிலை காணவே
மூட்டிடக் காலத்தின் ரகசியம் ஹூவெனு
மோனகுரு மஸ்தா னொலியே.

---

## ஷெய்கு அபுல்ஹஸன் ஷாதிலி நாயகர் துதி.

### வெண்பா.

மாதவஞ்சேர் நன்மதீனு வாழு மபுல்ஹஸன்
ஷாதிலியே ஞானத் தவத்தோரே—பாதமதை
யேந்திச் சிரசி லிருத்துவே னெந்நாளும்
பாந்தமுடி னூழும் பதி.

---

ஆரிபு நாயகம்

## செய்யத் அஹ்மது கபீர் ரிபாயி நாயகர் துதி.

### கலிவிருத்தம்.

தேசுலா முகியித் தீன்குத்தூ பாண்டகை
வாசமா நல மருகராய் வந்திடுங்
காசினி யஹமது கபீருர் ரிபாய்பதத்
தூசி யிற்படிந் தோர்சுகம் பெறுவரே.

---

## அஜ்மீர் ஷரீப் காஜா முயீனுத்தீன் அத்தாயிர் றஸூல் நாயகர் துதி.

### கலிவிருத்தம்.

கேட்டி டுநல கிளர்ச்சியை நோக்கியே
வாட்டி டுமன மகிழ்ச்சிய தாகவே
போட்டி டுமனம் பொன்பொருண் மெய்ப்பொருண்
மூட்டி டுங்காஜா முயீனுத்தீன் குரிசிலே.

முத்துப் பேட்டை

## தாவூது ஒலியுல்லா அவர்கள் துதி.

வெண்பா.

தேம்புவனத் தார்கணலஞ் சீர்பெறவே தான்கிடக்குஞ்
சாம்புவனத் தோடை தனைக்கொண்ட—காம்புவன
அம்புயக்கண் ணோட்ட வரசர்தா வூதொலியின்
செம்பதத்தைத் தேடத் தினம்.

---

தற்கலை

## பீர் முஹம்மது ஒலியுல்லா அவர்கள் துதி.

வெண்பா.

தமிழுலகில் ஞானந் தனையள்ளி விட்ட
வமிர்தமதைப் போலெவரு மள்ளார்—சமையம்புகழ்
பீரு முஹம்மதொலிப் பெம்மானே தற்கலையைக்
கூறு வோர்க் கெல்லாங் குணம்.

---

கண்டி மீரா மக்காம் தர்ஹா

## ஷிஹாபுத்தீன் ஒலியுல்லா அவர்கள் துதி.

கலிவிருத்தம்.

காலம் வாழிலங் கைத்தீவுக் கண்டியில்
மாலைசூழ் மீரா மக்காம் தர்ஹாவிற்
கோலு மானிடர் கோரும் வரந்தருஞ்
சீல நேரொலி ஷிஹாபுத்தீன் செம்மலே.

ஆக பாடல் 26.

குரு வணக்கம் முற்றிற்று.

---

# அறிவான தெய்வம்

எழுசீர்க் கழிநெடி லடியாசிரிய விருத்தம்.

அந்தரத்தி லாடுதிருக் கூத்தனைத் தையுங்கண்
டகமகிழ் துறவு நாடி
யழகுபெறச் சொந்தச் சுகமனையி லேதரிக்க
வகங்கலங்கா திருத்தி வைத்துச்
சந்தோஷ மாகவரு டரவேண்டுந் தனது
சர்வமயக் கருணை வடிவே
தமரினுன் மனம்பத ருமன்மனப் பக்குவந்
தந்து நல்லருட் செய்குவாய்
எந்தநா ளுன்னுறவைப் பார்த்து மகிழ்ந்திருக்க
வெழில்வழி காட்டி வைப்பா
யெண்ணாத வெண்ணங்கட் சிந்தையி லெண்ணு
திருத்திவைத் தாண்டு நிறைவாய்ச்
சந்தத நல்லவடி யார்கட்குத் தன்கிருபை
தந்துவைத் தாளும் பரனே
சர்வபரி பூரண வகண்டிதா கண்டபர
சர்வவறி வான தெய்வமே. 1

பொய்யான காயத்தை மெய்யாக வேசுத்திப்
பொருத்தித் தந்தருள வேண்டும்
புகழுமெய் யொடுக்கிமன நசித்துத் தெவிட்டாத
பொலிவின்ப மீய வேண்டுஞ்
செய்யாத வினைகளைச் செய்யாம லாட்கொண்டு
சேவடிதந் தாள வேண்டும்
மையாடு கண்ணியர் மாயவலை தன்னிலே
மாட்டாது காக்க வேண்டும்

மாறுபொய் வேடமதிற் செல்லாமன் மெய்யான
வழிவேடங் கொடுக்க வேண்டுந்
தையாம லேதீமை போக்கியா நந்தத்தைச்
சார்ந்துமன நிலைக்க வேண்டுஞ்
நையாத மனத்தை நசித்து சுயவருள்
நிலைதந் தாள வேண்டுஞ்
சர்வபரி பூரண வகண்டிதா கண்டபர
சர்வவறி வான தெய்வமே. 2

தூலத்தின் சேட்டையாற் சுயவடி வறியாமற்
சுனைகெட்டு வாடி நெஞ்சந்
துக்கத்தி லாகியே கலங்கிநற் கண்கெட்டுத்
தோன்றாமன் மிகமலைந்து
கோலத்தை யறிந்துமன வெளியதனைக் காணாத
குருடர்களைப் போல்வி ழித்துக்
கூழையா மனத்தரிடை யாகுமாம் பலவினையின்
கொடுமைகளை மிகவுஞ் செய்தே
ஆலத்திற் சிக்குண் டறிவுமய நீங்கியே
யல்லலைச் சுமந்து மிக்க
வாகுவழி யின்றியே யெண்ணத்தின் சுமையாக
வலைந்தே ங்கித்திரி யாமலே
தாலத்தின் மேலான வழிதிறந்து மோட்சமதின்
சாம் ராஜ்ஜியங் காட்ட வேண்டுஞ்
சர்வபரி பூரண வகண்டிதா கண்டபர
சர்வவறி வான தெய்வமே. 3

மனம்போல வாயால் வந்ததெல் லாம்புலம்பி
மதிகெட் டலைவ ரநேகர்
மாதன மதித்துமே தானெனா மகம்பாவம்
வருத்திவினை யனேகம் புரிவர்



கனவினைக டான்செய்து கடுமையாம் வியாதியிற்
கலங்கித் திரிவ ரனேகர்
காலத்தில் வந்தடருஞ் சந்தேக வினைகளைக்
கைக்கொண்டு கொதிப்ப ரனேகர்
கனவைப் போற் கண்டழியும் வாழ்வைமிக நம்பியே
கருக்கலங் கிடுவ ரனேகர்
கணக்கனந்த மாயிலங்கு நானா விதத்தோற்றங்
காண்பதன்றி வேறு காணார்
தனதரிய சுழுத்திபரங் கண்டுநாம ரூபந்
தான்மறந் தாநந்த மடைவர்
சர்வபரி பூரண வகண்டிதா கண்டபர
சர்வவறி தான தெய்வமே. 4

செய்யாத வினைகளெ லாஞ்செய்து கோடியாஞ்
செய்வினை திரண்ட வுள்ளந்
தேராத வினைகட்பல கோலமாய் விதியாகச்
செரிந்துமே சொரிந்து மீள்வர்
மையல்வளை கொண்டுவரும் பாவையர்க ளாசையின்
மனமதி கரித்து வாழ்வர்
வாதுபொய் மிகுந்துபுறஞ் சொல்லிப்புந் தியைநிறைத்து
வளர்காம வினைவ ழியினில்
தையலர் தாங்கொண்ட பிடிவாதங் கைக்கொண்டு
தன்னிச்சைக் கிசைய வைப்பர்
தனிமெய்யாம் வழிதேடிச் செல்லவொட் டாமற்
றான்மடி பிடித்து மறுப்பர்
தையிதமெஞ் ஞானவை ராக்கியங் கொண்டுமே
சார்தலிற் கடத்தி வைப்பாய்
சர்வபரி பூரண வகண்டிதா கண்டபர
சர்வவறி வான தெய்வமே. 5

மாதற்சொற் கேட்டுமோ ளாமற்சுய புத்தியான்
மனங்கொண்டு நடக்க நலமே
வளம்பெருக மெய்யாக வில்லற நடத்தியுயர்
மகிமை யடைய விவேகம்
நாதாக்க ளானமுன் னோர்களி னன்முறையை
நாடியே நடக்கக் குணமே
நலவேத நெறிமுறையைப் பின்பற்றி நேர்மையாய்
நடப்பதுவு மிக்க நலமே
மாதவத் தோர்சொல்லை மறவாமற் பின்பற்றி
மகிழ்வுபெற் றோர்கட் பலரே
மகிமையுயர் பக்திகொண் டருந்தவமா நன்னெறி
வழியடைய வதுவு மனமே
சாதுளோ னருட்பெற்ற நாயகர் பின்சென்று
தயவடையும் போத மருள்வாய்
சர்வபரி பூரண வகண்டிதா கண்டபர
சர்வறி வான தெய்வமே. 6

ஒருமையில் லாருறவு கூடாது கூடாதோ
யொட்டாம னடத்தி வைப்பாய்
உரத்தகரு மப்பொதி சுமந்துவரு பவர்கண்முன்
னூடுகாணா தடக்கி வைப்பாய்
மறுவில்லா நற்குணத் தோர்சபையிற் சேர்ந்துநீண்
மனப்பாச நீக்கி வைப்பாய்
மகிமைதரு மக்குண மிகுத்தவர்க ளிடஞ்சேர்ந்து
வழிதரும நடக்க வைப்பாய்
வெருளா திருந்துமெஞ் ஞானமது முற்றிய
மிகுசாது சபையின் வைப்பாய்
மேலான வருளுடைய வுயர்தவ நெறிதந்து
வெற்றிசா தனையில் வைப்பாய்



தருமநற் சோபன மடையவே யனுதினந்
தன்கருணை சொரிந்து வைப்பாய்
சர்வபரி பூரண வகண்டிதா கண்டபர
சர்வவறி வான தெய்வமே. 7

அண்டமுதற் பிண்டமெல் லாஞ்சம மாய்நிறைந்த
வத்துவித மான பொருளே
அந்தர வுலகினை வகுத்துமவ் வுலகினி
லடங்கிடாப் பரம பொருளே
கண்டவகை யெல்லாநின் சாயலைக் காட்டுமெய்க்
கண்ணிலடங் காத பொருளே
காணரிய வுள்ளத்திற் பரிபூரண மாகவே
கலந்து வுரு நிறைந்த பொருளே
கொண்டகண் காணாது காணாது கண்மணியாய்க்
கொளுகியக நிறைந்த பொருளே
குறித்தவின் னோர்களுக் கெட்டாத வொருமையாங்
குணமறையி னந்தப் பொருளே
தண்டமெது மில்லாத மெய்யான வழியதைத்
தந்துடன் சேர்க்கும் பொருளே
சர்வபரி பூரண வகண்டிதா கண்டபர
சர்வவறி வான தெய்வமே. 8

சத்தியந் தவராது மனச்சுத்த வழியினிற்
சார்ந்துநல மாகத் தருவாய்
தனிமுத்தி நிலையடைய மனசித்தி னேர்மையைத்
தாங்கநிய மத்தைத் தருவாய்
கத்திக் கத்தியலை யாமலுயர் நிலைதந்து
கனஞானஞ் சுரக்கத் தருவாய்
கதிநெற்றி வழியாக மனமதை நிறுத்திடுங்
கண்ணிய வழியைத் தருவாய்

வெற்றிக் கொடிகட்ட மெஞ்ஞான வநுபூதி
மிகவடைய வருளைத் தருவாய்
வெகுசித்தி முத்தியுங் கலந்துறவு கொண்டு
விதேக முத்தியைத் தருகுவாய்
சத்திய மாமனதைத் துய்யவெளி யாக்கித்
தனிக்காட்சி யாகத் தருவாய்
சர்வபரி பூரண வகண்டிதா கண்டபர
சர்வவறி வான தெய்வமே. 9

பக்திவை ராக்கியங் கொண்டுமனம் பிறழாமற்
பாகப் படுத்திப் புரிவாய்
பகையென்று மில்லாத வருட்சூட் சந்திறந்து
பாகமனங் கசியப் புரிவாய்
சக்கன்றி யுயர்கின்றஞான பூரணக் களஞ்சியந்
தான்றிறக்கக் கருணை புரிவாய்
தக்கவுயர் வாகிய வருளா மனந்தந்து
தன்னமசோ பனத்தைப் புரிவாய்
சிக்கலாஞ் சந்தேகத் திரையெலா நீக்கிமனச்
சிர்க்கெலாந் தீர்க்கப் புரிவாய்
தெளிவான ஹக்கன்றிக் காண்பதிலை யாவுஞ்
சீர்ஹக்காய்ப் பார்க்கப் புரிவாய்
தக்கசுக் கூருடன் மெஞ்ஞான வீட்டினிற்
றனித்திட வருளைப் புரிவாய்
சர்வபரி பூரண வகண்டிதா கண்டபர
சர்வவறி வான தெய்வமே. 10

ஆூ பாடல் 10.

அறிவான தெய்வம் முற்றிற்று.

---

# நிருவா ணாநந்தம்.

பந்த மிகுத்தபுவி வாழ்க்கைபக் குவம்பண்ணிப்
பழவினையைத் தீர்த்து வைப்பாய்
பகரருங் கிருபையா னற்றுறவனைத்தையும்
பதிசூட்சங் காட்டி வைப்பாய்
அந்தரமாய் நின்றதிருக் கருணையா மழையதை
யழகுபெறச் சொரிய வைப்பாய்
அனுதினமுந் தனது வடிவா யருட்புரிய
வகச்சுத்தி யாக்கி வைப்பாய்
சந்தோஷ மாகவே மெய்யன்பர் தங்களின்
றுண்மலரிலணுகி வைப்பாய்
சாதகமி லாதகக் குப்பையை நீருக்கித்
தண்ணமுத மூட்டி வைப்பாய்
அந்தமாய் நிறைந்தவருட் களஞ்சியத்தைத் திறந்தே
வாநந்தம் பரப்பி வைப்பாய்
அருஞ்சுத்த வான்மாநிறை வானவிக பரனுன
வகநிரு வாணு நந்தமே.

வினைப்பட்டு வாடுநெஞ் சகத்திலதற் காகும்
வினைவழியி னின்ற பொருளே
மெச்சுந் தினையளவு நீங்காமெய் யன்பரகம்
மெலிவுநிறை யற்ற பொருளே
தனைப்பட்ட வினையிலா வேதநா தாந்த
சார்ந்தவினை யறுக்கும் பொருளே
தங்குமனை தோறும் பசிக்குணவு தேடாமற்
றனிமனை கொடுக்கும் பொருளே

நினைப்பொட்டு நினையன்றி யொதுங்கவிட மில்லையே
நினைவுதந் தாளும் பொருளே
நின்றுணை கொண்டவடி யேனுக் கிரங்கியே
நிலைகொடுத் தணைக்கும் பொருளே
அணைப்பட் டவனுக்கு வழிந்தோடு நிறையரு
ளாக்கிப் பரப்பும் பொருளே
அருஞ்சுத்த வான்மாநிறை வானவிக பரனான
வகநிரு வாணா நந்தமே. 2

அண்டமுதற் பிண்டமெல் லாநிறைந் திலங்கிடு
வகமிய மான தாத்தே
அருந்தொண்டர் மிதன்மற்ற வினமான வகையிலு
மாம்பூரண மான தாத்தே
அண்டாதி முனிவருங் கொண்டாடு மேன்மை யொடு
வறிவுநிறை வான தாத்தே
ஆடுமன தைத்தட்டி யொடுக்கியே மவுனமா
யருமுத்தி யீயுந் தாத்தே
திண்டாட்டஞ் செய்கின்ற பந்தநிர் மூலமாய்ச்
செயுங்கீர்த்தி யான தாத்தே
சேர்ந்து வெகு காலமாய் வந்தகாத் திரப்பாசஞ்
சிதறக்கரு வாக்குந் தாத்தே
அண்டிவரும் பவக்கர்மி யாங்கசடர் தங்களை
யடக்கிவச மாக்குந் தாத்தே
அருஞ்சுத்த வான்மாநிறை வானவிக பரனான
வகநிரு வாணா நந்தமே 3.

பேருறுதி யாமெனக் களஞ்சியப் பேரின்ப
பெருமுத்தி யீயுஞ் சத்தே
பிழையுறுந் தீவினையஞ் ஞானத்தை வெட்டிப்
பிணைத்துவைத் தாளுஞ் சத்தே



நேருதி யில்லாத தோற்றங்களி னந்தர்
நிறைமுகத்தி னாடுஞ் சத்தே
நிலைபெறுவே தாகமம் விடுத்துமே பதியடைய
நியமங்கள் கொடுத்த சத்தே
கோரியநா னென்றின முரைக்கத் தகுதியிலை
குறித்தநா னென்ற சத்தே
குவலய வசைவெனும் பஞ்சபூதத்தொழிற்
கூடற்காந் தத்துவ சத்தே
ஆருறும் பூரண வறிவாக நிற்கின்ற
வத்துவித மானசத்தே
அருஞ்சுத்த வான்மாநிறை வானவிக பரனான
வகநிரு வாணா நந்தமே. 4

கற்றுமறி வில்லாத கூட்டத்திற் சேராமற்
கனவறிவு வீய வேண்டுங்
காத்திரத் தடிப்பையு முழுமூடர் தம்முறவு
கட்டோடு போக்க வேண்டும்
பற்றுகற் பகவிருட்ச மடையவொரு வழிதந்து
பாலங் கடத்த வேண்டும்
பண்பிலாப் பற்றதை வேரோ டறுத்துநல
பாலமுது கொடுக்க வேண்டும்
சுற்றத்தார் சொற்கேட்டுப் பாசத்தில் வீழாமற்
சுயவருள னாக வேண்டுஞ்
சூட்சாதி சூட்சத்தைக் கண்டு மிகத்தேறி
சுற்றத்தா னாக வேண்டும்
அற்றிடா வருளெனும் பெருவாரியி லென்னை
யமர்த்திவைத் தாள வேண்டும்
அருஞ்சுத்த வான்மாநிறை வானவிக பரனான
வகநிரு வாணா நந்தமே. 5

கட்டுக் கடங்காத பிரபஞ்சக் குப்பையைக்
கருக்கியாட் கொள்ள வேண்டுங்
கட்டுத் திட்டங்க ளிலாச்சுயஞ் சோதியாய்க்
காயசுத்தி செய்ய வேண்டுஞ்
சட்டந்தவராம னிலைகொண்டு வான்மயச்
சட்டமதைத் திருத்த வேண்டுஞ்
சாற்றுநற் றவத்தினா லகத்துறவு கொண்டுமனத்
தனிக்கண் டிறக்க வேண்டும்
இட்டமனக் காட்டை வெட்டி யருள்விதையை
யெங்கும் பரப்ப வேண்டும்
இடையின்றி யிமையளவு மாறாம லேகாக்கு
மெழிற்பக்குவ மீய வேண்டும்
அட்டுணா வீயாதா ரில்லத்திற் சென்றுபோ
யங்காத்தற் றவிர வேண்டும்
அருஞ்சுத்த வான்மாநிறை வானவிக பரனான
வகநிரு வாணா நந்தமே. 6

மண்ணுவிண் ணைம்பூத தோற்றத்தின் முன்னமா
வாகவுள் ளடங்கு முணர்வே
வகையெலாந் தன்னரு ளாகவெளி யாய்நிறை
மதிக்கும் வஸ்துவி னுணர்வே
குன்னென்று மொழிந்தவுடன் குதரத்தா யிலங்கிய
குணங்க டங்கிய வுணர்வே
கூர்மையாம் பரவெளி யானதிற் பூதங்கள்
குறிப்பாகச் சமைந்த வுணர்வே
விண்ணோரை யந்தமாய் வெளிப்படுத்தி யேயெங்கும்
விரிதத்துவ மான வுணர்வே
வேறுகண் கொண்டுதான் பார்க்கப்பல ரூபமாய்
மீகுதோற்ற மீயு முணர்வே



அண்ணற்சே ரெண்ணத்தி னடங்காதி யாவையு
மாட்சிதான் புரியு முணர்வே
அருஞ்சுத்த வான்மாநிறை வானவிக பரனான
வகநிரு வாணா நந்தமே. 7

சோதியாய் நிறைந்திடு நூரானி யாய்ப்பல
தூயவுருச் சமைந்த வறிவே
சுயநீதி தவராம லெவ்வுயி ருக்குளுந்
தேங்கியே நடத்து மறிவே
காதிரு யுலக நிறைந்துசர்வ பூரணக்
கனதத்துவ மான வறிவே
காணுதற் கரியசக நிறைவாக நீக்கமறக்
கடந்தபெரு வாரி யறிவே
நீதிநெறி யாய்ச்சக முதன்மற்ற வஸ்தையு
நேர்த்தியா யாளு மறிவே
நேமபூ தியங்களாஞ் சுயத்தைக் கடந்தவுரு
நிலைசெய்மெய் யான வறிவே
ஆதியா வேதியர்க ளாகவுரு வெடுத்துமறை
யறைந்தவிரி வான வறிவே
அருஞ்சுத்த வான்மாநிறை வானவிக பரனான
வகநிரு வாணா நந்தமே. 8

சமையங்க ளெல்லாங் கடந்திடுஞ் சமையமாந்
தனிநிற்குண மான நினைவே
சமதர்ம மாகவே யாவையு மொன்றுபோற்
றாங்கிவரு கின்ற நினைவே
சூமையெனுந் தாமத ராசதங்க ளற்றுத்
துய்யசாத் மீகசாத் மீகநினைவே
சூழ்சம மாகசற் குணமுள்ள சத்துடன்
சொக்குசித் தாநந்த நினைவே

நமதென்று சொல்லாத நாணு விதநாம
நலரூபங் கடந்த நினைவே
நலமான நேமமது தவராம னிலைகொண்ட
நற்பிரம மவுன நினைவே

அமையுநன் மதுவுண்ட வண்டுபோற் சொக்கியே
வறையாத மவுன நினைவே
அருஞ்சுத்த வான்மாநிறை வானவிக பரனை
வகநிரு வாணு நந்தமே. 9

முக்குண மடங்கிமுக மலர்ந்தக முகமான
முடிவற்ற சாந்த குணமே
முனைந்திடும் பக்குவ மடையவே பிடித்தணையு
மும்மலங் கடந்த குணமே

தக்கவனு பவத்தினி னிடைமூழ் கியபின்னர்
சாரவருள் வடிவு குணமே
சந்தேக மின்றியே வழிப்பட்ட பேர்கட்குத்
தன்வழியை யீயுங் குணமே

துக்கித்து வாதாடு மனப்பாச முடையார்க்குத்
தூரமாய்க் காணுங் குணமே
சுழன்றுதிரி கின்ற நாய்போன் மனமுடைய
சுட்டிகட் கெட்டாத குணமே

அக்கிரமச் சாக்கு போக்குகட் சொல்லிய
வகத்தினர்க் ககலுங் குணமே
அருஞ்சுத்த வான்மா நிறைவானவிக பரனை
வகநிரு வாணு நந்தமே. 10

ஆ பாடல் 10.

நிருவா ணாநந்தம் முற்றிற்று.

---

# சச்சிதா நந்தம்.

கற்றுமறி வில்லாத மக்களி னுள்ளமதிற்
காணாத வரிய நிலையே
கண்டபடி யேதிரியு மனத்தோருக் கெட்டாத
கண்ணியமெஞ் ஞான நிலையே

வெற்றுலகி னம்பிக்கை வைத்துநற் பொன்னடியை
வேண்டுவர்க் கரிய நிலையே
மிக்கவரி வின்றியே புல்லறிவு பற்றிய
வீணருக் காகா நிலையே

சுற்றமிலா வெறுமையாம் வாய்ஞானம் பேசியே
சுற்றுவர்க் காகா நிலையே
சூதுவினை வாதுகளி லாழ்ந்திடு மூடர்க்குத்
தூரத்தி லாகு நிலையே

சற்குருகிலு நீங்கா வருட்டந் திரங்களிற்
றனிபக்தருக் காகு நிலையே
சர்வசம யத்தினுட் கருவாய் விளங்கிய
சச்சிதா நந்த வாழ்வே. 1

தலைவிதியே யென்றுமனம் பதறித் துடித்துத்
தலையின்மேற் கோட்டை கட்டுவார்
தங்கிவிளை யும்பயிர்ப் பக்குவ மறியாமற்
றன்வினையை வழி கூட்டுவார்

மலைபோலு நெஞ்சத்திற் கவலையைக் கொண்டுமன
மகாநிஷ் டையை யோட்டுவார்
மகிமைபெறுங் கலைகளைக் கற்றுக் கடுகளவும்
ரய்க்வகா மற்குண மாட்டுவார்

நிலையின்றி வெறிகொண்ட நாய்கட்போற் காமமதை
நேசித் துமனம் வாட்டுவார்
நிதமுமலை கின்ற மனத்தை யலையாம
நிற்க வகைசொல நீட்டுவார்
சலநிலையி லாகுசெம் படரவரைப் போல்வலை
தாங்கி யேகன மூட்டுவார்
சர்வசமை யத்தினுட் கருவாய் விளங்கிய
சச்சிதா நந்த வாழ்வே. 2

சுயதந்திரக் கொடிய வினைகண்மிக வேசெய்து
சூழுநர கதனிற் காய்வர்
தொல்புவியைச் சதமாக நம்பியே வாழ்ந்தவர்கள்
தாதுபுலன் வழியிற் றேய்வர்
நயதந் திரந்தனை யறியாத மூடர்க
ணாகுமனப் பேயின் மாய்வர்
நல்வழி யின்றிமன வெறிகொண்டு வுலகினி
ஞடியே திரிந்து சாய்வர்
மயமந் திரமது கிட்டாது கிட்டாது
மதியிழந் துழன்று மாய்வர்
மாயவுல கனுபவ நோக்கிமன மயங்காமல்
வல்லிறையோ னருளை யாய்வர்
சுயசுந் தரவமுத நீர்பெருகி யருண்மடை
சாரவர மீயப் பாய்வர்
சர்வசமை யத்தினுட் கருவாய் விளங்கிய
சச்சிதா நந்த வாழ்வே. 3

மாதா பிதாக்களின் போதனைக ளெல்லா
மாயச்சா லங்க ளென்று
மதியாமற் றள்ளியே சுயவறிவி னுன்மிக்க
வளமான நலந்தெ ரிந்து



ஆதார மாகுமூல கத்தோற்ற மேகண்
டாளுமனப் பற்று நீக்கி
ஆனபோ தேநிலையி னலஞ்சூழ்ந்து காக்குமென
வரியவி றைதனை நம்பியே
பாதார மாகவே யிருந்திடி லின்னமுது
பாலிக்கு மென்ப துண்மை
பக்குவந் தவராமல் வீண்வகைகள் வாராமற்
பரிசுத்தக் கருத்தி னூடே
சாதக வகத்தூய்மை யடைந்தபின் புறத்தூய்மை
தான்வந் தருளைக் கூட்டும்
சர்வசமை யத்துட் கருவாய் விளங்கிய
சச்சிதா நந்த வாழ்வே. 4

இதாமான குழந்தையின் குணங்களறி யாமலதற்
கேலாத வகைகட் செய்வர்
இன்பமத லைக்கொரு மார்க்கமென வொன்றில்லை
யிதையூக மனதிற் கொண்டு
பதமான காரியந் தீர்க்கமா கத்தினம்
பரத்தவே தேக கன்மப்
பரிவாக நீக்கிநற் றெய்வவழி யேமிக்க
பக்குவ மாக வூறும்
மதமான வல்லாண்மை விடுத்துநல் விவேக
மங்களவீ டடைய நேர்த்தி
மததர்க்கம் புரிந்துநன் மதியினை யிழந்துமே
மாட்டாங்கி நீக்கி யேதான்
சதமான வாழ்வதை யோசித்துச் சிந்தையிற்
ருக்கிய மார்க்க மறிய
சர்வசமை யத்துட் கருவாய் விளங்கிய
சச்சிதா நந்த வாழ்வே. 5

ஆ பாடல் 5.

**சச்சிதா நந்தம் முற்றிற்று.**

# ஞான அனுபவச் சுருக்கம்.

## எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

பாரப்பா வனுபோகப் பெருமை பாரு
பக்குவமா யனைத்தையுமே பாரு பாரு
காரப்பா நிறைந்ததுபோற் காணு மப்பா
காணாத கலக்கமது மிகவே யாகும்
போரப்பா பூரணநிலை வாகப் பார்க்கிற்
புத்தியது கலக்கமா மயங்கி டாதே
சாரப்பா கருக்கலங்கி நின்றி டாதே
சற்கருவைக் காக்கவெளி சாருந் தானே. 1

பரவெளியைக் காண்பதற்கு முடியா தப்பா
பாகமா யிருகண்ணை மூடிப் பாரு
மறவாத தியானத்தின் மௌனம் பாரு
மருவியே சுழன்றுவரு மதியைப் பாரு
தரமான சுவாசந்தடை பட்டுக் காணுஞ்
சந்தேக மின்றிநீ பரத்தை நோக்கு
வரமிகுந்த திருவருளே விளங்கத் தோணும்
வகைசொல்வேன் மனமிறக்கப் பாரு பாரே. 2

உன்னுகின்ற வுந்தியைநீ யுற்றுப் பாரு
ஒருமையுடன் பார்த்துநிதம் பாரு பாரு
நண்ணுமிதைப் பார்த்துமே பழகி வந்தால்
நயமிகுந்த புறப்பார்வை யிழந்து போகும்
உன்னிலே யிருந்தநிலை விறந்தொன் றாகி
யுதித்தொடுங்கு மனமிறந்து வடிவு தோன்றும்
தன்னிலே வல்லமையைக் காண மாட்டாய்
தானற்ற வுண்மைநிலை காணுந் தானே. 3



வாய்புலம்பிப் பாசத்தில் வீழ்ந்தி டாமல்
வகையுடனே வஞ்சகத்தை வீசிப் போடு
தாய்பெரிய மஹ்றூபு லைலா தானே
தாகமற வமுதூட்டிக் காக்கு மையா
மாய்கையான் மனம்பதறி மறந்தி டாதே
மஸ்தான வகையெல்லாந் தோன்றும் பாரு
காய்தலில்லாக் கனியைக்கைக் கொண்டு பாரு
கனநிலையா மாநந்தங் காணுந் தானே. 4

ஏகமெல்லா மொன்றாக விருக்க வேண்டும்
எள்ளளவுந் துவிதமிலா திருக்க வேண்டும்
தாகமெல்லா மோர்நொடியிற் றீர்ந்து போகும்
தாங்காத சண்டாளத் தன்மை போகும்
ஆகமத்தி னெறிமுறையைப் பற்ற வேண்டும்
அணுவளவுந் தோஷ மில்லாதிருக்க வேண்டும்
வேகவனு பவத்தினிலே விரைய வேண்டும்
விண்ணுருவாய்த் தோன்றுமடா விவேகந் தானே. 5

பாரப்பா கண்மூடி விண்ணைப் பாரு
பதறாமற் சடத்தைநீ மறந்து பாரு
நேரப்பா விருபுருவத் திடையைப் பாரு
நினைவுநன் னேரான தலத்தைப் பாரு
வாரப்பா பூரணமாய் நிறைந்தி ருக்கும்
மாறாத புகழ்வெளியின் னுருவாய்த் தோன்றும்
மாரப்பா வுள்வெளியாய் மௌனங் காணும்
மனமிறக்க வனுபோகஞ் செய்வாய் தானே. 6

பாரப்பா வுச்சிமே னோக்கிப் பாரு
பார்க்கையிலே தமர்வழித்தி யானம் பாரு
பாரப்பா வண்டமெலாந் தாங்கி நின்ற
பரவஸ்து நிலையைநீ காண்பாய் தானே

பாரப்பா சுயவடிவைப் பதித்துப் பாரு
பார்க்கையிலே சூச்சமது வதிக மாகும்
நேரப்பா நினைவுடனே நிறுத்திப் பாரு
நின்கன்ம வினையாவு நீங்குந் தானே. 7

காரப்பா பஞ்சதோஷ மகன்று போகுங்
கடுஞ்சினமெல் லாமொடுங்கி யடங்கிக் காணும்
காரப்பா புலன் பொறியின் மயக்க நீங்குங்
காமமது வெழும்பா மலடங்கிப் போகுஞ்
சீரப்பா சிலகாலந் தவராம னில்லு
ஜீவகுண மற்றுச்சுய சிவமாய்த் தோன்றும்
ஆரப்பா விந்தமுறை யறிந்து செய்வா
ரதிபக்தி நிலையி னின்று பாருபாரே. 8

கேளப்பா பத்தியத்தைச் சொல்லக் கேளு
கிருபையாய்ப் பக்தியுடன் பேணிப் பாரு
காளப்பா மயங்காமற் கருத்தாய்ப் பாரு
கர்மவினை யாவையுமே கழற்றிப் போடு
மாளப்பா மௌனத்தைக் காப்பதற்கு
மகத்தான பக்தியங்கு வேண்டு மப்பா
தூளப்பா வறுசுவையிற் றாய்மை யில்லாத்
துயர்சேரு மாகார முண்டி டாதே. 9

காமமது கொண்டுமிக வலைந்தி டாதே
கர்மவினை மிகத்தேடி வாடி டாதே
நேமமா மனுஷ்டானந் தவிறி டாதே
நித்தியவிதி யைமறந்து மயங்கி டாதே
சாமத்தில் விழித்திருந்து மனதைப் பாரு
சரிபக்வ மடையவது வுபாய மாகும்
தேமப்பா பயங்கொண்டு தியங்கி டாதே
தீரத்தைக் கைவிட்டுச் சிதறி டாதே. 10



பசியாலுன் திரேகத்தை வாட்டி டாதே
பசியிருக்க வாகாரம் புசித்துக் கொள்ளு
வசவாசி நடனத்தை விளக்கிப் பாரு
வரிசையாம் பலநினைவை யகற்றிப் போடு
திசையுமன வாசியே யிலங்கும் பாரு
திடுக்கமற மனமிறந்து தோன்றும் பாரு
கசிவான பற்றுவைத்துப் பார்த்தி டாதே
கருத்துடனே யறிவைநீ யாய்ந்து பாரே. 11

பொய்வேசங் கொண்டுநீ யலைந்தி டாதே
பொல்லாத காமவினை சூழுமப்பா
மெய்யாக விநந்திடிலோ மேன்மை யுண்டு
மேல்வேடம் போட்டுநீ திரிய வேண்டாம்
மெய்யாகக் குருநிலையை யடைந்த போது
மேலான திருச்செயற்கள் வினையை நீக்கும்
நையாதமனத் தினர்க்கறிவே யெட்டா தப்பா
நலமுடைய வனுபவங்க ணடத்திப் பாரே. 12

வெகுகாலஞ் சுழன்றுவரு மாய்கை நீங்க
விவேகமுடன் பக்திவை ராக்கியம் வேண்டும்
தகுமான பிள்ளையானாற் சத்தி யத்தைத்
தானுமிகக் கடைப்பிடித்து நடத்திப் பாரு
சகுனகுறி யனேகம்வந்து தடுக்கு மப்பா
சந்தேகச் சாத்தானைப் பார்த்தி டாதே
புகுதுமிரு வினைசொல்லா தோடச் செய்யும்
புகழான வகையெல்லா நடக்குந் தானே. 13

குடும்பத்தா ருன்னைமிகக் கெடுக்கப் பார்ப்பார்
குறுகியிடும் புத்தியுள்ள மனித ரப்பா
குடும்பியா யிருப்பதனாற் குற[illegible]
குணமுடனே யிறையருளா னடத்த லாமே

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

வடிம்புமிகும் பாசவன்மை மதியா தேநீ
வகையுடனே யாவையுமே நடத்த லாமே.
கடிம்புசினங் கொண்டுதான் வெறுத்தி டாதே
காலத்தைக் கடவுளாய் மதித்துப் பாரே 14

பார்த்ததனின் மனத்தைவிட்டு வலைந்தி டாதே
பக்தியுள பிள்ளையானாற் பணிந்துகேளு
பார்த்தவிட மெல்லாமே நினைவைப் பாரு
பதியாக வுன்னைத்தான் மதித்துப் பாரு
பார்த்தபக்தி யுடனினைவை நிறுத்திப் போடு
பரிவாக நினைவுதான் பரந்து காணும்
பூர்த்தியுள்ள வறிவினாற் பொருத்திப் பாரு
புவனத்தின் ரகசியத்திற் புகுந்துப் பாரே. 15

பத்தியுள பார்வையது வதிக மானாற்
பரங்காண்பாய் துவிதத்தை யறுத்துப் போடு
புத்தியில்லாப் பிள்ளைகட்குச் பொழுதுஞ் சொன்னாற்
புரியாது மாய்கையதின் மாள்வார் தானே
சித்தியா நந்தவழி யடுத்துக் கேட்டுச்
சிந்தித்தே யிருவினையைக் கருக்கிப் போடு
முத்தியாம் வழியடைய வாசான் பற்று
மோசமிலை யுன்றனக்கு வழிசெய் வாரே. 16

தூலமுள வுலகத்தை யறிந்து பாரு
தொகையான சூட்சத்தைத் தொடர்ந்து கேளு
தூலமதிற் பிரகிருதி யண்ட பிண்டந்
தோன்றியே காணுமல்லால் வேறொன் றில்லை
தூலமின்றி யுலகமில்லை யுலக மின்றித்
தூலமில்லை யறிந்துநீ தனித்துப் பாரு
தூலமுத லண்டமெல்லா நீயே யாவாய்
தொகையான சூட்சத்தை விண்டி டாதே. 17



நினைவுக்கு ணினைவடங்கு நினைவைப் பாரு
நிட்சயமாய் நீங்காத நிலையே யாகும்
நினைவைவிடப் புறம்பாய்நீ யென்றுங் காணாய்
நிர்மலமாம் விவேகமது வதிகம் வேண்டும்
நினைவான கண்டிறந்தா னிட்ச யங்க
ணீக்கமற நிறைந்தநல நினைவைப் பாரு
நினைவான வஸ்தாக நிறைந்து காணும்
நிலைகொண்ட நிற்குணமு மாவாய் நீயே. 18

காடுமலை திரிந்தலைந்து தேடா தேநீ
கண்மூக்கி னிடைநடுவிற் கருத்தைப் பாரு
தேடியுல கெல்லாநீ சுற்றி டாதே
திறமான அண்டத்தின் கண்ணைப் பாரு
நாடுநகர் சுற்றுவதேன் குருவை நாடு
நலமான சூட்சத்தின் முறைமை யாகும்
வாடுதலில் லாமலிருந் நாலைப் பாரு
வஞ்சகமாங் காமம்விட்டு மீள்வாய் தானே. 19

நாற்பார்த்துப் பிதற்றுமன் முறையைப் பாரு
நுணுக்கமாய்க் கருத்தறிந்து நோக்கிப் பாரு
நான்முறையை யறியாமல் வாயாற் பேசி
நோக்கமில்லாத் தர்க்கமிட்டு நொந்து மாண்டார்
நூல்விளக்கத்தாற் பெற்று ரநேக நன்மை
நூலறிந்தும் படுகுழியி லநேகர் வீழ்ந்தார்
நூற்றரும மாக மகானானோ ரெல்லாம்
நுட்பமாய்ச் சொன்னார்க டேறு தற்கே. 20

செய்யாத வினையெல்லா மனம்போற் செய்து
சிக்குவார் சனியனிடம் வேடங் கொண்டு
செய்தவினை திரண்டுமிக வாட்டும் பாரு
செயற்கைமது பானமுண்டு செகத்தின் மாய்வர்

மெய்மறந்து வினைவழியை விதியென் பார்கள்
விக்கினமா மவர்வாழ்க்கை மோசம் பாரு
மெய்யான பிள்ளையெனும் விவேக முள்ளோன்
மெய்க்குருவைத் தேடமனம் நாடு வாரே. 21

மெய்யான சற்குருவைப் பொய்யென் பார்கள்
மேதினியிற் பொய்வேடம் போற்றுவார்கள்
பொய்யாக விருந்து மெய்யைப் பொய்யென்பார்கள்
போதமில்லாப் புல்லர்களே யாகு மப்பா

மெய்யான வடியார்கண் மீது தீங்கு
மிகச்செய்வோர் மீளாதே நரக டைவர்
ஐயாவே செய்வினையை மறந்து மெய்யை
யகங்கொண்டாற் சாபல்ய மடைவார்தானே. 22

குருவென்று மேதினியிற் பலகுருக்கள்
கூடுவார் நற்குருவை யடுத்துப் பாரு
கருவாக நிலைத்தகுரு கண்டு கேளு
கண்டிப்பாய்க் கருத்தறிய விரட்டு வார்கள்

திருவான குருவடிவாய்த் திகழ்ந்தோர் தேடு
திக்கில்லா நிலையினிலேதேசாய் நிற்பர்
மறுவில்லா மனத்துடனே மகிழ்ந்து தொண்டு
மதியுடனே செய்யமன மிரங்குந் தானே. 23

ஆகாத சீடரங் கேயணுக மாட்டா
ரணுகினுமே யன்பதனு லிணக்க மாட்டார்
ஆகாத சீடரினு லனேக தோஷ
மாகுமேவவர்கடம் மாய்கை யாலே

ஆகாத சீடனவ னுசான் சொல்லை
யத்துக்கு மீறியவன் கெடுவா னப்பா
ஆகாத சீடனென்று மாகா தப்பா
வறிவுள்ளோன் கெடுதலில்லை யாழ்ந்து பாரே. 24



முத்தியென்றால் வாய்வீச்சாள் முடிவதில்லை
முறையுடனே வாசான்சொற் கேட்க வேண்டு
முத்தியென்று சொல்லுபவர் முத்தி காணார்
மும்மலத்தின் சேர்க்கையா மூர்க்கந் தானே

பத்தியுடன் சற்குருவைப் பணிந்து போற்றிப்
படிப்படியாய் மனமதனைப் பழக்கி வைத்து
பத்தியத்தைக் காத்துமிகப் பதன மாகப்
பக்குவமாய்த் தெளிந்த சிவ நிலையைக் காணே. 25

ஆசான்சொற் படியேதான் மிக நடந்து
வறிவுநிலைதனைப் பெற்று வறிவைக் காணு
ஆசான்மே லளவற்ற வன்பு வேண்டு
மனுதினமுங் கடமையனுஷ் டிக்க வேண்டும்

ஆசானி னருட்பார்வை யகந்தெளியக் காணு
மாவிபொரு ளுடலனைத்து மன்பாய்ச் சேரு
ஆசானி னருளுதய மங்கு பாயு
மகமின்றி யிருதயத்து ளணைத்துக் கொள்ளே. 26

வாய்ஞானம் பேசுவது வம்பே யாகும்
வரமிகுந்த வடியாரை வளைந்து கொள்ளு
வாய்ப் பசப்பால் ஞானமது வாரா தப்பா
வயறுவளர்க்கப் புலம்பி வாடி டாதே

தாய்தவமா நன்னெறியே மேன்மை யாகுஞ்
சுகமான வொழுக்கமது மிகவும் வேண்டு
தாய்தவமாந் தெய்வவருண் மிகுத்துக் காணுந்
தகுதிநிலை மெய்நிலையாய்ச் சாருந்தானே. 27

தருமநெறி கைக்கொண்டே தரிக்க வேண்டுந்
தகாத செய லெல்லாமுந் தகர்க்க வேண்டும்
கருவமில்லா தர்மத்தின் கடமை வேண்டும்
காசினியோர் தமையொன்றாய்க் காணவேண்டும்

தருமகுண மில்லாத குறவு நீக்கிச்
சார்ந்துவரன் மேன்மையெனத் தகுதி கொள்ளக்
கருமியாம் லோபிக்குக் கடுமை யான
கடுநரகம் இறையருளைக் காணார் தானே. 28

ஆத்மாவி னிலையறிந்து சேர்ந்து நிற்கி
லாங்காலத் தல்லலது நாச மாகும்
ஆத்மாவின் வகையறிந்தே ஞானங் கொண்டு
வனுதினமு மௌனியா யங்கே நிற்பர்
ஆத்மாவிற் கொழுகிநின்ற வங்கத் தாலே
யலைந்துமிக மயங்காம லன்பாய்ப் பாரு
ஆத்மத்தின் பெருமையிங்கே வதிகமுண்டு
வறியாது சடத்தையவர் கொண்டார் தானே. 29

பொறுமையுட னறிவுநிலை பொருந்திப் பாரு
புத்தியுள்ள மைந்தனே போது மப்பா
மறுமையதின் சூட்சமெல்லா மிகவே தோற்றும்
மறப்பின்றித் தொடர்புமிக நேர்மை யாகும்
அருமையா மைந்தர்க்கே வடக்கிச் சொன்னே
னறிவுடைய பிள்ளையாரு லறிந்து கொள்வான்
குருவின்சொல் லணுவளவுந் தவிறி டாதே
குறிப்பாகச் சூட்சமெல்லாங் குறித்தேன் தானே 30

ஆ பாடல் 30.

ஞான அனுபவச் சுருக்கம் முற்றிற்று.

# சந்தேக விளக்கம்.

கிருபையுடன் சகலமுமே கருதிச் சொன்னீர்
கீழான கருமத்தை கெடுக்கச் சொன்னீர்
பருவத்திற் சாதனையைப் பழக்கச் சொன்னீர்
பாகமாய்ச்சீ வாத்துமாவைப் பகுத்துச் சொல்லுங்
மறுவில்லா மனத்துடனே மதித்துச் சொன்னீர்
மறவாமற் கருமங்களை முடிக்கச் சொன்னீர்
கருவான குருநிலையின் கருத்தைச் சொன்னீர்
காரணத்தைக் கலங்காமற் காணுதற்கே. 1

அருமையுள்ள பிள்ளாய்நீ யறையக் கேளு
வாகாயத்திற் பஞ்ச பூதந் தோன்றி
அருவுருவ நாமரூப மனந்த மாகி
யைந்துலோ கத்தடிப்பா லமைந்த தாகி
அருவத்தின் பரமாத்மா வணுத்தோற்ற மாகி
யங்கது விதமெடுத்தே வனேக ஜீவன்
அருவமுள்ள பரமாத்மா வதற்குச் சாட்சி
யைம்பூத வசைவதுவே யாகுந் தானே. 2

நன்மையென்றுந் தீமையென்று நடப்ப தென்ன
நலமாகச் சொல்ல வேண்டு நாட்டமாக
நன்மறையின் சூழ்சத்தை நவில வேண்டும்
நரர்கள் செயற் பலவிதமாய்நடப்ப தென்ன
இம்மைத்தொடர் மறுமையினி லிசைவ தென்ன
விணக்கமாய் விபரத்தை யியம்ப வேண்டும்
நன்மார்க்க மின்றிமன நடப்ப தென்ன
நற்குருவே கிருபைவைத்து நவில வேண்டும். 3

புத்தியுள மைந்தனே புகலக் கேளு
புலனாதி குணத்தினாற் பேத மாகி
சத்தியுறும் பூதத்தின் சுய குணத்தைச்
சரியாக வறியாது மலமிகுந்து
சித்தத்தாற் தனக்கென்று சிந்தித் தெண்ணிச்
சிந்தைமிக நொந்துசினப் பாச மாகிச்
சித்தத்தை யறியாது செயற் றனக்கென்றுச்
சீவாத்மா நாமத்தாற் சேர்க்குமிரு வினையே. 4

நன்மை யெனுந் தீமையென்று நாமரூப
நற்செய்கை யாலிம்மை மீதெண்ண மாய்
வன்மையுட னிணங்கியே பஞ்ச பூத
வதங்கவிழுந் தாலமே வரிசை யான
தன்மையாங் கர்மாவைச் சுமந்து கொள்ளுந்
தனியான பர்ஜக்கிற் செய்த கோலம்
உண்மையுடன் கொள்ளுமே நன்மை தீமை
யொழித்து நானென்றவக நீக்கு வாயே. 5

வேதங்கள் விளக்கினது வீணே யில்லை
விரிவான வுலகமதை விட வுபாயம்
சாதநிறை சொற்களையே மதியா ரீனர்
சார்ந்துமதம் படித்துமதி கெட்டு மாள்வார்
வாதமா முலகோர்க்கு மாத வத்தர்
மங்காத காரியத்தை மதித்துச் சொன்னார்
பேதமிலா மதத்திறவு கோலே தன்னிற்
பூதமனமே யிறந்துவிடக் கொண்டார் தானே. 6

அத்துவித நிலையடைய வல்ல னீங்கா
வத்துவித மடையவனு பவங்கள் வேண்டும்
சித்தத்தை யோர்நிலையி லாக்கி னாக்காற்
சீர்நிலையா முத்தியது வத்துவித மாகும்



சத்தியமாய் நிராசையாய்ச் சார்ந்த பின்பு
சந்ததமுங் கலக்கமறச் சாதிப் பாயே
சத்தியத்தைக் கைவிடிலோ சாரா தப்பா
சன்மார்க்க நெறிமுறையிற் சார்ந்து கோள்ளே. 7

அத்துவித நிலைவந்தா லகலுங் கர்மா
வனுபவ மின்றிவாயா லாகா தப்பா
சத்தமது வொழியுஞ்சா தனையே வேண்டுஞ்
சர்வசீவாத் மாபூத வெளியே சாரும்
சித்தமது நிலைகொண்டாற் சிவவெளியே யாகுஞ்
சிதாகாயத் தன்மைசிற் சொரூப மாகும்
அத்துவிதச் சமரசமே யருள்வெளியே யாகு
மருண்மிகுந்த திருவருளை யடுத்துப் பாரே. 8

அத்துவித நிலையையிங் கடைவ தற்கா
யருமார்க்கஞ் சொன்னதெல்லா மறிந்து கொண்
முத்திநிலை யடைவதற்கு மனம் விழிக்க [டேன்
முறையான தந்திரத்தை முழுதுஞ் சொன்னீர்
சித்தம் வாடாதிருக்கச் சித்தி யோகஞ்
செய்வதாற் ஸ்ரேஷமுண்டோ சிறக்கச் சொல்வீர்
பத்திமந் திரஞ்செபித்து மனமடக்க லாமா
பாசமின்றி மயக்கமறப் பகர்வீர் தானே. 9

சித்தியோகஞ் செய்வதினாற் சேட்டை ரெம்ப
சித்தமிகப் பதறியே சித்தின் மாள்வார்
சித்துச் செய்ய வடயோகஞ் செய்து மோஷஞ்
சீரழிந்து சுயமிழந்து வாடிப் போவர்
முத்திநெறி யடைவதற்கு மெஞ்ஞானச் சித்து
மூலத்தி னடக்குமே முடிவ தாக
முத்தலக்கா நிலையிலே முழுவிலா யத்தாகும்
முழுமனமு மிறந்து வஸ்தா முயர்வுதானே. 10

மந்திரத்திற் குயிர்மனமே மதித்துப் பாரு
மனமதுவாய்ச் செபிக்கையிலே மாறிப் பாயும்
தந்திரமாய் மனமதனைத் தரிக்க வேண்டுந்
தந்திரமே மனமேயாய்த் தயங்கி டாமல்
அந்தரத்தை யுற்றுப்பா ரந்நிலையே தோன்று
வருளுடைய வஸ்துவது வருளே காணும்
தந்திரமாய் நின்மனதை ஸ்தாபனஞ் செய்யத்
தயங்காது சத்துக்களைத் தனித்துக் கேளே. 11

அறிவுநிலை யடைவதற்கு வறிவைப் பாரு
வந்தரந்திற் சோதியது மிகவு மெத்த
அறிவுநிலை யறிவதற்கு வறிந்து பாரு
வாசபா சங்களையே வகற்றிப் போடு
அறிவான குருநிலையே வருளா மப்பா
வறிவுள்ள பிள்ளைக்கு வறிவே யப்பா
அறிவுநிறைத் தகமதிலே பாரு பாரு
வணுக்கணிறைந் தேகமா யணையுங் காணே. 12

அடர்ந்தகெவி யிருளதிலே யடுத்துக் காட்டா
தணையுமாம் விளக்கொளியுமவ் விருளினுமேல
அடையவனை சாதனையு மனுப வத்தா
லகமான சித்தமது மாடாதப்பா
நடையாக நாட்குநாளன் முறையே காணும்
நலனினைத்த வுடனுகு நிலைக்குப் பின்னே
கடலான வருள்வெள்ளங் கரைபுரண் டோடுங்
காணுமே யறிவுநிலைக் கருத்துத்தானே. 13

அருண்மிகுத்த குருநாதா வனைத்துங்கொண்டே
னன்பு நிறை சற்குணத்திலான சீரே
கருக்கலங்கா மனம்வெல்லக் கருத்தைச் சொன்னீர்
காரணங்க ளியாவையுமே கருதிக் கொண்டேன்



தருமகுண நிறைந்தவருட் டாயகமே நீவிர்
தடையின்றித் தாகமதைத் தணித்து வைத்தீர்
தருவான தூலத்தின் றன்மை யென்ன
தமியேனின் சந்தேகந் தவிர்ப்பீர் தானே. 14

அன்புநிறை கின்றபிள்ளா யுன்சந் தேக
மறவேயான் சொல்லுகிறேன் வகையைத் தானே
நம்பியதோர் தூலத்தில் ஞானநிலை வந்தா
ணலமான தூலத்திற்கு ஞாயமிரண்டு
வன்மைவந்த வழிதூல மாண்டு போகும்
வையகத்தார்க் கிந்தமுறை வழுத்த வில்லை
சென்மமாள காயமதிற் சீவாத்து மாதான்
செயலற்று லயமானாற் சடங்கெ டாதே. 15

## இரட்டைச் சந்த விருத்தம்.

பஞ்சபூதத் தாற்சமைந்த பாண்டமாமிது வாகுமே
பஞ்சபூதத் தாலழிந்து பறந்துபோவ துண்டுமே
பஞ்சபூதத் தலைமையான பதநிலையே யாகினாற்
பஞ்சபூதச் சடத்தினிலே பழுதுகளொன்று மில்லையே
பஞ்சபூதச் சடத்தினிலே பரஞ் சோதிவெப்பத்தாற்
பஞ்சபூதச் சுத்திசெய்து பதனமாகச் செய்யுமே
பஞ்சபூதக் கோட்டைதன்னைப் பற்றியைய மில்லையே
பஞ்சபூதமே யொடுக்கிப் பாகமேகைக் கொள்ளுமே. 16

வாசனையாகுந் திருசியத்தே வடுமனந்தான் சலித்துமே
வரிசையான நாமரூப வகையே மாயாவாகுமே
வாசனையான் மனதுபற்றி வருமேபாச மதனிலே
வண்மையின்றி மனமிரண்டாய் வர்டியே பிரளுமே
தோஷமில்லா மனமடக்கித் தொகுத்துக் காணலாகுமே
தொல்புவியிற் பிராணாயாமந் தொடுத்ததனைப் பாருமே
தோஷமற்ற சாந்தநிலையே தூய்மையாகக் காணுமே
துடுக்கமின்றி வகையறிந்தாற் றுரிதநிலையே யாகுமே. 17

## எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

மனம்போல பிராணாயாம மதிப்பில் லாது
மடத்தனமாய்ச் செய்தோர்கண் மருண்டார்பாரே
குணமான வாசானின் கிருபை வேண்டுங்
குற்றமின்றி வெல்லவழி குறிப்பாய்ச் சொல்வர்
தினமிதற்குக் காலபேதந் தெரிதல் வேண்டுந்
திட்டமுட்டாய்ச் செய்தவர்க்குத் தீநோ யாகும்
கணக்குடனே கருத்தறிந்து கலையைச் சேரு
கலங்காத மெய்யருளே காணுந் தானே. 18

பிராணாயா மதுதானே பக்குவ மானாற்
பிசகில்லாச் சமத்துவமே பலிக்கும் பாரு
பிராணாயா மப்பழக்கம் பக்கு வத்திற்
பேணிநிறை பதியறிந்த குருவைப் பற்றால்
பிராணாயா மப்பழக்கம் படிப்பா லாகா
பேணும்பத மறிந்துபக்தி பழக வேண்டும்
பிராணாயா மம்நிறைந்து பதம் டைந்த
பெரியோர்கள் சாதனையைப் பழகிப் பாரே. 19

சாதனையைச் செய்வதற்குச் சகத்திற் றானே
சாஸ்திரங்கள் பார்த்துச் சாதித்தா ரில்லை
சாதனையி லாசைகொண்டு வாசா னை நீ
சார்வதுவே நலமாகுஞ் சங்கை பாரு
சாதனையைச் செய்துவந்தால் மனது மங்கே
சற்குணமாம் ஞானநிலை நாளு மூழ்கும்
சாதனைதா னேயதிகஞ் சகத்தில் வேண்டுஞ்
சாதனைதான் செய்வதற்குச் சாந்தந் தானே. 20



## அறுசீரடி ஆசிரிய விருத்தம்.

சாதனை செய்வ தற்குச் சடந்திட மாக வேண்டுஞ்
சாதனை செய்யும் போது சன்மார்க்க சுத்தி வேண்டும்
சாதனை செய்வ தற்குச் சரியிடந் தனக்கு வேண்டும்
சாதனை செய்யுங் காலை சந்தேக மொழிப்பீர் தானே. 21

சாதனை செய் வதற்குச் சந்தோஷ மிகவும் வேண்டும்
சாதனை செய்யும் போது சரநிலை சரியாய் வேண்டும்
சாதனை செய்யு முன்னே சலமல நீக்க வேண்டும்
சாதனை செய்த பின்னர் சத்துளவா காரங் கொள்ளே. 22

சாதனை செய்வ தற்குச் சரிமுறை தியானத் தாலே
சாதனை செய்து கண்ட சற்குரு வேண்டு மப்பா
சாதனை செய்து நன்றாய்த் தகுசூட்ச மறிந்த வாசான்
சாதனை செய்யுங் காலைச் சந்தேகந் தெளிவிப் பாரே. 23

சாதனை முறையே யான தகுசூட்சந் தொட்டுக் காட்டிச்
சாதனை மௌன ஞானங் சரமது தோணு மப்பா
சாதனை நிறைநிலையிற் சர்வமுங் காணு மப்பா
சாதனை முறையைக் கொண்டு சார்வதே மேன்மை யாமே.

ஆக பாடல் 24.

சந்தேக விளக்கம் முற்றிற்று.

---

# அமிர்த கலை ஞானச் சுருக்கம்.

கேளப்பா வமிர்தகலை ஞானங் கேளு
　　கிளர்ஞானத் தால்வருகும் பலனைக் கேளு
கோளமா முலகினிறை யமிர்த கலையே
　　குணமான பூர்வவமர பட்ச மென்பார்
ஆலத்தி னடுநிலையே யமாவாசி யாகு
　　மறிவுடைய சூட்சமதை யறியமாட்டார்
காலத்தி னேர்மையைக் கருதிப் பார்க்கக்
　　காணலாங் கலை வெளியைக் காணலாமே. 1

கதிர் மதியி னடுமையாங் கருத்தறியக்
　　காணலாந் திடமாகக் கருதிப் பாரு
பதியறுபா ஞழிகையே பதிந்தி ருக்கும்
　　பகருமதி யமாவாசியைப் பாரு பாரு
விதியான வினைகளெல்லாம் விலகு மப்பா
　　வீணில்லை தொடுத்தகர்ம முடியு மப்பா
வுதித்தவகை யொருமையுட னூற்றுப் பாரு
　　வுணச்சியாய்ப் பக்குவத்தை தப் பாரு பாரே. 2

இரவுபக லறுபதே நாழி கைக்கு
　　ளிரவுபக லிருபாதி நடுவு மான
விரவிலறு நாழிகையிறந் தடுத்த நேர
　　மினிதாகத் திரிநாழிகை யேன்றெ டுக்க
மிரவான குமரியந்த விருட்டி னின்றே
　　யினமுவிவ காரமறும் விழித்துப் பாரு
மறவாது திரிசாம மனதி றந்து
　　மயங்கியநா லாஞ்சாம மலருந் தானே. 3



உலகத்தை நடத்துங்கதிர் மதிதா னுகு
　　முற்றுநீ யறிவுடனே யுவந்து பாரு
வுலகத்திற் கதிரவன்விப காரன் சந்திர
　　னொருமையுடன் கணக்கதுவைக் கண்டு பாரு
வுலகத்திற் றோற்றவு யி ரினங்க ளுக்கு
　　வுண்மையாய்ச் சந்திரனாற் சுகமுண்டாமே
வுலகத்தின் சீவாத்துமா சந்திரனே யாகு
　　முயர்பரமாத் துமாவருணன் சாட்சி யாமே. 4

ஆலத்தி னமிர்தகலை யங்கத்தே தா
　　னறிவுடனே நடைகாணு மன்பாய்ப் பாரு
தாலத்திற் குருசுபோற் றொடர்ந்து நிற்குந்
　　தாலத்திற்கத் திரிக்கோற்போற் காணு மப்பா
காலத்தை நடத்தும்வகை கதிர்மதி யாகக்
　　காணுமே பிரிந்துபிரிந்தே காணு மப்பா
பூலோகச் சூட்சமெல்லாம் புகுந்து காணும்
　　புதுமையறி வதுசடருதின் சூட்சந் தானே. 5

வளர்பிறையாம் பூர்வபட்சம் வலது பக்கம்
　　வன்மையா யெழும்பியிடப் பக்கங் காணுந்
தளர்வு தருவமரபட்சந் தன்னிற் றேய்வு
　　தான்வலது பாதம்பிறை கொழுகிக் காணுங்
களமான விருதயத்தி னடுமுடிச்சே யாகுங்
　　காணுமிதை யறிந்திணங்கி நயந்து பாரு
தளமான நடுவுச்சி காணநேர் சசியாந்
　　தபனனிரு தயகமல மாக நில்லே. 6

குற்றமின்றி ரவிமதியுங் கலந்து போகுங்
　　குறியாத வஸ்துவெல்லாங் குவிந்து போகுங்
குற்றமெல்லாம் போக்கிக்குண மாகத் தோணுங்
　　குபாட மொன்றுமில்லாத குணமே காணுங்

குற்றமின்றி விரிவொடுக்க மற்ற காலங்
குணமிகுந்த வறிவுநிலை யாகத் தோணுங்
குற்ற மின்றிச் சமவெளியாய்க் குதரத் தாகுங்
கூடுமே நித்தியா நந்தங் கூடுந்தானே. 7

நித்தியமெனு மமிர்தகலை நேரா யுந்தி
நிலையாகக் கபாலத்தை நோக்கிப் பாரு
சத்தியக்குண் டலிசத்தி தாரை தந்தி
சமத்துவப்பிர்ம நாடியெனச் சகச மாச்சு
முத்திவழி தனையடையச் சசிநாடி கண்டு
மோனமன மொடுங்கிக்குண் டலியை யேற்று
நத்தியே பிடரிவழி தொடுத்தே மிக்க
நடைநோக்கி யிவ்வழியை நன்றாய்ப் பாரே. 8

நந்தியுள குண்டலியின் சூட்சங் காண
நயமுடனே மனதடக்கி நயந்து பாரு
சத்தியான மூலத்திற் சார்ந்து போகுஞ்
சத்தியங்க டவளுத பத்தியங் காரு
பத்தம்வே ரோடற்றுப் பறந்து போகும்
பகையொன்று மில்லையப்பா பதித்துப் பாரு
தத்தியா முதுகுதண்டிற் றயங்கா நாடி
தனிநிறைந்த சாரூபப் பதவி தானே. 9

முத்தியென்றால் வாய்ப்பேச்சால் முடிவ தில்லை
முறையாக வடுத்தடுத்துப் பழக வேண்டுஞ்
சித்தியடைந் தால்மனத்தின் சித்தி யநேகந்
தெளிவாகும் வழியுடனே நடந்து பாரு
பத்திமனம் பண்படுத்தக்குண் டலியின் வேகப்
பதற்றமதே மிகவொடுங்கிப் பரநிலைதா னாகும்
பத்தியங்கங்க டவறிவிடிற் பாதகந்தா னாகும்
படியாஞ்சா யுச்சியபதம் பலிக்கும் பாரே. 10



பஞ்சபூத தூலத்தில் வாதபித்த சிலேத்துமம்
பதமுடனே யிருப்பதற்குப் பண்பு கேளு
பஞ்சரச வுணவதனைப் பகுத்த ருந்து
பசிப்பிணியால் வாடாதே பாரின் மோச
மஞ்சிடாமற் சாதனையைச் செய்யும் போது
வறுசுவையா காரமதை யன்பாய்க் கொள்ளு
மிஞ்சிவயிறு நிறையவே யருந்தி டாதே
மீறுகின்ற காமத்தை யொடுக்கிப் பாரே. 11

திறமாக நாட்குநாட் சித்தி பெற்றாற்
றிகைப்பில்லா மனத்தின்வெளி திறக்கும் பாரு
தரமாய்நீ செய்தொழிலை விட்டி டாதே
தர்க்கமுடனே ரமதைத் தெரிந்து வைத்துக்
சரமாக வாடாமன் மனத்தைப் பாரு
தானகக் காரியதர்ம மாக்கி வைக்கு
வரமாக மனம்பதறி மயக்கங் கொண்டால்
மனைமக்கள் காரியங்கள் கெடுத லாமே. 12

உலகின்மனம் போல்வாழ்வே யுண்டாம் பாரு
வுண்மைமனத் தகுதியினை யறியார் பாரு
கலகமிலா மனத்தாலே முழுதுஞ் சித்தி
காணுமனச் சாந்தியே கதிக்கும் பாரே
யிலகுமனத் தான்மிக்க நன்மை யூறு
மிதமாகு மனுபவத்தின் முறையைச் சொன்னேன்
பலமான மேகமில்லாச் சூரியன் போற்
பார்தனிலே கர்மநடை கண்டு மீளே. 13

மருவாதே பாசமதின் மருண்டி டாதே
மனதி லனே கம்மாய்கை மீளு மப்பா
மறுவில்லா மனமதுதான் வசிய மாகு
மதிநிறைந்த கதியதனை மதித்துப் பாரு

வருண்மிருந்த வறிவுநிலை யடைவோ மப்பா
வாகாயத்தின் றுறவுநிலை யறியப் போதும்
மருளாமற் காமத்தை யடக்கி தேறு
மர்மமெல்லா மனவெளியின் மறைவி ராதே 14

வேதமறை சூட்சமெல்லாம் விளங்கி போகும்
வேதியர்கண் மிரட்ட லெல்லாம் விளக்கமாகும்
வேதமென்று வீண்வார்த்தை விள்ளு வார்கள்
வேடத்தி னுன்மிரட்டி வினையிற் சேர்ப்பார்
வாதமுறை தேடிவீணாய் வாடி டாதே
மறைவான வேதிசெய்து வீழ்வார் ரந்தோ
நாதநிலை தனைக்கண்டு நாடும் போது
நாதாந்த வாதமுறை நல்குந் தானே. 15

போடுபோக்காய்ப் போகாமற் புகுந்து பாரு
புத்தியைவிட்டுப் பரப்பியே யலையா தேநீ
நாடுநக ரெண்ணாது நாடிப் பாரு
நாளையென்று வீணாளை நடத்தி டாதே
வாடுதலில் லாவிவேக விளக்கம் பாரு
வரும்வினையின் பெருக்கமதை விலக்கிப் போடு
மாடுபோன் மதிமலைத் துருண்டி டாதே
மாதவ மடையவழி நடத்து வாயே. 16

ஆகூ பாடல் 16.

அமிர்த கலை ஞானச் சுருக்கம் முற்றிற்று.

26802

# மனலயக் குறிப் பனுபவ முறை.

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

பாரப்பா மனமதுதான் வசிய மாகப்
பற்றியே மார்க்கமது தெரிந்து பாரு
நேரப்பா மனவசிய மா வதற்கு
நேமமாய் விளங்கியதை நிறுத்திப் பாரு
பாரப்பா பார்வை யெல்லாம் பாரா மன்னீ
பதனமாய் விஷயத்தைப் பார்த்தொ டுங்கித்
தேரப்பா பார்க்கமுறை தெளிவாய்ச் சொன்னேன்
றினமும்பய பக்தியுடன் றெறிந்து பாரே. 1

பாருதய காலையிலே பகல வன்முன்
பாதமுத லுச்சிவரை பதித்துச் சாயை
நேராக மனதைவிட்டு நிலையை நோக்கி
நிழலையுன் மட்டம்வைத்து நெற்றி பாரு
மாறுமன் மனதையே மறந்து பாரு
மறுநினைவே யொடுங்கிச்சட மௌன மாகுந்
தீரமா யிருந்துதின மரை நாழிகை
திரும்பாமற் பார்மனந்தன் வசிய மாமே. 2

தீர்க்கமாய்ப் பழகவின்னுஞ் சொல்வேன் கேளு
திரமிரவு நேரந்தன் முன்கண் ணாடி
பார்க்கவே யாடியுட் படியுஞ் சாயற்
பார்க்கவுன் மனமுநே ராயொ டுங்கு
சேர்க்கவே சிலகாலந் தெளிவாய்ப் பதித்துத்
தெரிசிக்க வாடிபோய்த் திங்கட் காணும்
வேர்க்கவே வார்த்தைவீண் செலவி டாதே
வினையான மனதுனக்கு வசிய மாமே. 3

கேளப்பா வின்னமொரு மார்க்கங் கேளு
கிருபையுடன் சொல்லுகிறேன் கவனம் பாரு
மாளப்பா நல்வினைகண் மறந்தி ருப்பாய்
மனதிற்கு நல்லசக்தி யுண்டு மப்பா
தாளப்பா சிற்றின்பந் தன்னி லேதான்
தயங்காதே மனவசத்தால் வசிய மாகும்
நீளப்பா காலமதை யறிந்தி றைவ
னெறிப்பட்டான் முத்தியது நிலைக்குந் தானே. 4

இரவுதனிற் படுக்கையி லிருந்து கொண்டெ
யெழிலான தன்னையோ யாசா னையோ
மருமமாய் மனமதிலே மதித்துப் பாரு
மறந்துடனே தூலமது மதியாய்க் காணும்
மறவாமற் சிலகால மனம்ப ழக்கி
மனச்சேட்டை யொடுங்கிப்போய் மதிபெற் றோங்குந்
திரமான வாசானைத் தெரிந்து கேட்டு
தீர்க்கவுயர் சமாதிநிலைத் தெளிவி னில்லே. 5

தனதாக வரைக்குள்ளே தீப மேற்றித்
தன்மையா மொருசுடராய்த் தொடுக்க வைத்து
தனதானதீப முன்னே பத்மா சனத்தைத்
தரமாக வேபூட்டி யிருந்து கொண்டு
நினைவாகத் தீபமதை நோக்கிப் பாரு
நிட்சயமாய்த் தீபவட்ட மறைந்து காணுந்
தினகால மனுபவித்துத் தெளிந்து பாரு
திகழ்ஞான மார்க்கத்தின் றிறவு கோலே. 6

அணுவளவும் பிசகாம லருஞ்சித்தி யாகு
மன்பனே நித்தியகாலப் பெருமை யாலே
மனு வெல்லாம் வசியமாகு மடமை யின்றி
மயிரளவும் வினைவழியின் மயங்கி டாதே



கனமான மனம்பதறிக் கலங்கி டாதே
காசினியிற் காண்போரை மிகவு நேசி
தினையளவுங் குறைவின்றித் திருவருட் காணுந்
தீயர்களை விட்டுமனந் தூய்மை யாக்கே. 7

பிர்மஞான மடைவதற்குப் பக்குவம் வேண்டும்
பிறிதொன்றிலை மனப்பண்பு பெரிதும் வேண்டும்
கர்மமுள்ள மனத்தார்க்குக் கதியொன் றில்லைக்
கர்மமதை நீக்குதற்குக் கருத்து வேண்டும்
மர்மமாய்ப் பழக்கிமனம் வசிய மாக்கு
மனத்தினது பெருமைதன்னை மதிக்கவேண்டும்
வர்மமிலா மனமதுவே மகாவஸ் தாகும்
மாண்பு பெற்ற முத்தலக்கா மாவுஜூதே. 8

சினமதனைக் கொள்ளாதே செயல்கள் வீணாய்ச்
செய்துநல்ல மனமதனை வாட்டி டாதே
மனமதனைச் சுழலவிட்டு மருண்டா டாதே
மறவாம லனுபவத்தைத் தெரிந்து செய்நீ
பணச்செருக்காற் பழிபாவஞ் செய்தி டாதே
பசித்தவர்க்குச் சோறுகொடாப் பாவியா காதே
தினமுமுந்தன் குடும்பத்தில் வடுச்செய் யாதே
தீரமாய் நல்வழியிற் றேர்ச்சி கொள்ளே. 9

மனவருத்துடுங் கருமங்களை மாற்றிப் போடு
மனக்கொதிப்போ நரகத்தின் முனையே யாகு
மனமதனைப் பக்குவஞ்செய மாதவத் தோர்முன்
மறைபலவும் விரித்து ரைத்தார் மகிழத்தானே
மனப்பெருமை சிறுமைகளை மனுக்கள் காணார்
மனமறிந்து மனநலத்தை வழியிற் காட்டார்
மனம்போன போக்கெல்லா மருண்டு வாடி
மடிந்தார்கள் சகந்தனிலே மனிதர் தானே. 10

மனப்பக்குவ மாவதற்குப் பிராணா யாமம்
வகையுடனே செய்வதனாற் பலனு முண்டு
கணக்கின்றிப் பிராணாயாமங் கருதிச் செய்து
கனமோஷம் போனார்கள் கருதிக் கொள்ளு
வனமான மனக்காட்டை வெட்டித் தள்ளி
வைராக்கிய மாய்க்கருக்கி வழியைக் காட்டி
மனமான வகக்காட்டின் மிருக பூத
மருண்டோட விவேகவேட்டை வளமாய்ச் செய்வாய்.

வல்லவனுக்குப் புல்லேயா யுத மென்பார்கள்
வலிமையிலாப் பிள்ளைகளைப் புலன்கள் பற்றும்
மல்லலுறு மனக்காட்டை யழிப்ப தற்கு
வனுவளவு தீவைத்தா லதுவே போதுங்
கல்லுமன மானதுவை மனத்தீ யாலே
கருக்கிவிடு சூட்சமெல்லா மிதுதா னாகும்
நல்லமன முடையவா சானி னுன்மை
நம்பியிந்நூற் முறைபடியே நடத்திப் பாரே. 12

சினங் கொண்டே யெழும்பிவருஞ் செந்துக்கண் மேற்
சீறியே யுறுக்கிப்பார் சிவந்த கண்ணைச்
சினமுடைய மனையாளைச் சீர்தி ருத்தச்
சிறப்புடைய வுபாயமதைத்தெளியச்சொன்னேன்
கனமான புகழுடைவாய்க் கர்ம நீங்கக்
காலத்திற் பரகதியுங் கையிற் கூடு
மனதினிலே கண்டுமகா தவஞ்செய்வாய் நீ
மகத்துகட்சக வாசமிக வேண்டுந் தானே. 13

உண்மையாங் குருவவரைக் கண்டு நீயு
முபாயங்கேள் மனமடக்க வுண்மை சொல்வா
ருண்மையா யவர்மனமுள் ளொடுங்கி நிற்கு
முண்மையா முனக்கேவுப தேசஞ் செய்வார்



செம்மையில் லாசானைச் சேர்வ தாலே
செயமில்லா தாக்குவர் சீடன்செல் லாதே
தம்மையறி யாசானுங் கிடைக்கா விட்டாற்
சாற்று மிந்நூற் படியேநீ நடத்தித் தேறே. 14

தூலவழி யாற்றால விச்சை யாகித்
தூயமன நிரம்பிப் பாசமாய் நிற்குந்
தூலமன மடக்கத்தொல் புவியின் மேலே
துறைகண்டே னனுஷ்டித்தேன் றெளிந்து கேளு
காலமா வாலிபத்திற் கண்ட றிந்து
கருதியே நடத்திப்பின் கண்டே னப்பா
காலமதில் வருமாயா வத்த னையுங்
கணக்கிற்சே ராததற்கு வறஞ்செய் வாயே. 15

பாலியத்தின் மனதடக்கப் பயிர்ச்சி செய்தாற்
பருவத்திற் பரனருளைப் பெறலா மப்பா
பாலியத்தின் மனதைவிட்டுப் பாழாம் பின்பு
பருவத்தில் வினைதிரண்டு பதிம றக்கும்
கேலிகுபா டங்காமம் பொய்பொ றாமை
கெடுலோபி பாவியா யாகுங் கண்டாய்
காலியா யிருதயத்தினல் விதையைப் போடு
கனதவமா மோட்சகதி காணுந் தானே. 16

மறுவில்லா மதலைகளி னிருத யத்தின்
மாதாபி தாசுற்ற மகிழ்வா யூட்டி
மறுவில்லா மனதிலங்கு மாயை சேர்ந்த
மார்க்கமதைக் கண்டுமனந் தெளிய வேண்டுந்
திருவான விறைவன்பக்தி தினமும் வைத்துத்
தீதான பந்தமதைத் தீர்க்கக் கண்டே
குருவான பெரியோரை யகம்பு றத்திற்
குறைகூறு நிற்குணத்திற் குவிந்து போமே. 17

உருவமதை யிழந்து விட்டாற் கேடுண்டாகும்
பக்குவகா லத்திலதைப் பழக வேண்டும்
மறுவதுவுமிகுந்து விட்டாற் வசமாங் கேடு
மனமிகைக்குங் காலத்தின் மடக்க வேண்டுஞ்
சிறுமையில்லா சித்தத்தைச் செயிக்க வேண்டுஞ்
சீராகச் சினமிறந்து செய்கை வேண்டுங்
குருவழிநா டுங்குணமே குவிய வேண்டுங்
குறிமறந்து கொத்தோடே கூடுந் தானே. 18

மொத்தத்தவ நிலையடைய முன்குறிப்பு வேண்டு
முடிந்தபின்பு முன்குறிப்பு மறந்து காணுஞ்
சத்தான முத்லக்குச் சகச நிஷ்டை
சாரசமத் துவமுன்சா தனையே வேண்டும்
முத்லக்கா முஜூதது மொத்த மாய்முடிய
முன்முயற்சி மார்க்கமது வேண்டு மப்பா
சுத்தசித்தஞ் சேர்ந்துசிவ வடிவ மாகுஞ்
சுமையுலகெல் லாஞ்செறிந்து சிற்சொரூப மாமே.

புவிவாழ்வை மிகவும்பிடித் தாவ தென்னே
புவனத்தின் புதுமையைப் பார்க்க வேண்டுங்
கவிபடித்துக் கலைஞான நாலி னுட்பக்
கருநிலைகள் காணாத கசடாற் றுனே
குவிகுணங்களில்லாமற் கெட்டு வாழ்வார்
குணக்கவியான் மனங்கசியச் செய்வா ரப்பா
செவிமடுக்கச் சீர்கொண்ட வகையைப் போலத்
தியானமதி லொன்றுபட்டாற் றெளிவார் தானே.

ஆ பாடல் 20.

மனலயக் குறிப் பனுபவ முறை முற்றிற்று.

---

# சோடச ஞானச் சுருக்கம்.

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

பாராரச் சோடச வகையைக் கேளு
பதியான பெண்ணுருவின் மதியைப் பாரு
நேராக மாதமதி னிகழும் பட்ச
நீதியா முன்பதினைந்தும் பூர்வ பட்சம்
கூரான பிற்பதினைந்தி லமர பட்சங்
குணமாக விளக்கியதை பாரு பாரு
காராக விதையறிந்து கருத்தைப் பாரு
கருவிழிதான் கலங்கிவிரி காணுந் தானே. 1

வாகான வளர்பிறையில் வலது பாத
வரிவிரலிற் றொடுத்து வுச்சி வாழ வேறும்
வாகான வுச்சிவிட்டு வமிர்தங் கீழே
வந்தைந்து விடந்தங்கி யிடது பாதம்
வாகான வகையறிந்து வரிசை கண்டு
வாய்பேசி யுருக்குலைந்து வாடி டாமல்
வாகாய்த்தன்னில் லாளன்றிச் சேரா தேநீ
வழிதவறி மாய்கையிலே வீழ்ந்தி டாதே. 2

கல்வியதின் வரம்புகளை மறந்தி டாதே
கருத்துடனே வுண்மையாய் நடந்து பாரு
கொல்விதமாங் கோழையா யிருப்பா யானுற்
கொண்டவளு மீறியே கொடுமை செய்வாள்
மல்விதமாங் காமத்தின் மனமடக்கிப் பாரு
வாகுமனம் பதரும னிறுத்திப் பாரு
இல்விதத்தில் வல்லபமா யிருந்தா யாகி
லினிமையாய் பெருமைமிக வுண்டுதானே. 3

தெய்வபக்தி யதிகமாய்த் தினமும் வேண்டுந்
தீதற்ற சற்கரும முடிக்க வேண்டும்
வையகத்தின் மனம்போல வாழா மல்லே
மனவுறுதி கொண்டுநீ யிருக்க வேண்டும்
செய்யாத வினைகளெல்லாஞ் செய்யா மன்னீ
சிவபக்தி யதிகம்வைத்து வொழுக்கந் தன்னை
மெய்யாக வே செய்து மிகு பலனை
மிகவறிந்து குடித்தனத்தை நடத்து வாயே. 4

புத்தியுட னீநடந்தாற் புகழெந் நாளும்
புத்திகெட்டே யலைவார்க்குப் புகழே யில்லை
சத்தியங்க டவறிநின்று விளையா டாதே
சகமதிலே பரதவித்துக் கர்ம வினையாம்
பத்தியங்கள் கெட்டுப்பர கதியுங் கெட்டுப்
படுநரகிற் சுழன் றுமே திரிவா ரப்பா
சித்தியாக மிகபரத்தின் வாழ்க்கை தன்னைச்
சிறப்புடனே செய்துதியா னத்தைக் காரே. 5

இமைகொட்டா நீலக்கண் ணுடையா ளைத்தா
னினிமையா யடக்குதற்கு நீதி கேளு
விமையாமன் மனம்வைத்துச் சொன்ன கால
மெண்ணியே கணக்கறிந்து மதித்துச் செய்வா
யமையாத கண்விழியா ளமைதி கொள்வா
ளந்நியமா தரையணுபு மடுத்தி டாதே
யிமையாத வில்லறத்தை நடத்திப் பார்க்க
வின்பமா யில்வாழ்க்கை யாகுந் தானே. 6

பிரமச்சா ரியின்விரத மிகவுங் கஷ்டம்
பின்னமிலா விவேகமது வதிகம் வேண்டும்
மருமமாய் விரதமதை முறிப்போன் பாவி
மதமதனைத் தீர்க்கவில் வாழ்வு நன்று



தருமத்தைப் பற்றிக்கொண்டு தர்க்க மின்றித்
தானடந்து சத்தியத்தின் படியே பாரு
கருமத்தால் வாழ்க்கை நலஞ் செய்வாயாகிற்
கனநன்மை பெற்றுவரங் கதிக்குந் தானே. 7

சத்தியத்தி னெறியின்றி பிரமச் சாரி
தான்விரதங் கொண்டாக்காற் கலக்க மிக்க
புத்தியுடன் விவேகத்தாற் பத்தி யாக
பூரணவை ராக்கிய மனுஷ்டானம் வேண்டும்
பத்தியமாய்ப் பிரமச்சாரி விரதங் கொண்டாற்
பாருலகிற் ஶ்ரேஷமின்றிப் புகழுண் டாகும்
சித்தியது வதிகமுண்டு சேர்க்கை யில்லாத்
தெளிகல்வி சுரந்துவருட் சிறக்குந் தானே. 8

பாலியத்தின் வயதுமுதற் பிரமச் சாரி
பரமனவன் கிருபையாற் காக்கவேண்டுந்
தாலிகட்டத் துள்ளாதே தோஷ மாகுந்
தன்பக்குவம் வருமுன்னே செய்தி டாதே
சோலிசெய்வர் குடும்பத்தார் துணிந்தி டாதே
தூய்மையா மர்மத்தைத் தொடர்ந்து காப்பாய்
தோலுநரம் பென்புடைய தோகை யாளின்
றுணைதனக்கோர் தகுதிவரிற் றாய்வாழ் வாமே. 9

தூலத்தின் சத்தான நாத விந்து
சூழ்ந்ததுவைத் தோகையர்பாற் றுலைத்தி டாதே
காலத்தின் கோலகனக் காட்சி யாகுங்
கண்கொண்டு பாராதே தன்னைப் பாரு
மேலத்தன் காயமதைக் கெடுத்தி டாதே
மேதினியிற் காயத்தான் மேன்மை யுண்டு
காலத்தின் பக்குவாயுண் முப்ப தாகுங்
கருத்துடனே பக்திகொண்டு வாழ்க நன்றே. 10

புத்தியின்றி யிந்நாலைத் தள்ளி டாதே
புத்தியுள்ள செய்க்கீது போது மப்பா
வெற்றியொடு முறைபோல நடந்தா யாகின்
மேதினியின் வாழ்க்கையிலே விக்கின மில்லைச்
சத்தியத்தைக் கைக்கொண்டு தரும மாகச்
சாதனையா மில்லறத்தை நடத்திப் பாரு
கத்தியே திரியாமற் கரும நீங்கக்
காரணமாந் தருமஞ் செய்து காப்பீர் தானே. 11

பெண்புத்தி கேட்டுநீ மயங்கி டாதே
பெருமூட்டைப் பாசத்தைச் சுமத்து வார்கள்
கண்முன்னே யவர்கட்சொல் வன்மை யாலே
கலக்குவார் கடுகளவுங் கருதி டாதே
கண்டதுபோல் வார்த்தைவிண்டு கபட மாகக்
காலிற்குத் தளைபூட்டிக் கவிழ்த்து வார்கள்
மண்டலத்தி லவர்புத்தி மதித்தி டாமல்
மதியுடனே நடப்பதுநன் மார்க்கந் தானே. 12

தன்புத்தி யையிழந்து தானே கெட்டுத்
தையலர்மேற் பழிசொல்ல லாகா தப்பா
தன்புத்தியைச் செவ்வை யாக்கி னுக்காற்
சகவாழ்க்கை யேமிகவுந் தகுதி யாகுந்
தன்புத்தி யாலறியத் தன்னைத் தானே
தடையின்றி யெல்லாந்தன் வசமே யாகுந்
தன்புத்தி யாலறிந்த பெரியோ ரெல்லாந்
தம்வாழ்வி லகமுறையைத் தழுவிப் பாரே. 13

திங்களொளி திருத்தூதர் நபிமா ரெல்லாஞ்
செய்தவில் வாழ்க்கையுடன் றுறவு மாமே
மங்கலிலா ஞானமது தான டைந்து
மறைசுருதி விண்டியற்கை மாதிரியே யாகுந்



தங்காத விவேகத்தான் மூட மாகித்
தான்கெட்டே வறிவிழந்து போனு ரப்பா
பங்காகு ஞானமதை மிகவுங் கண்டு
பரமனவன் செயலதிலே பதிவீர் தானே. 14

இகவாழ்க்கை தனிலிசையு மனத்தை மிக்க
விறுக்கியே பிடித்திதமா யிருந்து பாரு
விகசூட்ச மின்னதென்று விளங்கு மப்பா
விசையாத மனமதனை யிணக்க வுபாய
மிசபரத்தி னிலைகொண்டே யிருக்க வேண்டு
மெழிலாகும் பரவெளி யிணங்கும் பாரு
விகமதிலே யுயர்நிலைக ளில்லா விட்டா
லினிமை யின்றி மீனமதின் மூழ்குவாரே. 15

பாரத்தா ஞல்குதனின் போக்கை நோக்காப்
பண்பினுற் பாசமதிற் பட்டா ரப்பா
நேரத்தைக் கடத்தாம னினைவாய் நில்லு
நேத்திரத்தின் பார்வையை நிறுத்திப் பாரு
காரைத்தாழ் கண்விழியாற் கருத்தைப் பாரு
கருவிழியே யொருமித்துக் கருவு காணுந்
தாரத்தை விட்டுநீ தடுமா றாதே
தரணிவாழ் தையலரைத் தாயாய்ப் பாரே. 16

ஆக பாடல் 16.

சோடச ஞானச் சுருக்கம் முற்றிற்று.

---

# காட்சி நிலைச் சுருக்கம்.

எண்சீர்க்கழிநெடி லடி யாசிரிய விருத்தம்.

பாரப்பா பக்குவமுறை யாகும் போது
    பரிவான காட்சியது பலித மாகுங்
காரப்பா மிகவுள்ளக் கருத்திற் காணுங்
    கருதியரோ மங்குளிர்ந்து வேர்வை தோணுங்
கூரப்பா தேகமது கிருகி ருக்குங்
    குணமான காட்சிநிலை காண்ப தற்கு
வாரப்பா மனவசிய முண்டு பண்ணும்
    வரிசையாம் வானவிற் போற் காணுந்தானே. 1

புத்தியுள்ள பிள்ளாய்நீ யுணர்ந்து பாரு
    புதுமையாம் பரிபூரண பிறையைக் காண்பாய்
சித்தி சித்தஞ் சிதறுமற் சிவத்தைநம்பு
    சீராக மின்னல்வெட்டி சிறப்புத் தோணுஞ்
சத்தியத்தைக் கண்டுமனஞ் சாதித்துப் பாரு
    சகத்தின் றிரை யாவுமே சாய்ந்துபோகு
முத்தியை யடைவதற்கு முயற்சி காணு
    மூர்க்கமாய்ப் பாராமன் முனையைப் பாரே. 2

கூலமாம் பூதகுணங் குவிந்து காணுங்
    குறிப்பாகப் பாராதே குணத்தைப் பாரு
கோலமாங் குமரியிருட் குவிந்து காணுங்
    குணங்கெட்டுக் குழம்பினுற் காணமாட்டாய்க்
காலத்திற் சுழன்றுவருங் கதிர்மதிபோற் றோணுங்
    கபடமற்ற கருத்துடனே நிலைத்துப் பாரு
மேலதாம் வடிவமது மெதுவாய்த் தோன்றும்
    விதித்தேறத் தடைசெய்து மயக்குந் தானே. 3



கலங்கியே கனநினைவு குவிந்து காணுங்
    காரணவகக் காட்சியதிற் கருத்துத் தோணும்
வளங்கிவரும் பாசவினை வாரா தொழியும்
    வையகத்தின் வாசனையே விவேக மாகுந்
துலங்கிவருந் தோற்றத்தைத் தொடர்ந்தி டாமற்
    றூய்மையா மனத்துடனே குவிந்து பாரு
கலங்காமற் கருத்தினிலே வைத்துப் பாரு
    கவனமுடன் றீரத்தைத் தினமுங் கொள்ளே. 4

நீதமாய்ப் பஞ்சபூத நட்த்தை நீங்கி
    நேரான நிலையடைய நினைவுகனு வாகு
நீதமா யகத்தினிடை நிறைந்து காணு
    நிலைமையாய்க் கண்டதுபோ னடப்பைக் காண்பாய்
வாதமா மனம்பதறி விழுநீர் வடியும்
    மட்டற்ற காரியமும் வந்துதோன்றுஞ்
சாதமா நோவினை யான் மயங்கிடாதே
    சார்ந்த பஞ்ச புலனுசை மாகுந்தானே. 5

பஞ்சபூ தம்மனது பக்குவ மாகிற்
    பலநினைவு போகப்பரி பூரண மாகும்
பஞ்சபூ தச்சுத்த மானு யானுற்
    பரமரக சியங்களெல்லாம் பதிவாய்க் காணும்
பஞ்சபூ தச்சுத்தி யிலாரைப் பார்க்கப்
    பரிவாக மனம்பதறி நடுங்கும் பாரு
பஞ்சபூ தச்சுத்தி செய்தி றையிற்
    பாகமுறத் தோஷமெல்லாம் பறக்குந் தானே. 6

இயற்கையிலே யிவ்வித மிணங்கு மானு
    லிறைவனடி சேர்வதற்கு மனமி சையு
மியற்கையிலே மனதினங் காம விச்சை
    மியங்கியே யிசைகெட்டு வாடும் பாரு

வியற்கையா யிறைநினை விருப்போ ருக்கே
யிலங்கிய காட்சியது விளங்கும் பாரு
வியற்கையிலே யினியகுருத் தேடிப் பார்த்தே
யிருதயத்தின் ரகசியத்தைத் தொடரு வாயே. 7

நாதத்தொனி நன்முறையாய் நல்கத் தோணு
நாதாந்த வோசையது நலமாய்த் தோணுங்
காதடங்கா மொழிச்சலது கருத்திற் றோணுங்
கபடமற்ற கருத்துடைய தன்மை யாலே
மாதவத்தோர் மதிப்பாக மனதைக் கட்ட
மார்க்கமதை மொழிவார்கண் மறந்தி டாதே
வாதமது பேசியே வாடி டாமல்
வயறுவளர்க்க வீண்வேடங் கருதிடாதே. 8

இயல்பாக விந்தமுறை யிருக்கு மாறு
விருளான குருட்டறையி லிணங்கி டாமல்
மயமான குருவிடத்தின் மதித்துக் கேளு
மறைமுகமாய்க் குருவவரு மதித்துச் சொல்வார்
நயனத்தின் வழியிலே நடந்தா னன்மை
நாதாந்த சிலம்பொலியே நடக்கக் காணும்
பயந்துவா டாமற்பக்தி கொண்டு பார்வை
பார்த்துப்பார்த் துப்பழக்கஞ் செய்கு வாயே. 9

ஆ. பாடல் 9.

காட்சி நிலைச் சுருக்கம் முற்றிற்று.

---

# அத்வைத உண்மைப் போதம்

## அறிவு மயம்

அறுசீர் அடி யாசிரிய விருத்தம்.

உன்னைநீ யுணர வேண்டி யுலகெலா மோட வேண்டா
முன்னைநீ யுணர்ந்து பார்க்க வுனையன்றி வேறு காணு
யுன்னைநீ யொடிக்கிப் பார்த்தா லுள்ளது நீயே யாவா
யுன்னையே யுன்னுற் கண்டா லுள்ளது வறிவு தானே. 1

அறிவைநீ யறிவ தற்கே யகற்றினு யநேக கால
மறிவைநீ யறிவா லறிய வகமின்றி வேறு மில்லை
யறிவான வறிவு மேநீ யனுதின மாய்ந்து பார்த்தா
லறிவவ னன்றி யில்லை வறிவது தானே யாமே. 2

தன்னைத்தா னறிய வேண்டித் தரமுடன் சொன்ன தெல்லா
தன்னைத்தா னறிந்து பார்க்கத் தானது வொன்று மில்லைந்
தன்னையே யிழந்த தானுய்த் தறித்துநீ பார்த்தா லங்கு
தன்னையே யல்லா தெதுவுந் தானங்கு காண மாட்டாய். 3

தன்னையே யுணர வேண்டித் தானத்தை யுணரா மன்னி
தன்னையே படு குழியிற் றுழவே யாழ்த்தி மாய்ந்து
தன்னையே நொந்து கெட்டுச் சகத்திலே விழுந்து றங்கித்
தன்னையே பாரா மற்றுன் சகமதைப் பொய் யென்பாரே. 4

அறிவுள்ள மைந்தாநீயு மறிவதைச் சொல்லக் கேளு
மறிவது சூட்ச மாகு மனேகமா யறிவைக் கண்டா
லறிவது கலங்கா மன்னீ யறிவதை யறிவாய்க் கண்டு
வறிவது பரவஸ் தாகு மறிவதி னின்றுப் பாரே. 5

### ஸ்தூலம் மறத்தல்

தூலமே யறிவை மூடித் தூங்கிட செய்யு மப்பா
தூலமே யறிவின் கோலந் தூய்மையாய் மெய்யைக் கொண்டு, தூலத்தின் றொழி லறிவைத் தொடர்யாக விளக்கிப் பார்க்கத், தூலத்தின் றிரையை நீக்கித் துரிதமா யகத்தை நோக்கே. 6

### மாயை விலக்கல்

மாய்கையே தூல மாகு மயங்கியே காணும் போது
மாய்கையே பலகோ லம்மாய் மனத்தினிற் கோலஞ் செய்யும், மாய்கையுந் தன்னை யன்றி மனமதில் வேறு மில்லை, மாய்கையை நோக்கிப் பார்த்தால் மாய்கையைக் காண மாட்டாய். 7

### வேத உணர்வு

வேதநூற் சாஸ்தி ரங்கள் வினையமாய்க் காட்ட வில்லை
வேதநூற் சூட்சந் தானே வினைபல வாகத் தோன்றும்
வேதத்தி னன்னோக் கத்தை வீணர்க ளறிய மாட்டார்
வேதத்தின் றிறவு கோலே வினைநீங்கி யவர்க்குத் தானே. 8

### அரூப வுணர்ச்சி

கண்டவர் சொன்ன தில்லைக் கருவுரு வான சோதி
கண்டவர் விண்ட தெல்லாங் கருத்துட னுருமித்துக்காண்
கண்டசூட் சத்தை யங்கு கண்டதாய்ச் சொன்ன ராகிற்
கண்டதைச் சொல்ல வில்லைக் காணரி சூட்சந் தானே. 9

அரூபத்தை யறிய வேண்டி யருந்தவஞ் செய்வ தெல்லா
மரூபத்தை யறிய வில்லை யரூபமே காண வல்ல
வரூபத்தை யறிவ தற்கு வனுமானங் காட்டி னார்க
ளரூபத்தி னறிவு ணர்பி னறிவாகத் தானே காணும் 10



### இரண்டறக் கலத்தல்

அத்துவித மார்க்கத் தையே யறிவுட னறிந்து நாட
வத்துவித மான மெய்யே யருள்வடி வாக நிற்கு
மத்துவித வுண்மை காண வதுவிது வில்லை யென்று
வத்துவித மான தன்னை யறிவுட னிறைந்து காணே 11

### தன்தர மறிதல்

தன்னைத்தா னுணர வேண்டித் தவமகத் துவங்கட் சொன்னார், தன்னைத்தா னுணர்ந்து தன்னின் றகுதியை யுணரச் சொன்னார், தன்னைத்தா னுணர்ந்து பார்த்தாற் றன்பெருமை யதிக மாகுந், தன்னைத்தா னுணரா மற்றோன் தரங் கெட்டு வலைகு வாரே. 12

உன்னையே நீயுணர்ந்தா லுலகத்தின் சூட்சந் தோன்று
முன்னையே நீ யுணரு முபாயத்தைச் சொல்லக் கேளு
முன்னை நீ நோக்கிப்பார்த்தா லுன்றகுதி யதிக மாகு
முன்னை நீ யறியா விட்டா லுனக்கது மோசந் தானே. 13

### சங்கற்ப ஒடுக்கம்

நினைவதே பலலோ கம்மாம் நினைவதைப் பிரிக்கக் கஷ்டம்
நினைவதே பன்னும ரூப நிலையில்லாத் தோற்றங் காட்டும்
நினைவதே நாலா பக்க நிலையின்றி விரிந்து காட்டும்
நினைவன்றி லோக மில்லை நினைவைநீ நினைவாய்க் காணே 14

### அகண்ட நிலை யெய்தல்

நீயன்றி மதமு மில்லை நீயன்றி லோக மில்லை
நீயன்றிப் பாச மில்லை நீயன்றிக் குடும்ப மில்லை
நீயன்றிப் புகழு மில்லை நீயன்றித் தவமு மில்லை
நீயன்றிப் பூத மில்லை நீயெல்லா மானாய் தானே. 15

### துவிதமற நிலைத்தல்

காண்பதற் காங்கண் ணுண்டே கருத்துட னறிந்துநோக்கிக்
காண்பது மழிந்து போகுங் காணாது கண்டு கொள்ளுங்
காண்பது நினைவே யன்றிக் காணாய்நீ கற்பி தம்மே
காண்ப தெல் லாமறந்து கருத்தினாற் கண்டு தேறே. 16

தனிப்பது லகுவா யில்லைத் தனிப்பது வேறே யில்லைத்
தனிப்பதைத் தனிப்பாற் கண்டு தனிப்பது மிகுந்த சூட்சந்
தனித்திருந் தோமென்பார்க டனித்தவவ் வடிவ மில்லை
தனித்ததன் மௌன சோதி சகமெலா நிறைந்த தாமே. 17

### சித்தத்தின் பெருமை

சகமெலா நிறைந்தோ மென்று சங்கையில் லாவாய் பேசிச்
சகமென்ற நினைப்பருள்ளே சகமெல்லாஞ்சுழன் று சுற்றுஞ்
சகமறந் தோர்நிலையிற் றனிநிறைந்து சகமாய் நிற்பர்
சகநினை வில்லை யானாற் றன்சிந் தித்த லில்லை. 18

வந்தித்தற் சிந்தித்த லென்னும் வருவது பாசக் கட்டாம்
வந்தித்தற் சிந்தித் தல்லும் வருவினை பெருகுஞ் சேட்டை
வந்தித்தற் சிந்தித் தல்லும் வகைவிடு படுந்த வம்மாம்
வந்தித்தற் சிந்தித் தல்லும் வழிநிறைந்த பின்ன ரில்லை. 19

## குருவருள் நாடல்

### சந்த விருத்தம்

தனிமையான தான மடைய தானே மந்திரஞ் செப்புவர்
தனிமையான வருளடைய தனது மந்திர மொப்பு மோ
தனிமையான தான மதிலே தனிக்க வேயிட மில்லையேற்
றனிமையான வருள மடைந்த தனித்த சத்தைக் கேளுமே.



கேட்டபடியே சொல்லமாட்டார் கெடுதி யாமுன் மாய்கை
யாற், கேட்டபடியே சொல்வதற்குக் கிளைக்கூ றறிந்து
சொல்லுவார், கேட்பதுவுங் கூடா தென்பர் கிருபை யாசா
னறிகுவன், கேட்டபடியே யாவதில்லைக் கிருபை வந்தா
னடத்துவார். 21

உலக மாய்கை தீர்வதற்கே யுடனே யொன்று மாகாது
வுலக மயக்குன் னேடுவுள்ளே யூரி வந்த பாசமா
முலக மயக்கைக் குருவவரு முண்மை யாகச் செப்புவ
ருலகமயக்கைத் தீர்ப்ப தற்கேயுபதேசம்பணிந்துகேளுமே.

உண்மை யுள்ள சீடனை யுன்னைப் பலமு றையினு
முண்மை யுடனே சோதித்தவருமுபதேசமிகவுஞ்செய்குவ
ருண்மை பக்தி கொண்டுநீயு முழி யம்மே செய்துவா
வுண்மை யுடனே யனதறிந்தே வுறுதி சொல்லுவார்களே.

### பல நூல் கற்றல்

பலவா நூலைப் பார்ப்பதாலே பதட்டங் கண்மிக வாகுமே
பலவா நூலைப் படிப்பதாலே பாச மிகுந்து வாட்டுமே
பலவா நூலைப் படித்துக்கெட்டுப் படுகுழியிலேபாய்ந்தனர்
பலவா நூலைப் படித்திட்டாலும் பரம குருவைத் தேடுமே.

### உயர் குருவை யடைதல்

குருவருளை நாடிநின்று குணம தாய்க்கருத் தறிந்திடிற்
குருவே யான மெய்யடியார் கோப மின்றிச் சோதிப்பர்
குருவே யான கருநிலையைக் கொண்டிருப்பர் மருளாமற்
குருவே யென்று வாய்பசப்பிக் கொண்டி லாத குருவதே.

### சற்சீடனருதல்

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

பக்தியுள்ள பிள்ளைக்குப் பழக்க மாகப்
பதனும லுபதேசஞ் செய்வா ரப்பா
பக்தியுள பக்தனுக் குப்படிப் படியாய்
பாங்காகக் காரியத்தை நடத்தி வைப்பார்

பக்தியுள்ள விவேகிக்குப் பக்குவா பக்குவப்
படிநடத்தி ஞாபகமாய்த் தியானம் வைப்பர்
பக்திநிறை மிகவுள்ள வன்ப னுக்குப்
பான்மைபெற விளக்கி வைத்து பாலிப் பாரே. 26

## குருவருள் பெறல்

ஞானத்தின் பூமிபெற வெளிதி லில்லை
ஞாயமாய்ப் பஞ்சபூதிய மொடுங்க வேண்டும்
ஞானத்தின் பூமியது வுதைய மாக
நல்லவிரு தயத்தினிலே பக்குவஞ் செய்வர்
ஞானநிலை கையினிலே கொடுப்பதில்லை
நாட்டினிலே காசிற்கு வாங்குவ தில்லை
ஞானவருட் பெறுவதற்கு வாசான் றன்னின்
னற்கிருபை வேண்டுந்தான் ஞால மீதே 27

## காரிய குரு

காலத்திற்குத் தக்கபடி வேடம் போட்ட
கர்மமிகுங் குருக்க ளிங்கே யனந்தமப்பா
காலத்தின் மாய்கையால் வயிறு வளர்க்கக்
கணப்பொழுதிற் கைலாசந் தருவோ மென்பார்
காலத்தின் கொடுமையாற் காசிற் காகக்
கண்டபடி பிதற்றிமனம் வெம்பிப் பாய்வார்
காலத்திலுண்மையுள்ள பீரைக் காணக்
கனகஷ்டங் காண்பதுவு மருமை தானே. 28

முன்னோர்க ளூற்பலதைத் தர்ம மாக
முறைசொல்லி வைத்தார்கள் முழுதுங் கண்டு
முன்னோர்க ளூற்சிலதைப் பாட மிட்டு
முறைகெட்டு வாய்புலம்பி வீழ்வா ரப்பா



முன்னோர்கண் மார்க்கத்தை வீண்பு ரட்டாய்
முனைந்துமனம் போன்மிரட்டி வாழ்வா ரப்பா
முன்னோர்க ளூன்முறையை யறியா மற்றுன்
முனைபிக்காய்ச் சாவடைவர் மூடர் தானே. 29

## காரண குரு

உண்மையாங் குருவினிடந் தீட்சை பெற்றே
யுயர்வான வுண்மைகொண்டு பரத்தை நாடு
வுண்மையை நாடினாற் செம்மை யாகு
முறுதிபெறுங் காட்சியது காணு மங்கே
வுண்மைநிலை யடைவதற்கு வந்தர்ப் புறத்தி
னுனதகத்தே யறிகுறிக டோன்று மப்பா
வுண்மைநிலை யடைந்தகுரு வைநீ விளங்கி
யுறுதியாய்க் கைப்பற்றி யுணர்ந்து கொள்ளே. 30

அனுபவங்க ளில்லாத குருவைக் கொண்டா
லதுவேவுன் றற்கொலைக்கா தார மாகு
மனுபவங்கள் பெற்றமெய்க் குருவைப் பெற்று
லப்பனே வாபத்தை யிவர்த டுப்பார்
ரனுபவங்க ணிறைந்தகுரு முழுக்கஷ் பாக
வவரிருப்பா ரென்றுநீ யறிந்து கொள்ளு
வனுபவங்கள் வாய்ப்பேச்சால் வருவ தில்லை
யதற்கிறையோன் கிருபையது வேண்டுந்தானே.

## நூல் விசாரணை

### கோச்சகம்.

பலநூலின் விசாரணையாற் பகர்ஞானம் வருவதுண்டோ
பலநூற்சே ரிருதயத்தாற் பரஞானி யாவாரோ
பலநூலா லுயர்பிர்ம பலனடைந்தோ மென்றெண்ணிப்
பலநூலாற் சாதனையிற் பதிவில்லாததலை குவரே. 32

நூல்விளக்கம் வேண்டுவது நுட்பமா மவசியமே
நூல்விளக்க நுட்ப நுணுகுதற்குப் பக்குவமே
நூற்பெருமை யெல்லா நுவலு மனுபவிக்கே
நூற்சூட் சம்மறிய நுட்பவாசான் முன்பாரே. 33

நூல்விளக்க மறிவதினால் நுண்ணறி வுண்டாகும்
நூல்விளக்கு மாசான்றன் நோக்க மறிந்துணர்ந்து [த்தி
நூல்விளக்கும் பொருள்வழியே நுண்ணறிவை நேர்செலு
நூற்சூட்ச மாமறிவு நுகர்குருவின் பதம்போற்றே. 34

## திகைப்பின்றித் திடம் பெறுதல்

காடுமலை திரிந்தலைந்தாற் காணார்க ளுண்மையதைக்
காடுமலை சென்று கலங்கி மனமயங்கிக்
காடுமலை சென்று கருவழிந்து செத்தவர்கள்
காடுமலை தன்னினுண்மைக் காமீல்கண்டு நீதெளியே. 35

வீட்டில் விளக்கிருக்க வெளிநெருப்பைத் தேடுவர்கள்
வீட்டில் வெண்ணெய்யிருக்க வெளியினெய் தேடுவர்கள்
வீட்டி லரிசிருக்க வெளியினெற் றேடுவர்கள்
வீட்டி லுணவிருக்க வெளியிலன்னந் தேடுவரே. 36

பரங்காணத் தூரமில்லை பகருங் கருத்தினைப்பார்
பரங்காணச் சுமப்பதில்லை பதியா மனதினைப்பார்
பரங்காணப் பணங்காசு பாரமில்லை சித்தத்தைப்பார்
பரங்காண வெகுதூரம் பாராநினை வைப்பாரே. 37

இரவுமே பகலுமாறி யியங்குவ போலேநெஞ்சம்
மிரவொடு பகலுஞ்சித்த மேங்கிக்காற் றூடிபோல
விரவொடு பகலுமாக விருவினை தனின்மயங்கி
யிரவொடு பகற்றூக்கத்தை இயக்குவ நோக்கிப்பாரே. 38

## அறுசீர் விருத்தம்.

தூக்கமே வந்த போது சுகமில்லை மறதி யாகுந்
தூக்கமே வந்த போது சொத்தில்லை குடும்ப மில்லைத்
தூக்கமே வந்த போது சுதிகல்வி மதிப்பு மில்லைத்
தூக்கமே வந்த போது சுயமுயற் சிரிந்து போமே 39



தூக்கத்தா லுலக வாழ்க்கைச் சுகமற்நு துணர்வில் லாம,
லூக்கமாய் நடப்ப தென்ன வுலகம் பொய்யெனக் காணு
மற், றூக்கத்தா னிலை யொடுங்கித் தூக்கமே மடிந்ததென்
னத், தூக்கத்தான் மதிமயங்கித் தொடரியாவும் வருவ
தென்ன. 40

## வாசனைத் தொடர் பர்சக்

வாசனைப் பழக்கத் தாலே வருமிரு வினைநீங் காது
வாசனைப் பழக்கத்தாலே வருநபுஸ் தொடர்பர் சக்கில்
வாசனைப் பழக்கத்தாலே வாழ்க்கை யெல்லாந் தொடரும்
வாசனைப் பழக்கத்தாலே வரும்வினை தவிர்ப்பிர் தானே. 41

## கனவின் பற்றறல்

கனவினிற் பலதோற் றங்கள் கண்டுண்மை மறப்ப தென்
னக், கனவினிற் பிரபஞ் சங்கள் கண்டுமே மறைந்த பின்
னுங், கனவினிற் பகற்கனவாய்க் கண்டுநம்பி யிருந்த தென்
னக், கனவினி னிலையீ ரொன்றுய்க் கர்ணவே பற்று
நீக்கே. 42

## ரவி மதி மறத்தல்

கதிர்மதி யில்லை யானுற் கனவுலகத் தோற்ற மில்லைக்
கதிர்மதி யில்லை யானுற் கதிஜீவ பேத மில்லைக்
கதிர்மதி யில்லை யானுர் காணரர் மார்க்க மில்லைக்
கதிர்மதி யாவும் விண்ணிற் கலந்தவோர் தோற்றந்
தானே. 43

## ஒடுக்க நிலை:

விண்ணுடை யமாவாத் தன்னின் விரிரக சியத்தைத் தேரு
விண்ணினிற் சேர்ந்து கொண்டு விரிரக சியம டைய
விண்ணினிற் சார்ந்து கொண்ட மிக்காரைக் கூர்ந்து கேளு.
விண்ஞுன விபரந் தன்னை விளக்கமாய்த் தொடுத்து வைப்
பார்.

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

விண்ணினிற் பக்திகொண்ட வெகுமாயந்தானே கேளு
விண்ணது வேண்ட மெல்லா மிகவுமே தாங்கி நிற்கும்
விண்ணது வெகுவாம்லீலை மிக்கதாய்ச் செய்து தோன்றும்
விண்ணுன வுன்னினைவை விண்ணுக மதித்துப்பாரே. 45

## அருள் மயக்கு

### வேறு

பார்க்கை யிலே மயக்கமது வதிக மாகும்
பார்க்கை யிலே மனமதுவு மருண்டு காணும்
பார்க்கை யிலே சித்தமது துடித்துக் காணும்
பார்க்கை யிலே தூக்கநிலை கொண்டு சொக்கிடுமே. 46

இந்தவனு பவந்தெரித னுட்ப மப்போ
விந்தவனு பவமெளிதின் முடியாதப்பா
விந்தவனு பவத்தாலே புலம்பினுர்க
ளிந்தவனு புவத்தாலே மயங்குஞ் சித்தம் 47

இந்தவனு பவமடைதற் கனுவனு வா
யிந்தவனு பவங்காண வதிக கால
மிந்தவனு பவங்காணத் துவித மற்ற
விந்தவனு பவம் பெற்றுர்க் காசா னுமே. 48

பக்குவமுள வாசானே யவசியம் வேண்டும்
பக்குவமுள வாசானே தசதீட் சையார்
பக்குவமுள வாசானே பலன்கொண் டிருப்பார்
பக்குவமுள குருவின்றிப் பருப்புவே காதே. 49

## சாதனை வேண்டும்

### எண்சீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

சாதனைகள் செய்வதுவே வீணிற் கில்லை
சார்பாக வறிவுநிலை யடையலாமே
சாதனையை மிகக்கொண்டா னேர்த்தி யாகுஞ்
சண்டாளப் பாசமது விலகு மப்பா



சாதனைகள் வெகுவாகச் செய்து வந்தாற்
சமையரக சியங்களெல்லாந் தானே தோனுஞ்
சாதனைக ளில்லாட்டா னுற்படிப்பிற்
சங்கதிக ளொன்றுமே காண மாட்டாய் 50

## ஆசை வெறுத்தல்

### சந்தவிருத்தம்

புத்தியுள்ள பிள்ளையே பொருந்து முண்மை வுணர்ந்துகேள்
புத்தியுள்ள பிள்ளை யாயின் புகழும் பெண்ணுடன் சேராதே
புத்தியுள்ள விவேகி யானுற் பொலியும் பாசத்தை நீக்கிடு
பித்தியுள்ள பிள்ளைகட்குப் புவனவாசை கைக்குமே.

## அறிவின் மகிமை.

### அறுசீரடி யாசிரிய விருத்தம்

அறிவுதான் வந்த தெல்லா மாந்தன்னை யறிய வேண்டி
யறிவுதான் வந்த தெல்லா மனமிழந்தறிவைக் காண
வறிவுதான் வந்த தெல்லா மறிவிழந்தறிவைக் காண
வறிவுதா னறிவாற் கண்டே யறிவுகண்டவரைக் கேளே.

அறிவினை யறிந்தோ மென்றே யறிவான நிலையு மின்றி
யுறிவினை யறிந்தோ மென்றே யற்பமாய்ப் பேசிக் கொண்டு
வறிவினை யறிந்தோ ரெல்லா மருள்வடி வாவா ரென்று
மறிவினை யடைந்தோர் பக்க லணுகியே கேட்பீர் தானே.

சாஸ்திரம் படிப்ப தெல்லாந் தன்னைத்தானறிய வேண்டி
சாஸ்திரம் படித்தோமென்று தான்மழுப்பவ ரரியார் [வர்
சாஸ்திரம் படித்தோ மென்று தரங்கெட்டு வினையிற் சேர்
சாஸ்திரம் படிப்ப தெல்லாந் தன்னைத்தான் காக்கத்தானே.

தத்துவ ஞானம் பார்த்துத் தரமின்றிக் காலந் தேய்ப்பர்
தத்துவ ஞானம் பேசிச் சம்பமாய் வேடங் கொள்வர்
தத்துவ ஞானங்கள்வா சனைப்படிப் பதனு லில்லை
தத்துவ ஞானந் தானே தவநிலை யாம்பின் னுென்றும். 55

உன்னுள்ளே யிருக்கு மியானே யோங்குமென் னுள்ளறியாம
லுன்னுள்ளே யிருக்குந் தன்மை யுணருநா னன்றி வேறில்லை
யுன்னுள்ளே யிருக்கு மெண்ண முயமெண்ணமாகக் கண்டா
லுன்னுள்ளே யிருக்கு நினைவே யுன்னன்றி வேறேயில்லை. 56

## சாதி பேத விலக்கு

சாதியாம் பேதங் கொண்டு சடுதியிற் றடியெ டுப்பார்
சாதியாம் பேதங் கொண்டு தர்க்கங்கள் வெகுவாய்ச் செய்
வார், சாதியாம் பேதங்கொண்டு தன்மத மிழிவு செய்வார்
சாதியாம் பேதங் கொண்டு சகத்தில்வீ ணுவர் தானே. 57

### கொச்சகம்

சாதிப் பெருமை யினுற் றன்வினைநீங் கிப்போமே
சாதிப் பெருமையினுற் றவமின்றி மோட்சமுண்டோ
சாதிப் பெருமை கொண்டு தன்மனம்போற் செல்லலாமோ
சாதிப் பெருமையினுற் றற்பரனுக் காகலையே. 58

### எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

விண்ணிலே நடக்குங் கதிர் மதியொன்றாகி
விரிவான சோதியைத்தான் கொடுப்ப தென்ன
விண்ணிலே முகினிறைந்து மிக்க தாக
மேன்மை மழை வரிசிப்ப தென்ன வாகும்
மண்ணிலே தானியங்க ளொன்று போல
வசமாகக் கொடுப்பதென்ன மாண்புசேருங்
கண்ணிறைந்த வொருமையாம் விவேகி யானோர்
கலங்காம லொன்று போற் காணு வாரே. 59

## மானபி மானம் விடல்

### சந்த விருத்தம்

மானபி மானம்வேறு மடமையைக் கொடுக்குமே
மானபி மானமெடுத்தால் வன்கடனெடுத்து வாடுமே
மானபி மானங்கொண்டால் மாயையிற் புகுத்திடும்
மானபி மானமெடுத்து வல்வினையை வாங்குமே. 60



## கற்பைக் காத்தல்

கற்பைவை ராக்கியங்கொண்டு காத்துநீ கொள்ளுமே
கற்பைக் காக்க வியன்றமட்டுங் கனமன நேர் செய்யுமே
கற்பைக் காக்க வியமநியம கையிற் கொண்டு நடத்துமே
கற்பையடக்கிக் கருவைப்பார்த்தாற் காணறிவுமய மாகுமே.

## உண்மைப் பக்தி

பக்திவிசு வாசமில்லார் பார்த்த தெல்லாஞ் செய்குவார்
பக்திவிசு வாசமுள்ளார் பசரு முயர்வுசெய்குவார்
பக்திவிசு வாசமுள்ளார் பாங்குள கருமஞ் செய்குவார்
பக்திவிசு வாசமுள்ளார் பண்பு பதியைச் சேர்வரே. 62

நம்பிக்கையுள் ளோர்களெல்லா நத்தும் வினையிற் செல்லார்
கள், நம்பிக்கையுள் ளோர்கடினமு நல்லகுணத்தி விருப்
பார்கள், நம்பிக்கையுள் ளோர்கள்ஞான நல்லறிவு கொள்ளு
வார், நம்பிக்கையுள் ளோர்களுக்கு நாளுங்குறை வில்லையே.

உண்மையுள்ள பக்தருக்கு வொருகுறைவு மில்லையே
யுண்மையுள்ள பக்தருக்கு உயர்வாம்புகழே மிகவரு
யுண்மையுள்ள விஸ்வாசிகட்கே வுயர்ந்ததெய்வஞ் சேருமே
யுண்மையில்லா மாந்தர்கட்கு யூங்குபதவி யில்லையே. 64

## மரணத்தின் ரகசியம்

### அறுசீர் விருத்தம்.

மரணத்தின் சூட்சந் தன்னை மார்க்கமாய்த் தானறிந்தால்
மரணத்தி னறிவை நன்றாய் வகுத்துத்தா னறிந்து பார்க்க
மரணத்தின் போது மிக்க மனமது கலக்க மின்றி
மரணத்தின் ரகசி யத்தை மானிட ரறிவீர் தானே 65

மரணமா மென்று சொல்வர் மரணத்தி னிலைமை காணார்
மரணமா மென்று சொல்வர் வசைமூச்சின் முடிந்த தென்
பார், மரணமா மென்று சொல்வர் வன்ஜீவன்போய் விட்ட
தென்பார், மரணமாந் தரமறிய் வகைபெற மாட்டார் தானே.

மரணமே வந்த போது மனைமக்க ளோடு வார்கள்
மரணமே வந்த போது மணிச்செல்வப் பங்கு கொள்வர்
மரணமே வந்த போது வழித்து ணைக்கார் வருவார்
மரணத்தை மறந்து தானே மனக்கோட்டை கட்ட லாமோ.

மரணத்தை விரித்துச் சொல்வேன் மதியுள மைந்தர் கேளு
மரணத்தி லுன்னுன் முன்னுள் மனப்பாலைக் குடித்த தெல்லா
மரணத்தி லுன்னுன் முன்னுள் மனந்தேடு மாசை சேர்ந்து
மரணத்தி லுன்சீ வன்மேல் வன்சுமை யேற்றுந் தானே.

மரணத்தின் ரகசியத்தை மகனேநீ யறிந்தா யாகின்
மரணத்தின் போது தானே வரும்பாசவா சனையைத் தள்ள
மரணத்தின் வருமுன் னாலே வன்பாச நீக்க வேண்டும்
மரணந்தான் வருமுன் னாலே மதிகுரு தவத்தைக் கொள்ளே

மரணசூட் சத்தைக் கொஞ்ச வகையுடன் சொல்லக் கேளு
மரணமா வதுதூ லத்தில் வருந்தத்துவ மொடுங்கி நோக்கும்
மரணமா வதுசூட் சம்மாய் வரும்பாச வினையிற் சேர்க்கும்
மரணந்தான் வருமுன் னாலே வருமிரு வினையை மாற்றே

மரணமா வதற்கு முன்னால் மரணத்தை யறிந்து கொள்ளும்
மரணமா வதற்கு முன்னே மரணத்தை யனுப வித்தால்
மரணத்தி லாகும் போது வருமவஸ் தைதக னீங்கும்
மரணத்தை யறிந்து நன்றாய் மாதவஞ் செய்கு வீரே. 71

உயர்வுள சாதி டத்தி லுயிர்பெற வடுத்து மிக்க
வுயர்வுள தீட்சை பெற்றே வோங்கனு பவங்க ளானு
லுயர்வுள சிதாகா யத்தை யுணரவே படிதா னீங்கி
யுயர்விலா வவத்தை யெல்லாமோடுமே மரணத் தாலே. 72



## சிதாகாய நிலையின் பெருமை

சிறந்திடு மிதயாம் பரத்திற் சிதாகாய வடிவமாகுஞ்
சிறந்திடு மிதயாம் பரத்திற் சேர்ந்திடும் பிரம மாகுஞ்
சிறந்திடு மிதயாம் பரத்திற் றெளிவரு னிறைந் திலங்குஞ்
சிறந்திடும் பரம மாகத் தினமிருந் திடலா மைந்தா. 73

### வேறு.

தரித்தவிட நன்மையில்லைத் தீமை யில்லை
தரித்தவிட முலகமில்லை யுயிரு மில்லை
தரித்தவிடந் துவிதமில்லைச் சாதி பேதந்
தரித்தவிடஞ் சுகமில்லையா நந்தந் தானே. 74

### அறுசீரடி யாசிரிய விருத்தம்.

நிலையான நிலையைக் கொண்டா னீயில்லை யுள்ளதநுவே
நிலையான நிலையா டைந்தா னெமியெலாந் தானே யாகு
நிலையான நிற்கு ணங்க னிறைந்தானேத் திரங்கனைக் கில்லை
நிலையான நிலைதான்விஸ்வ ரூபமாய் நிறைந்து காணும். 75

நிலையில்லார் பேச்சை யெல்லா நீயென்றுங் கைக்கொ ளா
தே, நிலையில்லார் சொல்லைக் கேட்டு நீவாடி மயங்கி டாதே
நிலையில்லார் விளக்கமின்றி நீவந்த தெல்லா முரைப்பர்
நிலையுள்ள பிர்ம சத்தை நீ சேர்ந்து நிலையைத் தேறே 76

நிலைதனை யடைந்த சான்றோர் நிமிடத்தி லுன்னைத் தேர்
வார், நிலைதனை யடைந்த சான்றோர் நேர்சென்று கேட்க
வேண்டும், நிலைதனை யடைந்த சான்றோர் நேமமாய் போ
தஞ்செய்வார், நிலைதனை யடைந்தோர் தன்னு னீங்குமே
பாசமெல்லாம். 77

## யோகவிதி

### எண் சீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

யோகவிதி சொல்லுகிறே னினைவாய்க் கேளு
யோகவிதி தன்னிலே வுபாயஞ் செய்வார்
யோகவிதி தன்னைநர ரறியா மற்றுன்
யூகமனம் போனடத்திப் பலவி யாதி
யோகநெறி யறிவதற்குப் பெரியோர்பாற் கேள்
யோகத்தின் முதன் முறையாம் பிராண யாமம்
யோகத்திற் பலவித மாய்ப் பழக்கு வார்கள்
யோகசித்தி யான்மனதைக் கட்டு வாரே. 78

## அடயோகம் விலக்கல்

அடயோகஞ் செய்வதற்கு முறைய னேக
மடயோகஞ் செய்யுகையி லணுவே தப்பி
லடயோக மாங்குதற் கொலையாய்ச் சேரு
மடயோகங் கனவிலுமே வாகா தப்பா
வடயோகத் தாற்கிடைக்கும் பலன்சித் தாகு;
மடயோகத் தால்வருமோ மார்க்க முத்தி
யடையோகத் தாற்சித்தா யழிந்து போகு
மடையோகத் தான் மனத்தி லாசை தானே. 79

யோகத்தின் பழக்கமது வேண்டு மப்பா
யோகமுறை சூட்சமாய்ப் பெரியோர் காண்பர்
யோகஞ்சில வாதபித்த மைய தோஷ
மோங்காது ஞானபூமிக் குரிய தாக்கும்
யோகமுறை செய்யத்தவறி னோய்கட் சேரும்
யூகமுறைந் சான்றோரைக் கேட்க வீவார்
யோகமுறை யிலாதவவி வேகி பக்க
லுதவாது கேட்கிலது மோசந்தானே. 80



## சிவராஜ யோக மகிமை

### அறுசீர்ச்சந்த விருத்தம்.

சித்தமது கலங்காது சிவராஜ யோகநிலை செய்ய லாகுஞ் சித்தமது கலங்காது சிற்சொருப நித்தியமாய்ச் செயற் றுலங்குஞ், சித்தமது நிறைகின்ற தியானமே தானாகச் செறிந்து காணுஞ், சித்தவடி வேயுலக மெல்லாநல் லருளா கச் சிறக்குந்தானே. 81

சிவராஜ யோகமது தேறிமிகத் தெளிந்துசிவ னடியாராக சிவராஜ யோகமதிற் செயக்கொடியைக் கொண்டவர்க டிறமை யாவார், சிவராஜ யோகநிலை தினப்பொழுது மாறுதசின்ம யத்தோர், சிவராஜ யோகநிலை படைத்தழிக் கும் பக்குவத்தைத் தேடிக்கொள்ளும். 82

### கோச்சகம்.

தானே பெருமாயா தனைமறந்து சகவடிவாய்த்
தானே தவவடிவாய்த் தானிருந்து தானாக நின்ற
தானே தனிமுதலாய்த் தானறிந்து தன்னுடைய
தானே யகிலமாய்த் தனித்த லருள்வடிவே

தானுண்டே லுலகுண்டாந் தானுண்டேற் பரவஸ்துண்டாந்
தானுண்டேற் பந்தமுதத் தன்பாச வலையுமுண்டாந்
தானுண்டேற் பலநாமந் தகுரூபத் தோற்றமுண்டாந்
தானற்ற சகமநித்ய தன்மையாக் காணுமதே. 84

நினைவன்றி யுலகமில்லை நினைவன்றிநா மரூப
நினைவன்றிப் பூதமைந்தி னோர்கிருத்திய மேயில்லை
நினைவன்றிப் பரப்பிரம நேர்மறைநூன் மார்க்கமிலை
நினைவன்றி நீயுமில்லை நினைவுதள்ளி நினைவினில்லே. 85

ஆ பாடல் 85.

அத்வித உண்மைப் போதம் முற்றிற்று.

---

# ஒழுக்க ரத்தினம்

நான்குசீர் விருத்தம்.

மனித னென்றாற் றிருக்கருணை யீகைவேண்டும்
மனித னென்றாற் காருணியப் பொறுமைவேண்டும்
மனித னென்றாற் சொல்லுறுதி யுண்மைவேண்டும்
மனித னென்றா லொழுக்கரத்தின மாகத்தானே. 1

மனித னென்றாற் கடுஞ்சினத்தை யொடுக்கவேண்டும்
மனித னென்றாற் கடும்பகையை யோட்டவேண்டும்
மனித னென்றாற் றவறாத வாக்குவேண்டும்
மனித னென்றா லொழுக்கரத்தின மாகத்தானே. 2

மனித னென்றா லிறையருளை நாடவேண்டும்
மனித னென்றாற் பொய்மனதை நீக்கவேண்டும்
மனித னென்றாற் குணங்கட்பிரித் தறியவேண்டும்
மனித னென்றா லொழுக்கரத்தின மாகத்தானே. 3

மனித னென்றா லடுத்தோரைக் காக்கவேண்டும்
மனித னென்றாற் றன்னடக்க மதிகம்வேண்டும்
மனித னென்றாற் பக்தியதில் விவேகவேண்டும்
மனித னென்றா லொழுக்கரத்தின மாகத்தானே. 4

மனித னென்றாற் றருமகுண மிகுத்தல் வேண்டும்
மனித னென்றாற் குலப்பெருமை நீக்கவேண்டும்
மனித னென்றால் வார்த்தையைப்போ னடக்கவேண்டும்
மனித னென்றா லொழுக்கரத்தின மாகத்தானே. 5

மனித னென்றாற் பக்திவிசு வாசம்வேண்டும்
மனித னென்றாற் றன்கடமை செலுத்தவேண்டும்
மனித னென்றாற் சுற்றமன்பு கொள்ளவேண்டும்
மனித னென்றா லொழுக்கரத்தின மாகத்தானே. 6



மனித னென்றாற் பிறந்தகடமை தெரியவேண்டும்
மனித னென்றா னற்சாதை யடுக்கவேண்டும்
மனித னென்றாற் றருமவழிக்கரும முடிக்கவேண்டும்
மனித னென்றா லொழுக்கரத்தின மாகத்தானே. 7

மனித னென்றாற் பொய்மொழியைத் தவிர்க்கவேண்டும்
மனித னென்றாற் பொறாமைகோ ளொழிக்கவேண்டும்
மனித னென்றா னற்குணத்தி லிருக்கவேண்டும்
மனித னென்றா லொழிக்கரத்தின மாகத்தானே. 8

மனித னென்றாற் பிறர்மனைகொள்ளா யிருக்கவேண்டும்
மனித னென்றா லடுத்தோரைக் கெடுக்கா திருக்கவேண்
டும், மனித னென்றாற் காமத்தி லலையா திருக்கவேண்டும்
மனித னென்றாற் லொழுக்கரத்தின மாகத்தானே. 9

மனித னென்றாற் பெண்களை யனையாய்ப் பாவிக்கவேண்
டும், மனித னென்றாற் கட்குடியை நீக்கவேண்டும்
மனித னென்றாற் சூதுகளை நீக்கவேண்டும்
மனித னென்றா லொழுக்கரத்தின மாகத்தானே. 10

மனித னென்றாற் றாய்தந்தையை வணங்கவேண்டும்
மனித னென்றாற் சகோதரவாஞ் சனைகள்வேண்டும்
மனித னென்றாற் படித்தபடி நடக்கவேண்டும்.
மனித னென்றா லொழுக்கரத்தின மாகத்தானே. 11

மனித னென்றாற் சொற்செயற்போ னடத்தவேண்டும்
மனித னென்றாற் றவநெறிகைக் கொள்ளவேண்டும்
மனித னென்றாற் கொலைகளவை மறக்கவேண்டும்
மனித னென்றா லொழுக்கரத்தின மாகத்தானே. 12

மனித னென்றாற் பெண்குணத்தைப் பகுத்தல்வேண்டும்
மனித னென்றாற் பெண்ணுக்குக் கேடுசெயா திருக்கவேண்
டும், மனித னென்றாற் குருசொற்கடக்கா திருக்கவேண்
டும், மனித னென்றா லொழுக்கரத்தின மாகத்தானே. 13

மனித னென்றால் மனமுரணாய்ப்பேசா திருக்கவேண்டும்
மனித னென்றால் மனக் கொதிப்புக்கிடஞ் செய்யாதிருக்க
வேண்டும், மனித னென்றால் மனைக்குவந்தவரை மதிக்க
வேண்டும், மனித னென்றா லொழுக்கரத்தின மாகத்தானே.

மனித னென்றால் மதுரமொழியுபசரணை வேண்டும்
மனித னென்றாற் றெய்வபூரண நம்பவேண்டும்
மனித னென்றாற் றெய்வ வழிபாடுவேண்டும்
மனித னென்றா லொழுக்கரத்தின மாகத்தானே. 15

மனித னென்றாற் றவவுபதேசங் கேட்கவேண்டும்
மனித னென்றாற் பிறப்பைக்கண்டு தெளியவேண்டும்
மனித னென்றால் மிருகக்குண மொழியவேண்டும்
மனித னென்றா லொழுக்கரத்தின மாகத்தானே. 16

மனித னென்றா லையறிவை யடக்கவேண்டும்
மனித னென்றாற் றெய்வீகவறி வகத்தேவேண்டும்
மனித னென்றாற் புலன்பொறியை யொடுக்கவேண்டும்
மனித னென்றா லொழுக்கரத்தின மாகத்தானே. 17

மனித னென்றால் மேலெண்ணம் விடுக்கவேண்டும்
மனித னென்றாற் போதுமெனக் கொள்ளவேண்டும்
மனித னென்றால் பெருமைமிக நீக்கவேண்டும்
மனித னென்றா லொழுக்கரத்தின மாகத்தானே. 18

ஆ பாடல் 18.

**ஒழுக்கரத்தினம் முற்றிற்று.**

# ஆநந்தக் களிப்பு.

பூரண ஞானஞ்சொல் வேனே—எங்கும்
புண்ணிய மாய்நின்ற குருவருட்கோனே.

1. கன்சுல் மகுபிய்யா வான—பெருங்
காரண மாகத் தானிருந்தோனே
தன்சுய அஹதியத் துஹதியத்து மான—நூராஞ்
ஜலால் ஜமாலாய்த் துலக்கம தான. பூரண

2. ஆல மிதாலாக நின்று—கலந்து
ஆல மஜிசா மானவின்சானே
கோலநூரே பரவெளி யான—நுட்பக்
குணமாகச் சார்ந்தது தானேதான் றானே. பூரண

3. பஞ்ச பூதங்களாந் தோற்றம்—மிகு
பலசெய னீயன்றி வேறேது தோற்றம்
துஞ்சும் பலவகை யான—வதைத்
தொடர்ந்து நின்றாற் பயனேது மில்லையே. பூரண

4. நினைவே பலதாகத் தோணுங்—தன்னை
நீக்கியே நினைவை நிலையாகப ழக்கு
கனமான சாஸ்திரங் கற்று—வீணிற்
கலங்கியே கோலத்திற் பலவினையாகி. பூரண

5. சொத்துச் சுகங்களுந் தேடி—வீணே
தோகையி னாசையைச் சுகமென நாடிப்
பித்தரைப் போற்சுழன்று வாடி—கெட்ட
பெருவினையான் மிகச் சுழன்றுமே வாடி. பூரண

6. தன்னை யறியாத மூடர்தானே—தர்க்கந்
தனையே தொடுத்துப் பதறுவானுள்ளஞ்
சொன்ன மொழியினி லுண்மை—காணாத்
துயரத்தி லழுந்துவான் புன்மை. பூரண

7. மதலைப் பருவத் தில்லாம்—இதை
மறந்து மார்க்க நெறியை மனமாரக் கண்டும்
விதமிலாத் தூக்கத்தால் மங்கி—மன
மிகுதம்வந் தடையு நிலையையு மறந்து. பூரண

8. உன்னை நீ யுண்மையா யறிந்தா—லுனைவிட்டே
வுன்னையின் றாரென வுணர்வது பலமாய்த்
தன்னையறிவது மிகச்சூட்ச—நபுஸ்சிபத்
சடமது விறைவனன் கொடையதே யாகும். பூரண

9. கள்ளக் கருத்துக ளற்றால்—வினைக்
கடிதேது சுயமேது மில்லையென் பதுதான்
தள்ளச் சுயமுனக்கேது—இல்லாததைத்
தானுண் டெனக் கண்டா லிறையருளுண்டோ.

10. தன்னை யிணையாகக் கண்டு—மாய்கையாத்
தன்மயக்கத்தின் மருண்டு திரிந்து
பின்னைக்கஞ் சாவபி னுண்டு—காமப்
பித்தினான் மாற்றமாம் பிழைகளே செய்து. பூரண

11 அண்ட புவனமு மொன்று—யிதை
யாட்டிய திருவருண் மனமாரக் கொண்டேன்
பொன்றிலா நிறைந்திடும் வஸ்தை—யெங்கும்
புதுமையாய்க் காணாம லருளாக நின்றேன். பூணர



12. பாலைக் கறக்கவும் வேண்டும்—மனப்
பாலைக் கறக்கவயி ராக்கியம் வேண்டும்
மேலைப் பசுவதின் காலைக்—கட்டி
மிகுமா மனப்பதி யடைய வழிதேட. பூரண

13. ஆசையெனுந் தீயா லெரித்துத் தவக்க
லது குறையாமற் றயிராகச் செய்து
வாசத் தவ்க்கெனு மத்தாற் கடைந்து—திரண்டு
வருகின்ற வெண்ணெயிற் றான்மிகக்கோண்டே பூர

14. கண்டதுங் கேட்டது மற்று—மனக்
கசடாமூ சாட்டங்க ளொடுக்கியே நோக்கிப்
பண்டுவஸ்து நிலையாகக் கொண்டு—மவுனப்
பதிநிலை நினைவாக நிறைந்தது தானே. பூரண

15. நோக்கமே வடிவது வாகும்—மனம்
நோக்கி யிறந்தால் வஸ்தது வாகும்
பார்க்கவித் தில்லாத விருட்சந்—தானே
பக்குவக் கலிமாவின் சூட்சமாங் காணே. பூரண

16. கலிமாச் சொல்லுவது வீணா—யிதைக்
கருத்தாலறிந்து திறந்துகொள் மானே
கலிமா வுனையன்றிவேறு—காணீர்
கருத்தி லிணையதைக் களைந்திடுங்கூறு. பூரண

17. துவித மிறந்திடும்போது—விருவினைச்
சுகதுக்க முனக்கில் லைதானே
துவித மற்றுத் துறந்தவர்போல—மாய்கைத்
துயரத்தின் மாண்டு திரிவது தானே. பூரண

18. வேத தர்க்கம் மிகுவாதம்—புரிந்து
விதர்ப்பங்க ளாகவே வினைகளைத் திரட்டி
வேத சூட்சத்தை யறியாது—ஞானம்
விளங்குவதில்லை கேட்பது முண்டோ. பூரண

19. நீடுநூற் சாஸ்திரங் கற்று—வுண்மை
நிலையறி யாமலே யுழன்று திரிந்து
காடுமலைக டிரிந்து—வெறிக்
கஞ்சா வபினுங் கனமாக வுண்டு. பூரண

20. காளைப் பருவத்தைப் போக்கி—வினை
கபட மாய்க்கைக்கொண்டு கருத்தையிழந்து
காலத்தை வீணிற் கடத்தி—மனங்
கசப்பாக வேதனைப் படுவதைக் கண்டு. பூரண

21. சித்தரினூற்களைப் பார்த்துச்—சூட்சந்
தெரியாமன் மூச்சைப் பிடித்துமே கொண்டு
கத்தன் மனக்காட்சி காணு—மிக்க
கலக்க மாகிய வியாதியிற் பட்டு பூரண

22. வல்லமையா முண்மைகொள் பின்னே—நெடியா
மாவளஞ் சொல்லை யுவந்து குடித்தே
அல்லலை நாட்குநா ளகற்றிக்—குரு
வாநந்த மணியான கருமணி பெற்றே. பூரண

23. குறிகோல மில்லாதமானே—இந்தக்
குதரத்தாங் குருவருள் வேண்டுமே கோனே
குருவைத் தேடியடை யாத மக்கள்
குணமாற்ற மெனச்சொன்னார் நபியிர சூலே. பூரண

ஆக பாடல் 23.

ஆனந்தக் களிப்பு முற்றிற்று.

---

# மெஞ்ஞான அருள் வளம்

## கோச்சகம்

வேதவேத மென்றுநீர் வினைவழியுட் சாகிறீர்
வேத சூட்ச மெங்கேயென்று விளங்காமற் றிரிகிறீர்
வேதங்கற்று மறிவென்கின்ற விளக்கமின்றித் திரிகிறீர்
வேதத்தி னொருமைதன்னை விளங்கியுள்ளே பாருமே. 1

நன்மைதின்மை யென்றுமே நாடோறும் விள்ளுறீர்
நன்மைதின்மை யின்னதென்று நடைகளறியா தோடுறீர்
நன்மைதின்மை யும்முள்ளே நாடிக்கொண் டலைகிறீர்
நன்மைதின்மை நபுசெனவே நாடியொருமை யாவீரே. 2

வேதவேத மென்றுநீர் வீரவேச மெடுக்கிறீர்
வேதவேத மென்றுநீர் வீண்வினைகளைக் கட்டுறீர்
வேதவேத மென்றுநீர் வீண்சண்டைகட் செய்கிறீர்
வேதநாத மும்முளே விளங்கிநன்றாய்ப் பாருமே. 3

மூலமான தலத்திலே முடியுமுன்ன லொடுக்கலும்
மூலமான தானத்தின் முயன்றுநின்ற வாசியைக்
காலமே தனித்திருந்து கருத்துடன் செலுத்துவீர்
காலகால மெய்யுள்ளே கருத்து வந்து சேருமே. 4

சுல்பினின்ற வாசியைச் சுத்தமான தலத்திலே
கல்பினிற் கருத்துக்கொண்டு கலக்கமின்றிச் செலுத்தியே
கள்ளமற்ற ஞானத்தொனி கனவரிசையாய்த் தோன்றிடுஞ்
சள்ளையின்றித் தம்முள்ளே சார்ந்துநோக்கிப் பாருமே. 5

நாபியுண் மனதைநாட்டி நாலாறுதிங்க ளுடினு
லாவியான வுயிர்நிலை யன்புடனே தோன்றிடுந்
தாவியும்முன் மிக்கவே தாண்டிப்பாக்க பரமில்லை
மேவிக்கேட்டு மனதைநாட்டி விளைந்துநின்று பாருமே. 6

பாவியான லோபிக்குப் பரமமார்க்கந் தூரமே
சாவில்லார்க்குச் சல்தியிலே தான்றிறப்ப தில்லையே
லோபியான மிலேச்சருக்கு நட்பத்தைச்சொல்லாதேகாண்
காவிகட்டி வேஷம்போட்டுக் கடைவழியிற் றிரிவானே. 7

சூருதிடு கின்றநாபி சுயத்தைக்கண்டு தம்மிலே
தாருற்பனு தன்னைவிட்டுத் தாண்டலாம் பக்காவிலே
நூரான சுத்தவாத்துமா நோக்கலாங் கல்பிலே
கூறயாரு மில்லைகாண் குறிப்பில்லாத தலத்திலே. 8

பஞ்சபூத மைந்திற் பறந்துநின்ற வாகாயம்
பஞ்சபூத மைந்திற் பறந்துநின்ற மனதையாம்
பஞ்சபூத மைந்திற் பறந்துநின்ற வையகம்
பஞ்சபூத மைந்தையுமுட் பழக்கத்தால்வசப் படுத்துமே.

அந்திசந்தி யுச்சியு மடங்கிவிரிந்த பிரபஞ்சமா
அந்திசந்தி யுச்சியு மடங்கியடையும் வெளியுமாய்
யந்திசந்தி யுச்சியு மடங்கிநின்ற வாசியை
யந்தியந்தி யுச்சிமுக்காலு மடங்கியுள்ளே பாருமே. 10

உன்னுவது முறங்குவது முவந்தமன வெளியுமா
யுன்னுவது முலருவது முவந்தமனக் கனவுமா
யுன்னுவது முட்டரிப்பதுவு முயர்பர வெளியுமா
யுன்னியுன்னி யும்முள்ளே யொருமையுடன் பாருமே. 11

காசுகா சென்றுநீர் கடுவெளியின் மானைபோற்
காசுகா சென்றுநீர் கலக்கத்தி லாழ்கிறீர்
காசுகா சென்றவெண்ணக் கனபித்திற் றிரிகிறீர்
காசேயும்மைத் தேடவில்லைக் கலங்கிச்சிந்தை வீணரே. 12

அஞ்செழுத்தாற் பஞ்சபூத மாகவே தெரிவது
மஞ்செழுத்தே யுலகமா யமைந்துமிகக் காண்பது
மஞ்செழுத்தே யாநந்த வறிவுமய மானது
மஞ்செழுத்தே யன்னைநாத மணுகும்விந் தானதே. 13



காமப்பித்ததனைக் கொண்டே கடிநாயைப்போ லலைகிறீர்
காமப்பித்தாற் கருவினைகட் கருத்தில்லாமற் செய்கிறீர்
காமபித்தாற் கடுங்கொலைகட் கருத்தழிந்து செய்கிறீர்
காமப்பித்துக் கொண்டமாந்தர் கடுநரகிற் சேர்வரே. 14

கொண்டமனைவி யகமிருக்கக் கூரையேறிப் பாய்கிறீர்
கொண்டபெண்ணை யந்நியர்பார்க்கக் கோலச்சினங் கொள்
ளுறீர், கொண்டபெண்ணின் மனத்தையே குறிப்பில்லாமற்
கெடுக்கிறீர், கொண்டபெண் ணடிமையல்லக் குணமுடனே
காப்பீரே. 15

மதுபானங்க டனைக்குடித்து மானங்கெட்டுப் போகிறீர்
மதுபானங் கடனைக்குடித்து வகையாநஷ்ட மடைகிறீர்
மதுபானங்க டனைக்குடித்து வன்குடும்பங் கெடுக்கிறீர்
மதுபானங்க டனைக்குடித்து வலியசடத்தைக் கருக்கிறீர்.

கொலைகளவு சூதுசெய்து குவலையத்து வெம்புறீர்
கொலைகளவு சூதுசெய்து குடித்தனமுஞ் செய்கிறீர்
கொலைகளவு சூதுசெய்து கொடுந்துன்பம் பெறுகிறீர்
கொலைகளவு சூதுசெய்து கொடியவாழத்தி யிழத்தலே. 17

தருமஞ் செய்யாச் சொத்துச்சேர்த்துத் தான்வருந்திச்
சாகிறீர், தருமஞ்செய்யா தேழைசொத்தைத் தானெல்
லாம் பிடுங்கிறீர், தருமஞ்செய்யா தினமும்வட்டி தானடு
தும் வாங்கிறீர், தருமமில்லா லோபித்தீயின் றன்னரகு
கொள்ளுறீர். 18

காலகால முலகமதனைக் கட்டியாள வெண்ணுறீர்
காலகால மாறிவருங் கருத்தையு மறைக்கிறீர்
காலகால முலகினிலே கருதியிருப்ப தில்லையே
காலத்தை நம்பினூற் கருவழிந்து போகுவீர். 19

ஹஸதுவஞ் சகங்கள்வைத்துக் கடும்பகை வைக்கிறீர்
ஹஸதுவஞ் சகங்கள்வைத்துக் கடுநரகிலே சேர்த்திடு
ஹஸ்துவஞ் சகங்கள்வைத்தே யடுத்தவரைக் கெடுக்கிறீர்
ஹஸதுவஞ் சகங்களைக் காலனாக முடியுமே. 20

தாயுந்தந்தை பசித்திருக்கத் தாலிகட்டி வாழ்கிறீர்
தாயுந்தந்தை பசித்திருக்கத் தக்கவீட்டைக் கட்டுறீர்
தாயுந்தந்தை பசித்திருக்கத் தக்கவிருந்து கொடுக்கிறீர்
தாயுந்தந்தை மனக்கொதிப் பாற்றரித்திரத்தை யடைகிறீர்.

வீட்டிற்குமரி யிருக்கஹஜ்ஜை மேவிநாடிப் போகிறீர்
வீட்டிற்குமரி யிருக்கப்பெண்ணை விவாகஞ்செய்யப் போகி
றீர், வீட்டிற்குமரி யிருக்கப்பெருமை வேண்டுவிருந்து
கொடுக்கிறீர், வீட்டிற்குமரை வைத்துத்தன்மனைவி வீடு
சென்று போகிறீர். 22

குடர்வாய்ச்சனங்கட் பசித்திருக்கக் கோபங்கொண்டு தாக்
கிறீர், குடர்வாய்ச்சனங்கட் பசித்திருக்கக்கொடிய செலவு
செய்கிறீர், குடர்வாய்ச்சனங்கள் வாடியிருக்கக் கூடுமனை
யின நாடுறீர், குடர்வாய்ச்சனத்தின் மனக்கொதிப்புக்
கொழுகியுன்னை யெரிக்குமே. 23

வஞ்சமாகக் கஞ்சாக்கள்ளினை வயிறுநிறையக் குடிக்கிறீர்
பஞ்சகால மடுத்தபோது பரதேசிக்கோல மெடுக்கிறீர்
தஞ்சமான வினத்தார்களைத் தானேவிட்டே வோடிறீர்
பஞ்சமில்லாப் படியளக்கும் பரமன் றவக்கல் வையுமே. 24

தாடிமீசை நரைகள்வந்து தவஞ்செய்யாது சாகிறீர்
வாடிவாடிக் காமவிச்சை வைத்துமே மடிகிறீர்
நாடிநாடி யுலகவாஞ்சையா னையைப்போல திரிகிறீர்
ஜாடியான வயிறுவளர்த்தா னையென்ன சொல்லுவீர். 25



கிழவப்பருவம் வந்தபின்னுங் கிளைச்சிறுபெண் மணக்குறீர்
கிழவிப்பருவம் வந்தபின்னுங் கிருக்குவைத் தலைகிறீர்
கிழவனரையை மாற்றுதற்குக் கேட்குமருந்து பூசுறீர்
கிழவவாலிப நன்பரேயிறை கெதியினாடி யிருப்பீரே. 26

எலும்புந்தசையு மயந்துமிக்க விரவுபகலுங் கக்கலா
யெலும்புதசையு மிகமயங்கி யிரவுபகலு முணக்கமா [வா
யெலும்பும்பல்லுங் கரைந்துபோயு மினிய ருசியைத்தேடு
றெலும்பு குறுகிவளைந்துபோன விச்சையென்ன விச்சையே

சூதுவாதுஞ் செய்துசேர்த்துச் சூழவைத்த பணமெல்லாஞ்
சூதுவாது கெடுதிசெய்து சுகமாய்வைத்த பணமெல்லாஞ்
சூதுவாது செய்துபிறட்டிற்றொகுத்தபொன்னகையெலாஞ்
சாதுவான மக்கள்வந்து தனத்தையெல்லா மழிப்பரே. 28

உண்மையான தர்மஞ்செய்தே வுயர்த்துவைத்த தனமெலா
முண்மையான தர்மஞ்செய்தே யோங்குமீதப் பணமெலா
நன்மையாகத் தேடிவைத்த நான்குவிதப் பொருட்களு
முண்மையாக வழிவதில்லை யுண்மைபக்த ரவர்கட்கே. 29

உண்மையறிவு மிகவுமுள்ள வுயர்வாம்பக்த ரானோர்கட்
செம்மையாக வுலகந்தன்னைச் சிறந்ததென்று கருதார்க
டின்மையில்லா வழியிலே சேர்த்துக்கொண் டிருப்பார்க
ளுண்மையில்லா வுலுத்தர்தங்க ளுறவைவே ரறுப்பதே. 30

கோபாவேச மிகவுங்கொண்டு கொடும்வினைகட் செய்பவர்
கோபமீறித் தானமாகக் கொடுத்ததைப் பறிப்பவர்
கோபவனையை மிகவுந்தாண்டிக் கொலைமிகுத்துச் செய்ப
வர், கோபத்தீ யுலகிற்சுட்டுக் கொடுநரகிற் சேர்வரே. 31

முனாபிக்கான மூதேவிதாமு முக்கியமிடிமைகொண் டிரப்ப
வர், முனாபிக்கான வஞ்சகர்கண் மோசத்தொழுகை பசப்
புவார், முனாபிக்கான மாந்தர்தாமு முழுவுண்மையராய்
நடிப்பவர், முனாபிக்கான நரரைவிட்டு முந்துங்கள்வேறிடத்
திற்கே. 32

ஹஜ்ஜுக்குப்போய் வந்தபின்னர் கடும்பெருமை வைக்கி
றீர், ஹஜ்ஜுக்கும்போய் வந்தபின்னர் கடும்வட்டி வாங்கி
றீர், ஹஜ்ஜுக்குப்போய் வந்தபின்ன ரருங்குழந்தை யல்
லவோ, ஹஜ்ஜினுண்மை தனைப்படுத்தக் கடும்பேணுதல்
வையுமே. 33

பங்காளிதுரோக மிகவுஞ்செய்து பணத்தைவிரையஞ் செய்
றீர், பங்காளிதுரோக மிகவும்வைத்துப் பணத்தைக்கேடு
கொண் டழிக்கிறீர், பங்காளிதுரோக மிகவுஞ்செய்து பஞ்
சுபோல் வதைக்கிறீர், பங்காளியை மிகவுங்கெடுத்துப்
பணத்தைப்புதைத்துச் சாகிறீர். 34

பெட்டிதனிலேபணமிருந்தும்பிள்ளைவயிற்றைச் சுருக்கிறீர்
பெட்டிதனிலே பணமிருக்கப் பேயைப்போ லலைகிறீர்
பெட்டிதனிலே பணமிருக்கப் பிச்சையெடுக்க நாடுறீர்
பெட்டிதனிலே பணத்தைவைத்துப் பிசாசுகாவற் பித்தரே.

வட்டிமேல்வட்டி மிகவும்வாங்கி வயறுவெடித்துச் சாகிறீர்
வட்டிமுதலை யெடுத்துக்கையில் வழங்குஞ்சக்காத்துக் கொ
டுக்கிறீர், வட்டிபணத்தின் றீக்கொழுந்தான் மண்ணரையி
லெரிகுவீர், வட்டிவாங்கு முழுமட்டிக்கு வருநரகு
கொடியதே. 36

இல்மைத்தேடி மிரவுபக ரீர்ந்தலைந்து மடிகிறீர்
ரில்மைத்தேடிப் படித்துமுண்மை யின்றிமிகவும் புலம்பு
றீர், ரில்மைத்தேடிப் படிப்பதெல்லா மினையைநீக்கி வைக்
கவே, யில்மைத்தேட வும்முள்ளே யியங்குநன்மை
நோக்குமே. 37

பாரவில்மு படித்துமனப் பாசத்தாலே யலைகிறீர்
பாரவில்மு படித்துமிகவும் படுகுழியில் வீழ்கிறீர்
பாரவில்மு படித்துமுனபிக்குப் பற்றிவஅலு சொல்லுறீர்
பாரவில்மின் றன்மைகொண்டு பரனின்றவக்கல் வைப்பீரே.



பிக்ஹுக்கானச் சட்டக்கித்தாபைப் பெரியசுமை கொண்
டலைகிறீர், பிக்ஹுக்கானச் சட்டமெல்லாம் பின்பு பிர
யோசனங் கொடுக்குமோ, பிக்ஹுக்கானச் சட்டமீமான்
பிணைந்த வுயிரைத் தடுக்குமோ, பிக்ஹுக்கால மமீருல்
மூமினீன் பெருத்தகால மில்லையோ. 39

தாயில்லாத பெண்ணைமிகவுந் தாலிகட்டிக் கொள்ளுகிறீர்
தாயில்லாத பெண்ணைக்கெடுத்துத் தனியேவிட் டோடுகி
றீர், தாயில்லாத பெண்ணைவிடச் சடுதியிற் றலாக்குச்
சொல்லுகிறீர், தாயில்லாத பெண்ணின் ரோஷந்தான் மிக
வுஞ்சூழுமே, 40

காணிகளைச் சீதங்கேட்டுக் காணியாசை கொள்ளுறீர்
காணிகளைச் சீதனங்கொண்டு கனபெருமையாய் நடத்து
கிறீர், காணிகளைச் சீதனங்கொண்டு காணுந்தன்கடன்
முடிக்கிறீர், காணிமுழுது மிழந்தபின்னே கட்டியதாலியை
முறிக்கிறீர். 41

மார்க்கமில்லாச் சீதனங்கேட்டு மனைகடோறு மலைகிறீர்
மார்க்கமில்லாக் கைக்கூலிகேட்டு வாங்கிமிகவும் வாட்டு
கிறீர், மார்க்கமில்லாச் சடங்குசெய்து மாதனத்தை யழிக்
கிறீர், மார்க்கமறிந்த வாலீமுங்காணி மாட்டக்கேட்டே
யலைகிறார். 42

மகர்வைத்து நிக்காஹ்செய்ய மார்க்கத்தினல் லொழுக்
கமே, மகரைவைத்து நிக்காஹ்செய்த வழியின் குடும்பநற்
குடும்பமே, மகரில்லாமற் பெண்ணைமிரட்டி வம்புநிக்காஹ்
சட்டமோ, மகருநிக்கா ஹின்றிக் கொண்டால்வன்ஜனாவா
மடையரே. 43

கலியாணங்கொள்ளுத னபிகளுயகர் கனத்தசுன்னத் தாகு
மே, கலியாணங்கொண்ட படியேவைத்துக் காப்பது நற்
கடமையே, கலியாணங்கொண்ட படியினிலாது கசடாங்
காரியஞ் செய்கிறீர், கலியாணங்கொள்ளல் வீணுக்கல்ல
கர்த்தன்பக்த ரானோர்க்கே. 44

குடியேநாளுங் கொள்ளுகின்ற குணத்தன்பிணத்தைச் சேர்வதுங், கடியேமிகவுங் கொண்டநாயுங் கண்டதைக் கடிப்பதுங், தடியேயெடுத்த மூடர்மற்றோர் தங்களைத்தான் கொல்வதும், விடியாக்காமப் பித்துத்கொண்டு வினையிலழிந்து போவரே. 45

காமத்தாலே கலங்கிமிகவுங் கருத்தழிந்தவர் கோடியே
காமத்தாலே குடும்பமிழந்து கனகமிழந்தவர் கோடியே
காமத்தாலே நற்கருமக் கனமிழந்தவர் கோடியே
காமத்தீயால் வெந்துமிகவுங் கரிந்தழிந்தவர் கோடியே 46

காமத்தாலே யரசுரிமைக் கதியிழந்தவர் கோடியே
காமத்தாலே கொலைகட்செய்து காயமிழந்தவர் கோடியே
காமத்தாலே வேகமீறுங் காய்ச்சற் கொண்டவர் கோடியே
காமத்தாலே கடுந்தவங்கட் கழன்றுபோனவர் கோடியே. 47

பெண்ணினாலே தரமிழந்து பிரிந்துபோனவர் கோடியே
பெண்ணினாலே தனமிழந்து பேதமானோர் கோடியே
பெண்ணினாலே வரசிழந்து பெருமூச்சுவிட்டார் கோடியே
பெண்ணினாலே வுலகவாழ்வு பெற்றவர்கள் கோடியே 48

ஆண்களாலே கெட்டபெண்க ளனந்தங்கோடி கோடியே
யாண்களாலே மேனியிழந்த வருமைப்பெண்கள் கோடியே
யாண்மிரட்டி யறிவிழந்தே யரணைமரந்தோர்கட் கோடியே
யாண்களாற்பிள்ளை சட்டியேந்தி யலைந்து நிற்பவர்
கோடியே. 49

ஆண்களைநம்பி சிறுமைப்பட்டே யடிமையடைந்தவர் கோடியே, யாண்களைநம்பிப் பந்துமிழந்தே யரியபகைகட் கோடியே, யாண்களைநம்பி யழகிழந்தே யாகப்பிணியிற் கோடியே, யாண்களைநம்பி யறிவுபெற்ற வழகுப்பெண்கட் கோடியே. 50



புருஷனைத்திட்டிக் கொடுமையாகப் புறம்பேசும் பெண்கட் கோடியே, புருஷனுக்குத் துரோகஞ்செய்து புத்திகெட்டோர் கோடியே, புருஷன்பிள்ளை யெல்லாம்விட்டுப் போன பெண்கட் கோடியே, புருஷன்பிள்ளை கெடுத்துநரகம் போனபெண்கட் கோடியே. 51

குருவினிடத்திற் படித்தபின்பு குருவின்மே ஹசதுவைக்கிறீர், குருவினிடத்திற் படித்தபின்பு குருவைக் கேலி செய்கிறீர், குருவினிடத்திற் படித்தசொல்லைக் குருவிடத்திற் றட்டுகிறீர், குருவினாணை கடந்தாலீந்த குணப்படிப்பு நாசமே. 52

கருவைக்காட்டுங் குருவைக்கண்டு கல்லையுள்ள நாட்டுவீர்
கருவெளியைக் காட்டுகின்ற கனகுருவைத் தாங்குவீர்
கருவி னூரைக் காட்டுகின்ற கவனப்பீரைக் கண்டுதேர்
கருவாநிலையு மானகருத்தைக் கண்டருளை யடைவீரே. 53

உலகமருட்டுத லான குணத்தை யுவந்துகண் டறிகுவீ
ருலகமான விடக்கற்றி யுண்மைச்சூட்சத்தை யறிகுவீ
ருலகம் பொருந்தும் பொருந்தலகற்றி யுண்மைவழியை
நாடுவீ, ருலகமாயை யகற்றியிறையை யுண்மைப்பக்தி
கொள்வீரே. 54

நபுஸின்செயலா னட்கடோறு நாடும்வினைகட் கட்டுகிறீர் நபுஸின்செயற் கோலத்தாலே நடக்குமுள்ளதை யொழிக்கிறீர், நபுஸின்செயலா னன்மைதீமை வருக்காமலே நடக்கிறீர், நபுஸின்செயலை யகற்றிநிதமு நாதன்றிருவருட் காண்பீரே. 55

தொழுகைதொழுகை யென்றுசொல்லுவீர் தொழுகைச் சூட்சமறியாமற், தொழுகைநிலைதெள ஹீதைநபுவின் றொடரையம்விட்டுப் பாருமே, யினதொழுகையிற்குணந் தேவகுணமாந் தூயதாகப் பாருமே, தொழுகை ரகசியஞ் சலாத்துல்மூமின் துய்யகித்தாபு பாருமே. 56

நோன்புபற்றிக் கொள்ளுவீர் நுட்பவில்லை யடைகுவீர் நோன்பையுண்மை யாகப்பற்றி நுட்பநபுலைப் பனுச் செய்வீர், நோன்பினு னபுசிறந்து நுண்ணுமலக்கு ரூஹ் காணுவீர், நோன்பின்பெருமை மதிப்பிலடங்கா நுணுகிப் பார்க்கத் தோணுமே. 57

இஹ்சான்செய்ய வேண்டுமே யிறையவனின் பாதையி
லிஹ்சான்செய்ய வுள்ளதை யேற்றேயுண்மைப் பாதையி
லிஹ்சான்செய் யிரவற்சிபத்தை யிறையவன்றன் பாதையி
லிஹ்சானின் பெருமையாலே யிறைசிபத் திலங்குமே. 58

உண்மையான ஹஜ்ஜுச்செய்ய வோட்டுச்சாட்டை நீக்கிற்
றுண்மையான ஹஜ்ஜுத்தவா பொருகபனைக் கட்டுகிற்
றுண்மையான ஹஜ்ஜைநாடி யொருமையாய்த் தனிக்கிற்
றுண்மைத்தானங் கல்புல்லாவை யுன்னுள்ளிற் றவாபுசெய்
வீரே. 59

உண்மையாகத் திக்றுசெய்யு மோர்மையுள்ள பக்தரே
யுண்மைத்திக்று வெப்பொழுது மொடிவதில்லை பக்தரே
பன்மையான திக்றுவொன்று பலதையெண்ணும் பக்தரே
யுண்மையான தானத்தி லொடுங்கித்தியானங் காப்பீரே. 60

மூலமான கிணற்றிலே முளைத்தெழுந்த கோரையை
மூலமான வாலத்தின் முயன்றுநாற்றுப் பிடுங்கியே
மூலவிஸ்க் கானவுரத்தை மூட்டிவெளியாய்ச் செய்குவீர்
மூலமான நடுவிலே மூச்சுநாட்டிக் கொள்வீரே. 61



மனவெளியே கதிர்மதியாய் வாகுபெறத் தோன்றிடு
மனவெளியே யிருவினையாய் வரியகோலங் கொண்டது
மனவெளியே யகிலமாக வந்து பரந்து தோன்றிடு
மனவெளியே யத்துவிதமாய் வந்துண்மையாங் காண்பீரே.

கிணற்றுத்தேர யுன்னியுன்னிக் கீழேபாய்ந் தாழ்ந்திடுங்
கிணற்றுநீர் சகதியுண்டு கீழிரங்கச்செய்திடுங்
கிணற்றினின்ற வண்டவூற்றைக் கிளைத்திடாமலடைத்தகக்
கிணற்றினுள்ளே தரித்திருந்தாற் கிளைத்தவண்ட னீங்குமே.

மனமே மாய்கையாய்த்தோன்றிடு மனமேவஸ்துவாய்த் தரித்திடு, மனமே யுலகைச்சுமந்திடு மனமேகிருத்தியஞ் செய்திடு, மனமே துற்புத்தி கொடுத்திடு மனமெய்யறிவாகத் தரித்திடு, மனமே பொறிபுலனைக் கெடுத்திடு மனமின்றிவே றில்லையே. 64

ஆக பாடல் 64.

மெஞ்ஞான அருள்வளம் முற்றிற்று.

# திருமயக் கண்ணி.

மனுஷர் வெளியதனை மார்க்கமாய்த் தானுரைக்க
மகத்தான சிந்தையினை வழங்குந் திருமயமே. 1

இம்மையின் செய்கையல்லோ வெழின்மறுமையிற் றுலங்கு
மிம்மையி னன்முறையே யிறையடுக்குந் திருமயமே. 2

நல்வினையுந் தீவினையு நாடோறுங் கட்டி வைத்து
நல்விதமா மனுஷர்தனி ஞடுந் திருமயமே. 3

நபுஸாற் பெருமூட்டை நானிலத்திற் கைக்கொண்டு
நபுஸே கலங்கும்போது நாற்றமாந் திருமயமே. 4

பர்ஜக்கா லத்தினபுஸ் பற்றியதைப் பெற்றுவிடும்
பர்ஜக் திரைமனமே பதற்றந் திருமயமே. 5

இருவினையு நபுஸாலே யேளனமாய்ச் செய்துவிட்டு
விறைவன்சமு கம்மிழந்தே யெடுப்பர்சட்டி திருமயமே. 6

பார்க்கப்பர்ஜக் காலத்திற் பலகோலப் படுவதையும்
பார்த்துநபு சின்வழியிற் பற்றேன் திருமயமே. 7

கோல நபுஸின் குணமதைத் தானறிந்து
கோலநபு ஸிறையிடத்திற் குர்பான்செய் திருமயமே. 8

நபுஸு பனுவானு ஞற்றமில்லை தோற்றமதிற்
பவுஸு குலையாதுமெய் பரமே திருமயமே. 9

சீவனுற் செய்தவினை சீவனே தானடையுஞ்
சீவச்செயற் றுனிறைந்தாற் சிவச்செயலே திருமயமே. 10

சீவனே திறமையாகுஞ் சிவனுருவைக் காண்பதற்கு
பாவனையாய்க் கண்டுள்ளம் பரநோக்கே திருமயமே. 11

உபாதி நபுஸாகு மொருமையன்றிப் பலதாக்கு
முபாய மறிந்தநிலை யுயர்வே திருமயமே. 12



உயர்நிலை யன்றிமன முவந்ததெல் லாஞ்செய்து
செயமிழந்து திசைகெட்டுத் திடுக்கமுறுந் திருமயமே. 13

ஐம்பூதக் சேர்க்கையா லாகமெடுத்த மெய்யுடம்பு
வைம்பூதச் சேட்டை யாலறிவழியுந் திருமயமே. 14

தேவதூதராலே சேர்த்து வைத்த தத்துவத்தைத்
தேவமலக் கையடினமை சேர்ப்பாய் திருமயமே. 15

அஞசீ ரதிகாரி யாலமதி லேகடமை
தனதாகச் செய்வதில்லைத் தரமாந் திருமயமே 16

மேலோன் கடமைநிலை மெய்யுடனே யிணைந்து விட்டால்
மேலான் கண்டிறக்கு மெய்நிலையாந் திருமயமே. 17

ஐம்பூத சேர்க்கையல்லோ வாலத்தின் சாயலாகு
மைம்பூதநீ யில்லையெல்லா மாங்கற்பிதந் திருமயமே. 18

உடம்பை மதித்தோர்க ளொருபலனுங் காணார்கள்
மடம்புகுந்த நாயெனவே வருந்துவார் திருமயமே. 19

சட்டி யுடன்போச்சு சவவிடக் கென்றுலு
மட்டிக் கிடக்கும்வீச்ச மனமே திருமயமே. 20

மாயா மனவீச்சம் வாழமன நீங்குதலில்
மாயத்தைக்கண்டு மனமிறப்பே திருமயமே. 21

நன்மை தீன்மையேழு நபுஸுகளின் செய்கையாகு
நன்மைதீமை யில்லையிறை நற்சுவனிற் றிருமயமே. 22

பிரகிருதி யையறிவாற் பிறந்தமிரு கத்தின்செயற்
பிரம வறிவிழந்தாற் பெருநரகந் திருமயமே. 23

தெய்வீக வறிவாற் றேர்ந்து நிலைபெற்றுற்
றெய்வீக மாகச்செயற் சிறக்குந் திருமயமே. 24

இரவு பகலு மேகமன வுதிப்பாகு
மிரவுபகலற்ற விடமுள்ளமை திருமயமே, 25

சாக்கிரமுஞ் சொப்பனமுந் தானே சுழுத்தியுட
போக்குச்சக்கு நீங்கவுண்மை புனை துரியந் திருமயமே, 26

நனவிற் சுழுத்தியுட னல்லதீத மெனக்கொண்டு
மனமிறந்த பக்குவமே மாபிர்மந் திருமயமே. 27

வாசனை யாம்பழக்க மறநீதி நேம நிஷ்டைத்
தோசு மறநடந்தாற் றுலையுங்கன்மந் திருமயமே. 28

நந்துநன்மைதின்மை நாலுவித கற்பனையும்
பந்தம் பெருகிவரும் பாரமாந் திருமயமே. 29

ஏறுமுண்மை பக்த ரிடுக்கண்படு வாரில்லை
யூரலறச்செய்யு முயர்தங்கந் திருமயமே. 30

லோகத்தைக் கொல்ல னெருங்க வடிப்பதெல்லாம்
பாகப் படுத்திவிடப் பண்பாந் திருமயமே. 31

உருக்க வுருக்கத் தங்க முயர்மாற்றே யாவதுபோ
லுருக்க வுருக்குடையோ னுயர்பதியாந் திருமயமே. 32

மோரைக் கடைவதெல்லா முறைவெண்ணெய் தானெடுக்கத்
தேறிறைவன் பரீட்சையெல்லாந் தெளிவடையத் திருமயமே

கோபவிழி முன்கர்நக்கீர் கொடுங்கபரிற் கேட்கும் வினாத்
தாபவிடை லோகத் தனலே திருமயமே. 34

நபுஸை விடைகேட்கு நன்மலக்கு தத்துவமாம்
பவுசு நபுசிறந்தாற் பரனே திருமயமே. 35

லோக வனல்வெறியா னேவினை பலதாகிப்
பாகப் பர்ஜக்திரை பாதிப்பாந் திருமயமே. 36

அசலளவின் மீளுமென வாலநபியுரைத்த தெல்லாம்
ஜிசுமளவில் வைத்துச்சுயஞ் சிதைந்தார் திருமயமே. 37

ஐம்பூத குணமிகுத்தோ யாதி நிலையிழந்து
வம்புபெரும் பூதகுண மிகத்திரும்புந் திருமயமே. 38

ஐம்பூத வசலை யறியாமற் புத்திகெட்டே
யைக்கியத்தை மறந்தே யழிந்தார் திருமயமே. 39

ஆதியிடத்தி லணுகுமென்று சொன்ன தெல்லாஞ்
சேதிப் புலன்வழியிற் சேரார்க்கே திருமயமே. 40



பொறிபுல னடங்கியநற் புனித மகத்தோர்கள்
பிரியாமெய் நிலையைவிட்டுப் பேரார்திருமயமே. 41

அத்துவித லட்சியத்தி லருளாக நின்றோர்கள்
பித்தர் களைப்போல பிணக்கந் திருமயமே, 42

வான்புவி போலபண வாழ்வே யிருந்தாலுந்
தான்கும்பிக் குழக்கரிசி தானே திருமயமே. 43

ஒருசாண் கும்பிக்கே யுணவு கடிதாமோ
ஒருபொழு துண்டாலு முயர்வே திருமயமே. 44

இறைவ னிரணத்தை யினமாய்த் தவக்கல் வைத்தே
யிறையருளைக் கைகொண்டா லின்பந் திருமயமே. 45

அன்புடையோனுகி யாலத்தாரெல்லோர்க்கு
மன்புட னமுதளிக்கு மரசே திருமயமே. 46

எறும்புவரை யானைமுத யின்புற்றுத் தானிருக்கப்
புருஷர்கலங்குவதேன் பூமான் றிருமயமே. 47

குடர்வாய்ச் சனங்களுடன் கூடியிருந்தாலுங்
கடைத்தேற மேய்க்குருவைக்காணுந் திருமயமே. 48

காலமதன் வினையாற் கணக்கிற்பெண் கொண்டாலுங்
காலன்வரும் போதேயுயிர்க் கதிமீட்டார் திருமயமே. 49

மாண்பு நிலையுடைய மகத்தான பக்தர்கட்குக்
காண்பதிற் பற்றில்லைக் கல்பு திருமயமே. 50

ஹசது பெருமையுங் கடுநரகஞ் சேர்த்துவிடுஞ்
சுசியான வழிகண்டு சுலுக்காந் திருமயமே. 51

சுகூது பலவிதமாய்ச் சூட்சத்தை யடைவதற்குப்
பகு ஹூவெனும்பாதை பற்றலே திருமயமே. 52

வேததர்க்கம் பேசி வினைவழியே போகாமல்
நாதத்தொனி யான்மனத்தை நாட்டுந் திருமயமே. 53

பொய்வழக்குப் பேசிப்புவியைச்சத மாயென்னும்
பொய்யருடன் சேராமற் புரிவாய் திருமயமே. 54

பிரஊ னமுரூது பெருமிறையே நானெனுஞ்சொற்
றரமின்றிச் சொன்னதுபோற் றடியார் திருமயமே. 55

தலைப்பற்ற சற்குருவின் சந்நிதியி லல்லாமற்
கலைப்புற்ற மானதுபோற் கலங்கேன் றிருமயமே. 56

குருவி னடிபணிந்து கூடுவதே யல்லாமற்
கருவிழந்த காகம்போற் கத்தேன் றிருமயமே. 57

நெஞ்சகத்தினுள்ளே நினைப்பவர் தங்களுக்கு
நெஞ்ச மருள்வடிவாய் நிற்குந் திருமயமே. 58

பஞ்சுத்தீ யென்னப் படர்ந்தகன் மம்மெரியு
மஞ்ஞாத நெஞ்சுத்தவ மாணர்க்குத் திருமயமே. 59

மும்மூல மொன்றுகி முடிவான தவநிலையிற்
றம்மா முயிர்களுக்குத் தான்சிவந் திருமயமே. 60

தன்னை யறிந்து தவமுடைய நெஞ்சகத்து
ளன்பு வடிவாகு மருளே திருமயமே. 61

நினைப்பு மறப்புமில்லா நிலைகொண்ட பெரியோர்க
ளனைத்துயிர்க்குந்தன்மெய் யாங்காட்சி திருமயமே. 62

விண்ணிறைந்து நின்று விளங்குஞ் சுடரொளிபோற்
கண்ணிறைந்து காணுமெய்க் காட்சி திருமயமே. 63

உணவைப் பெருக்கா லொருபொழு துண்டு மலக்
கனநிறைந்த தூலத்தின் கதியடக்குந் திருமயமே. 64

உணவின் பெருஞ்சுமையா லுடலே பொறுப்பதில்லை
யினமாறி யின்பநிலை யினத்தார் திருமயமே. 65

மனக்கவலை கொண்டு மணத்துட னுண்டாலும்
வனத்தே வாங்கதுபோன் வாட்டந் திருமயமே. 66

மனமகிழு நாரை மடைவாயைக் காப்பதுபோன்
மனதைப்பிடிக் கத்தூண்டி வைத்தேன் றிருமயமே. 67

அமையுமுட்டை யிட்டே யாமை நினைப்பதுபோ
லிமையாம லைந்தடக்கி யிருந்தேன் றிருமயமே. 68



வண்ணமில்லா வடிவை வாலறிவா லறிந்தாலுங்
கண்காட்சி யாற்கண்டு காணேன் றிருமயமே. 69

நெற்றிக்கு நேரே நிறைந்த வொளிகாண
நெற்றி நிமிர்ந்து நிறைநோக்குந் திருமயமே. 70

புருவத் திடையிருந்து புண்ணி யனைக்காண
வுருவற்ற நினைவாலே யுவந்துநினை திருமயமே. 71

அஞ்சுமடக்கி யறிவோ டிருந்துபின்னு
லஞ்சுஞ் சமநிலையே யாயிருக்குந் திருமயமே. 72

உதிப்பே நாபி யொடுக்கநாபி திடுக்கமற
வுதிப்பை யடக்க வுபாயந் திருமயமே. 73

உன்னி யெழும்பும்வாய்வை யொடுக்க மனமுன்னுமற்
றன்னை யொடுக்கத்தனைத் தான்பார்த்தேன் றிருமயமே. 74

பச்சோந்தி போலப் பலநினைவு கொள்ளாமற்
சச்சித நீக்கிச் சார்வேன் றிருமயமே. 75

கும்பிக்கிரை தேடிக் குணங்கெட்டுப் போகாம
னம்பியிர ணத்தையே நாடுவேன் றிருமயமே. 76

பாரியா ளகமிருக்கப் பாதகமாய்க் கலவிதேடி
நாரியர் தூண்டிற்பட்டு நாறுவார் திருமயமே 77

கொண்டவ னகயிருக்கக் கோதைய ராணோர்கள்
கண்டவ ரிடமகத்தைக் காணவைப்பர் திருமயமே. 78

வாசிவாசி யென்று வாயுளறி நில்லாமல்
வாசிமன தாலொடுக்கும் வகைநன்றே திருமயமே. 79

மந்திரத்தை யெடுத்தான் மனமது விரண்டாகும்
தந்திரத் தாலொடுக்கந் தரலாந் திருமயமே. 80

ஆகாய சக்திபெற வதிகமே நேத்திரத்தில்
வாகாய் மிரட்டியேத ன்வயப்படுத்துவர் திருமயமே. 81

வேசித் தனமுடைய விலைத்தாசி தான்கொண்டு
பாச மதில்வீழ்ந்து பாழாந் திருமயமே. 82

பஞ்சபூத வடிவான பாவையரைக் கெஞ்சாமற்
றஞ்சமென்று நின்னைச் சார்ந்தேன் றிருமயமே. 83

பிறவிக்கு ருடர்க்குப் பெருவாழ்வு சூனியம்போற்
பிறவிநன் மனத்தினர்க்குப் பெருஞ்சகமற றிருமயமே. 84

தங்கப் பணியெனவே சகத்தோற்ற முழுதுமனந்
தங்காம லலைந்தாற் சகந்தோன்றுந் திருமயமே. 85

சகம்வாழ்வு கானற் சலக்குமிழி போலாகுஞ்
சகமாயை விட்டகலச் சதாசிவந் திருமயமே. 86

வந்தித்தற் சிந்தித்தல் வகையாகப் பாசமிகும்
வந்ததுவுங் கடந்ததுவு மகிழ்ந்தெண்ணேன் றிருமயமே. 87

மனமடக்க வறியாம மலைந்தலைந்தே யோடிநித
மனக்கவலை யதிகரித்து மாண்டார் திருமயமே 88

தானே யுலகமாய்த் தன்கற்பனை நபுஸாகுந்
தானே மாய்கைதனைத் தரமிழகத் திருமயமே. 89

தானில்லா வுலகமில்லைத் தானில்லாச் சீவனில்லைத்
தானில்லா மரணமில்லைத் தானிற்கே டிருமயமே. 90

தானில்லா மனமில்லைத் தானில்வின சனமுயில்லை
தானிழந்தாற் சித்தந் தானறுரியந் திருமயமே. 91

வாதனையாம் பொய்தொடுத்து வரும்பாசக் கட்டவிழச்
சாதனைசெய் வோர்க்குத் தானுருகுந் திருமயமே. 92

இயமநியம மியம மியற்றும னின்றோர்க்குச்
சுயநற்சொரூ பாநந்தந் தோன்று திருமயமே. 93

முத்லக்கான சுகூதை முறையாகக் கைக்கொண்டால்
முத்தலக் கானசெயன் முயலுந் திருமயமே. 94



முத்லக் கான முறைசுகூ தடைவதற்கு
நத்துமுறை தானசுகூது நடப்பதுமுன் றிருமயமே. 95

சகநிஷ்டை தனையடையச் சரவழியின் காற்பிடித்து
மிகக்கருணைத்தாளை மிகுத்துத் தருவாய் திருமயமே. 96

மௌனக் களஞ்சியமே மதிப்படங்கா வுயர்மாற்றே
யௌவன மெய்யறிவை யாக்குந் திருமயமே. 97

மனவாக்குக் காயத்தால் வருந்தோஷ மும்மறவே
கனசோதி யாலே கரிப்பாய் திருமயமே. 98

தன்னையறி யாக்குறைவாற் றனித்தபிழை யிருந்தாலுந்
தன்னையறிந் திழந்தபினின் றன்பாரந் திருமயமே. 99

அளவற்ற கிருபையினு லாலத்தைச் சூழ்ந்திருக்க
தளமுற்ற பக்தருள்ளந் தரன்பாகத் திருமயமே. 100

எல்லையில்லாக் காலமா யேகமாய் நிறைந்தநினைச்
சொல்லாற் புகழ்ந்துரைக்கச் சூழுமோ திரும்மயமே. 101

ஆ பாடல் 101.

திருமயக் கண்ணி முற்றிற்று.

# அருண்மயக் கண்ணி

ஆதியாய் நின்றே யரும்பொருளாய்த் தானான
சோதியாய்த் துலங்குஞ் சுடரே யருண்மயமே. 1

ஆலைஞ்சிறந்த வருள்வடிவே நின்கருணைக்
கோலமதிற் கண்டகுணமே யருண்மயமே. 2

பலகலையும் படித்துப் பாத்கமாய் நின்றோர்க்கு
நலவினையுந் தீவினையு நட்பே யருண்மயமே. 3

நல்வினையுந் தீவினையு நாடாத வன்பர்கடங்
கல்பினையே மெய்யிடமாய்க் கண்டே னருண்மயமே. 4

இன்பக் கடன்முழுகி யிரவுபகற் றோறும
மன்பான மெய்நிலையே யனுகு மருண்மயமே. 5

லன்பாய்க் கசிந்துருகி யரனடியைப் பெற்றோர்க்கே
யென்பாவம் வந்தாலு மிணங்கா ரருண்மயமே. 6

சொல்லரிய ஞானச் சுகவாரி கண்டதின்பின்
னல்லல்வினை யனைத்து மனுகக்காணே னருண்மயமே. 7

சிந்தையொரு மித்துச் சித்திரம்போ லானபின்பு
பந்தத்தி லேவீழார் பக்த ரருண்மயமே. 8

சிந்தையொரு மித்துச் சித்திரம்போ லானபின்பு
பந்தவினை யெல்லாம் பறக்கு மருண்மயமே. 9

அண்டபிண்ட மெல்லா மடக்கிய யரசாளுங்
கொண்ட பெருவெளியாங் குதாயே யருண்மயமே. 10

பண்டு தொடுத்துவந்த பாதகத்தைப் பாழ்ப்படுத்தக்
கண்டோர்க்குத் தொண்டுசெய்யக்கழரு மருண்மயமே. 11

அன்னைசுற்ற மெல்லா மடுத்திருந் தாலுமென்ன
வின்னலற்ற சிந்தை யிங்கஹதே யருண்மயமே. 12



மைந்தர் மனைவியென மாய்கையாற் சிக்குண்டு
வந்த வகையறியார் வசையே யருண்மயமே. 13

சிந்தை கலங்காச் சித்துருவைக் காணுதற்குத்
தந்தையா மெய்க்குருவைச் சாரு மருண்மயமே. 14

பாவையர்க ளாசையற்றுப் பற்றற்ற சிந்தையர்கள்
மேவி யொருபொழுதும் விரும்பார்க ளருண்மயமே. 15

ஐம்பூத வறிவா லாலத்தைக் காண்ப தல்லா
லைம்பூத மாமறி வடங்கக் காணேன் றிருமயமே. 16

மண்வனைந்து பாண்டஞ்செய்து வகைவகையாய் நாமயிட்டுப்
பண்செய்த நாதனைத்தான் பார்க்கத்தடையே னருண்மயமே. 17

உள்ளத்தை விட்டே யொருபொருளு மில்லையெனத்
தெள்ளத் தெளிந்தறிந்தேன் றெளிவே யருண்மயமே. 18

ஆல மர்வாஹ் ஆலமி தாலுலகக்
கோல மதைத்தெரிந்த குணப்பெருக்கே யருண்மயமே. 19

அஹது வஹதாக வாலம் பலதாகச்
சகக்கோலங் கண்டு தரமொழிய வருண்மயமே. 20

ஆலங் கபீரா யாடும் பெருவெளியாய்த்
தாலஞ் சகிரான துயர்திரைநீக் கருண்மயமே. 21

தாலத்தை மதித்தற்ப சுகமேதுவு மில்லையெனுஞ்
சாலத்தைக் கண்டாற் சதியே யருண்மயமே. 22

வற்றாக் கருணை மழைவந்து பொழிவதற்கே
யுற்ற துடுக்கை யொழிப்பா யருண்மயமே. 23

கண்ணே கருத்தே காணரிய கற்பகமே
விண்ணே யிருதயத்தின் வெளியே யருண்மயமே. 24

நெஞ்சம் பதைத்திருக்க நேமநிஷ்டை செய்வதெல்லாம்
பஞ்செனவே சித்தம் பதறு மருண்மயமே. 25

மனமயக்க மற்று மகத்தான கண்டிறந்தா
வினமாதி திரைகளியாவு மில்லை யருண்மயமே. 26

மனமயக்க மறுதற்கு மகத்தான வர்களிட
மணுகினவர்க ளல்லோ வரிலறு யருண்மயமே. 27

ஆணவப்பேய் கொண்டே யலறித் திரிபவர்குக்
காணுமோ கத்தனறிவு கசப்பே யருண்மயமே. 28

இணங்க ளினத்தோ டிணங்கி யிசைவதுபோற்
றினம்பரத்தின் பகையர்கட்குத் திரையா மருண்மயமே29

இல்லாததை யில்லையென வியம்புவர்க ளிணையில்லா
ரில்லாததை யுண்டுமென விணைப்பார்க ளருண்மயமே. 30

சொல்லுஞ் செயலுஞ் சுயமெனக் கண்டவர்த
மெல்லையிலென் ஞானு மிணைவையா ரருண்மயமே. 31

கறந்தபால் மடியிற் கவந்துகொள் ளாதிருக்கப்
பிறந்திறப்ப தென்னப் பெரும்புதுமை யருண்மயமே. 32

வந்ததுவு நீயென்றால் வழிபோவது நீயேயாகும்
வந்ததுவும் போவதுவும் வகையில்லை யருண்மயமே. 33

வருவதுவும் போவதுவும் வரும்பாசக் கட்டவிழ்ந்து
திருச்சித்தந் தெளிந்தவிடந் திரமே யருண்மயமே. 34

ஆலநபி நாயகரு மான்மாவிற் குரைத்தசொல்லைத்
தூலத்தில் வைத்துச் சுனைகெட்டா ரருண்மயமே. 35

தூலஞ் சிபத்தெனவே தோகையர்க ளாசைவிட்டே
யாலத்தின் றுத்தானதி லகமியமே யருண்மயமே. 36

தாத்தி லுஜூதான தானத்திற் றுவிதமில்லைக்
கோத்தசிபத் தின்கோலத்திற் கூர்வன்மையி லருண்மயமே.

ரூஹல் குத்தூஸான நுட்பத்தைத் தானறியப்
பாகக்குறி யில்லாத பரனே யருண்மயமே. 38

அஹதான வஹதத்து அழகுவாஹிதத் தாய்த்திரண்ட
மகத்தான தானத்திவில் வரனே யருண்மயமே. 39

தனத்தைப் பெரிதென்றே தாரணியின் மோசஞ்செய்யு
மினத்தைக் கண்காண வேலா தருண்மயமே. 40



காசு பணத்தையெண்ணிக் கலங்கித் திரியாமற்
றேசிகன் றிருக்கருணை செய்வாயருண்மயமே. 41

பணச் செருக்காற் சிந்தை பரதவித்து வாடாமற்
குணமிகுத்த நின்செல்வக் குணமீ யருண்மயமே. 42

உள்ளது போனடக்குமென வோர்மையுள பக்தருக்குக்
கள்ளமற்ற பணமெதிரே காணு மருண்மயமே. 43

பாச மகன்றோர்போற் பக்குவமாய்ப் பேசுபவர்
நீசக்குணங் கொண்டலையு நெறியா மருண்மயமே. 44

பேச்சால் வருமோ பேரின்பப் பெருவாழ்வு
வீச்சால் வருமோ விளம்பு மருண்மயமே. 45

பாடிப் படித்தாலும் பற்றறுச் சிந்தையர்க
டேடி யடைவதில்லைத் தெளிவை யருண்மயமே. 46

தடித்தன்மாய் வாய்பேசித் தரங்குலைந்து போகாது
குடித்தனத்தைப் பேணுதலே குணமா மருண்மயமே. 47

சொல்லுஞ் செயலுமில்லாச் சொரூபத் தேதனிக்க
வல்லும் பகலு மன்பெமக் கருண்மயமே. 48

வேதமா நூற்கள் வெகுவாய்ப் படித்திருந்தும்
போதனை யின்றியே புறமலைந்தா ரருண்மயமே. 49

அனுபவத்தி னெறியை யன்புடனே கண்டோர்க
டினமுமின்புற்றுராய்த் திகழ்வ ரருண்மயமே. 50

மாதவஞ் செய்ய மலையேறிச் சென்றதனைச்
சாதனையா லகத்தறிந்து சார்ந்தே னருண்மயமே. 51

காமக் கணையகன்று கருவெளியைப் பார்த்திருந்தா
னேம நிஷ்டையல்லோ நிறைவே யருண்மயமே. 52

மக்க நபியிரசூல் மாதவத்தைத் தானடையச்
சுக்கூரான தானங்கண்டு சூழ வருண்மயமே. 53

சுக்கூரான சொல்லைத் தொடர்ந்தே யறியாமன்
மக்கரான வுலகமதின் மலைவதே னருண்மயமே. 54

மார்க்கம் படிப்பதெல்லா மாய்கையை நீக்குதற்கே
தீர்க்கமா யறியாமற் றிகைப்பா ரருண்மயமே. 55

உலகத்தி லேயுனக் குள்ளதொன்று மில்லையெனப்
பலகற்று மறியாத பலனேதோ வருண்மயமே, 56

தூலத்தின் செய்கை துக்கசுக மானதுவே
யாலத்தின் பெருமை யன்பே யருண்மயமே. 57

சொல்லடங்காச் சுகவெளியைச் சுகித்தோர்க டம்மனதி
னெல்லையில்லா வாநந்த வெண்ணமீ யருண்மயமே. 58

நன்மையென்றுந் தீமையென்று நன்மறைசாற்றுவதெல்லாந்
தன்னையறியாச் சகத்தார்க்கே யருண்மயமே. 59

நரகசொர்க்க மென்ன நன்மறைகட் சொல்வதெல்லாம்
பர்க்குடைய தாகும்பிர பஞ்சத்தாக் கருண்மயமே. 60

தூல நபுஸைத் தொடர்பாய்ப் பிடித்தோரெக்
காலமுந் தானடையார் கத்தன்று ளருண்மயமே. 61

அண்டபிண்ட மெல்லா மருளாய் நிறைந்திருக்கக்
கண்டு தெளிவார்கள் கருத்தே யருண்மயமே. 62

அடிமுடி யில்லா வகண்ட பெருவெளியே
கடிதி லுனைக்காணக் காட்டா யருண்மயமே. 63

பூத வெளியாய்ப் புலனுணர்வு செல்லாம
ஞதத் தொனியினடத்திவை யருண்மயமே. 64

தூல மவுத்தானுற் றொடர்நபுஸ மவுத்தாகிக்
காலத்தான் சிபத்தெல்லாங் காணு மருண்மயமே. 65

நானெனவு நீயெனவு நாடாது தானவனாய்க்
கோனான நினைப்பொருந்தக் குணவருளீ யருண்மயமே. 66

தொலையு முடம்பின் சூட்சத்தைத் தானறிந்தார்
கலப்பற்ற சோதியொன்றே காணு மருண்மயமே. 67

நூரான நூரை நுணுக்கமாய்த் தானறிந்தாற்
சாரவனாய்த் தானிற்குந் தயவே யருண்மயமே. 68



பார்க்குமிட மெல்லாம் பரமாக வேபார்த்து
நோக்கிப் பழகுவதே நுட்ப மருண்மயமே. 69

வாக்கான் மனத்தால் வகுத்துரைக்க வேலாத
நீக்கமறத் தானாய்நின்ற நினைவே யருண்மயமே. 70

கண்ணே கருத்தே கண்குளிர்ந்த நல்வழியே
விண்ணுக் கடங்கா வெட்டவெளியே யருண்மயமே. 71

கண்ணே மணியென்னுட் கார்முகிலாய் நின்றிலங்கும்
விண்ணிறைந்த வமா வெளியே யருண்மயமே. 72

கண்ணினுட் கண்ணைக் கண்டிறந்து பார்ப்பதற்குத்
தண்ணாரும் வல்லபத்தைத் தருவா யருண்மயமே. 73

சொல்லாற் சுகமேது சொல்லிறந்த நின்னருளை
யல்லலறக் காட்டு மன்பே யருண்மயமே. 74

அன்றுமின்று முந்த னக்கத் திருவழியாய்
நன்றுவிமை கொட்டார் நயனம்பா ழருண்மயமே. 75

ஆனஐனு லெக்கீனாக வாலமலக் கூத்தானதிற்
கோனாய்க்கோலம்விளங்குங் குறிப்பே யருண்மயமே. 76

ஆகுமைனைக் கடப்பதற்கே யாரறிவார் சூட்சமதை
யாகமாந் தூலத்தைவிட் டஹுதைத் தொட ரருண்மயமே.

மதலைப்பரு வத்தினிலே மனமுடனே தானடந்தா
விதம்பெருகு ஞானவழி யிசையு மருண்மயமே. 78

ஹக்குல்லெக் கீனைகக் காற்பிடித்துத் தாடிறந்தாற்
சொக்குங்கமா லுல்லெக்கீனாய்த் துலங்கு மருண்மயமே. 79

தூலத்தி னாசைவழி தொடராத பக்தருக்குக்
காலத்தி னிறைந்துவருங் கருத்தே யருண்மயமே. 80

துனியா வெனச்சொல்லுந் தோகையரை நீயறிந்தா
லினித்தூலத்தி னிச்சை யேகு மருண்மயமே. 81

அறிந்தாலும் போதாதே யறிவுடன் றனபழகித்
தெரிந்தே யிச்சைசையினைத் தீர்ப்பா யருண்மயமே. 82

மாதர் மயக்கு மறலியென முன்னோர்கள்
போதமது மெய்ச்சுகமே புனித வருண்மயமே. 83

மாதர்கட் சொற்கேட்டு மனமுடைந்து நில்லாம
னீதநபி நாயகர்சொன் னிலைபெறுக வருண்மயமே. 84

கோழைத் தனமுடைய கோதையர் சொற்கேட்டால்
மேலைத் தவத்திற்கெங்கே விடியு மருண்மயமே. 85

நாரியர்க ணல்வார்த்தை நயமாயுரைத்தாலும்
பாரிற்கைக் கொண்டாற் பாவ மருண்மயமே. 86

தாய்போ லன்புதந்து தனங்கொடுத்தே யமுதூட்டி
நாய்போ லலையவைப்பார் நாதா வருண்மயமே. 87

தூலத்தி னிச்சையல்லோ தோகையராய் வந்திருக்குங்
கோலத்தை யறியாருள்ளங் கொடுமாய்கை யருண்மயமே. 88

உதிரத்தடிப் பல்லோ வுடலாய்ச் சமைந்தபிண்ட
பதித்தவுட லேசகமாய்ப் படரு மருண்மயமே. 89

உன்னுடலை நீதடுக்க வுபாய மறியாமற்
பெண்டடுக்கி விழுதலெனும் பேச்சுவீ ணருண்மயமே. 90

கண்ணழகி பார்வையெல்லாங் காமன்கணை தீர்வதற்கே
யுண்மை யறியாம லுரைப்பதே ணருண்மயமே. 91

ஆயிரஞ் சத்திய மடுக்கடுக்காய்ச் செய்தாலுங்
காயமா யெடுத்தாலும்வீண் கலக்க மருண்மயமே. 92

அடங்காப் பொய்யுரைக்கு மன்புகொள் கன்னியர்கள்
மடங்கமன மாற்றஞ்செய வகையா மருண்மயமே 93

பாலிருக்குந் தோற்கொங்கைய்யை பாவனைக் காட்டியவர்
காலைப் பிடிக்கவைப்பரிது கபட மருண்மயமே. 94

மதலைப்பருவத்தின் மார்பிடித் தருந்தியபின்
கதிகாளை யிற்காணக் கலக்க மருண்மயமே. 95



உன்னிலிருக்கு முயர்ஞானங் கைக்கொண்டாற்
பின்னே கலக்கமிலாப் பெருமை யருண் மயமே. 96

மலக்கூத்து தானுடைய மார்க்க நெறியறிந்தா
விலக்கவில் லறநடத்த விணக்க மருண்மயமே. 97

கற்றோரு மற்றோருங் கருத்தறியா தில்லறத்திற்
பற்றுடனே யலைவதென்ன பழக்க மருண்மயமே. 98

இல்லறத்தின் சூட்சமினமாக வறிந்து கொண்டாற்
றொல்லைவிலை யாதுந் தோன்றா தருண்மயமே. 99

இஸ்லாத்தின் றுறவு விருதயத்தி லில்லாமல்
முஸ்லிமென வேஷமிடின் மூழும் வினையருண்மயமே. 100

வாசனைப் பழக்கத்தால் வரும்பாசப் பித்தையெல்லா
யோசனை யாய்ப்பழக வுயர்வா மருண்மயமே. 101

ஆ பாடல் 101.

அருண்மயக் கண்ணி முற்றிற்று.

# திருவாநந்தக் கண்ணி.

ஏகன் செயலியாவு மென்றெண்ணி யேயிதய
மேகமாய்ச் சும்மா விருப்பேன்றிரு வாநந்தமே. 1

கணிக்க முடியாத கருவெளியை மேனோக்கிக்
கனிந்திருந்தா லருணிறைவே கருவேதிரு வாநந்தமே. 2

நினைவுங் கனவு நிர்மூல மாயிருக்க
மனமிறந்த நன்னிலையே மகத்தாந்திரு வாநந்தமே. 3

ஒப்புவமை யில்லா வோர்மையுள்ள சிந்தையர்கள்
செப்புஞா னக்களஞ்சிய மாந்திரு வாநந்தமே. 4

தவநெறியைக் கைக்கொண்டு தகுதியாய் நின்றவர்கள்
சவம்போற் செயனடத்திச் சார்வர்திரு வாநந்தமே. 5

ஆகமத்திற் கெட்டாத வறிவகன்ற வாநந்தத்தைப்
பாகமாய்த் தேறவருட் பரமேதிரு வாநந்தமே. 6

சச்சிதா நந்தசித்தாய்ச் சகமாய் நிறைந்திருக்க
நிச்சியமய மானவுயர் நிறைவேதிரு வாநந்தமே. 7

சகமெல்லா மோருயிராய்த் தான்செயலன்றிச் செயலாகச்
சகநிறைந்த மாகனவைத் தான்கண்டேன்றிரு வாநந்தமே.

வேதத்தின் ரகசியத்தை வேதியர்கள்தா மறியார்
நாதத்தொனி யாய்நிறைந்த நலமேதிரு வாநந்தமே. 9

எழுத்தில்லா வேத மேகனிட மேயிருந்து
பழுத்தநபி யிருதயத்திற் படிகல்பேதிரு வாநந்தமே. 10

மாதா வயிற்றின் மனமின்றி யிருந்ததுபோன்
மாதவமே நிறைத்துமன மறச்செய்திரு வாநந்தமே. 11

அமாவாசி யான வல்லும்பக லற்றவிட
மமானத்தான கருவே வருளேதிரு வாநந்தமே. 12



துவிதமற்றுச் சுகமணையிற் றூங்கித் தனித்திருக்க
வவத்தையெல்லா நாசமாக்கு மருளேதிரு வாநந்தமே. 13

தானே தனியே தனித்திருந்தே யருட்பெருகத்
தானே நல்லமுது தருவாய்திரு வாநந்தமே. 14

நனவின் பெருஞ்சுகத்தை நாடாமற் றுக்கமலக்
கனவின் மனமயங்கிக் கடப்பார்திரு வாநந்தமே. 15

மும்மலக் காட்டை முறையா யெரிப்பதற்குச்
செம்மையா மகத்துறவு சிறப்பேதிரு வாநந்தமே. 16

மலமுருட்டும் வண்டுபோன் மலமுருட்டி யேயங்கு
வலையிலே சிக்கிமனம் வாடுந்திரு வாநந்தமே. 17

அழுக்கே வினையாகு மழுக்குமனப் பாரமாகுங்
கொழுக்கு மழுக்கருத்தாற் குணமேதிரு வாநந்தமே. 18

பற்றெங்குண் டோமனப் பாசமங் குண்டாகும்
பற்றுவிடு பட்டாற் பாக்கியந்திரு வாநந்தமே. 19

பற்றுநீங் காவிடிலோ பாரச்சித்தங் கலக்கமுறும்
பற்றற்ற விடமே பரனேதிரு வாநந்தமே. 20

எலிபிடிக்கும் பூனை யிமைகொட்டா திருப்பதுபோற்
சலியாது தாரைகண்டு சார்வேன்றிரு வாநந்தமே. 21

கூட்டிலடை பட்டகிளி குன்றி மெலியுமனக்
காட்டிற்சிக்கி டாமற் காப்பாய்திரு வாநந்தமே. 22

மலைபோ விடுக்கண்வரின் மனதிலொன்று மெண்ணுமன்
மலைக்கா திருப்பர்நல்ல மகத்தோர்திரு வாநந்தமே. 23

தாங்கவொண் ணுவினைக டான்வந் தடுத்தாலும்
பாங்காக நீக்கியருட் பயப்பாய்திரு வாநந்தமே. 24

வினைசெய் யாதிருக்க மிகுசோதனை மூண்டாலுந்
தினைப்பொழுது நின்னைவிட்டுத் திரும்பேன்றிரு வாநந்தமே

அடுத்தோரைக் கெடுக்கு மறமில்லாத் தோஷிகளை
யடுத்துப் பழகே னரசேதிரு வாநந்தமே. 26

ஒடுக்கமுள்ளோ ரெல்லா முண்மையாக வேநட்பா
ரிடுக்கண்வந்து தாலுமவ ரிளையார்திரு வாநந்தமே. 27

மார்க்கநெறி யின்றி மனமாறப் பொய்யுரைக்கு
மூர்க்கர்தமைப் பாரேன்முறையேதிரு வாநந்தமே. 28

உண்மையுள்ள பக்தருக்கே யொருநாளுங் குறைவு வாரா
நன்மையான சோதனை கணடக்குந்திரு வாநந்தமே. 29

காயநிலை யென்று கயவர் மனதிலெண்ணி
மாயநிலை யறியாது மயங்குவர்திரு வாநந்தமே. 30

தோற்றுருத் தியைநத்தித் தோகையரி னாசையினாற்
போற்றுந் தரமிழந்து போவர்திரு வாநந்தமே. 31

எலும்புதசை தோலான வீனமாமுடலைநம்பி
கழுகைப்போற் சுற்றிநிதங் கரைவார்திரு வாநந்தமே. 32

தூலத்தைநம்பித் தூயவாத்து மாமறைப்பர்
கோலத்தைப் பாராமற் கொள்வார்திரு வாநந்தமே. 33

கேட்டதைக் கொடுக்குங் கிருபையுள்ள கற்பகமே
கூட்டைப் பதப்படுத்திக் கொடுப்பாய்திரு வாநந்தமே. 34

கல்லாலின் விருட்சங் ககன நிறைந்திருக்கக்
கள்ளமற்ற நெஞ்சின் கருத்தேதிரு வாநந்தமே. 35

காமதேனு வேவந்து கலக்கமில்லாப் பாற்கொடுத்துச்
சேமத்துடனிருக்கச் செய்வாய்திரு வாநந்தமே. 36

முத்திப்பெருக் கால்விதேகமுத்தி யினையடையச்
சித்தமதைச் சரியாய்ச் சிறக்கச்செய்திரு வாநந்தமே. 37

சத்துசித் தாநந்தஞ்சகமாய் நிறைந்திருக்கப்
பத்தியத்தைக் கைக்கொண்டாற் பலனேதிரு வாநந்தமே.

கண்மூடி விண்ணைக் காண்பதற்குத் தவமிருந்தாற்
கண்ணிறைந்த சோதி கலக்குந்திரு வாநந்தமே. 39

மேலான கண்டிறந்து மேகமில் லாவெளியிற்
காலத்தின் றிரையை யெல்லாங் கடக்குந்திரு வாநந்தமே.



வானவர்கட் கெட்டாத வரமிகுந்த வத்துவிதத்
தானந்தனிலடைய சகநிஷ்டைதிரு வாநந்தமே. 41

நிறைவுங் குறைவுமில்லா நிற்குணத்தில் லயமாக
மறைவின்றித் தருவாய் மதிமுகந்திரு வாநந்தமே. 42

அல்லும் பகலு மருளடியைப்பின் றொடர்ந்தாற்
கள்ளமன மெல்லாங் கரையுஞ்திரு வாநந்தமே. 43

அறிவை யறிந்தனந்தா லாபாசக் கட்டறுமே
யெரிவா நமன்பாச மேகுந்திரு வாநந்தமே. 44

நமனாய் வரும்பாச நாலுதிக்கு மன்புகொண்டு
தமதாய் வரும் வெகுளி தகர்க்குந்திரு வாநந்தமே. 45

பாசவலை கொண்டு பாவனையாய்க் கெடுப்போரி
னேச மதைநீக்கி நிலைதருந்திரு வாநந்தமே. 46

மனதைமன தாலொடுக்க மகித்தான வெற்றியுண்டு
மனதன்றிவஸ் தில்லையுயர் மனமேதிரு வாநந்தமே. 47

இதயாம் பரத்தினேகமாய் நிறைந்திலங்கு
மிதயத்தை யறிந்தா லிறைநிலையேதிரு வாநந்தமே. 48

சிதாகாயத் திருவருளாய்த் தினமிருந்தாற் சித்தமது
சதாவிறந் தாற்றுரியஞ் சாருந்திரு வாநந்தமே. 49

மோனப்பெருங் களஞ்சியத்தை முறைமாறாத் தியானமதிற்
காணத்திறந்துவிட்ட கருத்தேதிரு வாநந்தமே. 50

ஆக பாடல் 50.

திருவாநந்தக் கண்ணி முற்றிற்று.

# சைதன்னியக் கண்ணி

பஞ்சத் தொழிலாய் பலநாம ரூபமுமாங்
கஞ்ச மலர்ப்பாதங் கதியேசை தன்னியமே. 1
ஏகமாய் நிறைந்த வெல்லையில்லாப் பெரும்பொருளைத்
தாகமாய்க் கொள்ளநிலை தருவாய்சை தன்னிமே. 2
பார்க்கப் பலவிதமாய்ப் பரந்துநின்ற பரவெளியைப்
பார்த்திருக்க நிலைதருவாய் பரமேசை தன்னியமே. 3
வித்துடன் விருட்சம் வெகுவாய்த் தெரிந்தாலுங்
கொத்தோடு நிறைந்த குணந்தான் சைதன்னியமே. 4
பலவா நினைவே பற்றிருக்க வறியாம
னிலையான தனிநினைவே நீயருட்சை தன்னியமே. 5
பந்தமில் லாநினைவு பரப்பிரம மாயிருக்கும்
பந்தமதை விடுத்தவுயிர் பதமேசை தன்னியமே. 6
பார்க்கப் பொன்னணியாய்ப் பலவாறு மானதுபோற்
பார்க்கப்பொன் னன்றியே பாரேன்சை தன்னியமே. 7
உருவநா மம்பலதே யுற்றுநோக் கின்மாய்கை
யுருவநா மம்மற்றது முயர்வேசை தன்னியமே. 8
உதிப்பே மனவைக்கிய முருவாநா மத்தினிருப்பா
முதிப்பைப்பற் றுமன்வைப்பா யுண்மைசை தன்னியமே. 9
உருவத்தோற்ற மெல்லா மொருமையா நிலைகொண்டா
லுருவநாம மற்ற வுள்ளொடுக்கஞ்சை தன்னியமே. 10
என்று மிருப்போ மென்றென்னும் பாழ்மனதைக்
கொன்றே யருட்சேர்ப்பாய் குணமேசை தன்னியமே. 11
பாசவிலங் கான பாவனை யகற்றியதை [னியமே
தோஷமென விடுத்துன்னைத் துணைகொண்டேன் சைதன்



ஒடுக்க வொடுக்கவரு முதிப்பதனை வேரறுக்க
நடுக்கமிலாத் தனிநினைவை நல்குசை தன்னியமே. 13
அந்தரமாய் நின்றிலங்கு மாகாய விண்ணுருவைத்
தந்திரமாய்த் தந்தாளவை தயவேசை தன்னியமே. 14
நினைவு மறதியில்லா நிர்மல மாய்மனதை
யணைய வருட்டருவா யரசேசை தன்னியமே. 15
நீங்காத ஞான நிலைகண்ட வன்பருக்கே
வாங்காத வருட் சுரக்கு மகிழ்வேசை தன்னியமே. 16
சடமே திரையாகுஞ் சடமறந்தா லவ்வெளியிற்
தடச்சகமே யணுவாகுஞ் சமமேசை தன்னியமே. 17
உன்னையன்றி மாய்கை யுளதோ வுனையறிந்தாற்
றன்னையன்றிக் காணேன் றனியேசை தன்னியமே. 18
ஆழி யசைவா லநேகரூ பந்தோற்று
மாழியன்றிக்காணே னறிவேசை தன்னியமே. 19
திரையில்லாக் கடற்போற் றெளிந்திடவே சித்தமதின்
றிரையை யகற்றிடுவாய்த் திருவேசை தன்னியமே. 20
மனக்கலக்க மீறி மறலிவாய் சிக்காமன்
மனக்கலக்க மாறவைப்பாய் வளமேசை தன்னியமே. 21
தன்னை யறிந்தோர் தனைவிடவே றில்லையெனக்
கன்மமில் லாக்கடமை கதிக்குஞ்சை தன்னியமே. 22
பஞ்சபூ தத்தோற்றம் பலநாமரூ பம்மிரவ
லஞ்சாமற் சிவனருளை யடைவேன்சை தன்னியமே 23
பாசவுரு வெடுத்த பாவையர்கட் கஞ்சிமிக
நேசமாய்த் தஞ்சமென்று நினையடைந்தேன்சை தன்னியமே. 24
காலகால மெல்லாங் கனவூர்கட் சுற்றுமற்
காலடங்கி யிருக்கக் கண்பார்சை தன்னியமே. 25
நீர்க்குமிழி போலா நீணிலவாழ்க்கை யதுவைப்
பார்க்காமற் பார்க்கப் பக்குவஞ்செய் சைதன்னியமே. 26

பேசாத ஞானம் பேரின்பப் பெருவாழ்வை
யாசையாய்த் தந்துநிலை யருள்வாய்சை தன்னியமே. 27

துக்க நிறைந்த விந்தத் தொல்லுலகின் பாசம்விட்டே
ஹக்கா யிருக்கவருள் ஹக்கேசை தன்னியமே. 28

பலபேர்க ளாதரவிற் பண்பாய் நடப்பவர்தம்
மலமிகுந்த பேருறவை மாற்றுஞ்சை தன்னியமே. 29

தன்செயலை யறியாமற் றரணியோ ரையிகழுங்
கன்மிகளைக் கண்டெடுத்துக் காணென்சை தன்னியமே.

உள்ளும் புறமு மொருமை யில்லாப் பக்தர்களே
கள்ளமனம் படைப்பார் கருத்தேசை தன்னியமே. 31

மனவாக்கு நேர்மையில்லார் மதிமோச வுறவைவிட்டு
மனவாக்கு நேர்மைதரு மனநட்பே சைதன்னியமே. 32

உள்ளொன்று புறமுமொன்று யுறவுவைத்துத் தான்பேசுங்
கள்ளமனத் தாரைக் கருக்குவாய்சை தன்னியமே. 33

சொல்லைப்போற் செயலிற் சுயமாய் நடப்போர்க்கு
வல்லலரு மருளே யறிவேசை தன்னியமே. 34

இடும்புத் தனம்பேசு மீகையில் லாருறவு
கடுவினையா குங்கருமங் கண்ணேசை தன்னியமே. 35

புலாலை வெறுத்துப் புலன்வழியைத் தான்றடுத்து
நலமிகுந்த ஞானவழி நல்குவாய்சை தன்னியனே. 36

துறவன்றி வினைவழியாத் தொடர்ந்து திரிபவர்க்கு
நரகசொர்க்க மென்ன நவின்றாய்சை தன்னியமே. 37

குருவருளை நாடிக் குருவருளிற் கலந்துறவே
கருவெளி யானசோதி காணுஞ்சை தன்னியமே. 38

சன்மார்க்க போதனையைச் சகத்தனிலே கேளாத
துன்மார்க்க நேசிக்குச் சுகமுண்டோசை தன்னியமே. 39

வினையை விலைகொடுத்து மேல்வாங்கும் பாவிகளை
வினையின்படி யேவினையில் விழ்வார்சை தன்னியமே. 40



சீவபே தகத்தாற் செயற்பல தாய்திரட்டித்
தேவ நிலையுமின்றித் திகைப்பார்சை தன்னியமே. 41

சீவாத்து மாவின் செயற்சிறிது மறியாமன்
மேவத்தன்மை யாலீர் வினைசுமப்பர் சைதன்னியமே. 42

பரமாத்துமாவின் செயலைப் பண்பாகக் கைக்கொண்டாற்
பரமாத்து மாவின்செயற் பலனேசை தன்னியமே. 43

நிற்குணமாய் நிராமயமாய் நிலைகொண்ட நேர்மையதின்
சற்குண வைக்கியத்திற் சார்வேன்சை தன்னியமே. 44

நிற்சிந்தை யாகி நிர்மலமாய்த் தானிறைந்த
நிற்குண மானதனி நிலைதருவாய்சை தன்னியமே. 45

பார்க்கப் பலவாகிப் பலகோல மாயிலங்கிக்
காக்கவோர் நிலைதருவாய் கண்ணேசை தன்னியமே. 46

வினையான் மனம்பழுத்து வெளிச்சமின்றி வல்லிருளாய்
மனைவி மைந்தரென்ன மாய்ந்தார்சை தன்னியமே. 47

எத்தனை காலங்கட்கே யிருப்பார் புவியைநம்பிச்
செத்தவுட னேவிழிப்பர் செய்கையாற்சை தன்னியமே. 48

கோவிற்பூ னையைப்போலக் குபாடமா யிருந்தாலுந்
தீவினையா லுள்ளந் தேம்புவார்சை தன்னியமே. 49

வானளவு பணங்குவிந்து வாழ்ந்தாலுந் துணைகளில்லைக்
காணநமன் வரிலங்கே காப்பவரார் சைதன்னியமே. 50

ஏகபரி பூரணமா யிலங்குகின்ற வருளதனைப்
பாகமறிந் திருந்தாற் பக்குவமே சைதன்னியமே. 51

ஆக பாடல் 51.

சைதன்னியக் கண்ணி முற்றிற்று.

# தற்பரன் கண்ணி

விண்ணாரம் போற்பேசி வெறும்பாசக் கட்டுண்டு
மண்ணாய் மடிவதல்லோ மார்க்கமாந் தற்பரனே. 1

வந்தித்தலுஞ் சந்தித்தலும் வளர்பாசக் கட்டாகுந்
தந்திரத்தை யறியத் தயவாகுந் தற்பரனே. 2

தன்னை மறந்த தவமுடைய புண்ணியர்க்கு
நின்னருள் வெளியாகு நீதியாந் தற்பரனே. 3

புலித்தோலைப் போர்த்த புத்தியில்லாக் கள்ளநரி
கெலிபிடித்து வீழ்ந்தகதை கிருக்காகுந் தற்பரனே. 4

ஆட்சிதனைத் தேடி யாசைவைத்துச் சாகாமற்
காட்சிதனைத் தேடியுள்ளங் களிப்பாகுந் தற்பரனே. 5

கானகத்தி லாடுமயிற் கண்டுமிக வறிந்தால்
மோனத் தெளிவு முதன்மையாந் தற்பரனே, 6

கதிரவனை நோக்கிக் காலையி லாடுவதை
யிதமுடைய நூரானியி லேற்றாடத் தற்பரனே. 7

வேதக்குருவே விதர்ப்பமில்லா மெய்க்குருவே
நீதிக்குருவே நின்கண்சார் தற்பரனே. 8

குருவே கருவாகுங் குதாவே றில்லையையா
கருவையறிந் துள்ளமது காப்போ தற்பரனே. 9

நூரே குருவாகு நூரடைந்த காமில்களை
நேராங்குரு வாய்க்கொண்டா னேமமாந் தற்பரனே. 10

மூலக் குருவான முன்னோன்றசூல் குத்தூஸைச்
சீலமுடன் பெற்றாற் செயமே தற்பரனே. 11

வேதநபி யுல்லா விதித்த விளக்கமெல்லாம்
போதந் துவிதம்விடப் பொருத்தமாந் தற்பரனே. 12



கபடத்தன முள்ளக் கள்ளர்களி னேசம்விட்டுச்
சுபமாய் மனமொடுங்கற் சுகமாகுந் தற்பரனே. 13

வாயாற் பொய்பேசி வருமோசப் பித்தருக்கு
நோயாங் காமம்வெகுளி நோக்கந் தற்பரனே. 14

முனாபிக்குக ளான முழுமூடத் தோஷிகட்கு
வினைகாம மெங்கே விலகுந தற்பரனே. 15

நாய்போலக்காம வெளிநாடோறுங் கொண்டவர்கள்
பேய்போ லலைந்து பேதலிப்பார் தற்பரனே. 16

கோரச்சூ தாடுங் குற்றமுள்ள போக்கிரிக
டார மிழந்து தரங்கெடுவார் தற்பரனே. 17

கஞ்சா வபினரக்குக் கடும்போதை யுண்டுமென
மஞ்சிவெம்பி யழிவா ரநேகராந் தற்பரனே. 18

சித்தர் சிவயோகி சிவனருளாய் நின்றோர்கள்
பித்தந்தரும் போதைகளைப் பிடியார்கள் தற்பரனே. 19

மஸ்துஹ ராமெனவே வாக்கியந் தெரியாமனல்
வஸ்துவெனச் சாப்பிட்டு மதியிழப்பார் தற்பரனே. 20

சித்தர் முதனூலுஞ் சிவனடியார் முன்னூலும்
பத்தியத்தைச் சொன்னவகை பகராய் தற்பரனே 21

ஆசையாம் போதை யதிலே யிறைவனடி
வாசமாய் மஸ்துகொண்டு மயங்குவார் தற்பரனே. 22

எல்லாம் பிர்மமென யேளனமாய் பேசிநின்று
வல்லற்றரும் மஸ்து வருந்துவதேன் தற்பரனே. 23

உண்மைமஸ் தானா லொருவஸ்தைக் காண்பதுண்டோ
தன்மையில் லாமலிந்தத் தரமேன் தற்பரனே. 24

கஞ்சாக் குடிப்பவரைக் கசடரென வேயெண்ணப்
பஞ்சமில்லாச் செல்வர்மனம் பழக்கந் தற்பரனே. 25

குடும்பம் பெருத்திருக்கக் கோதையருந் தானிருக்க
விடும்பச் சந்நி யாசியாத லியல்போ தற்பரனே. 26

முன்னோர்கள் விருதை முறையாக வேயணிந்து
நன்னய குணவிட்டு நலிந்தாற் தற்பரனே. 27

குடும்ப நடத்துகையிற் கோணமற் போதையுண்டு
விடும்பைவந்த போதே யிரிவதேன் தற்பரனே, 28

ஓடுவது மாய்கை யுளறுவது மாய்கைத்
தேடுவது மாய்கையாற் சேருமே தற்பரனே. 29

மாயையெனு மூட்டையினை மலையாய்ச் சுமந்துகொண்டு
தேயமதிற் காவிகட்டித் திரிவதேன் தற்பரனே. 30

மடமடமாய்ப் போய்த்தினமு மனமுரண்டாம் வாய்பேசி
தடியர் தவநெறியைத் தழுவார்க டற்பரனே. 31

பரம னருளிருக்கப் பாதகமாய் திரிவதென்னக்
கரும பெருஞ்சுமையைக் கழற்றார்க டற்பரனே. 32

பரமன் கிருபையிலே பாரத்தைப் போட்டுவிட்டுத்
திரமாகத் தானிருந்தாற் றெளிவருளுந் தற்பரனே. 33

துவிதந் தானீக்கித் துயர்மன மிறந்தாக்கா
லெவித நன்மைதின்மை யேலாவாந் தற்பரனே. 34

விளையாட்டுப் பகட்டு வீணருடன் சேராமற்
களையிலாக் குருவருளைக் கடைப்பிடிப்பேன் றற்பரனே. 35

எத்தொழிலைச் செய்தே யேதவஸ்தைப் பட்டாலுஞ்
சித்தந் திருவருளைச் சேர்தனலந் தற்பரனே. 36

தூதர்நபி யுல்லா துய்யோன்படி நடந்த
நீதியிது வல்லோ நியமமாந் தற்பரனே. 37

மக்கநபி யுல்லா மாதவத்தாற் செய்தசெய்கை
பக்க மனி தர்க்குநல பாதையாந் தற்பரனே. 38

முன்னோனபி யுல்லா முறையாகச் சொன்ன தெல்லா
மின்னொனமூ னுவென்றே யேற்றியரு டற்பரனே. 39

சட்டம் படித்துந் தானலைந்து போகாமற்
றிட்டமாய் மெய்வழியிற் சேர்ப்பாயே தற்பரனே. 40



படித்த படிப்பாற் பலவேஷந் தான்போட்டு
விடித்துப் பணம்பறிக்க வியலோ தற்பரனே. 41

ஆல நபியிரசூ லதீதையன் பாயுணர்ந்தாற்
கோலஞ்சிஸ் மில்லைதில்லின் குணமே தற்பரனே. 42

வேதத்தின் தர்க்கமதை வீம்புக்குத் தானெடுத்தால்
மாதவத்திற் கெங்கே மனமடங்குந் தற்பரனே. 43

வேதத்தின் சூட்சத்தை வேதியர்க டானறியார்
நீதகுணப் பெரியோர் நிதமறிவார் தற்பரனே. 44

ஆலநபிக் கிரங்கும் ஹர்பில்லா வேதத்தொனி
கோலரூப மாய்ச்சமைந்த குணமாகுந் தற்பரனே. 45

நபிநாயகத்திற்குமுன் னுட்டில்வந்த நபிக ளெல்லா
மபிமானத் தௌஹீதை யடக்கிச் சொன்னார் தற்பரனே.

தூதர்நபி யுல்லாச் சுயமான தௌஹீதை
வேதநிலை யிற்பெறவே விளக்கினார் தற்பரனே. 47

தெய்வவஹீ யால்வேதஞ் சிறுகச்சிறுக வந்ததுவு
முய்யவழி யறியாம லுழன்றார்க்காந் தற்பரனே. 48

வஹியதுவே யில்ஹாமாய் வருமருட் பெருக்காக
வகிலந்தான் றானவனு மருளே தற்பரனே. 49

மைந்தர் மனையிருக்க மாதாபிதா விருக்கக்
கந்தப் பணமிருக்கக் காடேகுவதேன் தற்பரனே. 50

ஆகநபி யிரசூ லபூபக்கர் சித்தீக் கிக்குத்
தாகமாய்த் தான்கொடுத்த தவுஹீதாந் தற்பரனே. 51

ஆலநபியுல்லா வலியார்க்குத் தானுரைத்த
கோலபனுத் தவுஹீதைக் குறிப்பாயே தற்பரனே. 52

ஓதுநபி யிரசூ லுமர்கத்தா புக்குக் கொடுத்த
நீதிச் சட்டந் தன்னை நிலைப்படுத்துவாய் தற்பரனே. 53

உதுமான் ரலிக்கே யொப்புடனே தான்கொடுத்த
விதமா மில்முதனை யிணைப்பாய் தற்பரனே. 54

கலிமாவினுட் பொருளைக் கருத்தா லறிவதற்குக்
கலைக்காமில் கண்டறிந்தாற் காட்டுவார் தற்பரனே. 55

கலிமா வெனுங்கருத்தைக் காத்திருந்தாற் பூத்துவிடுஞ்
சலியாத சூட்சவெளி தானஹதே தற்பரனே. 56

ஷைதயிபெனும் வாசஞ் சமதாக வேநிறைந்த
மெய்மையை யறியவுபாயம் வேண்டுமே தற்பரனே. 57

லாஎன்ற சொல்லால் நானில்லை யிலாஹ—
நீயென்ற இல்லல்லாஹ—வை நிலைப்படுத்துந் தற்பரனே.

நிலையே பெருஞ் சூட்ச நிலைப்படவே நீபழகு
வலையா நினைவுதில்லா மருஷே தற்பரனே. 59

திக்கிறுசெய்வ தெல்லாந் திருவடியை யடைவதற்கு
மக்ராகப்பல நாமம்வைத்தன் மாற்றமாந் தற்பரனே. 60

திக்கிறு நிறைவாகுந் தியானமே யதுவாகும்
பக்தியைத் தானறிந்தாற் பலனுகுந் தற்பரனே. 61

கல்புதிறப்ப தற்குக் காத்திருந்தாற் பூத்துவிடும்
வெல்லும் ரகஸியங்கள் வெளியாகுந் தற்பரனே. 62

புலனே சிபத்தாகும் புத்தியைப் பலதாக்கும்
பலமாந் திரைபெருகும் பாரமனந் தற்பரனே. 63

பொறியும் புலனும் போதவழி யைக்கெடுக்கு
மறியாமனம் போராடு மாநநதத் தற்பரனே. 64

பங்காத தீர மனமாரக் கைக்கொண்டாற்
செங்கமலப் பீடஞ் சேர்க்குந் தற்பரனே. 65

அஞ்சாத நெஞ்சமதே யரனடியைப் பின்றொடரு
மிஞ்சுகின்ற தீரமின்றேன் மேதினிநாற்றந் தற்பரனே. 66

சிந்தைச்சா தனையிழந்தாற் சீரேகிட் டாதெனவே
சொந்தக் குணங்குடியார் சொற்சுயந் தற்பரனே 67



தொண்டியி னண்டகையே தொகுத்தடுத்துச் சொன்னவகை
கொண்டுநான் மந்திரமாய்க் கொண்டேன் தற்பரனே. 68

பிர்மவித் தாகிப் பேசா மவுனவித்தாய்த்
தர்மவித் தாய்நூலைத் தந்தாய் தற்பரனே. 69

மாதவத்தோர் சொல்களை மனம்போற் கருத்தமைத்து
நாதியின்றி நடப்பதெல்லா நன்றோ தற்பரனே. 70

மாதவத் துடையோர்கண் மறைப்பின்றிச் சொன்னதெல்லாஞ்
சாதனை யனுபவத்தின் சாரமாந் தற்பரனே 71

தீர்க்கதரிசிகள் செயமுடனே சொன்ன தெல்லா
மார்குந் துவிதம்விட வழகாகுந் தற்பரனே. 72

அத்துவிதக் கொள்கை யனைத்தையுந் தான்மறந்து
நத்துந் துவிதத்திலே நாட்டுவதேன் தற்பரனே. 73

மக்கட்சிலர் பின்னே மாரணமாய்க் கட்டிவிட்டுத்
தர்க்கம்பேசி யல்லோ தரங்குலைந்தார் தற்பரனே. 74

அத்துவித மேதோன்றி யறிவடைந்தாற் பொக்கிஷமாஞ்
சுத்தமாய்ப் பெற்றோர்க்குச் சுகங்காணுந் தற்பரனே. 75

சித்தங் கலங்காச் சிவராஜ யோகிகட்கு
வெத்திசையுஞ் செல்வ மேலுமாந் தற்பரனே. 76

கன்ம வினையாற் காதவழி போனாலும்
புன்மைநீங் குவதில்லைப் போதமீ தற்பரனே. 77

இருதயத் துறவா லிருக்கலாம் வெகுகால
நெறியிலாத் துறவுதனி னிலையில்லை தற்பரனே. 78

அகத்துறவி னாலே யநேகவூர் சென்றாலு
மிகத்திலவர்க்கு கெங்கு மெழிற்சிறப்பே தற்பரனே. 79

வாக்கா லொருவார்த்தை வகையன்பாய் வந்தாலுந்
தீர்க்கமாய்க் சந்திருக்குந் திருவே தற்பரனே. 80

தன்னை யறிந்த தயவுடைய பெரியோர்க
ளென்னவகை யிலுஞ்சபித்த லியற்றார் தற்பரனே. 81

தன்செயலி யாதுமில்லாத் தக்கபெரி யோர்களிடந்
பொன்செய லாய்நடந்தாற் போரேது தற்பரனே. 82

தக்க பொறாமையாந் தானமதி லேசென்றால்
ஹக்கான நெருப்புவந்து கருக்குமாந் தற்பரனே. 83

ஜலாலுஞ் ஜமாலுந் தன்மையினா லேநடக்கு
நிலைதானத்தை விளங்கி நெருங்காதரு டற்பரனே. 84

ஜலாலாஞ் சிலநேரஞ் ஜமாலாஞ் சிலநேர
நிலைதானே நடக்கு நேர்மெயாந் தற்பரனே. 85

வேண்டி வருவதில்லை விலாயத்துங் கராமத்துமே
தாண்டுமக் காமியத்திற் றானடக்குந் தற்பரனே. 86

யோகசித்தும் ஞானசித்து மொப்புடன் காண்பதற்கு
வாகாம் விதைவிதைத்த மாநடவாந் தற்பரனே. 87

அல்லாகுக் குள்ளகுண மாலத்தார்க் கிரவலுண்டு
செல்லுமாலத் தாரின்குணஞ் சிலதில்லை தற்பரனே 88

துவிதமில்லை யங்கு சுகதுக்கந் தானுமில்லை
யெவித முன்னும்பின்னு மிறுதிலை தற்பரனே. 89

கள்ளத்தன முள்ள கசடர்க டங்களுக்கே
யுள்ளதை சொன்னாலு முவக்கார்க டற்பரனே. 90

சமா னிஸ்லா மிறையருளால் வந்ததன்றோ
கோமா னபியிரசூல் குதரத்தாந் தற்பரனே. 91

சமானா றுகு மிஸ்லா மைந்தாகு
நேமமா யிக்குறிப்பை நேரவே தற்பரனே. 92

படைத்தோனை யறிவதற்குப் பாருலகு போதாதா
தடையிற்கருத் தானேக்கித் தான்காணேன் தற்பரனே. 93



உலகை யறிந்தா லுயர்பூத மாய்த்தோணும்
பலவாய்ப் பிரித்தாற் பகருரையி றற்பரனே 94

தேடியே பார்க்கவேண்டாந் தேவர்கள் கூட்டமதை
நாடியாலஞ் ஜிஸ்மல்லோ நற்றத்துவந் தற்பரனே. 95

வேத மறிவதற்க்கு வெகுதூரஞ் சுற்றவேண்டாம்
வேதத் திறப்புலக மிகுசூட்சந் தற்பரனே. 96

தூதரை யறிவதற்குத் துணையேது வுந்தனுக்கு
நாத் குத்தூஸை நத்துந்தொடர் தற்பரனே. 97

உலக மொடுக்கமென்ன வுன்னதமாய்த் தானறிய
நிலையாய் நபுஸொடுக்க நீள்கியாமந் தற்பரனே. 98

நன்மைதின்மை யெல்லா நாயன்செய லென்பதற்கே
உன்னை யிழந்துவிட் டுள்ளதே தற்பரனே. 99

இஸ்மி லஹ்லம்ஹூ விறையோன் வெளியான
ஜிஸ்முகபீ ராக நின்றாற் றிரைநீங்குந் தற்பரனே. 100

அனுபவத் தின்பெருமை யாரறிய வல்லார்கள்
தனுவின்போ தத்தைவென்ற சாதறிவார் தற்பரனே. 101

ஆக பாடல் 101.

தற்பரன் கண்ணி முற்றிற்று.

# ஐமணிக் கண்ணி.

திருக்கலிமா ஹூவோதித் திருத்த மடைந்துவிட்டால்
வருத்தமொன்று மில்லைவளமாகு மைமணியே, 1

தொழுகை மருந்தாகுந் துன்பவினை தீர்ப்பதற்கு
வழுகு மனவழுக்கை யகற்றனல மைமணியே. 2

அங்க மறந்தே யரனடியைத் தேடுதற்குத்
தங்குஞ் சிபத்திழந்தாற் றகுதியா மைமணியே. 3

அங்க மதிலனுசி ரரியசிபத் தறிந்தாற்
றங்கு முண்மை யுஜூதே தரிக்கு மைமணியே. 4

ஜிஸ்மைப் பனுவாக்கித் தேகத்தைத் தான்மறந்து
விஸ்வாச மாய்த் தொழுதான் மேன்மையா மைமணியே. 5

உண்மை யிலாத்தொழுகை யொரு பயனுந் தாராது
தன்மை நபி வாக்கியத்தைத் தானறிய வைமணியே. 6

பழக்கவழக் கத்தாற் பாவனை செய் தேதொழுதோர்
கலக்கமுற்று நிற்பவரே கள்ளரா மைமணியே. 7

துனியா சிர்க்காகத் தோன்றிவதைச் செய்துவிட்டு
குனித னிமிர்தலினுற் குறிப்பென்ன வைமணியே. 8

ஒருமையுடன் றொழுதாலுள்ளங் குளிர்ந்துவிடும்
வெறுமைத் தொழுகையாலே வெந்நரகா மைமணியே. 9

பாங்கான நோன்பைப் பக்குவமாய்த் தானோற்கப்
பாங்காகத் தானூரைப் பற்றுவா யைமணியே. 10

தூலத்தி னோன்பாற் சுகமது வேபெருகுங்
கோல நபுவின் குணமொடுக்க மைமணியே. 11

மெய்யுதரத் தடிப்பான் மேன்மை யறியாது
ஹைவான் குணமிருத்தே யலைவார்க ளைமணியே. 12



நோன்பாற் பெருகுஞ்சுகமே நாறை யடைவதற்குப்
பான்மையா யடைந்தே பற்றனல மைமணியே. 13

ஆக்கை பெருஞ்சுகத்தா லருட்கிடைப்ப தோவில்லை
நோக்கி யுபவாச நுட்பந்தே ரைமணியே. 14

நோன்பாலே நின்சிபத்து நிட்சயமாய்ப் பனுவாகுஞ்
சோம்பலின்றிற் பக்குவமாய்த் தொடருவா யைமணியே.

உதிரத்தின் வழியோடி யொவ்வாச்சேட்டைக் கன்னுசைப்
பதிவாகத் தானடக்கப் பணுவிரத மைமணியே. 16

ஆதகபி யுல்லா வரன்சுவர்க்கந் தானிழந்த
சாதனைதூ லத்தினிச்சை தானுகு மைமணியே. 17

தூதர்க ளெல்லோர்க்குந் துவர்க்கமாந்துய்யவஹி
போதநோன் பிற்றனே பொங்கநுட்ப மைமணியே. 18

நிறைந்திடும்லை லத்துல்கதர் நிலைமை வெகுவாகக்
கறைந்திடுங் கல்க்கின்செயற் கல்பிலா மைமணியே. 19

செல்வம் வருவதுவுஞ் செல்வதுவுங் கண்டபின்பு
நல்விதமாஞ் சக்காத்தை நாடனல மைமணியே. 20

வானம்புவி யெல்லா வகையுடனே யாண்டாலுந்
தானமில்லா சொத்துத் தரிக்காதே யைமணியே. 21

இரவு பகலாக விறைவனைத் தொழுதாலும்
பெரியலோ பிக்குச்சொர்க்கம் பிணையாதா மைமணியே.

தானந் தனைச் கொடுக்கத் தம்பூர் நகாரடித்து
வீனவார்த்தை சொல்ல லிழிவாகு மைமணியே. 23

குடல்வாய்ச்சனம் பசித்திருக்கக் கோபுரங்களி யற்றுவதே
மடையராம் பணங்காத்து மாள்குவரா மைமணியே. 24

ஷிர்க்கே பலவாம் பணச் சிர்க்கே பெரியது வாந்
தர்க்கங்க ளில்லாமற் றர்மங்கொ டைமணியே. 25

தான தருமந் தவத்துருப்பி லொன்றுகு
மானமாய் நல்ல வழியாகு மைமணியே. 26

ஊசித் துவாரத்தி லொட்டகம் புகுந்தாலுந்
தோஷிகட்கும்லோபிகட்குஞ் சொர்க்கமில்லை யையமணியே.

மக்கா நபியிற சூல் வகையா யுரைத்த ஹஜ்ஜா
நிற்காமற் சென்றுவந்தா னீழ்சுகமா மைமணியே. 28

கருபாவின் காரணத்தைக் கண்டுமிகத் தெளிந்து
தருமான காரியத்தைத் தாபித்த லைமணியே. 29

மதலைப் பருவமல்லோ மார்க்கநெறி சொன்னதெல்லாம்
பதமாகச் செய்துவந்தாற் பலனே யையமணியே. 30

மக்கத்திற்குச் சென்றுநன் மனமுடனே வந்தவர்கள்
தக்கவுண்மை யாயிருத்தற் றகுதியா மைமணியே. 31

மக்கக்கல் புல்லாவை மனமுடன் சுத்திவந்தால்
சுக்குராக வேயிறையோன் சுயவருளா மைமணியே. 32

உலகஞ் சதமென்றே யொப்புட னிற்பவர்க்கு
நிலைகடையா மியாத்திரையை நினையார்க ளைமணியே.

ஓட்டுச்சாட் டில்லாம லுலகபற்று விடுவதற்குக்
காட்டிவைத்த மாதிரியே கதியாகு மைமணியே. 34

துய்யபுக் ராக்கள்ஹஜ்ஜா ஜாம்ஆ வெனச்சொன்னது
வுய்யும்புக் ராக்கணிலை யுட்புறமொன் றைமணியே. 35

அருட்சேட்டை யடைவதற்கே யனுபவ மேபெரிதே
மருட்சேட்டை யான்மனது மாறுதே யையமணியே. 36

பிர்ம வெளியே பேசாத மவுனவித்தே
சர்வமாம் போதஞ் சார்வதே யையமணியே. 37

கஞ்சாக்கண் ணைக்கெடுக்குங் கடுமையபின் மிடர்சாய்க்குஞ்
தஞ்சச்சா ராயங்கள்ளே தனுச்சாய்க்கு மைமணியே. 38

சாதிப் பெருமையினுற் சகமாய்கை சேருவதே
வாதத் துவிதம்விட வளமாகு மைமணியே. 39

சிர்ரை யறிந்து சிர்ராக வேசிறக்கச்
சிர்ரிற் றரித்தாற் சிர்ரேபதியா மைமணியே. 40

ஆ பாடல் 40.

ஐமணிக் கண்ணி முற்றிற்று.

---

# எந்நாள் கண்ணி

அனைத்துயிரு மொன்றேன்றே யன்பு பெருகிவர
வினைத்த பெருங்கருணை யேற்குநா ளெந்நாளோ. 1

ஆணவப் பேய்கொண்டே யலறித் திரியாம
லாணவமற் றேயருளை யடையுநா ளெந்நாளோ. 2

இணையில்லா மெய்க்குருவை யேகமாய்த் தொடுத்திருக்க
விணையற்ற நின்னருளை யிசைக்குநா ளெந்நாளோ. 3

ஈனமிகுந்தே விறையருளைக் காணார்க
ளீனரைக் கைவிட்டே யிசையுநா ளெந்நாளோ. 4

உலகப் பிரியமுள வுலுத்தருற வைமறந்து
விலகரிய சுகூதின் மேவுநா ளெந்நாளோ. 5

ஊர்தே சமுமிழந்தே யுயர்ஞான மேதேடித்
தேர்த லடையமனந் தெளியுநா ளெந்நாளோ. 6

எல்லா மறந்தே யேகனருட் பெருகப்
பொல்லாத மாய்கைதனைப் போக்குநா ளெந்நாளோ. 7

ஏகன்றிருவருளை யிணையில்லாப் பார்வையதா
லேகத்திற் றெழுக விணங்குநா ளெந்நாளோ. 8

ஐம்பூதத் துடுக்கா லரனடி யையமறப்பா
ரைம்பூத மும்மொடுங்கி யடையுநா ளெந்நாளோ 9

ஒப்புவ மையில்லா வொருபொரு ளாய்த் தானிருக்க
வொப்புடன் றன்னைபணு வூட்டுநா ளெந்நாளோ. 10

ஓடி யலைந்தே யுலகவனஞ் சென்றுழு
மோடுங்களை நீக்கிமன மொடுங்குநா ளெந்நாளோ. 11

ஔவியம் பேசி யறிவிழந்து போகாம
லௌவையின் றிருச்சோதி யணையுநா ளெந்நாளோ. 12

கள்ளமனதைக் கட்டோடு தானீக்கிக்
கள்ளமற்ற நன்மனத்தைக் காணுநா ளெந்நாளோ. 13
காணாது காணாது கண்டதெல்லா நில்லாது
காணாதது காணவரங் காணுநா ளெந்நாளோ 14
கிள்ளைபோல் ஞானங் கிளர்த்தித் திரியாமற்
பிள்ளைபோல் ஞானம் பெறுவதுவு மெந்நாளோ. 15
கீழான செய்கையிலே கெட்டலைந்து போகாமண்
மேலான கண்டிறந்து மேவுநா ளெந்நாளோ. 16
குப்பைத்தொட்டி தன்னிற் கூளமது சேர்வதுபோற்
குப்பைத்தொட்டி யின்கூளங் குறையுநா ளெந்நாளோ. 17
கூளமரித்துக் குணமுடன்றீ சேரும் வையக்
கூளமெரிக் குஞ்சோதி கூடுநா ளெந்நாளோ. 18
கெட்ட குணமிகுந்து கேடடைந்து போகாமல்
மட்டற்ற நிற்குணமே வருகுநா ளெந்நாளோ. 19
கேளாத காரியத்தைக் கேட்டுநற் சிந்தைவழி
மாளாம னல்வழியின் மருவுநா ளெந்நாளோ. 20
கொல்ல னுலைபோற் கொடுங்காமத் தீபர
கொள்கையிலே நல்லருளைக் கூட்டுநா ளெந்நாளோ. 21
கோபமிகுத்துக் கொடுநரகு போகாமற்
ரூபக் கிருபையிலே சாருநா ளெந்நாளோ. 22
கௌவி விடக்கெலும்பைக் காப்பதுதா னாயாகும்
மௌனவிர தந்தொடுத்து மகிழுநா ளெந்நாளோ. 23
சத்துவ குணமுதலாந் தனிராஜ குணமிறந்து
சத்தான சாத்மீகஞ் சாருநா ளெந்நாளோ. 24
சாதனையாற் றுலக்கிச் சமவெளியாய்த் தானிறைந்த
போதனைபற் றிப்பிடிக்கப் புகலுநா ளெந்நாளோ. 25
சித்தந் தெளிந்து சிதாகாய மாயிருக்கப்
பத்தியந் தந்து பதம்பெறுநா ளெந்நாளோ. 26



சீவச் செயலாற் சிறுமைப்பட்டு நில்லாமற்
சீவத்தன் மையிழந்து சேருநா ளெந்நாளே. 27
செல்வத்தை மதித்துத் தீவினைக்கா ளாகாமற்
செல்வத்தை யெண்ணாமற் சேருநா ளெந்நாளோ. 28
சேமமாய்த் தானிருந்து சிறக்குங்குணங் குடிசேர
காமத்தீயைக் கெடுத்துக் கரைசேர்நா ளெந்நாளோ. 29
சொல்லரிய ஞானச் சுயஞ்சோதி யேபெருகச்
சொல்லாத சூட்சந்தனைச் சுகிக்குநா ளெந்நாளோ. 30
சோறுங் கறியுஞ் சொகுசா யுண்டாலும்
ரூஹுக் குணவை யூட்டுநா ளெந்நாளோ. 31
சௌஹரா விளங்குந் தனமே பெருமுதலாம்
சௌஹ ரானகுத்தூஸைக் சாருநா ளெந்நாளோ. 32
நல்லாங்கு பொல்லாங்கு நாடி மனதுவழிச்
செல்லாமற் காத்துமெய் சேருநா ளெந்நாளோ. 33
நானென்ற வாண்மைகொண்டு நலமிழந்து போகாம
னானென்ற வாண்மையற்று நலமருணா ளெந்நாளோ. 34
நின்னை மறந்து நீசகுணங் கொள்ளாம
னின்னை யறிந்து நிலைப்படுநா ளெந்நாளோ. 35
நீநா னென்றுமன நிலைமை தவராம
னீயே யேகமென நெருங்குநா ளெந்நாளோ. 36
நெஞ்சகத்தி னுள்ளே நேர்முகமாய்ப் பார்ப்பதற்கு
வஞ்சாத தீர மருளுநா ளெந்நாளோ. 37
சேர்ந்தபெரும் பந்தமதைச் சேராம லேநடக்க
வார்ந்த நலம்விளங்கி மதிக்குநா ளெந்நாளோ. 38
நுட்ப வழிகிடைத்து நோக்குமுக மாவதற்குத்
திட்டமாய்க் காண்பதெல்லாந் தினமறக்க வெந்நாளோ .39
நூரே பலதான நூதனத்தைத் தான்கண்டு
நூரான குத்தூஸை நோக்குநா ளெந்நாளோ. 40

நெறிபட்ட சற்குருதா னேர்வழியைக் காட்டியதைப்
பிறிவன்றி யுள்ளமதிற் பேணுநா ளெந்நாளோ 41

நேமமா நன்முறையை நேர்ந்து கதிபெருகச்
சேமமா நன்னுளைச் செலுத்துநா ளெந்நாளோ. 42

நொம்பலமாம் பொய்க்கூட்டை நொறுக்கித்தன் வசமாக்கி
யம்பலத்தி லேமனதை யடக்குநா ளெந்நாளோ. 43

நோன்பு பிசகாம னோக்கிக் கதிபெருகத்
தாம்புனையுஞ் சிந்தை தனிக்குநா ளெந்நாளோ. 44

தந்தைதாய் சுற்றந் தாரமெனும் பாசமற்று
மந்திரத்தை யுன்னிமன மடங்குநா ளெந்நாளோ, 45

தாரகமா மெய்யருளைத் தனித்தே யடைவதற்குப்
பூரணமா ஞானநெறி பொருந்துநா ளெந்நாளோ. 46

தினமும் வந்தடையுந் தீராச்சந் தேகப்பிணி
மனமுட னேமறந்து மாழ்குநா ளெந்நாளோ. 47

தீதற்ற சிந்தை தெளிந்து கதிபெருக
மாதற்ற ஞானவழி மருவுநா ளெந்நாளோ. 48

சோர்கவலை யற்றுச் சுயம் பெருகு மெஞ்ஞான
கார்முகி லாமருளைக் காணுநா ளெந்நாளோ. 49

தூக்க மிழந்தே சுயவுணர்வு தான்பெருகித்
தாக்கற்ற மெய்யருளிற் றனிக்குநா ளெந்நாளோ. 50

தெய்வக் களஞ்சியத்தைத் தெளிந்தே யருட்பெருக
மெய்யுருவை நாடி மேவுநா ளெந்நாளோ. 51

தேகாபி மானந் தெளியார்க்குப் போகாது
தேகப்பற்று நீக்கித் தெளியுநா ளெந்நாளோ. 52

தையல ரென்றுஞ் சகமாய்யை நீங்கிவிட்டாற்
றையருந் தாயாகித் தனிக்குநா ளெந்நாளோ. 53

தொழுது மனமொடுங்கிச் சுகமாக வேதனிக்க
வழுதுமெய் வரமடைய வாகுநா ளெந்நாளோ. 54



தோத்திரஞ் செய்து சுத்தமாய்த் தெளிவதற்கு
வாத்திர நீங்கிமன மடங்குநா ளெந்நாளோ. 55

தௌராத்து வேதநபி தனியோனின் காட்சிதனின்
மௌத்தான நபிவிறந்து வழங்குநா ளெந்நாளோ. 56

பக்குவ மாமெய்யருளைப் பதமா யடைவதற்கு
தக்கவித மாய்த்தவக்கற் சாருநா ளெந்தாளோ. 57

பார்க்குமிட மெல்லாம் பரனருளா கக்கண்டு
பார்த்து மனவெளியைப் பற்றுநா ளெந்நாளோ. 58

பின்னுமுன்னு மற்ற பெரிய பொருளடைய
நண்ணும் பரவெளியை நாடுநா ளெந்நாளோ. 59

பீச்சாப் பெருநிலையை பேசாத மௌனமதை
யாட்சிகொண்டு நாட வருளுநா ளெந்நாளோ. 60

புத்திதனை மயக்கும் பூவையர்க ளாசை விட்டுச்
சத்தியத்தைக் கடைப்பிடித்துச் சாருநா ளெந்நாளோ. 61

பூரணமா யிலங்கிப் போக்குவர வற்றபொருள்
காரணமாய்ச் சிந்தைகண்டு களிக்குநா ளெந்நாளோ 62

பெற்றபிதா மாதா பிணைத்துவைத்த மாயமதைக்
குற்றமாய்க் கண்டு குணமுறுநா ளெந்நாளோ. 63

பேரின்ப ஞானப் பெருவெளி கலந்துறவு
பாரி லகற்றிநலம் பார்க்குநா ளெந்நாளோ. 64

பொங்குகின்ற சிற்றின்பப் பூலோகப் பற்றுவிட்டுத்
தங்கும்பே ரின்பந் தழைக்குநா ளெந்நாளோ. 65

பொல்லாப் பொறிபுலனும் போக்கி யகந்தெளிந்து
நல்லாகு மெய்த்துறவு நாடுநா ளெந்நாளோ. 66

போக்குவர வற்ற பூரணமாய் நீக்கமற
நோக்கி நோக்காம னோக்குநா ளெந்நாளோ. 67

மட்டிலாப் பாச மலைமலையா கக்கொண்டு
கட்டிப் புரளாமற் கடக்குநா ளெந்நாளோ. 68

மாறாத துன்ப மனமலையாய்ச்செய்து கொண்ட
மாறாத வவருறவை மறக்குநா ளெந்நாளோ. 69

மின்னலைப்போன் மறையு மேதினியிலிவ்வுடலும்
பின்னமில் லாதிருக்கப் பெறுவதுவு மெந்நாளோ. 70

மீன்பிடிக்கத் தூண்டில் வினையமாய்ப்போடுவ போன்.
மான்மருட்டுங் கண்ணாரின் வலைகிழித லெந்நாளோ. 71

மும்மலத்தின் காட்டை முடிவாகத் தானெரித்து
வம்மண மெய்யடைய வாகுநா ளெந்நாளோ. 72

மூச்சற்றுச் சிந்தையற்று முழுமனத்தின் செயற்களற்று
பேச்சற்ற மௌனநிலை பிணையுநா ளெந்நாளோ. 73

மெய்யைப் பொய்யாக்கு மேதினியினடையை விட்டு
மெய்யிற்சிவந் தான்கண்டு மேவுநா ளெந்நாளோ. 74

மேலுங்கீழு மற்ற மெய்ப்பொருளைத் தானடையக்
காலொடுங்கித் தன்னைக் காணுநா ளெந்நாளோ. 75

மைச்சீட்டுக் குள்ளே மறைவான பொக்கிஷத்தை
நையா மனதை நசுக்குநா ளெந்நாளோ. 76

மோசக் குணமிகுத்த மூதேவி பாசம்விட்டு
வாசை மிகுந்தக்வா வடையுநா ளெந்நாளோ. 77

போகமதைத் தவிர்த்து மூம்மீன் பதமடைய
மோகமில் லாக்குருவை முடுகுநா ளெந்நாளோ. 78



யாதில்லாயாதை யாகுமரு ளாற்றொடுக்க
யாதுதா னாயிலங்க வாகுநா ளெந்நாளோ. 79

யோசனைக ளற்ற வுயர்ஞானந் தானடைய
யோசனைக ளற்றபத மூட்டுநா ளெந்நாளோ. 80

வல்லபமாய் வாய்பேசி வரும்பாசக் கட்டுபடுந்
தொல்லையை விடுத்தருளே துலங்குநா ளெந்நாளோ. 81

வாசிவாசி யென்று வயிறுபெருகி நில்லாமல்
வாசிமனத் தான்மறிக்கும் வகைபெறுநா ளெந்நாளோ. 82

வினையா லெடுத்தவுடன் வினையான் முடியாமற்
றனையறிந்து தன்னைத் தான்காணா ளெந்நாளோ. 83

விண்ணோர்க்கு மெட்டாத வேதாந்த வீடதனை
விண்ணோர்க்கு முன்னவனாய் மேவுநா ளெந்நாளோ. 84

வீட்டைச்சுத்தி செய்து வினைவழியே நில்லாமன்மனக்
காட்டை யெரித்தே கரைசேர்நா ளெந்நாளோ. 85

விள்ளுகின்ற ஞானவழி வெகுதத் துவத்துடனே
கள்ளக் கருத்தையெல்லாங் கடத்துநா ளெந்நாளோ. 86

வேதத்தொனியை வேதாந்தமனை யிற்காத்து
நாதத்தொனிகாண நாடுநா ளெந்நாளோ. 87

வையகம் பொய்யென்று வகையாகச் சொன்னதெல்லாங்
கையுமெய்யு மாய்ப்பார்த்துக் கடத்துநா ளெந்நாளோ. 88

வையக மாதரெல்லாம் வரிசையாய்த் தாயாக
வையக வாசையெல்லா மறுக்குநா ளெந்நாளோ. 89

ஓல்லையாங் காலமென்றே யுழறித் திரியாமற்
றொல்லையற்ற காலந் தொடுக்குநா ளெந்நாளோ. 90

வௌவாலின் கண்கள் வல்லிருளிற் றெறிவதுபோல்
மௌனமாங் கண்டிறந்து மருவுநா ளெந்நாளோ. 91

சுத்தவெளியான சுகவெளியைத் தானடையச்
சித்தந்தெளிந்து சேருநா ளெந்நாளோ. 92

சூட்சம தேகஞ் சுயநினைவைத் தானிழந்தே
வாட்சியாத் மானிலையை மருவுநா ளெந்நாளோ. 93

சூட்சம தேகந் தூலத்தி லடங்காம
லாச்சரிய தூலமுள் ளடங்குநா ளெந்நாளோ. 94

சுழுத்தி யவத்தை சுயசாக்கிர சொப்பனமுஞ்
சுழுத்தியற்ற நற்றுரியஞ் சூழுநா ளெந்நாளோ. 95

கைகாட்டிக் காற்காட்டிக் கண்முகமுஞ் சுழுகாட்டி
மைவிழியார்மாயை மாளுநா ளெந்நாளோ 96

ஞான வரம்பான நன்மௌனபூ தம்மடங்கத்
தானத்தில் ஞானவரந் தருகுநா ளெந்நாளோ. 97

ஞானக்க ளஞ்சியமா நாயனிர சூலடைந்த
தானத்தி லுள்ளமையைத் தரிக்குநா ளெந்நாளோ. 98

ரசவாதந் தேடி நாடுசுற்றி யலையாமல்
வசரகு மான்கிருபை வாய்க்குநா ளெந்நாளோ. 99

யாசகங்க டேடி யல்லும்பகல் வாடாம
னேசவிறை தன்னருளாய் நிறையுநா ளெந்நாளோ. 100

பந்தமற்ற ஞானப் பரவெளியைக் கண்டோர்க்குத்
தொந்தத்தொண்டு செய்தருளைத் தொடுக்குநா ளெந்நாளோ. 101

ஆக பாடல் 101.

எந்நாள் கண்ணி முற்றிற்று.

---

# நந்தீஸ்வரிக் கண்ணி

உலகுதனைப் பெற்றரசை யுபாயமாய்ச் செலுத்திவிக்கு
நலமிகுந்த பரவெளியே நாயகிநந் தீஸ்வரியே. 1
அனைத்துயிருந் தன்கருவா யன்புட னிறைந்திருக்குந்
தனையறியா மன்மயக்கந் தானேநந் தீஸ்வரியே. 2
உள்ளதெல்லா நின்னருளா யுவந்தே யருட்பெருக
நல்ல தவமுறையை நல்குநந் தீஸ்வரியே. 3
தூலத்தின் வினையாற் றுடர்பாச மிகுத்துவெகு
காலத்தைப் போக்காமற் கண்பார்நந் தீஸ்வரியே. 4
உன்னையன்றி யுலகினிலே யொருவரிலை யுய்யுவிக்க
தன்னை யறியவரந் தருவாய்நந் தீஸ்வரியே. 5
முன்னிரு வினைகளுமே முழுதாய்த் திரண்டாலு
முன்கிருபைக் குணத்தா லொடுங்குநந் தீஸ்வரியே. 6
பெற்றெடுத்த மாதர் பெயருக் கிருந்தென்ன
வுற்றதாய் நீயன்றி யுண்டோநந் தீஸ்வரியே. 7
சகமனைத்து நின்னருளாய்ச் சமமாய் நிறைவாறு
யிகபரத்து நின்னருளி னிணைப்பேநந் தீஸ்வரியே. 8
பொன்னே பணியாய்ப் புனைப்பெயர் புனைந்தாலும்
பொன்னன்றி வேறொன்றைப் புகலேனந் தீஸ்வரியே. 9
நினைப்பு மறப்பு நின்னையன்றி வேறேயில்லைத்
தினைப்பொழுது நின்னைவிட்டுத் திரும்பேனந் தீஸ்வரியே.
அடுத்தோரைக் காத்தே யருளீயு நன்மனத்தைக்
கொடுத்தோர்க்குக் காட்சி குறிக்குநந் தீஸ்வரியே. 11
ஐம்புலத்தை யடக்கி யறிவா லருளடைய
செம்மைவழி காட்டிச் சீராக்குநந் தீஸ்வரியே. 12

பூரணஞ்சேர ருண்மடையாம் புவனஞ் சிறந்திருக்கக்
காரணத்தைத் தருவாய் கண்ணேநந் தீஸ்வரியே. 13

உன்னை யறியும்வழி யுபாயமாய்க் காணுவிடிற்
பின்னை யொருவ ருண்டோ பேசாய்நந் தீஸ்வரியே. 14

வற்றுக் கருணைமுகில் வந்து மழைபொழியத்
தட்டா வருணிலையைத் தருவாய்நந் தீஸ்வரயே. 15

எத்தனையோ பேரிருந்து மெனக்கென்ன நல்லதுணை
அத்தனையுந் தொந்தமில்லை யரசேநந் தீஸ்வரியே. 16

அருளா னிறைந்திருக்கு மன்புசேர் திருத்தாளை
மருளா மற்றபணிந்து வரச்செய்நந் தீஸ்வரியே. 17

நின்பாத மண்டபிண்ட நிறைந்தே யிலங்கிநிற்க
முன்னமில்லா மெய்மை முகர்வேனந் தீஸ்வரியே. 18

பசியாரப் பாற்கொடுக்கும் பரிபூரண மானவெள்ளங்
கசியக்கசிய வின்பங் கண்டேனந் தீஸ்வரியே. 19

பலகாலு மறந்துன் பகருமொரு காற்பிடிக்கப்
பலநினைவு கொள்ளாமற் பதஞ்செய்நந் தீஸ்வரியே. 20

நின்னையன்றியொருவரில்லை நிலையைக்கொடுத்தேயணைக்கப்
பின்னே தொடர்ந்து வந்தேன் பிரியாநந் தீஸ்வரியே. 21

பிரியா வருளைப் பின்றொடர்ந்து நான்வருதற்
அறியா மதலையென வாட்கொணந் தீஸ்வரியே. 22

நீத மறிந்து நிலைகொடுக்கு நின் கருணை
நாத வடிவுகண்டே நடக்கருணந் தீஸ்வரியே. 23

அறிவுப்பரு வங்கண்டே யறிவா லமுதூட்டி
நெறியாகத் தொடர்ந்தே னித்தநந் தீஸ்வரியே. 24

எந்தவகையாலு மெள்ளளவு துன்பமின்றிச்
சொந்தப் படுத்திச் சுகஞ்செய்நந் தீஸ்வரியே. 25

உடலும் பொருளாவி யுன்னன்றி யிலாதிருக்க
நடைபார்த்துக் கண்டே னட்பேநந் தீஸ்வரியே. 26



ஆடுவதும் பாடுவது மாத்தாளன்றிப் பாரேன்
ழூடுவது தானே முறையேநந் தீஸ்வரியே. 27

ஆலயங்கட் சுற்றி யலைந்துபார்த் தாலுமக
வாலயத்திற் பள்ளிகொண்ட வரசேநந் தீஸ்வரியே. 28

திரைசூழ் கினுங்கர்மா தீராது தீராது
திரையிலாக் கடன்மூழ்கச் செய்யுநந் தீஸ்வரியே. 29

மாதவத்தோ ரெந்நாளு மகிழ்ந்து புகழ்ந்திருக்க
நாதத் தொனிவழியே நடத்துநந் தீஸ்வரியே. 30

தவவடி வாகநின்ற தாயேயருட் களஞ்சியமே
பவநீங்கி யகநிறைவாய்ப் பார்த்தேனந் தீஸ்வரியே. 31

வேதசாஸ் திரமெல்லாம் வெகுவாக நின்புகழை
நாதத் தொனிவழியே நடத்துநந் தீஸ்வரியே. 32

கர்ப்பத்தில் வைத்திருந்த காணுமறு சுவைவடிவைக்
கர்ப்பத்தில் வைத்துருவு காட்டுநந் தீஸ்வரியே. 33

பஞ்ச பூதத் தலைவியாய்ப் பாருலகைச் சமைத்தாய்
நெஞ்சத்திற் பள்ளிகொண்டாய் நினைவேநந் தீஸ்வரியே. 34

அண்டமுதற் பிண்ட மெல்லாமணுப்பிசகா மன்னடத்திக்
கண்ட பரவெளியே கருத்தேநந் தீஸ்வரியே. 35

விண்ணோர்க்கு மெட்டாத வேதாந்த நாதமதை
நிண்ணயமாய் நேர்ப்படுத்தி நிறுத்துநந் தீஸ்வரியே. 36

மனவெறியைக் கொண்டே மயக்கமாய் நின்னைத்தொழு
மனத்தா ரருணிலையை மதிக்காநந் தீஸ்வரியே. 37

கேட்டது கொடுக்குநின் கிருபை மிகுந்து விட்டாற்
கேட்பது மொன்றுமில்லை கிருபைநந் தீஸ்வரியே. 38

வேசையர் மினுக்குப்போல்வேதியர்கள்பசப்பையெல்லாங்
காசைக் கவர்ந்து கொள்ளக் கருத்தேநந் தீஸ்வரியே. 39

உடற்பொரு ளாவிமூன்று முன்பாதம் வைத்துவிட
மடமட வெனச்சுரக்கு மதுவேநந் தீஸ்வரியே. 40

கேட்டது கொடுக்குங் கிருபைமிகு பக்தருக்கு
நாட்டத்தை நாடாருயர் நடையேநந் தீஸ்வரியே. 41

தகுதிய றிந்து சமமாய் நடத்திவருந்
தகுதியா நின்னருளைத் தருவாய்நந் தீஸ்வரியே. 42

பாசமற்ற பக்தர்களைப் பரிவாய்க் கரை சேர்க்கு
நேசத் திறவுகோ னித்தியநந் தீஸ்வரியே. 43

துடுக்கு மனமிறந்து தோகையர்கள் பாசமற்று
வடுக்க வடுத்துவரு மருளேநந் தீஸ்வரியே. 44

படித்தாலும் போதாது பாசமக லாதுதவம்
நடித்தாலு நடவாது நன்மைநந் தீஸ்வரியே. 45

படித்தபடி நடக்கப் பாசமற்ற வாசான்கண்டு
படித்த மனமிறக்கப் பக்குவஞ்செய் நந்தீஸ்வரியே. 46

களங்கமற்றகண்ணுடியிற் காணுமே தன்னுருவங்
களங்கமற்ற விதயத்தினிற் கருவெளிநந் தீஸ்வரியே. 47

மதிக்க முடியாத மகத்துவத்தைக் காண்பதற்கு
மதியின் முகத்தைக்கொண்டு மதிதருநந் தீஸ்வரியே. 48

தோற்றும் வஸ்துக்களுட் டொடுத்தே யிருக்குஞ்சித்தைப்
பார்த்து மகிழப் பதந்தருநந் தீஸ்வரியே. 49

அணுவுக் கணுவான வணுவினு தாரமதை
மனுவின் மறைந்திருக்கு மதியேநந் தீஸ்வரியே 50

கர்மபீடத்துக் கர்மா கருக்கி யெறிந்தவிடந்
தர்மநந்தியருளே தருவாய்நந் தீஸ்வரியே. 51

மூலத்தி னிறைந்த முடிவில்லா லிங்கமதைக்
காலத்தி லடையக் கதிசெய்நந் தீஸ்வரியே. 52

கற்பகத்தை யடைந்தோர் கலங்கா ரொருபோதுந்
துற்புத்தி யெல்லாந் தொலைத்தருணந் தீஸ்வரியே. 53

மாயவலை வீசு மறலியின் கயிற்றைவெல்லத்
தாயே யருளாநந்தந் தருவாய்நந் தீஸ்வரியே. 54



புலன் புலா லற்ற புல்லாங் குழலூதி
நலமான சபைநாத நல்குநந் தீஸ்வரியே. 55

நீலவர்ண முள்ள நேத்திரமாங் காட்சிகண்டு
காலம் பிசகாமற் கற்பருணந் தீஸ்வரியே. 56

பாசமற்ற பால பருவத்தைக் கொடுத்திருந்த
நேசத்தைத் தருவாய் நேமநந் தீஸ்வரியே. 57

மதிபசுப்பா சங்கடந்து மதிப்பாற் குடிக்கவுமே
பதியான முத்திநிலை பகர்வாய்நந் தீஸ்வரியே. 58

கோனூர்வீடுதேடிக் கூசாம லேயடைந்தாற்
றேனூறு மதுவாறுஞ் சிறக்குநந் தீஸ்வரியே. 59

சத்தான வெண்ணெய் சலனமின்றி யேயருந்த
சித்தான வகையெல்லாஞ் சிறப்பேநந் தீஸ்வரியே. 60

சித்தர்முதலிராச சிவயோகி யெல்லாரும்
பத்துவய தானவுன் பதியேநந் தீஸ்வரியே. 61

காமக் கலவியைக் கட்டோ டறுப்பதற்கு
நேமநிஷ்டை தந்து நிறுத்துநந் தீஸ்வரியே. 62

ஆராலு மறியாத வணியேக மாய்நிறைந்த
பூராய மானபரி பூரணந் தீஸ்வரியே. 63

பொங்குமெஞ் ஞானப் புகழின்பக் கடற்குளித்துத்
தங்கும் பிரமாநந்தந் தயவேநந் தீஸ்வரியே. 64

போக்குவர வற்ற பூரணத்தொட் டியில்வைத்துக்
காக்கவேண்டு மென்னைக் கண்மணிநந் தீஸ்வரியே. 65

காயமெடுத் திதுவரையுங் கற்பதுவைக் காத்துவைத்தாய்
மாயத்தைக் காட்டிமனம் வாட்டாதருணந் தீஸ்வரியே. 66

மாயவலை வீசு மறலிக்கெம னுய்வந்து
நேயத்தைத் தந்தாள்வாய் நீதிநந் தீஸ்வரியே. 67

கண்டிதமா யகண்டிதமாய்க் காண வெளியதுவாய்க்
கண்ட திருவருளைக் காட்டுநந் தீஸ்வரியே. 68

புதினப் புதினமாகப் பொருந்திப் புகழ்காட்டும்
புதுமை தனைத்தள்ளிப் பொருத்துவாய்நந் தீஸ்வரியே. 69

முன்பின் னடுவுமற்ற மோனத் திருவருளை
நண்ணும் படியேநடை நல்குநந் தீஸ்வரியே. 70

மங்காத தீர மலைமலையா கத்தந்து
மங்காத நல்லருளை வரச்செய்நந் தீஸ்வரியே. 71

உன்னையன்றி வேறே யொதுங்க வுளதோசொற்
றன்னையறி யப்பாரென் றகுதிநந் தீஸ்வரியே. 72

தன்னை மறந்துமனந் தாரணியிற் சிக்கியல்லோ
தன்னைத் தகுதிபெறத் தருவாய்நந் தீஸ்வரியே. 73

உலகத்தை நம்பி யுளறித் திரிபவர்க்கு
வுலகமயக் கொருக்காலு மொடியாநந் தீஸ்வரியே. 74

மடைவாயிற் கொக்கு மச்சமதி லேநாட்டந்
திடமாய் மதிபெருகச் செய்வாய்நந் தீஸ்வரியே. 75

சகமாக வேநோக்கிற் சகமாக வேதோன்றுஞ்
சகமே யருளாகச் சாரவருணந் தீஸ்வரியே. 76

நினைவையன்றி யேசகமு நில்லாது நிட்சயமாய்
நினைவையன்றித் தானுமில்லை நினைவேநந் தீஸ்வரியே. 77

தான்வேறு நல்லுலகு தனிவேறு தரித்துவிட்டாற்
றுன்றனக்குத் தடையாந் தகையேநந் தீஸ்வரியே. 78

தன்னைத் தவிறத் தான்வேறை நாட்டிவிடிற்
சென்மத்திற் செயமில்லைச் செயமாநந் தீஸ்வரியே. 79

அறுக்கத் தழையு மடர்ந்து மிகமறைக்கு
மறுக்காது வேர்பிடுங்கி யனைப்பாய்நந் தீஸ்வரியே. 80

பந்தமுத்தி யென்று பகுத்துச் சொன்னதெல்லாஞ்
சொந்த மறியார்க்குச் சொல்லாநந் தீஸ்வரியே. 81

கஞ்சா வபினரக்கு கடும்போதை யுண்போர்கள்
கெஞ்சுங் கடுநரகு கெதியாநந் தீஸ்வரியே. 82



காமக் கலவிதேடி கருக்கலங்கி வாடாமற்
சேமக் குணத்தைச் சேர்ப்பாய்நந் தீஸ்வரியே. 83

பற்றில்லாப் பற்றுவைத்துப் பரம பதியடையப்
பற்று மனதையறப் பக்குவஞ்செய் நந்தீஸ்வரியே. 84

மனக்கவலை தானே மாறாத் துயர்கொடுக்கும்
மனக்கவலை நீக்கி மதிதருநந் தீஸ்வரியே. 85

துடுக்கு மனமிறந்து தோகையரின் பாசமறத்
தொடுக்கத் தொடுத்துவருந் துணையேநந் தீஸ்வரியே. 86

சத்திய நெறியைத் தவறாத சிந்தையர்க்குச்
சித்துவகை யாவுஞ் சித்தேநந் தீஸ்வரியே. 87

பாலதனைக் காய்ச்சப் பாக மறிந்தாலும்
மேலும் வெண்ணெய் திரள்வதற்கு விளக்குநந் தீஸ்வரியே.

சித்தந் தெளிந்த சிவனடியார் தந்தொண்டு
சத்தியமாய்ச் செய்யிற் சாபநீங்குநந் தீஸ்வரியே. 89

பத்தியம் பெருகி பரநினைவு தான்பதிந்தால்
முத்திக்கு நல்வழி முறையாநந் தீஸ்வரியே. 90

சேர்ந்த வினசனத்தைச் சேராமற் சார்வதற்கு
சாந்த மலையருளைத் தருவீர்நந் தீஸ்வரியே. 91

அனுபவங்கன் மிகுத்தே வருள் வெள்ளத்தேமூழ்க
தனுவறிவு மடைதிறந்து தருவாய்நந் தீஸ்வரியே. 92

பேரின்ப ஞானப் பெருமகிழ்வு பரவியகப்
பாரிற் பரஞானம் பகருநந் தீஸ்வரியே. 93

மனத்தைவசி யம்பண்ண மனத்தையன்றி வேறில்லை
மனத்தை மனமடக்க வகைசெய்நந் தீஸவரியே. 94

சிவனடியர் கட்குத்தொண்டு சிறப்பாகச் செய்துவரிற்
றவங்கண்மிகு ஞானவழி தருவாய்நந் தீஸ்வரியே. 95

பரிபூரணப் பாலைப் பாகமா யருந்துதற்குப்
பரிபூரணப் பதியைப் பகர்வாய்நந் தீஸ்வரியே. 96

தைலத்தைப் போலத் தாகமறத் தனித்தோர்க்கு
சைலத்தன வின்பந் தருமேநந் தீஸ்வரியே. 97

தூலத்தின் வழியாய்த் துன்பம்பெருக் காமன்னீ
சாலத்துணை கொண்டு சார்வாய்நந் தீஸ்வரியே. 98

நின்னையன்றி நினைக்க நிலைமைதா னென்றுமில்லை
உன்னையன்றிப் பாரே னுயர்வாநந் தீஸ்வரியே. 99

பார்க்குமிட மெல்லாநின் பார்வையாய்த் தானிருக்கப்
பார்த்துப் பழகவரம் பகர்வாய்நந் தீஸ்வரியே. 100

அழுதும் பயனில்லை யலறிமிக நொந்தாலும்
முழுதும் பயனில்லை முறைதருநந் தீஸ்வரியே. 101

ஆ பாடல் 101.

நந்தீஸ்வரிக் கண்ணி முற்றிற்று.

---

## ரஹ்மான் கண்ணி.

ஆதியே யாண்டவனே யருவுருவாய்த் தானிலங்குஞ்
சோதியரு ஷாய்நிறைந்த சுயமே ரஹ்மானே, 1

ஆலந் தனைப்படைக்க வருஷை நிறுவி வைத்துக்
கோலமலக் காய்நிறைந்த குணமே ரஹ்மானே. 2

அருஷைச் சுமக்கு மறிவுள்ள நன்மலக்கு
கருமம் பிசகாமற் காக்கும் ரஹ்மானே. 3

அருஷா யுலகை யன்புடன் படைத்தளிக்கும்
வரிசை மிகநிறைந்த வகையே ரஹ்மானே. 4

ஆலத்திற் சீவன்முத லானவினங் களுக்குங்
காலபேத மின்றியுணக் காட்டும் ரஹ்மானே. 5

வான்புவிமு மனுக்களுஞ்ஜின் மலக்குகளு மற்றெவையுந்
தான்றனதாய்க் கொளுவிவருந் தகைமைசேர் ரஹ்மானே.

மூலப்பிரகிருதி முறையாக நிறை செலுத்துங்
கோலங் குறியுமில்லாக் குணமே ரஹ்மானே. 7

பிரகிருதி யியற்கைமுறை பிறழாம லேநடத்தும்
பரத்தின் வெளிநிறைந்த பதியே ரஹ்மானே. 8

ஆலத்தைத் தான்படைத்தே யருஷைத் தரிப்படுத்திக்
காலந்தா னுய்நடத்துங் கனமே ரஹ்மானே. 9

ஒன்றுபோ லேகிருபை யுபாயமாய்த் தானடத்தித்
தொண்டுசெய்யு மலக்காகச் சூழும் ரஹ்மானே. 10

படைத்தபடைப் பின்மேலாம் பகரரிய வின்சானைப்
படைத்துக்கோ லம்வகுத்த பதியே ரஹ்மானே. 11

இன்சானின் கோலத்தை யிலங்கும்பிர கிருதியதா
யன்பாகக் கல்புவைத்த வரனே ரஹ்மானே. 12

நூரான கல்பு நுணுகருஷா யைம்பூத
நாறுஹ வாதுராபுமண் ஞனகுண ரஹ்மானே. 13

ஆலத்தி னிலைமைதனை யருந்தூலத்தி லேநடக்கக்
கோலத்தைப் பலவாகக் குறிக்கா ரஹ்மானே. 14

இன்சானின் கல்பு விணக்கம தாயிருக்க
ஜின்வழியின் மிகுத்தழிவு செய்யக்குறை ரஹ்மானே. 15

கல்புவழி யடையாமற் கனமனிதர் தான்மயங்கிக்
கல்பு பிறழச் செயக்கனமோ ரஹ்மானே. 16

தூலத்தின் புலன்கொளுவைச் சூழ்நபுஸைத் தான்மறந்து
தாலத்தின்கோ லம்மிகுத்தற் றரமோ ரஹ்மானே. 17

உலக நபுஸா லுயர்குணத்தை நோக்கிப் பார்க்க
மலமிகுந்து வெகுமாற்ற மதியே ரஹ்மானே. 18

தூலத்தைத் தானெடுத்த துய்யநபி ஹக்கீகத்தைக்
கோலத்திற்சிர் ரைனில்லாக் குணவரபி ரஹ்மானே. 19

ஆலத்தை வளர்க்க வரியரப் பாகவுயர்
கோலத்தின் சூட்ச குணவஹமது ரஹ்மானே. 20

கலக்கமில் லாஜலத்தில் கரைவிருட் சந்தெரியுங்
கலக்கமில் லாக்கல்பிற் காணுமருள் ரஹ்மானே. 21

அடுத்ததுகாட் டும்பளிங்கி யதுபோன் மனத்தெளிவைத்
தொடுத்ததிரு முகந்தனிலே தோற்றும் ரஹ்மானே. 22

நபுஸின் பெருந்திரையா ஞடா திறைகிருபை
நபுஸின் றிரைநீங்க நலந்தோணும் ரஹ்மானே. 23

கல்பே ரூஹாகுங் கனரூஹே சிர்ராகுங்
கல்பைப்பேணி யேநபுஸின் கதியொடுக்க ரஹ்மானே. 24

தூதர்நபி யுல்லா துலங்குநூரா யிருந்தகுணங்
தூதர்நபி நற்குணமே துய்ய ரஹ்மானே. 25

கல்பு மிகுராஜிற் கனவுருவாய்த் தானிலங்கிக்
கல்புமீ ளாமல்விட்ட் கனமே ரஹ்மானே. 26



வேதநபிக்கு ஜிப்ரீல் விளங்குவஹி கல்பிலிட
வேதரக சியமெய்யெனு மேன்மை ரஹ்மானே. 27

கல்பு திறந்தாற் காணுது கண்டதெல்லாங்
கல்பின் ஹஸ்புகாணக் கனகுணமே ரஹ்மானே. 28

ரூஹே கைபாணு னுணுகுங் கைபு வெளியாகும்
வாகு ரூபஞ் சிர்ராகு மதிகுணமே ரஹ்மானே. 29

கோலத்தி னபுஸ்பலவாய்க் குணமதுதான் வேறுகுங்
காலத்தி கல்பொன்றே கனமாம் ரஹ்மானே. 30

கத்தன்லிக் காவைவிட்டுக் கனமங் லாதகல்பு
பித்தநபு ஸைசிர்க்கிலே பிணைத்தற்குறை ரஹ்மானே. 31

உள்ளபடி கல்பை யுர்வுசெய் யிறைதூதர்
வல்லபத்தைக் காணுவரியார் மகிமை ரஹ்மானே. 32

நூரடைந்தநல்ல நுபுவத்து விலாயத் தின்சிர்
நூரானர சூல்கல்பு நுணுகும் வெளி ரஹ்மானே. 33

கண்ணே மணியே கண்ணிறைந்த நல்லொளியே
விண்ணே பரவெளியே மேதை ரஹ்மானே. 34

ஆதிவெளி யானதாப வைணுகு நல்லுயர்வா
நீதிரூஹல் குத்தூஸ் நிரப்பகுண ரஹ்மானே. 35

மேலான நபிமார்க்கு மேன்மைக்கல் பேநிறைய
மேலோன் குத்தூஸின் மிகுநிறைவே ரஹ்மானே. 36

தூதர்நபி யுல்லா துய்யோனை யேயெடுத்து
வேதத் திருமறையை விண்டகுணம் ரஹ்மானே. 37

தவத்தைச் சிறுகப்பெருக்கித் தன்கல்பு தான்றிறக்கத்
தவக்கல்பு தானிறைக்கத் தருகுணமே ரஹ்மானே. 38

உலகப் புகழுகளை யுன்னுவது நபுஸாகு
நலகல் புடையோர்க ளுடார்கள் ரஹ்மானே. 39

இஸ்மி லஃலங்கல்பே யிறையருளே சமதாகும்
இஸ்மின்குணந் தௌஹீதே யிலங்குங்குண ரஹ்மானே. 40

கல்லையறிந்தோர் கல்பாக வேயிருப்பார்
கல்க்கால் வருதோஷங் காணார்கள் ரஹ்மானே. 41

உள்ளபடி நடக்குமென்ப ருயர்வாங் கல்புடையோ
ருள்ளமதைக் கொண்டோ ரோர்வார் ரஹ்மானே. 42

வல்லபவாய் பேசாமல் வசமாய்த் தெளிவாக
வுல்லாச மாய்க்கல்பே வுவப்பார் ரஹ்மானே. 43

மேலெண்ண மின்றி மெய்யோன்சிம் மாசனத்தில்
மேலான காட்சியாக வீற்றிருப்பார் ரஹ்மானே. 44

அருஷைச் சுமக்குமுனு லஸ்மிக டம்மிடத்தில்
மறுவில்லா வில்மு வளரும் ரஹ்மானே. 45

படிக்காத இல்மு பகராக்கல் படைந்த வர்க்குப்
படிக்காம லேயில்மு பதியும் ரஹ்மானே. 46

கல்புநிலைப் பட்டாற் கத்தன்லிக் காத்தோன் றுங்
கல்லையோர் நிலைப்படுத்திக் கதியீவாய் ரஹ்மானே. 47

கல்பதுவொன் றுகுங் காணுநபுஸ் பலதாகுங்
கல்லையொரு நிலைப்படுத்தக் கதியருளும் ரஹ்மானே. 48

கல்பின் மஜாசி யாசீன் கஃபா கமலமாகுங்
கல்பின் ஹக்கீக்கி கனமறைவுசெய் ரஹ்மானே. 49

கல்பே யசைவானுற் காணு திறைகிருபை
கல்புமசை வில்லையேற் காணுங்கிருபை ரஹ்மானே. 50

ஆ பாடல் 50.

ரஹ்மான் கண்ணி முற்றிற்று.

---

# யாரஹீம் கண்ணி

மாயத் துனியாவின் மருட்டுதற் றுக்காமற்
காயமதி னல்லறிவைக் காட்டு மியாரஹீமே. 1
தனது கிருபையகந் தந்துபுற நிறைவதற்குத்
தனதுள்ள மேகுறுகித் தாழ்ந்ததே யாரஹீமே. 2
பண்டு தொடுத்துவந்த பாவ வினைகருக்க
வுண்டுமே யுன்கிருபை யுவந்துசெய் யாரஹீமே. 3
பார்க்கப் பலவர்ணமாய்ப் பருகுந் துனியாவை
பார்க்காமற் றுனிருக்கப் பக்குவஞ்செய் யாரஹீமே. 4
சினத்தைக் கைக்கொண்டு சீர்கெட் டலையாமற்
குணத்தை யெடுக்கவருட் குணந்தரும் யாரஹீமே. 5
வாகனங்க ளெல்லாம் வகைவகை யாபாசம்
வாகன மிழந்தநின் வாழ்வுதருவாய் யாரஹீமே. 6
சித்த மகிழ்வுடனே சிறந்தபோ சனங்களுண்டு
புத்தியைக் கடவாமற் புனையருளீ யாரஹீமே. 7
மிருகக் குணமிகுந்து வேணதெல்லாம் புசியாமற்
றருகவின் சான்குணத்தைத் தருவாய் யாரஹீமே. 8
வேசை மினுக்கும் விளையாட்டுக் கெக்கலிப்பு
மாசைக்குட் படுத்தாம லகற்றுவாய் யாரஹீமே. 9
உறவுசத மில்லை யுற்றார் சதமுமில்லைச்
சரணம்புகுந் தேன்காப்பாய் தற்பரமனே யாரஹீமே. 10
செயற்கையா மில்மு செயலளவில் வராதுகண்டு
இயற்கையில்மை யுன்னி லெண்ணினேன் யாரஹீமே. 11
அதிகவில்மு கற்றோ ரறிவில்லாச் செயனடத்தப்
பதியிற்கண்டு நின்றவக்கற் பற்றினேன் யாரஹீமே. 12

மதலையின் மார்தந்த மாதாக்கள் பாசமதைச்
சதமாகச் செய்துவைத்தார் தவறது யாரஹீமே. 13
மாதா பிதாக்கடனை மார்க்கமாய்க் கைக்கொண்டு
காதலித் தாளாமலே கடன்முடித்தாள் யாரஹீமே. 14
சகோதர வாஞ்சைமிகத் தான்மனதிற் சலித்துவரச்
சகோதரக் கடனையான் சாதிக்கவருளி யாரஹீமே. 15
சேர்ந்தசுற்றத் தாரெல்லாந் திருத்தாலி கட்டுதற்குச்
சார்ந்துநின் றூர்நின்னைச் சரண்புகுந்தேன் யாரஹீமே. 16
துய்யவன்கா வன்மிகுத்தே துன்பமதிற் செல்லாமன்
மெய்யனே யாட்கொண்டாய் மேன்மைசேர் யாரஹீமே.
தன்னையறியாத் தடிமூட ராகாமற்
றன்னைவிட்டே யுன்னருளிற் றூக்குமி யாரஹீமே. 18
ஈனமுள்ள விடும்பரைப்போ லேகாம லேயுயர்ந்த
மானமுள்ள வொருமைகொள வகையருள்வா யாரஹீமே19
ஏலாலோ பிக்குத்தன மிருந்ததினு லென்னபலன்
பாலைவன நீரதைப்போற் பார்த்தேனி யாரஹீமே. 20
பணப்பித்துக்கொண்டு பாதகச் செயற் புரியாமன்
மனததிலும் வாராமன் மாற்றுவா யாரஹீமே. 21
உண்மைப் பக்தரைப்போ லுயர்வாகப் பேசிமன
முண்மையில் லாதவரி னுறவுநீக்கு யாரஹீமே. 22
இரவும் பகலு மிருவினைக டானடத்தி
தரங்கட் குலைந்தே தடைப்பட்டார் யாரஹீமே. 23
துனியா விடக்கைத் துடைக்க வறியாம
லநியாய மாக வழிந்தார் யாரஹீமே. 24
வம்புக்கு வாய்பேசி வானரம்போன் மனதைவிட்டு
வெம்பி வினைவழியே மீளுவார் யாரஹீமே. 25
மண்பொன்னி னாசை மயக்கத்திற் சிக்குண்டு
மண்ணாய் மடிந்துவிட்டார் மானிடர் யாரஹீமே. 26



மூவ்வாசைதானே மும்மலமாய்த் தான்றிரண்டு
கவ்வுஞ் சுணங்களைப்போற் கழிந்தார் யாரஹீமே. 27
மனித னிடங்கொடுத்த மாபெரு மமானிதக்கை
மனிதப் பண்பிழந்து மாண்புசேர் யாரஹீமே. 28
அமானிதப் பொருளென்ன வறிவு நிலைபெருக
சமாநீதன் கொடுத்த தன்சிபத்தாம் யாரஹீமே. 29
இன்சானுக்குச் சிபத்தே யிரவலாய்க் கொடுத்திருக்கச்
சென்ம மறியாமற் சீர்கெட்டார் யாரஹீமே. 30
வம்புத் தனமாக மார்க்கநெறி தவறிமனத்
தன்பாக மாய்நடந்து தன்மையிழந்தார் யாரஹீமே. 31
பொருளை யிழந்து புலன்வழி சினமெடுத்துத்
தருவாம் பணுவிற் சார்ந்தார் யாரஹீமே. 32
பொறுமையைக் கைக்கொண்டு புலன்பொறி யையடக்கி
யொருமைப்போ தத்தில்வைப்பா யுணர்வாம் யாரஹீமே.
கோப நெருப்பாகுங் கொடுநரகு புகுத்திவிடு
மாபத்தே யில்லாம லகற்றுவா யாரஹீமே. 34
அல்லாஹ்வின் கோப மாலத்தார் மேலிருந்தாற்
கல்லாகக் காணுங் ஹல்க்கெல்லா யாரஹீமே. 35
ஹல்க்கின் வினையே கடுங்கோப ஹால்கொண்டு
ஹல்க்கின் மீண்டுவிடுங் கருத்தே யாரஹீமே. 36
ஹல்க்கு மவுத்தைக் கண்டதுபோற் பெற்றுவிடுங்
ஹல்க்கு மவுத்துத் தூலங் கனவொடுக்கம் யாரஹீமே. 37
தூலமொடுக் கம்மடையச் சுயநபுஸானாள் பதருந்
தூலநபு ஸையொடுக்கத் துணைச்செய்வாய் யாரஹீமே. 38
மவுத்துக்குமுன் மௌத்தை மாசறவடைந்து கொண்டால்
மவுத்துக்குப் பின்கேள்வி வகையுண்டோ யாரஹீமே. 39
ஈமானுடன் மவுத்தை யினமாகக் கேட்பதெல்லா
மீமானை யறியாம விசைப்பதே யாரஹீமே. 40

11

26802

சீமான் றனமடையச் சிறந்த யீமா னிலைவேண்டுந்
தாமசீவச் செய்கை தனையகற்றும் யாரஹீமே. 41
உள்ளசிபத் தெல்லா மொப்புடனின் சானீ
அல்லாஹ் அல்லாதவின மடையேன் யாரஹீமே. 42
பொய் சூதுவாது புனிதமாய்ச் செய்வோர்கண்
மெய்யீமான் கேள்வி மிகுமே யாரஹீமே. 43
ஹம்மாரு நபுஸின்செய லாலேகடும் வினைசெய்பவர்
ஹம்பக்கா கக்கேள்வி யறைவார்கள் யாரஹீமே. 44
லவ்வாமா வின்செயற் சொல்லளவிலுவினை யம்மாகச்
செவ்வையாகத் தரிபடாச் செயலே யாரஹீமே. 45
முல்ஹிமாநபுஸ் முயற்சி யது வெடுக்கும்
வல்லபமா மிறைதுணையை வழிபார்க்கும் யாரஹீமே. 46
முத்மயின் னாநபுஸ் முறுசலீ னீமானுஞ்
சித்தியீமானிலைகட் சிறக்க நடக்கும் யாரஹீமே. 47
நேர்க்குநேர் பட்ட நிறையுள்ள நன்னபுஸ
பார்க்குநல காமீலாம் பண்பார் யாரஹீமே. 48
காமிலே நிரப்பமாங் கடுகளவு மிணையில்லைக்
காமிலே யெல்லாஞ்சூழ்ந்த கனவஸ்தாம் யாரஹீமே. 49
காமில் தனைக்கண்டு கைபிடித்துத் தாடிறக்கக்
காமில் தனைக்காணக் கனவறிவீ யாரஹீமே. 50
பாசமூட்டை கட்டிப் பாரிற்றிரி யுங்குருவின்
வேசத்தான் மயங்காமல் விளைவுசெய் யாரஹீமே. 51
வாசனைப் படிப்பால் வரமிகுந்தார் போற்பேசி
தோஷந் தெரியாமற் றுரங்குவார் யாரஹீமே. 52
துனியா வாலமிலைத் துனியாக்கொ ளுகுதலாந்
துனியாத் தொடக்கைவிட்ட குருவைக்கொடு யாரஹீமே.
பீற்றப் பொதியைப் பிரியமாய் வளர்ப்பதற்கு
நாற்ற வுலகமதை நம்புவார் யாரஹீமே. 54



பெண்மையற் கொண்டு பேசித்திரி வாருறவு
கண்கொண்டு பாரேன் கண்ணே யாரஹீமே. 55
இல்லாது பொல்லாது விதஞ்சொல்லித் தனந்திரட்டிப்
பொல்லாத வம்பர்களும் போவார்கள் யாரஹீமே. 56
படைத்த விறைவன் பக்குவமா யமுதளிக்க
நடைசெவ்வை யாந்தவக்க னன்றே யாரஹீமே. 57
பசியான் மடிந்தாரைப் பார்ப்ப தரிதாகும்
பசியைமுன் வைத்துப் பார்ப்பார் யாரஹீமே. 58
அதிகம் புசித்தா லதிக பசியாகும்
பதிசுருங்கப் புசித்தாற் பஞ்சமில்லை யாரஹீமே. 59
உள்ளது நாழி யொருபோதுங் குறையாது
நல்லதாம் பக்தி நாடச்செய் யாரஹீமே. 60
பிள்ளைக் குடும்பம் பேணிரணங் கட்டாயம்
தள்ளைபோற் கொடுக்குந் தயவாம் யாரஹீமே. 61
மதலை வெளிப்படவு மடியிற்பாற் சுரக்கிலையா
கதம்பணிந்தே யிறையருளைக் கணிநல யாரஹீமே. 62
மனமுரண்டாய்க் கட்குடித்து மானங்கெட் டேயலைவர்
தனமிகுத்த வன்றடியர் தானே யாரஹீமே. 63
பாரியா ளகமிருக்கப் பாதகவிப சாரஞ்செய்வர்
காரியக் கடுநரகிற் காய்வார்கள் யாரஹீமே. 64
காயாத புண்ணிற் கணக்கன்றிப் பள்ளிகொண்டு
காயத்தைப் பழுதாக்கிக் கலங்குவார் யாரஹீமே. 65
மானிடக் குணங்களெல்லாம் வரிசையிற் சிறந்ததாகும்
பேணியே மெய்க்குணத்தைப் பெருக்குவாய் யாரஹீமே.
தூலத்தின் குணத்தின் றுரைஹை வானியான
கோலத்தைச் சரிப்படுத்தக் குணந்தருவாய் யாரஹீமே. 67
சந்தேகச் சித்தநபுஸ் ஷைத்தானி தானகுஞ்
சந்தேகந் தனைநீக்கித் தருவாய் யாரஹீமே. 68

உதிப்புவூ சாட்ட முள்ளது ஜின்குணமாகு
முதிப்பு மனமொடுக்கு முறையருள்வாய் யாரஹீமே. 69
ஐயறிவி னசைப்பே யாகுமல கம்மயக்கம்
மெய்யறி வானதாத்தை விளக்குவாய் யாரஹீமே. 70
சடமுயிர் சீவனுயர் தான்கலந்தைம் பூதநடை
சகமாய்கை நீங்கக்கல்பைத் தருவாய் யாரஹீமே. 71
வையகப் புலனறிவின் வகையறியாப் பாசமிகும்
தெய்வீக நல்லறிவைத் தினந்தருவாய் யாரஹீமே. 72
பிரகிருதி தம்வினையாற் பெருவாழ்வு தானிழந்து
பரபக்தியறி வின்றிமனப் பதற்றம் யாரஹீமே. 73
இன்சான் மறதியா லிணைபலவாய்த் தானமைப்பா
ரின்பநிலை நல்லருளை யீவாய் யாரஹீமே. 74
வாயாரப் பொய்யுரைத்து வகையாரக் களவுசெய்யுந்
தீயார்க ணட்பைவிட்டுத் தெளிவருளீ யாரஹீமே. 75
வட்டி மேல்வட்டி வாங்கி மிகத்தின்னும்
மட்டியர் தம்முறவின் வழியழீ யாரஹீமே. 76
ஏழையித யந்துடிக்க விறக்கமின்றி வட்டிவாங்கி
கோழைத்தன மாகாமற் குணமாக்குவாய் யாரஹீமே. 77
மார்க்கப் பேணுதலின்றி மாபாவஞ் செய்பவர்கள்
தீர்க்கமாய்க் கடுநரகிற் சிறைப்படுவர் யாரஹீமே. 78
ஒருமையில்லா வொழுக்க முயர்நிலை யடையாது
சிறுமையில்லா மெய்வழியிற் சேர்ப்பாய் யாரஹீமே. 79
மடம்போல வீடுகட்டி மதியாமற் றுனந்தோர்
தடமுந்தெரி யாமலவர் தானழிந்தார் யாரஹீமே. 80
மயக்கந்தரு முலக வாழ்வைநம்பி யிளையாமற்
றயக்கமில்லா நின்னருளைத் தருவாய் யாரஹீமே. 81
உண்டுடுத் தரமிழந்த வோர்மையில்லா மிஸ்கீன்கள்
கண்டவிட மெல்லாங் கையேந்துவர் யாரஹீமே. 82



தன்னறிவா லுள்ளவுணுத் தன்னைக் குறைத்துக்கொண்டு
சின்னப்படுவதென்ன செய்கே யாரஹீமே. 83
தன்வினையாற் றன்னைத்தானே கெடுத்துக்கொண்டு
தன்னின்றலை விதியென்று தயங்குவதேன் யாரஹீமே. 84
இறைவிதித்த விதியென்ன வியம்பி மனவினையாம்
இறைவிதி தெரிந்தோ ரின்பநிலை யடைவர் யாரஹீமே. 85
அணுசிருக்கு விதித்தகட னனைகடவா மன்னடக்கப்
பணுவான துனியாவிற் பதியாய்ச்செய் யாரஹீமே. 86
அருளான் மனதடக்கி யருள்விதி யைக்காணத்
தெரியாமன் மதியிழந்து திகைப்பரவே யாரஹீமே. 87
பஞ்சபூதத்திற்குப் பரமன்விதித்த கலாக்கதராற்
பஞ்சநீங் காமற்கடன் பாலிப்பாய் யாரஹீமே. 88
காக்குமார்க்கஞ் சொன்னதெல்லாங் கலாக்கத ரின்படியே
மார்க்கஞ் சொன்னதெல்லா வழங்கநலம் யாரஹீமே. 89
அவ்வலின் கலாக்கதரை யகமிறந்தாற் காணுஞ்
செவ்வையாக வறிந்து செயநடத்தே யாரஹீமே. 90
ஆண்டோன் விதித்த வைம்பூத விடை கலாவாம்
பூண்டவாணை கடவாது கதராகும் யாரஹீமே. 91
ஏகபரம் பொருளே யேகமாய்த்தான் காக்குந்
தாகநிலைமையிலே தரிக்கச்செய் யாரஹீமே. 92
பாசக் கயிறுகண்டு பாகமாய்த் தான்விடுத்து
மோசம்வாராமல் முழுதும்காப்பாய் யாரஹீமே. 93
தனதுகிருபையாற் றயங்காமற் காப்பாற்றித்
தனது கருணைமழை தருவாய் யாரஹீமே. 94
உடலெடுத்த காலமெல்லா முன்சர ணம்புகுந்தேன்
தடையின்றி வரந்தருவாய் தயவாம் யாாஹீமே. 65
ஊனெடுத்த காலமுத லுன்னையன்றி வேறறியேன்
நானீயென்று நடவாம னினைந்தேன் யாரஹீமே. 96

எல்லாமறிந்த வேகனே நின்னருளா
லெல்லையில்லா நற்கருணை யிணைப்பாய் யாரஹீமே. 97

பரிபூ ரண வெள்ளம் பதிவாய் நிறைந்திருக்கப்
பரிபூரண வெள்ளத்திற் பதிப்பாய் யாரஹீமே. 98

நின்னைச் சரண்புகுந்த நீதமுள்ள பக்தருக்குச்
சொன்னபடி கொடுக்குந் துரையே யாரஹீமே. 99

மெய்யுடையோர் பின்றொடரு மேலான பக்தர்கட்கு
மெய்வழியைக் காட்டிவைப்பாய் வேதா யாரஹீமே. 100

இறைவனின் பேரா விஃஷான் செய்தவர்க
ளிறையவன் றிருவருளை யெய்துவார் யாரஹீமே. 101

பந்தக் கயற்றூற் பக்தர்களைக் கட்டாமற்
சொந்தக்கிருபையினூற் சுகந்தருவாய் யாரஹீமே. 102

இந்நூலைப் படிப்பவர்க்கு மினிதாகக் கேட்பவர்க்குஞ்
சின்னமில்லா திவ்வுலகிற் சிக்காமலருள் யாரஹீமே. 103

ஈன்றெடுத்த தாய்தந்தைக்கு வினியவுப காரஞ்செய்வோர்
சான்றோராய் நல்லுலகிற் றறிப்பார்கள் யாரஹீமே. 104

ஓதிவைத்த வுபாத்தி யுபதேச ஞானகுரு
பாதமதி லெந்நாளும் பதியச்செய் யாரஹீமே. 105

நூற்சொல்லு மாசிரிய னூற்றிருத்து மாசிரியன்
பாற்சொல்லைத் தானேற்றுப் பவந்தீர்ப்பாய் யாரஹீமே.

அகம்புறமு மெல்லா மல்லலில் லாதோர்க்குச்
சகத்தி லிகபரமுந் தானென்றும் யாரஹீமே. 107

மாதாதனை யிழந்த மதலைபோ லாகாமல்
மாதாவா யெந்நாளும் வளந்தருவாய் யாரஹீமே. 108

வாழிமேல் வாழி வகையருளோர் தான்வாழி
வாழிதவம் பெற்றோர்கள் வாழியே யாரஹீமே. 109

ஆ பாடல் 109.

யாரஹீம் கண்ணி முற்றிற்று.

---

# லைலா மனோன்மணி கண்ணி

வாலை மனோன்மணியே வல்லபமாய் நின்றிலங்கும்
மாலைப் பொழுதின் மனநசியக் கண்டேன் லைலாவே. 1

அருட்செல்வ மடைந்தே யானந்தமா யிலங்கி
மறுவில்லாக் கண்கொண்டு மகிழ்ந்தேன் லைலாவே. 2

ஆநந்தமாக வருணிறைந்து பூத்திருக்கக்
காணக்கண் கூசிக்கவிழ்ந்து கண்டேன் லைலாவே. 3

பூரண மாமுகத்தாள் புதுமையுள்ள பெண்ணரசி
காரணத்தா லுள்ளங் கண்டேன் லைலாவே. 4

கதிர்மதியு மொன்றாய்க் கலந்து வொளிபரப்பு
மதிபெருகு நுண்ணறிவால் வளங்கண்டேன் லைலாவே. 5

முன்னும் பின்னுமற்ற முகவெளியா நற்கருத்தை
விண்ணப்படா மற்சேர்ந்து மேவினேன் லைலாவே. 6

நற்கந்தம் பூசி நன்மலரைத் தூவி யில்லிற்
றுற்கவலை யற்றவளைச் சூழ்ந்தேன் லைலாவே. 7

மார்க்க நெறிதவரா மதியூக மாங்கனியைப்
பார்த்துப்பழகிநல பக்குவங்கண்டேன் லைலாவே. 8

தனித்திருந்தாற் கற்புத் தான்கலங்குவ தோகண்ணே
கனிந்திருந்த நல்லருளைக் கண்டேன் லைலாவே. 9

முகவரைக ளற்ற முழுமதிய மாயிலங்குஞ்
சகமுறையி லாசையற்ற தரன்கண்டேன் லைலாவே. 10

தாயே தனித்திருந்தாற் றாரணியிற் புதுமையுண்டோ
தாயாரின் பாலருந்தத் தான்கண்டேன் லைலாவே. 11

பாசமில்லாப் பார்வையிற் பார்த்திருக் குங்குணத்தைப்
பாசமிழந் திமையாக்கண் பார்த்தேன் லைலாவே. 12

பத்துவகையான பச்சைத் துகிலுடுத்தித்
தொத்துநோ யில்லாச் சுகங்கண்டேன் லைலாவே. 13

இடைகள் சுருங்கி யிரைவயிறு தானொட்டி
தடையில்லா சுகூதால் கண்டேன் லைலாவே. 14

இஸ்கு மிகுந்தே யிறையரு ளாலிலங்கி
மஸ்துப் பிடித்து வரக்கண்டேன் லைலாவே. 15

உலகத்தைத் தானீன்ற வுயர்வெளியா மம்பிகையை
யுலகத்தைத் தான்மறந்தே யுயர்வுகண்டேன் லைலாவே. 16

கந்தம்பூ சாமற் காத வழிமணக்குங்
கந்தநிறை கற்பரசி கண்டேன் லைலாவே. 17

வாய்மணக்குநல்ல வசன நடைமணக்குங்
காய்மணக்குங் கனிவாய்க் கண்டேன் லைலாவே. 18

அன்ன நடையா ளழகுள்ள கற்புடையாள்
கண்ணிறைந்த குணத்தாளைக் கண்டேன் லைலாவே. 19

புலாலுண்ணா னல்ல பூங்கொடியா மாமயிலாள்
புலனில்லாக் கருத்தாற் புகுந்தேன் லைலாவே. 20

நாதத் தொனிக்குரலா ணவநாத மேபேசு
வேத முடித்தமணி கண்டேன் லைலாவே. 21

வானத்தின் வில்லாள் வகைவகையாய்க் கருத்தமைத்துக்
காணவினிக் குங்கருத்தைக் கண்டேன் லைலாவே. 22

ஈகை மிகுந்திருக்கு வினமுடைய பக்தருக்கே
யீகையா நல்லறிவு வெழிற்கண்டேன் லைலாவே. 23

உடற்பொரு ளாவி யுவந்தே யளித்தபின்பே
யுடலழியாப் பானமதை யுவந்தேன் லைலாவே. 24

ஓட்டுச்சாட் டில்லாம லுவந்த மனிதருக்கே
தொட்டு விடுவதில்லைத் துணிந்துகண்டேன் லைலாவே. 25

உள்ளதெல்லாங் கொள்ளை யுபாயமாய்த் தானெடுத்துத்
தொல்லை மனமிறந்த தொடர்கண்டேன் லைலாவே. 29



கேலி விளையாட்டுன் கிருபையா னடந்திருக்கக்
கேலிசர சம்வைத்துக் கிளைகண்டேன் லைலாவே. 27

மாலை நிறைந்த மணவாளன் றானெருங்கக்
காலா லுதைத்துத் தள்ளக் கண்டேன் லைலாவே. 28

தனமிகுந்த செல்வர்க டானே தூதுவிட்டாற்
பணத்தை மதியாத பலன்கண்டேன் லைலாவே. 29

அதிகப்பிர சங்கித்தன மத்தனையும் போக்கிவைத்துக்
கதியாய் நெருங்கிவரக் கண்டேன் லைவாவே. 30

உள்ளந் துடுக்கொழிந்த வுயர்வான பஞ்சணையி
லல்லலறத் தூங்கக்கண்டே னழகுசேர் லைலாவே. 31

அணைந்தணைந் தேயிருக்க வல்லல் வினையறவே
வனைந்ததே னின்பம் வரக்கண்டேன் லைலாவே. 32

முகத்தோடு முகமணைந்து முத்தமிட்டு முத்தியாக
வகத்தோ டகமிறந்த வணிகண்டேன் லைலாவே. 33

காலைப் பிடித்துமனக் கருக்குழியிற் சேர்த்துவிடக்
காளைப்பரு வத்தின்மனங் கண்டேன் லைலாவே. 34

மாணாருங் கையான் மாரணைத்து முத்தமிட்டுக்
காணாத வாநந்தங் கண்டேன் லைலாவே. 35

நாவி னுனியை நடுமையத்தி லேயமைத்து
நாவு பிறழாம னட்புக்கொண்டேன் லைலாவே. 36

உச்சி நடுவி லொருமையுடன் முத்திவிடக்
கச்சுச்சிப் பருவநிலை கண்டேன் லைலாவே. 37

மாமிசத்தைத் தான்வெறுத்து மரவுகறி மிக்கவுண்டு
காமியமில் லாமன்மெய் கண்டேன் லைலாவே. 38

இருதய மொன்றாகி யினமில்லா நற்றரும
வருளா லருண்மனத்தை யடைந்தேன் லைலாவே. 39

நாபியி னடியி னலமுடனே தான்றொடுக்க
வாவியொரு மித்து வரக்கண்டேன் லைலாவே. 40

தொண்ணூறு மாறுசெய் தூலத்தி லேநீக்கிக்
கண்ணூற் பரனிலையைக் கண்டேன் லைலாவே. 41

ஓரங்கள் பேசு மொருமையில்லா வையறிவை
பாராமற் பார்த்துப் பலன்கண்டேன் லைலாவே. 42

மனம்போ விறந்துவரு மலமே யிறந்தபுலன்
மனமறவே நெடும்வாழ்வு வரக்கண்டேன் லைலாவே. 43

பத்திய மிருந்து பரிசவுணர்ச்சி யற்றுமன
முத்தி விதேகமுத்தி முறைகண்டேன் லைலாவே. 44

நல்லிருபத் தோராயிர நானூறு நாணயத்தைக்
கல்லிறுக்கிச் செலவுசெய்யக் கண்டேன் லைலாவே. 45

மனத்திலாங் காரங்கொண்டான் மட்டற்ற தீமையென
மனத்தி னசைவுசெத்த வகைகண்டேன் லைலாவே. 46

சொன்னபடி கேட்டாற் சுகமு மதிகமுண்டு
எண்ணாத வெண்ணமெலா மிலங்கக்கண்டேன் லைலாவே.

ஆலநிறைந்த வழகே யுனக்காகுங்
கோலமில்லா நின்னழகு கொண்டேன் லைலாவே. 48

வான்புவி யெல்லாநின் வல்லப மாயிருக்க
மான்போல வேயலைய மாட்டேன் லைலாவே. 49

பார்க்கின்ற தோற்றமெல்லாம் பகராருமுன் சாயலெனப்
பார்க்க வரசாளும் பக்குவங்கண்டேன் லைலாவே. 50

மூக்கு நுனிபார்க்க முழுமுகமுந் தான்றோன்றும்
பார்க்க மதிமுகமும் பதித்தேன் லைலாவே. 51

தொண்ணூற் றுறுதேச தோகையரைத் தொடுத்துப்
பன்னூற்றுக் கரசாளப் பதிப்பேன் லைலாவே. 52

மயில்விசிறிக் காற்றுன் மணவரையிற் றுன்வீசி
குயிலா மனமிறந்து குடியிருப்பேன் லைலாவே. 53

தித்திப்புப் பண்டந் தெவிட்டக் கொடுத்தருளும்
பத்தினித் தனமிருந்த பாவையே லைலாவே. 54



அஞ்சடுக்கு மாலை யருளாக வேதொடுத்துப்
பஞ்சவர்ணப் பட்டுடுத்தித் பார்ப்பேன் லைலாவே. 55

வைரக் கடுக்கனிட்டு வகைவகையாய்ப் பொட்டுமிட்டு
வைரவூஞ் சலிலிட்டு வைத்தசைப்பேன் லைலாவே. 56

தங்க மிழைத்துத் தணியாப் பணிகட் செய்து
வங்கத்தி லணியவைப்பே யன்பே லைலாவே. 57

மாற்றுக் குறையாத மௌன மனத்தாலி
காற்று மிடரணிந்து காண்பேன் லைலாவே 58

கனமாய் மதிப்புள்ள காஞ்சனத்தாற் பணிகட்செய்தே
இனமாய்த் தொடுத்துவைப்பே னெழிலார் லைலாவே. 59

நத்துப் புல்லாக்கு நாகரீக மாய்ப்போட்டு
முற்ற வெளியின் முறைகாப்பேன் லைலாவே. 60

ஐந்தா மரசிலையி லல்லிக்கொத்துக் கோர்த்துக்கட்டி
யைந்தாற் சிமிக்கிகட்டி யணைப்பேன் லைலாவே. 61

ஐந்து சவடியுட னறடுக்கு மோதிரமும்
பந்தமில்லாம லணிந்து பார்ப்பேன் லைலாவே. 62

போட்டழகு செயும்வளையற் பூராய மாய்மாட்டிப்
பூட்டுகின்ற கொலுசும் பூட்டிப்பார்ப்பேன் லைலாவே. 63

பாததண்டை பாதசரம் பக்குவமாத் தான்பூட்டி
பாதமதை நடத்திப் பார்ப்பேன் லைலாவே. 64

வண்ண நிறைந்த வர்ணமாம் பட்டுடுத்தி
பின்னப்படா ரவிக்கை பிணைப்பேன் லைலாவே. 65

பாதவிரன் மீன்பீலி பகருசல் லாவணிந்து
போத முடனடத்திப் புனைவேன் லைலாவே. 66

பாதத்திற் கபுசணிந்து பதற்றமில் லாநடையாள்
நீதமாய் வந்தடைய நினைப்பேன் லைலாவே. 67

மூக்கான் மணங்கூட்டி முன்மேசை யினில்வைத்து
நாக்கு ருசிக்கவின்ப நான்றருவேன் லைலாவே. 68

மாவாற் ருேசையப்ப மணமாகத் தான்சமைத்துப்
பூவாழுந் தட்டிற் பொழிவேன் லைலாவே. 69

வாதபித்த சிலேத்தும வகைகளாற் ருன்றிரட்டிச்
சாதிலட்டு வைத்துத் தருவேன் லைலாவே. 70

மனமாறக் கோழியப்பம் வல்லபமாய்த் தான்செய்து
மனமாற மகிழ்ந்து வழங்குவேன் லைலாவே. 71

சிக்கில்லா விடியப்பஞ் சீர்பெரு கப்பிளிந்து
சக்கில்லா மனமுவந்து தருவேன் லைலாவே. 72

கூடங்கொளுக் கட்டைதன்னைக் குணமாய்ச் சமைத்துவைத்துத்
தேடி மடியாமற் சீர்தருவேன் லைலாவே. 73

நையாத வாழைப்பழ நறுமணந்தான் கொண்டிருக்க
மெய்யாகத் தோனீக்கி விதிப்பேன் லைலாவே. 74

நந்தியின் பாற்றேனு நன்முறையா கக்காய்ச்சிச்
சந்தத் துரியமதிற் றருவேன் லைலாவே. 75

பஞ்சா வமிர்தமதைப் பாகப் படுத்திவைத்து
வஞ்சாம லேயூட்டி வைப்பேன் லைலாவே. 76

தேங்காயு கருங்குருவை சிறப்பாய்ச் சமைத்துவைத்து
பாங்காகத் தந்து பணிவேன் லைலாவே. 77

வங்காள வாட்டுன் வகையுடனே கால்வெட்டி
தங்காமற் செய்து தருவேன் லைலாவே. 78

மனக்காட்டுக் கீரை வதக்கி மிகவைத்துக்
கணக்காக நெய்யைவிட்டுக் கலந்தீவேன் லைலாவே. 79

வல்லாரைக் கீரை வதக்கி வகையுடனே
இல்லாத தட்டில்வைத்து வீவேன் லைலாவே 80



முள்ளங்கித் தண்டுவெளி முகமாய்க் சமைத்துவைத்துத்
தள்ளுபஞ்ச லோகத்தட்டிற் றருவேன் லைலாவே. 81

கவலையற்ற நெய்யூற்றிக் கருங்கோ ழியைப்பொரித்துத்
தவமிருந்த நற்றட்டிற் றருவேன் லைலாவே. 82

பாசிப் பயற்றைப் பருவமா கக்கடைந்து
வாசியாக வள்ளி வழங்குவேன் லைலாவே. 83

இதயமாங் காயை யினிமையா கக்கருக்கி
யிதயாம் பரத்தட்டி லீவேன் லைலாவே. 84

கலிமாங்காய் தன்னைக் கனலவங்கந் தான்சேர்த்து
மெலியாம லூறுகாயும் விதிப்பேன் லைலாவே. 85

விண்மண் ணிறைந்து விளங்குகாற் றலைசேர்த்துச்
சன்னமில்லாக் கூறுய்த் தருவேன் லைலாவே. 86

மகத்தான குல்க்கந்து வளமாகத் தான்செய்து
தகத்து மஹாமூதுமதிமுக தருவேன் லைலாவே. 87

காரான மணிநந்திக் கனப்பா லைக்கறந்து
மாருத பசியை மடக்கத்தருவேன் லைலாவே. 88

திரையில்லாக் கடலிற் றினமுங் குளிப்பாட்டிக்
கரையாத மௌனப்பொடி கணிப்பேன் லைலாவே. 89

கறையில்லாக் கூந்தற் கண்டு தலைதுடைத்து
மரைநிகர்த்த சடைபின்னி வைப்பேன் லைலாவே. 90

ஆறடுக்கு மெத்தை யடுக்கடுக் காய்க்கட்டி
யாராதா ரங்கிடத்தி யளிப்பேன் லைலாவே. 91

உலகை மயக்கு மொப்பில்லா வொளிவிளக்கு
மலைவில்லா வுல்லாசம் வளர்ப்பேன் லைலாவே. 92

நாட்டுப்பெண் ணானோர்க னன்மையுடன் றொண்டுசெய்ய
வாட்டமில்லா நன்மனையில் வைப்பேன் லைலாவே. 93

தசநாதங் கோஷிக்கத் தம்பூர்வீ ணைதொடுக்க
வசமுடைய நன்மனையில் வைப்பேன் லைலாவே. 94

தொண்ணூற்றோ டாறரசர் தொழுது சரமடுக்க
விண்ணுடைய கண்கொண்டு மேவுவேன் லைலாவே. 95

ஐவ ரிணங்கிநின்ற வாகாச மெத்தையிலே
ஐவர்கள் காற்பிடிக்க வருகேவைப்பேன் லைலாவே. 96

விற்புரு வத்தினிடை வெகுவாகப் பொட்டுவைத்துப்
பற்கா வியுந்தீட்டிப் பார்ப்பேன் லைலாவே. 97

வரமிகுந்த ரோஜா மல்லிகையு முல்லையுடன்
சரமாகத் தொடுத்துத் தருவேன் லைலாவே. 98

மாயாயற்ற லீலை மனமுடனே காட்டிவைத்தாய்
தாயா முன்னைக்கனவிற் றான்மறவேன் லைலாவே. 99

நித்தமு நிர்வாண நிறைவாகப் பார்த்திருக்கச்
சித்தஞ் சலிக்காமற் றெளிவுகொண்டேன் லைலாவே. 100

அருள்வாழ்வு தான்பெருகி யரசேஸ்வரி யாயிலங்க
வெருளாமற் றனையடைய வேண்டுமிக லைலாவே. 101

ஆக பாடல் 101.

லைலா மனோன்மணி கண்ணி முற்றிற்று.

---

# ஆநந்தக்களிப்பு

தன்னை யறிவது தானே யெங்குந்
தன்னரு ளாய்நின்ற வாநந்தங்காணே.

1 நாமரூப தோற்றங்க ளான—விந்த
நாபத்தைப் பார்த்து மயங்காமற் காண தன்

2 கோலத்தி னுமத்தைக் காணக்—கத்தன்
குறிக்குந் தரிசனை காணாமற் காணத் தன்

3 உன்னை யறிவது சூட்ச—மிந்த
வுள்ளமை யானதை யுணர்வது மோட்சம் தன்

4 கள்ளக் கருத்துக் கனவிலு மோசந்—தன்னைக்
காணாத தேதவ மாகுங்கை லாசம் தன்

5 தூலத்தின் றத்துவத் தாலே—வெகு
துயரத்தை நம்பிக் கலங்கிய தாலே தன்

6 வீண்காலங் கடத்திப்போ டாதே—யிந்த
வினைமன மிழந்து நாடிடு வாயே தன்

7 தானே தனக்குத்திரை யாகு—மிந்தத்
தானத்தைக் காணத் தன்னினை வாகு தன்

8 உன்னைநீ விட்டுரப் பாகுந்—தகுதி
யுனைக்கண்டு தனிப்பது நினைவதுவாகும் தன்

9 வித்தில்லா மாமர மான—வெகு
விநோதமா மின்சானு மான தன்

10 பூர்வீகத் தின்றொட ரான—வில்மைப்
பூரித்து நிறைந்தது தானது வான் தன்

11 அதமா யிருந்தவின் சானே—வெகு
வாநந்த மாயமை வானவின் சானே தன்

12 நூரானி யானவின் சானே—வெகு
நூரானியான தத்துவவின் சானே தன்

13 சாக்கிரஞ் சொப்பன மான—சுழுத்தி
தாக்கற்ற தவத்தைத் தரிப்பதுமான தன்

14 சொல்லுக் கடங்காத் துரிய மான—யெங்குஞ்
சொல்லாத சூட்சத் திறப்பது வான தன்

15 நீரது வுப்பாய்த் திரண்டு—வுப்பு
நீராக விலங்கி யிருப்பதைக் கண்டு தன்

16 கண்டிப்பான தூலங் கண்டு—வீனிற்
கண்மயங்கிடாமன் மனமதைக் கண்டு தன்

17 வல்லப மாய்வாய்பே சாமன்—மனதை
வாட்டுங் கருமத்தி ஞடித்திரியாமல் தன்

18 நோட்டத்தை வீணில்வி டாமல்—மன
நுழைநாட்ட நாடித்தரிப்பது தானே தன்

19 அகமும் புறமுநி றைந்த—வரு
ளாநந்த மாக நிறைந்து சமைந்த தன்

20 எகமூல வடிவாக வந்த—மேன்மை
வெழிலுப தேசம்பெற் றுவந்தது தானே தன்

21 பார்ப்பதுங் கேட்பது மின்றி—மனப்
பாசவடி வாக நிற்பது மன்றி தன்

22 பாசவடி வானதோகைய ரின்றி—மனப்
பக்குவ வரமது கொள்வது நன்றி தன்

23 உண்மைக் குருவருட் காண—வுயர்
வோருங் குருவை யுவப்பது காண தன்



24 தன்னைக் கெடுத்துயர்வு காண—வேறு
தான்காணாக் கல்பினிற் காண்பது தானே தன்

25 குருவைக் கருவாகக் கண்டேன்—மனக்
குருட்டை யகற்றியே சோதியாய் நின்றேன் தன்

26 மறுவில்லா வருட்பாலைக் குடித்தேன்—நல்ல
மன்னன் விளையாட்டைத் தெரிந்ததாய் நின்றேன்.

27 பெண்ணால் வருமோசங் கண்டு—வணாவும்
பிசகாமற் பத்திய மாய்மனங் கண்டு தன்

28 இனஞ்சனத் தார்க்குத்தான் தொண்டு—மிக்க
வினிமையாய்ச் செய்துவந் தேனேநான் பண்டு.

29 எச்செயலு மிறைசெயலாய் நடக்க—மேன்மை
யிறைபக்தி பதனமதாகவே தொடக்க தன்

30 சித்தியாநந்த மான வன்பு—நாளுஞ்
சிறப்பான வறிவு துலக்கவுந் தானே தன்

ஆ பாடல் 30.

ஆநந்தக் களிப்பு முற்றிற்று.

# மனவசை வற தரித்தல்

அசையாதிரு மனமே அல்லும் பகலு
மசையா திருமனமே

1. திசையாவும் பறந்த அஹதெனும் வடிவை
   திரியுங் கோலத்திற் காணமிகவும் நாடி
பசையா முலகந் திரியாம லேநாடி
   பார்க்கச் சிந்தையி லொருமித்துச் சுகமடைய (அ)

2. மனமன்றி யுலக மார்க்கங்க ளில்லை
   மதிக்குந் தினமருளைத் தியானத்திற் றன்பார்க்க
தினமுந் திக்கெல்லா நிறைந்த திருவருளைச்
   சித்துக் குணங்குடித் திருநாதங் கேட்கவே (அ)

3. பேரின்ப ஞானத்திற் பிரிவில்லா திருக்க
   பேசாத மவுன வருளை மிகவெடுக்கக்
காரியக் காசு வெறியிற் கலங்காதிருக்கக்
   காமமாந் தீயதைக் கட்டோடு தான்விடுக்க (அ)

4. தூலத்தின் பாசத் துடுக்கதைப் போக்கிடத்
   தூலத்தால் வரு மருணேசத்தைக் காத்திடத்
தாலத்தின் மெஞ்ஞானத் தகைமை மிகப்பெருக்கச்
   சரியான சூட்சமாஞ் சுழிமுனை திறக்கவே (அ)

5. மோட்ச ரட்சகரான முஹம்மதைத் தான்பார்க்க
   முழுதுங் காட்சிகண்டு கருவழி நோக்கவே
காட்சிமிகப் பெற்றுக் கனந்தின மதுவாகக்
   கதிக்கு மாநந்தத் திருவருளா கிட (அ)

6. முத்தியா மார்க்க முறையதை யெடுத்திட
   முறையே விழித்திருந்து முனையதைப் பார்த்திடச்
சித்திமுச்சுட ரானமுழு மதி காணவே
   சீராம் பர்தாவின்றிப் பரவெளி தோன்றிட (அ)



7. நத்தும் ஹீயென்று நாதத் தோனிகேட்க
   நலமான ஹூ இஸ்முல் அஃலத்தைத் தொடுக்கத்
தெற்றுஞ் சூட்சவழி சுயவறிவு திறக்கத்
   திடமுடன் குருவரு டியானத்தைத் தொடுக்க (அ)

8. கத்தன் நிலையாகக் கருமத்தை மிகமுடிக்கக்
   கரும வினைகளைக் கட்டோட வேதடுக்கக்
குற்றம் வந்துபடருஞ் சந்தேகம் விடுக்கக்
   கூறுமனப் பதற்ற நீங்கியருட் சுரக்க (அ)

9. காலனவன்பாசங் கட்டோட வேபோக்கக்
   கத்தன் றிருவரு ளென்றுமே தாக்கத்
தால வேகணிலை யிருபுறஞ் செயனடக்கச்
   சடத்தின் வாசனைத்திரை யாவுமே போக்கிட (அ)

10. பொறிகட்புலன் காலை முடக்கியே தடுத்திடப்
   பொய்யான வாழ்வை நம்பாது விடுத்திடச்
சரியில்லாத செயற்களி யாவையுந் தடுத்திடச்
   சங்கையாங் குருவைக் காண நடந்திட (அ)

11. பூர்வத்தின் சென்ம ரகஸியங் கண்டிடப்
   புனையும் பெரும்ஞானக் கொடியதை யேற்றிட
ஆர்வ சுயபதி யானந்தஞ் சார்ந்திட
   வன்பான சுயங்கொண்டு நாதமுழங் கிட (அ)

ஆூ பாடல் 11.

மனவசை வறதரித்தல் முற்றிற்று.

# ஆநந்தக் களிப்பு

சித்தந் தெளிய மருந்தது தானே—என்றுஞ்.
செழித்திடும் பேரின்ப நன்மயந்தானே

1 அந்தர மாய்மெய்யா மருந்து—சித்தி
யாநந்தங் கொண்ட வருமையாமருந்து சித்:

2 பந்த மிலாக்கரு மருந்து—பெரிதாய்ப்
பற்பல வினைகளை வென்றிடு மருந்து சித்:

3 அருள்வடி வானகுரு மருந்து—பக்த
ரனைவோருங் கொண்டாடு மின்பமருந்து சித்:

4 பத்தினித் தனங் காக்கு மருந்து—சிந்தையைப்
பகருங் கத்தியால் வெட்டிடு மருந்து சித்:

5 புத்திசொல்லி யுயர்வுசெய் மருந்து—நல்ல
புகழாகிய முத்தி கொடுத்திடு மருந்து சித்:

6 மாதர் மயக்கத்தை நீக்கிடு மருந்து—நல்ல
மாதவஞ் சேர்த்திட வகையாகு மருந்து சித்:

7 வாதாடுஞ் சொல்வெட்டு மருந்து—வுயர்
வாகிய வேதத்தின் சுயமான மருந்து சித்:

8 அத்துவிதங் கொண்ட மருந்து—வெகு
வருமைச் சத்துசித் தாகிய மருந்து சித்:

9 கத்தன் கருணைகொண்ட மருந்து—தன்னின்
கனதத்துவக் குப்பையை வென்றிடு மருந்து சித்:

10 மும்மலக் காட்டதின் மருந்து—மனத்தை
முடிவாகத் தாக்கிடு நற்குண மருந்து சித்:



11 வம்சப் பெருமையை வாட்டு மருந்து—நாளு
மாசணு காமலே காத்திடு மருந்து சித்

12 பொறிபுலனை யொடுக்கு மருந்து—ஞானப்
புதையற்கள் கண்டிடு மருமையா மருந்து சித்

13 மருவுங் கற்பமுறை மருந்து—கெட்டு
மரித்தோரை யுயிர்ப்பிக்கு மகிமைமிகு மருந்து.

14 காயத்தைத் தங்கமாக்கு மருந்து—சுயமாய்க்
கண்டிடா மாய்கைக்குக் கனமான மருந்து சித்

15 தாயகக் குருக்காண மருந்து—மகத்துவத்
தானதாளைப் பிடித்திடிற் சாற்றுவார் மருந்து சித்

ஆ பாடல் 15.

ஆநந்தக் களிப்பு முற்றிற்று.

# மனதோடு களித்தல்

ஏதேது செய்திடுமோ—மன
தேதேது செய்திடுமோ

1 ஏதேதுசெய்தே யென்னைமோசஞ் செய்யுமோ
ஏக னிடங்கொண்டே யிணக்கமாய் வைக்குமோ ஏ
2 பொல்லாத காமத்தாற் புரண்டிடச் செய்யுமோ
புண்ணியங்கண் மிகத்தந்து காத்திடச் செய்யுமோ ஏ
3 தாரத்தைக் கட்டித் தயங்கிடச் செய்யுமோ
தவத்தைத் தொடுக்கத் தத்துவந்தருமோ ஏ
4 தன்னை மதித்துத் தப்பெண்ணங் கொள்ளுமோ
தன்னை யிழந்து தவநெறி சேர்க்குமோ ஏ
5 புத்தியின்றிப் புலம்பிப் பொருந்திடாச் செய்யுமோ
புத்தியாக வுலக பாசத்தைத் தள்ளுமோ ஏ
6 தவமில்லாமல் வாய்ஞானம்பேசிடச் செய்யுமோ
தவநிலை கொண்டுஞான தத்துவஞ் செய்யுமோ ஏ
7 முத்தியில்லா முறையிற் பாடுபடச் செய்யுமோ
முத்தியடையமவுன முன்னேற்றஞ் செய்யுமோ ஏ
8 கர்மிக ளுடன்சேர்த்துக் கவடிடச் செய்யுமோ
கர்மத்தையெல்லாங் கழன்றிடச் செய்யுமோ
9 செய்யாத வினைகளைச் செய்திடச் செய்யுமோ
செய்கை யெலாம்விட்டுநிற் சிந்தையில் வைக்குமோ
10 மும்மலக் குப்பையான் மூடிடச் செய்யுமோ
மும்மலக் குப்பையை யெரித்திடச் செய்யுமோ ஏ
11 இஹ்ஸானில்லாத லோபியாகிடச் செய்யுமோ
இஹ்ஸான்கட் செய்தேயென்னை யீடேறச் செய்யுமோ ஏ



12 கண்டதெல்லாங் கொண்டிச்சிக்கச் செய்யுமோ
கண்டதெல்லா மருளாகக் காட்டிடச் செய்யுமோ ஏ
13 தூல மறதியாற் றூங்கிடச் செய்யுமோ
தூலந் தனக்கடங்கி யாண்டிடச் செய்யுமோ ஏ
14 பாவத்தா னபுஸைப் பணுவாகச் செய்யுமோ
பாசத்தைவெல்ல மவுத்துமுன் மவுத்தாகுமோ ஏ
15 அருளில்லாத கண்போற் கலங்கிடச் செய்யுமோ
வருட்கண்டந்து வறிவுதுலங்கிடச் செய்யுமோ ஏ
16 தவமில்லாத கூட்டத்திற் சேர்ந்திடச் செய்யுமோ
தவத்தோர்கட் கூட்டத்திற் சேர்ந்திடச் செய்யுமோ

ஆக பாடல் 16

மனதோடு களித்தல் முற்றிற்று.

# ஞான மயிற் களிப்பு

## ஒருசீர் முன்வரிசைப் பாடல்.

ஆடுமயிலே தெளிந் தாடு மயிலே—யரு
ளாநந்தங் கண்டோ மென்றாடு மயிலே

1 பஞ்சவருணத் தாலேமிகச் சமைந்திருக்கும்
பஞ்சலோக மதிலே சேர்ந்தி ருக்கும்
கொஞ்சிவிளை யாடவருண் மிகக்கொ டுக்கு
மஞ்சாத நிலை கண்டோமென் றாடுமயிலே (ஆடு)

2 பஞ்சபூத மென்றுமே பேரெடுத்தாய்
அஞ்சி யொடுங்கிநிலை மிகவெடுத்தாய்
தஞ்ச மென்றவர்க்கு வருட்கொடுத்தாய்
கஞ்சமலர்ப் பீடத்தி லாடுமயிலே (ஆடு)

3 பற்றுள்ள வரைக்கண்டு வெறுத்து நின்றாய்ப்
பற்றுவிட் டவர்கட்குப் பருவங் காட்டிக்கொடுத்
கற்றுமறி வில்லாரைக் காலா லுதைத்தாய்ச் [தாய்க்
சுற்றத்தா ரடங்கலைக் கட்டி யாடுமயிலே (ஆடு)

4 கொண்டாட்ட நம்பிக்கை வைத்து மிகவுந்
திண்டாட்ட மில்லாம லமுதுகொடுத்து வந்தாய்
கண்ட தெல்லா மருளாய்ப் பார்த்திருந்தாய்
கண் வடிவைக் கண்கொண்டாடு மயிலே (ஆடு)

5 காமவெக்கை யில்லாம லாடி வந்தாய்ச்
சேமமுடன் மணியைப் பார்த்தி ருந்தாய்
வாம மாயனந்தவகை கண்டி ருந்தாய்
தாமகாலைப் பருவக்கரம் விரித்தாடு மயிலே (ஆடு)



6 தொண்ணூற றாறுதத்துவத்தை யடக்கி வந்தாய்
தன்னூற்றுக் கபாலத்தி லுறைந்து நின்றாய் [தாய்
முன்னூற்றுக்கண்டதெல்லாங் கனவாய்ப் பார்த்திருந்
எண்ணூற்றுத் தினநிலை யாகத் திரிந்தாடுமயிலே ()

7 துர்ச்சனரைக் கண்டுமிக வொழித்திருந்தாய்
கர்மமற் றவரைக் கண்டு மகிழ்ந்தாய்
நிற்குணத்தைக் கண்டு துணைபு ரிந்தாய்
சற்குணத்தைக் கூட்டியே படைகாக்குமயிலே (ஆ)

8 கோலக்கொடும் பாம்பதனி னஞ்சை யெடுத்தாய்க்
கோழியான பெண்ணின் சேர்க்கை மிகவும் விட்
காலைப்பார்த்து மனங்கசிந் தடக்கிவைத்தாய் [டாய்
வாலை சூரியனைக்கண் டாடுமயிலே (ஆடு)

9 தோகைவிரித் தேகமா யாடிநின்று
யீகையுட னுலகை ரட்சித்து வந்தா
யீகையில் லாரைநரகிற் சேர்த்துவைத்தாய்
நாகையு யர்நந்தியக வாடுமயிலே (ஆடு)

10 தொனிநிறைந்த பூரணத்தைப் பார்த்தி ருந்தாய்
மணியான வருள்விதையே யாக்கிவைத்தாய்
மணியை யாசை மயிலுக்குவெளி யாக்கிவைத்தாய்
கனியான வாநந்தங்கொண் டாடுமயிலே (ஆடு)

11 பொன்மயி லானபெண் மயிற்கொத்தி யெடுத்தாய்க்
கண்மணி யாகவிண்ணமுது கொடுத்தாய்
யுண்மையான தானங்கண்டு ஹ-செத்தம் போட்டாய்
நன்மைநந்தி வாகனங்கொண் டாடுமயிலே (ஆடு)

12 துய்யோ னிடத்தினு ரானியாய் வந்தாய்
துய்யவெளி யானநாதத் தொனியிற் றனித்தாய்
மெய்யோர்கட் பதியிற்சுயங் காட்டி வந்தாய்
துய்யதியானத்தின் வெளியாடு மயிலே (ஆடு)

13 பார்த்தும் பார்க்காமற் பார்த்திருந்தாய்
பார்வையான வகப்பாவை தந்து பதியடைந்தாய்
நேர்மிகுந்தவருட் களஞ்சியங் கொடுத்தாய்
நேர்முகமாய்க் காத்துவந் தாடுமயிலே (ஆடு)

14 சித்தி யடையவுயர் புத்திகொடுத்து வந்தாய்
சித்தநேக விதமதாய்க் கைக்கொடுத்து வந்தாய்
சத்திவாலை தாயாகவந் தமுதுதந்தாய்
முத்திவழி யடைய முறைகாட்டி யாடுமயிலே (ஆ)

15 காமத்தைக் கொண்ட வுலகோரை வெறுத்தாய்
நேமத்துடன் ஞானத் தவசு கொடுத்தாய்
சாமத்தில் நிர் வாணமாய்த் தனித்திருப்பாய்
காமப் பித்தரைக் கண்டால் விரட்டி யாடுமயிலே

16 வாலிபப் பருவமுதற் கருவைக் காத்து வைத்தாய்
காலியான மனதைக் காத்தறிவு கொடுத்தாய்
வேலியில்லாக் கற்பக விருட்சமாய் நின்றாய்
காலகாலம் பீரைக் காத்துவுவந் தாடுமயிலே (ஆடு)

17 பத்தியந் தவராது பாதுகாத்தாய்
சத்தியந் தவராதுயர் பதியடைந்தாய்
வெற்றியெனுங் கோட்டைக்குட் புகுத்திடுவாய்
சித்தியுடன் பதியடைந் தாடுமயிலே (ஆடு)

18 பாகமாயகக் கருவைக் காத்துவைத்தாய்
தேகவாசனை யத்தனையு மறந்தாய்
பாகத்தோடு கூடிய பற்றுவிட்டாய்
தாகமற வருட்பாற்குடித் தாடுமயிலே (ஆடு)

19 வானவிற் போற்பல நிறமெ டுத்தாய்
நாணப் படாமற்காம மெமனை வெறுத்தாய்
தாணங் கொடுத்துத்தன்னைக் காத்துக்கொண்டாய்
மோன ஞானக் கடலென வாடுமயிலே (ஆடு).

ஆ பாடல் 19.

ஞானமயிற்களிப்பு முற்றிற்று.

முனாஜாத்து

# இறைவன் வேண்டுகோள்

கோச்சகம்

ஆதி நிறைபொருளே யஹதாகத் தானிறைந்த
சோதி வஹதான சொல்லடங்கா மெய்யுருவே
ஓதி யுனையடைய யுண்மையாய்த் தான்புகழ்வேன்
நீதி பெறவெனக்கு நிட்சயந்தா னிறையோனே 1

அவ்வற்கன்சுல் மக்பிய்யா வகக்கருவ தாயிருந்த
செவ்விய தாத்தின்உஜூதுத் சிறப்பாக வேயிலங்கித்
தவ்க்கென்னு மமாவினிலே தான்சிர்ரா கத்தனித்த
ஷவ்க்கென்னு மாசைபொங்கித் தானு டிடையோனே. 2

நாட்டமே நூராகி நல்லதோ ரக்கலுமாய்த்
தேட்டமா றாஹாகிச் சிறப்பா மலக்காகிக்
கூட்டமுள குத்தூஸின் குறித்தஜலால் ஜமாலாகித்
தாட்டஅர் வாஹ்மலக்கின் றத்துவமா மிறையோனே. 3

உண்மைலத் தீப் நூறு வுயரனுசீர் நான்காகிச்
செம்மையாய் நல்லுலகைத் திறமா யமைத்தவனே
வன்மையா யெண்பத்து வகைநான்கு லட்சமுள
நன்மையாஞ் சீவன்களை நாட்டியா னிறையோனே. 4

ஜீவர்களின் மேலாய்ச் சிருஷ்டித்தாய் மனிதர்களை
ஜீவர்களின் மனிதர் சிறப்பிதை யத்துணின்றாய்
ஜீவகர் டன்னைத் தெறிந்தறிந்து தகுதியொடு
ஜீவர்க டனைமறவாத் திறமருளு மிறையோனே 5

தூலத்தி னைம்பூதச் சுயத்தை யறியாமற்
காலத்தை நபுஸ்வழியிர் கடத்தி யுலகமதை
மேலத்த னுட்டமின்றி வீணாய்த்தான் போகாமல்
ஆலத்தில் வெற்றிபெற வருட்செய்வா யிறையோனே. 6

உயர்மனந்தெள ஹீதாக வுபாயமாய்த் தனையறிந்து
கயவர்குண முற்றுங் கழற்றியே தனையிலங்கத்
தயவுவருங் காலமதைத் தானுடிக் காத்திருக்கத்
தயவுவைத் தடியனுக்குச் சாதகஞ்செய் யிறையோனே. 7

முருசலா நபிமார்க்கு முறையறிவு தான்கொடுத்தாய்
கருமம் பிசகாமற் கருத்துடனுன் னிலைநாட
அருவுரு வாகியெங்கு மடைவாய் நிறைந்தவனே
திருநிறை வாங்கல்பிற் றெளியவரு ளிறையோனே. 8

படைத்த கல்க்கெல்லாம் பரன்றன்னைக் கொளுகிருக்க
படைப்பின மாகவெங்கும் பர்க்கன்றிச் செலுத்தும் வல்ல
படைப்பெல்லா நின்உஜூதில் படர்ந்துநிரம்பி நின்றாய்
படைப்பான கல்க்கென்னும் படுதிரைநீக் கிறையோனே. 9

உயர்வான வட்சரமா யுபாயமாய் நிறுத்திவைத்தாய்
துயர்மனத் தெளிவின்றித் தூலசிபத் தெனுங்கோல
உயர்பதவி யுன்னன்றி யொன்றுமிலை பாழ்நபுஸை
உயர்சிபத் தாய்நடத்தி யுறைவா யிறையோனே. 10

பஞ்சபூத சேர்க்கையாற் பலநினைவு கொள்வதல்லாற்
பஞ்சபூத தபியத்திற் பர்க்காய் ஜம்ஊவான
பஞ்சபூதச் செயலியாவும் பாகமாய் நடத்திவைப்பாய்
பஞ்சபூத முன்னையன்றிப் பார்க்கவில்லை யிறையோனே. 11

துனியாவின் கொளுவுதலாற் சூட்சத்தை யறியாமற்
றுனியாவிற் சிர்றறிந்து சுயமெனுந்தாத் தைநாடத்
துனியாவின் பற்றேடுஞ் சுயமாங் கருணை வல்லான்
றுனியா மருட்டின்றிச் சுயந்தருவா யிறையோனே. 12

உன்னால் வருந்தேவர் றுனையறியா மற்றேடுவார்
உன்னையன்றி வன்மையிலை யுண்மையை யறிவதற்கு
உன்னின் றிருவருளா றுணர்வுதந் தேகாத்து
உன்னை யறியுஞ்சிர்ரை யுணர்த்தியரு ளிறையோனே. 13



இன்சானி னிறப்பத்தை யில்மாக நிரப்பிவைத்தாய்
இன்சானி னுலகமெலா மிருத்தியமை வாக்கிவைத்தாய்
இன்சானின் ரகசியமா யேகமாய்த் துலங்கும் வல்லான்
இன்சானின் கோலத்தி லியாவுநிறை யிறையோனே. 14

திக்கிரைச் செய்வதற்குத் திடவறிவு தான்கொடுத்தாய்
திக்கிரை யின்னதென்று திட்டமறி யாமூடர்
திக்கிரில் லாமற் றிரேகமறதி யான்மயங்கித்
திக்கி றுனையன்றித் தெரியவில்லை யிறையோனே. 15

மறப்பன்றி நினைப்பேதான் வகைதிக்கி ராந்தினமும்
மறப்பன்றி நினைவுகொண்டு வழிநினைப்பாய் நிறைந்து
மறப்பது வந்ததெல்லா மனத்தின் றிரைமறைவால்
மறப்பதை யறிந்துமன மாந்தியான மீயிறையோனே. 16

உன்னையன்றி யொருவஸ்துவு முடன்காணத் தரமுமில்லை
யுன்னையன்றி யோரணுவு முடன்றனிக்க விடமுமில்லை
யுன்னையன்றிப் பார்வை யுடன்பேச்சு மூச்சுமில்லை
யுன்னையுன் னூற்கண்டு வொருமையீ யிறையோனே. 17

உன்றனை நிறைந்தநாதா யுனையன்றிக் காணவில்லை
யுன்றனை யறிவதற்கு வுனையன்றி வேறுமில்லை
யுன்றனை நிலைத்துக்காண வுன்னினை வதுவேறில்லை
யுன்றனை யடையுங்கோல முணர்த்தியே வைப்பாய்தானே..

அனந்தமா யெவ்வுயிர்க்கு மரூபமாய்த் தானிறைந்த
அனந்தமாய்த் தோன்றுந்தோற்ற மத்தோற்ற மாகவேதான்
அனந்தமாம் வடிவி லங்கி யப்புற நிலையி லான
அனந்தமாந் தோற்றந்தன்னி லகமிய நிறைந்த அல்லா. 19

ஆநந்த மாமரூப வருஞ்சுரூ பத்தின் சிர்ரை
ஆநந்த மாய்விரிந்த வருளெனுங் களஞ்சி யத்தை
ஆநந்த வகக்கண்ணாலே வறிவெனுஞ் சுடர்கொ ழுத்தி
ஆநந்தப் பெருக்கணையி லாநந்த மடையச் செய்வாய். 20

அவ்வற்சிர் ரினிற் சிர்ராகி யாகிரிற் கோல மாகி
அவ்வலி லகமியம்மா யந்தத்தி னாரு மானாய்
அவ்வலிற் பாத்தினான வாகிரு ளாகி ரானாய்
அவ்வலு மாகி ரில்லா வறிவினிற் சிறந்த கோனே. 21

மூலமா யெவ்வு யிர்க்கு முடிவில்லா நிறையு மானாய்
மூல்மாம் வஸ்துக் கெல்லா முன்னவ னாக நின்றாய்
மூலத்தின் மூல மான முன்பினு நடுவு மற்றோய்
மூலமாந் தாத்துமுத் தலக்கு முற்றிய நிறைவு கோனே. 22

தனதி ரவலாம் உஜூதைத் தந்திலங் கிடுமாம் வஸ்து
தனதிர வலானசிபத் தாலெவர் தன்னை யாளும்
உனதிர வலாமு யிர்க்கு வுவந்துணவு கொடுக்கும் வல்லான்
உனதுஜூதாய்த் தரித்த வுயரிய னிறைந்த கோனே. 23

இரவலாஞ் சிபத்தைக் கொண்டே யிலங்கிநா னென்றிலாமல்
இரவலாகிய சிபத் யெனக்கில்லை யென்று நாடி [தேதான்
இரவலாஞ் செயற்கள் சொற்க ளெவ்வையும் பனுச்செய்
இரவலா னில்லா மையை மில்மினை யருளு வாயே. 24

தூலமாந் திரைகடக்கத் துணையதை வேண்டி நின்றேன்
தூலத்தின் செய்கைதன்னைத் துரத்தவேவேண்டி நின்றேன்
தூலத்தின் புறத்தால் வந்த தோஷங்கண் மிகைத்திடாமற்
தூலத்தின் முடிவு சிர்ரைச் சூட்சமா யறிய வைப்பாய். 25

ஆக பாடல் 25.

இரைவன் வேண்டுகோள் முற்றிற்று.

முனாஜாத்து

# வேத நபி நாயக வேண்டுகோள்.

அறுசீரடி யாசிரிய விருத்தம்

தாத்தினி லுஜூதுதானே தனிக்கன்சுல் மக்பி யாவில்
தாத்தெனு முஜூது தானே தன்னுணர்ச் சியினாற் றோன்
தாத்தெனு மில்மு கொண்டு தானேநா ராக நின்ற [றும்
தாத்தான நூர்ஜ லாலாய் ஜமாலான நபியுல் லாவே. 1

நூரேதா னேதா னாக நுவலுங்குன் னெனுநா தத்தால்
நூரே பல்லணுவருவா நுட்பமா கத்தி ரண்டு
நூரே தான்பர வெளியாய் நுட்பவைம் பூதமாகி
நூரோபற் கோலங் கொண்ட றூகுல்குத் தூஸ் நபியே 2

ஐனது அவ்வலான அஹ்மது நாம மான
ஐனது நிலையினாலே யாலத்தை வகுத்த ஹக்கின்
ஐனது வஸ்துக் கெல்லா மாந்தா பஜன தாக
ஐனது வுலகாய் நின்ற அஹதெ னுநிலை நபியே. 3

ஆலத்தின் கல்பு மான வாகாச வெளியாய் நின்ற
கோலத்தி னெவ்வுயிர்க்குங் குணமது வாக நிற்குந்
தூலத்தின் கல்பாய் வந்த சுயமதைக் காண் வடிவே
காலத்தின் கருவாய் நின்ற காமிலா நபியுல் லாவே. 4

தானது வேயில் மாகி சகமெல்லா நிறைந்து நின்று
தானது வாயி லங்கிச் சமைய நான்மறை யறிவாய்
தானது தானு வந்து தனிமிஃ ராஜ்நி றைந்த
தானது வாகக் கண்டு சாற்றுவிண் ணபியுல் லாவே. 5

மிஃராஜின் ரகசி யத்தை மேலாஞ்சீ டர்க்கு ரைத்து
மிஃராஜி னான சிர்ரை விண்ணடைந் தவர்கட் கெத்தும்
மிஃராஜின் காட்சி யேக விரிதிரை போக்கிப் பார்த்த
மிஃராஜிற் சென்றான் மாக்கள் விதியுரை நபியுல்லாவே. 6

ஷிர்க்கி னின்வினை வழியாற் றீமைச் சாத்தான் கொடுமை
ஷிர்க்குள்ள மடைய ருக்குத் தீன்வழி காட்டி வைத்து
ஷிர்க்குகளடங்க லையுஞ் சிதைத்துத்தௌஹீதைக் கூட்டிச்
ஷிர்க்குள்ளார் கரும மெல்லாந் தீமையே நபியுல் லாவே. 7

லாகூத்தா யெங்கு மீமில் லாஅஹம தான சோதி
லாமக் கானின் னடுவா நல்லனி லரபி யாகும்
லாவது வில்லை யென்று ஞனில்லை யெல்லா மாகும்
லாமலி பாகவெங்கு நயநின்ற நபியுல்லாவே. 8

உண்மையை யுணரவேண்டி யொருமனப் பட்டு வந்து
தின்மைதீர் செவ்வை யாகத் திரத்துடன் றவந்தொடுத்தாள்
நன்மையாந் தூத ருண்மை நலமுடன் கிருபைசெய்யும்
சென்மத்தையின்னதென் றுதெரியச்சொன்னபியுல்லாவே

மலக்குடன் ஜின்னு மற்று மனுக்களாம் வஸ்துக் கெல்லா
நலக்க மில்லாக் கருத்தை நாடிடி லச்ச ணத்தில்
கலக்கங்க ணீக்கி வைத்துக் கருவதைக் காட்டுந் தூதர்
மலக்கமி லருட ரித்த மாண்புசேர் நபியுல் லாவே. 10

ஆத்மஞா னிகளுக் கெல்லா மருட்குரு வாக நின்ற
ஆத்மஞா னிகளைச் சேம மாயுவந் தறிவாய் வந்த
ஆத்மஞா னத்தை யுண்டு வனுபவித் தருட்சொ ரிந்த
ஆத்மஞா னத்தி னாலே யருண்மய நபியுல்லாவே. 11

தனதுரப் பைரப் பையே தான்கொண்டு வறிந்த தாக
கனம்பெறு வாக்கி யத்தைக் கவனமாய் விளக்கிப் பார்த்து
மனமது கலக்க மின்றி மவுனமாய் ரப்பு நாட்டம்
தினமது ரப்பாய் நின்ற தெளிமணி நபியுல் லாவே. 12

உண்மையா முஃஜிதாத்தை யுயர்சீடர் விலாயத் தாக
உண்மையா முயர்வ ஹீயை யுயர்சீடர்க் கில்ஹா மென்ற
உண்மையத் விதஞானத்தை யூன்றுதற் கிடத்தைக் காட்
கண்மணியாக வந்து கனம்பெறு நபியுல்லாவே. [டுங் 13



ஜனது நிறைந்த சித்தே யகமியக் களஞ்சி யத்தை
ஜனது வழியா லல்லு மரும்பக னடத்துஞ் சோதி
ஜனது நூரு மான வாங்குறிப் புஜஃதாய் வந்த
ஜனது ரூஹுல் குத்தூஸ் ஆகிய நபியுல் லாவே. 14

முன்னோனின் றீர்க்கத் தோர்கண் முறைமுறை யாகத்தோ
முன்னோனின் மஃரி பாவை மொழிந்தன ரநேக மாக [ன்றி
முன்னோனி னத்விதத்தை மொழியறி வருமை யாக
முன்னோனி னொருமை தன்னை மொழிந்திடு நபியுல் லாவே.

அந்நாளை யின்ம னுக்க ளாசை யாலறிவி ழந்தார்
இந்நாளை யிலும னுக்க ளிருப்பதை யறிந்து நாடி
சொன்னதௌ ஹீதறிந்து சூட்சமா நுணுக்கஞ் சொன்ன
பின்ன மில்லாவொருமைப் பேறுரை நபியுல் லாவே. 16

ஒருமையா நிலையடைய வுபாயமாஞ் சரஹுஞான
மறுமையின் சுயத்தைத் தானே மறைவதா யுரைத்த ஞான
மறுமையி னிலைமை தன்னை வகையிம்மை தனிற் சிறிதா
யறியவே யுரைத்த ஞான மடைதற்கு நபியுல்லாவே. 17

நரகமுஞ் சுவன மென்று நலமுட னெடுத்து ரைத்தீர்
நரகமுஞ் சுவர்க்க நபுஸ் நலமின்மை நரக டையும்
நரகமுஞ் சுவர்க்க நபுஸு நன்மையாற் சொர்க்கஞ் சேரும்
நரகமாந் தீமை நன்மை நாடாத விக்கா நபியே. 18

உலகினி லவத ரித்தே யுயர்தவ முடித்துக் கண்ட
உலகிலில் லறத்தைச் சூழு முபாயத்தைச் செய்து காட்டி
உலகிலோர் பற்று மின்றி யுடையவன் றவக்கற் கொண்ட
உலகினி லிருவ ழீயு முயர்வெற்றி நபியுல்லாவே. 19

சற்குணச் சகவாழ்க் கையைச் சமன்செய்து தீன்வி ளைத்த
நிற்குணக் களஞ்சியத்தை நெறிநமூனு வாக
சற்குணப் போதகம்மாய்ச் சர்வாண் டமுநி றைந்த
பொற்குண விறையை நேரிற் பொலிவுகொள் நபியுல் லாவே

உலகவ ரிடுக்கந் தன்னை யோரணு வும்நினைக்கா
வுலகவர் மயக்கந் தன்னை யொழியவே பாடு பட்ட
வுலகவ ரறிய மிக்க வுயர்ஞானம் போதித் தாண்ட
வுலகினின் பாச நீக்கி யுணர்திரு நபியுல் லாவே. 21

ஆத்மஞா னத்திற் சேரவாம்படிப் படியாய்த் தேர்ந்து
ஆத்மஞா னத்திற் கான வழகிகை வழியைக் காட்டி
ஆத்மஞா னத்திற் காக வாமிபு ராஹீ மார்க்கம்
ஆத்மஞா னத்தின் மேவ வறுமன நபியுல் லாவே. 22

தௌஹீது நிறைவ தற்குத் தௌஹீது வபுஆல் வேண்டும்
தௌஹீது நிறைவ வற்குத் தௌஹீது சிபாத்தி வேண்டும்
தௌஹீது நிறைவ தற்குத் தௌஹீது தாத்தி வேண்டும்
தௌஹீது முத்த லக்கே சம்பூரண நபியுல் லாவே. 23

வானவர் தொண்டு செய்யும் வரிசைகள் சேர்மக் காமில்
வானவர் துதிகொண் டாடும் வரிசை யின்மிகு நபியாம்
தீனவர் நிதங்கொண் டாடுந் திவ்ய நபியாய் வந்த
தானவன் றுதிக்கு மேன்மைத் தகுதிகொள் நபியுல்லாவே.

நிற்குணக் களஞ்சி யத்தை நிர்மல நித்தி யத்தைச்
சற்குணங் களஞ்சி யத்தைச் சகலர்க்குஞ் சாற்றுஞ் சித்தே
அற்புத நிறைந்து மேன்மை அஹமதாய்த் துலங்கு நல்ல
கற்பித மார்க்கம் விண்ட காரண நபியுல்லாவே. 25

ஆ பாடல் 25.

வேத நபிநாயக வேண்டுகோள் முற்றிற்று.

---

### போது விருத்தம்.

பிறந்தவினை வழிப்பிறப்பைத் தெரிந்துமே
சிறந்தஞானச் சுடர்விளக் கேற்றியே
சுறந்தமெய்ஞ்ஞானச் சுயஞ்சோதி பெருகிட
திறந்தவருள்நிலைத் தினமது வாகுமே.

முனாஜாத்து

## குத்துபு நாயகக் குருமணி துதி

### அறுசீரடி யாசிரிய விருத்தம்.

இறைவனின் சிர்ர தாக வேகமாய் நிறைந்து நின்றே
இறைவனின் மெய்ய தான வினவடி யார்க்கு மேலாய்
இறைவனின் றியானத்தாலே யிலங்குபார் வையுமி ழுந்து
இறைவனி னிலையா யோக மேற்றும் பீர் முகியித் தீனே. 1

ஹக்கறு சளவிற் சிர்ரா யமர்ந்துமே யிலங்கி யோங்க
ஹக்கனின் ரகசி யத்தை யணுகியெச் செயலுஞ் செய்ய
ஹக்கனி னடியர் தங்க ளருமுத வியையே பார்க்க
ஹக்கனி னேர்மை கொண்ட வரியபீர் முகியித் தீனே. 2

கல்வத்தி விருப்பி லாலக் கனகோல மெலா மறந்து
கல்வத்தி விருப்பிற் றன்னைக் கங்கிலாப் பார்வை பெற்ற
கல்வத்தி விருப்பி ருப்பின் கனவிரு பானின் மூழ்கி
கல்வத்தி விருபா னில்மு களையிடுபீர் முகியித் தீனே. 3

தங்களி னிலையி லண்டந் தாவிடும் பிண்ட மெல்லாந்
தங்களி னிலையி லியாவுந் தருகிய வொடுக்கங் கண்டு
தங்களின் கரத்திற் சர்வ சகம்பந்தைப் போல பார்த்த
தங்களின் கரத்தா லாட்டுந் தகமைப்பீர் முகியித்தீனே. 4

ஆலத்தி னிறைந்த முத்லக் காமுஹ பத்தைச் சார்ந்தீர்
ஆலத்தி னிறைந்த முத்லக் கானகுத் பாய்த்த ரித்தீர்
ஆலத்தின் குத்பு கட்கு வருங்குத்புப்பட்ட மீயும்
ஆலத்தின் கோலமெல்லா மாந்தத்வ முகியித் தீனே. 5

முன்னோனின் குத்தா ஸான முறைவழி நிறைந்திருந்த
உன்னுநன் முஹப்பத் தாலே யுயர்பத விகளைப்பெற்றுச்
சொன்னநன் முஹப்பத் தென்னுந் தொட்டிலிலாடி னீர்கள்
முன்னவனி னற்சிர் ராக மூடிந்தபீர் முகியித்தீனே. 6

உரிமையே நிறைந்த தான வுயர்பரி வட்டம் போர்த்திப்
பொருமைசேர் தூரிசி னுவின் பெருமலை மேற்ற ரித்தீர்
அருமையாமுஹப்பத்தென்னு மருங்குடிப்பதைக்குடித்தீர்
அருந்தவே தயக்கமில்லா வரியபீர் முகியித் தீனே. 7

ஹக்கான் நபிமூ சாவு மவர்பெரு மஸ்துக் கொண்டு
ஹக்கான மஸ்தி னுலே காணரு மில்மு பெற்றார்
ஹக்கான நபியீ சாவுங் கனமெத்திச் சித்துச் செய்தார்
ஹக்காக வேத ரித்த வரியபீர் முகியித் தீனே. 8

சகலவல் லபங்க ளெல்லாந் தங்கட்டு வரிசை யாகச்
சகலத்தின் ரகசி யங்கள் சார்ந்திடுந் தத்துவத் தேசு
சகலமாம் வேதங் கட்குத் தாவிடாப் புதைய லாகுஞ்
சகலநா தாந்த நாதந் தங்குபீர் முகியித் தீனே. 9

தங்கண்மக் காமை நன்றுந் தனிமையாய்த் காண்ப வர்க்கு
மங்காவீ டேற்ற மாகும் வழிபெருஞ் சிறப்ப டைவார்
தங்களின் முரீதா னோர்க டான்வெகு தூர வாழ்விற்
சங்கடம் வந்த போது தருந்துணை முகியித் தீனே. 10

தங்களி னினமில் லார்க்குத் தானொலிப் பட்ட மில்லை
தங்களின் சமூகம் விட்ட தரத்தற்கு மீட்சி யில்லை
தங்களின் சொல்லை வேறு தாந்தரக் கண்டோ ரெல்லாம்
மங்கலா யறியாத் தோஷ மதிக்குருடர் முகியித் தீனே. 11

மேலான சொல்லை யெல்லா விதியிறை சிபத்த தாக
மேலான மொழிகு வைத்தன் விரிவின்றி யச்சந் தீர்ந்த
மேலான தத்து வத்தின் விதிசவ முயிர தாகும்
மேலான தகுதி கொண்ட மேன்மைப் பீர் முகியித்தீனே 12

ஒருநிமைப் பொழுதுநின்னை யுவந்திடா திருந்தாற் றுன்பம்
ஒருநிமை யிலும் வெறுப்பை யோட்டிடிற் சுவன் மென்றும்
ஒருநிமைப் பொழுதும் ஹக்கு வோங்குநா னெனுமோர் சொல்லே
ஒருநிமை மறந்தி ருந்தா ருன்னன்றி யில்லை பீரே. 13



ஆலத்தின் ருத்தை தானே யறிவினு லெத்தா தென்ற
ஆலத்தின் ஹக்கைத் தானே யகலுஞ்சந் தேகங் கற்றுக்
கோலத்தி னிலங்கு கின்ற குறிவஸ்து வெல்லா மொளிவாங்
கோலத்தைப் பலதாய்க் கண்டாற் குணங்காணர் முகியித் தீனே.

குறைவின்றி யுஜூதி னுலே கொண்டிடு மதைக்குறைத்தல்
குறைவின்றி யணுவ ளவ்வுங் குறையைக்கா ணுதே யென்ற
குறைவின்றித் தண்டிப் பைத்தான் கூட்டும் வாணுள றிந்தாற்
குறைவின்றித் தேர்ச்சி பெற்ற குணப்புயற்கா ணென்னும் பீரே.

ஹக்கதின் ஜமலாந் தோற்ற மாஞ்சாய லால மாகும்
ஹக்குவெளி யாகுஞ் ஜலால் ஜமாலைப் புசித்துக் கொண்டு
ஹக்குமே லாசை யாலே யங்குசா வில்லை யென்றே
ஹக்கான வழியில் வந்த வருமைப்பீர் முகியித் தீனே. 16

அழகிய லுள்ளா னுசை யாகவு மில்லை சோதி
அழகிய னுள்ளா காணன் வருமையாங் கல்பு வுண்மை
தளமுள்ள தன்சீக் தஸ்பீகும் ஜம்உசெய் தவனு மென்ற
நலமா யொன் ருயி ராதே நன்றுரை முகியித் தீனே. 17

லாகிறு இல்மைக் கொண்டு நடந்தவ னெனம ருண்டு
லாகிறு பாத்தின் இல்மு நடந்தொரு மித்தா னன்று
லாகிறு இல்மு மட்டும் நல்வழி யெடுக்கா தென்று
லாகிறு பாத்தின் சேர்ந்தா னன்னிலை முகியித் தீனே. 18

ஹக்கினி லாசை கொண்டே யதிலேநீ பனுவ தாகி
ஹக்கினி லுள்ள மையே யதுவுன்னில் வெளியா காமல்
ஹக்குகல்க் களவி லாத மானசூ ரத்தைக் கொண்டு
ஹக்கதின் சிபத்தைத் தானே அருஞ்சரீ ஹத்தென்ற பீரே.

ஹக்கான நிலையிற் றன்னைக் காணவே ரொன் றில்லை
ஹக்காக வதுவுண்டென்ற வவர்திட னுக இல்லை
ஹக்கனிற் றன்னைக்காண வதுநிறைந்த தாகுமன் ரோர்கள்
ஹக்கான வுள்ள மையி லதுகுறை வென்ற பீரே. 20

இச்சையி லதிகப் பட்டா லெழிற்ருத்தை யடைய மாட்டான்
இச்சையின் மிகுதத் தாலே யித்தூலஞ் சிறிதா யெண்ணி
இச்சையின் மிகுதத் தாலே யிழந்துபோ ளுனு மென்ற
இச்சையாம் மனிதா வுன்ன லேற்றும் பேராலம் பீரே. 21

ஒருவரை யொருவர் கண்டா லுயர்கோலந் தனைமறைக்க
ஒருசர்வ கோல மெல்லா முன்ருன யிருக்கு மென்ற
ஒருகல்லைத் திறக்கச் செய்து வுயரிரு கண்சோர் விட்டு
திருகல்க்கி னிலையின் மாருத் தியானஞ்செய் யென்ற பீரே.

தானேதன் ரப்பைத் தோத்திரந் தகுமான னிலைமை போல
தானேதன் னுடியுள்ளின் சாயலே தோன்றும் போல
தானேதன் வியாதி வந்த சங்கதி மறந்த தேபோல்
நானேநா னென்ற சொல்லே நயமில்லை முகியித் தீனே. 23

குற்ற மேயற்ற சூபி குறுகுங்கம் பிலிளங் கோடு
சுற்றியே பிழை பொறுக்கச் சொல்வது பெரிய தல்ல
குற்றமில் லிஹ்சா னென்னும் குண தர்ம நோன்பு நோற்கக்
குற்றமில் தஹஜத் தோடு கூடுதல் லழகு பீரே. 24

நானென்ற லிர்க்கை நீக்க நம்மருந் தாவ தென்ன
தானற்ற விடமே ஹக்குத் தாலாவென் றுரைத்த பான்மை
யானவுண் மைத்து லக்க வகிலகித் தாப்நீ யென்றும்
வானமா மலக்கி னுலு மதிக்கரி தென்ற பீரே. 25

ஆ பாடல் 25.

குத்துபு நாயக குருமணி துதி முற்றிற்று.

---

போது விருத்தம்.

சிங்கமீறித் திகைப்படச் சீறினும்
சங்கக்கிரிவளம் சரிந்து பிரண்டாலும்
தங்களின்றி ஆழித்திரண்டு வருகினும்
மங்காத்தீர மனமதில் வேண்டுமே.

# ஞான சல்லாப மணி.

பூர்வீக மாய்நின்ற பொருளென்னவென் னுயிர்க்குருவே
மாறுபடாக் கன்சுல் மகுபியா வானதே சீடா 1

கன்சுல் மகுபியாக் கவலுவீ ரென்னுயிர்க் குருவே
கனபிர்ம வெளி காணுவா யென்னருஞ் சீடா 2

பிர்ம வெளியாய்ப் பிரிந்ததெப்படிக் குருவே
பிர்ம சோதிப் பிரிவு நூராய் நின்றது சீடா 3

நூராயிருந்த நுட்பப் பிரிவென்ன குருவே
நூருஜலால் ஜமால் நுட்பஞ் சொலித்தது சீடா 4

ஜலால்ஜமால் சகமான தெப்படிக் குருவே
பலவாம் அர்வாஹ-யெர் நினைவு திரண்டது சீடா 5

உயிரா யிருந்த வுகமையு மென்ன குருவே
உயிர்மி தாலி னுயரஜ்சா மானது சீடா 6

அஜ்சாமானபின் னருந்தோற்ற மென்ன குருவே
அசலான வின்சான் னருங்கோலமாகுஞ் சீடா 7

இன்சானின் கோல மெப்படி யிருக்குமென் குருவே
இன்னதே யென்றே வியம்ப முடியாதே சீடா 8

முடியாத காரிய முறையெப்படி யாகுங் குருவே
முன் நபுஸறிவினுல் யின்சுகோலம் விளங்குஞ் சீடா 9

ஆகாச வெளியா யனுசீர்தோற்ய மென்னகுருவே
ஆகாசம் பிரகிருதி யாகப் பிறழ்வது சீடா 10

பிரகிருதி தோற்றம் பேசுவதெவ்விதங் குருவே
பிரகிருதி நீரனற் பேசுங்காற் றுகாயஞ் சீடா 11

மண்ணீர்நெருப்புக் காற்று வந்தவிதமென்ன குருவே
மகாபூதவெளியா யுருவே யெடுத்தது சீடா 12

மானிடர் மார்க்க மறைவன்றிச் சொல்லுமென் குருவே
மானிடர்தன்னை யறிவது நுட்பமே சீடா 13

தன்னையறியுந் தன்மையு மெப்படி குருவே
தன்னை யறியத் தரமிருவகையுண்டு சீடா 14

மர்மமிலாதறிய மறைவின்றிச் சொல்லுமென் குருவே
மர்மமா யவ்வலின் மாவத வுருவாகுஞ் சீடா 15

அதமா யிருந்ததை யறிவதுமெப்படிக் குருவே
அதமாக நின்றதே வருமையாந் தாத்தே சீடா 16

அமாவா யிருந்ததுசட மானதெப்படிக் குருவே
ஆதிநூர் வெளியாகிய பூதமே சீடா 17

தூலத்தைப் பிரித்துச் சுயத்தைச் சொல்லுமென் குருவே
கோலத்தா மாதத்தைக் குணமாகச் சொல்லுவேன் சீடா

தூலத்தி லாதத்தின் றொடர்பதைச் சொல்லுமென்குருவே
தூலத்தின் சிபத்து வாதமாகுமென்றறி சீடா 19

சிபத்தை விளக்கித் திடமாகச் சொல்லுமென் குருவே
சிபத்துச் செயலாம் பொறிபுலனாகுமே சீடா 20

பொறிபுலனை யறியப் புத்தியைச் சொல்லுமென் குருவே
பொறிபுல னிலையில்லாக் காயத்தின் பாகமே சீடா 21

காயத்தைத் தொடர்ந்த வறிவு மயங்குவதேன் குருவே
மாயாத் துனியாவின் மனக்கொளுகுதலாஞ் சீடா 22

மனக் கொளுகுதலை நீக்கிட வகையென்னவென் குருவே
மனம் சுத்தமாய்விடி லுயிர் நிலை காணுமே சீடா 23

மனத்தைச் சுத்தஞ்செய்ய மார்க்கமென்ன சொல்லுங் குருவே
தன்னையிழந்து தவநிலை கொள்வதே சீடா 24

தவநிலை கொள்ளத் தன்மையைச் சொல்லுமென் குருவே
தன்னை மறந்தாற்றவ நிலை கூடுமே சீடா 25

நிலையைத் தரிக்க நிலையதைச் சொல்லுமென் குருவே
நிலைகண்டு மனஞ்செத்த காமிலைக் கேளுமே சீடா 26

காமிலான பீரைக்காணுவ தெப்படி குருவே
காமி லானநிலை யில்மா யிலங்குஞ் சீடா 27



படித்த கல்வியாற் பற்பிரயோசன மென்னகுருவே
படித்தபடி நிலைகொள்ளப் படவேண்டு சீடா 28

கண்டது போனடிப்புக் காட்டுவதென்னவென் குருவே
அண்டும்வண் டற்றுனி யாவின் பொதியாலே சீடா 29

பெரும்பொதி பெண்ணால் வருவது வென்னவென் குருவே
மறுவில்லாப் பெண்ணை மயக்கிச் கெடுப்பதாற் சீடா 30

பெண்ணாற்கெட் டோமென்று பேசுவதென்னவென் குருவே
பெண்ணைக் கெடுப்பதுபேதைப் புருடனே சீடா 31

புருடனின்சொல்லைப் பொருந்தப்பெண் கேட்காதேன் குருவே
புருட னயன்மனைபோ றுறங்க காரணஞ் சீடா 32

இல்லற நடத்த விணக்க மெப்படிக் குருவே
நல்லா யொருமித்து நாடியிருப்பதே சீடா 33

பெண்ணை யடக்கற் பெரிதென்று சொல்வதேன் குருவே
பெண்மதி பேதமை பேணவடங்கிடுஞ் சீடா 34

பெண்ணவள் மாறுட்டம் பிடித்தாசை யாவதென் குருவே
பெண்ணுக்குக் கல்வி பெருக்காமற் பிடித்தது சீடா 35

கல்வியுள்ள பெண்கள் கசடாய் நடப்பதென் குருவே
பல்விதக் குற்றமாய்த் பத்தா நடப்பதாற் சீடா 36

துணைவியை விட்டுத் துறவரங் கொள்வதென் குருவே
மனைவியைப் பேணி வாழத்தெரியாமற் சீடா 37

மனைவி யின்றியே மகாத் துறவி யாவதென் குருவே
மனதிற் காமச்சேட்டை வழங்கலில்லாமற் சீடா 38

காமவினை யுண்டாகுங் கன்தல மெங்கேயென் குருவே
தாமக் கனல்வாயின் றகுந்தகூ ரதிகஞ் சீடா 39

இருபுலன் சேராம லெப்படி வைப்பதென் குருவே
இருபார்வை நினைவி லெழின்மனமற நிற்பதே சீடா 40

பெண்ணாற் கெட்டோமெனப் பிணைப்புருடன் சொல்வதென்குரு
பெண்ணி னியற்கைக்குணம் பெரிது மறியாமலே சீடா [வே

இல்லறஞ் செம்மையா யியற்றுவ தெப்படி குருவே
சல்லாப வொருமையாய்த் தங்கடன் செய்வதே சீடா 42

ஓது நபியுல்லா பெண்களை யுவந்த தென் குருவே
மாதவ நிறைந்த வாய்மையாஞ் சத்தாலே சீடா 43

நபியுல்லா வுரைத்த நன்மார்க்கநெறி யென்ன குருவே
நபியுல்லா வுரைத்த நன்மார்க்கந் தௌஹீதே சீடா 44

தவ்ஹிது மார்க்கந் தான்கைக்கொள்வதெப்படிக் குருவே
பவமா மகத்தினிற் பற்றுஞ் சிர்க்கின்றியே சீடா 45

சிர்க்கை யகற்றுஞ் செயலென்ன வென்னுயிர்க் குருவே
பர்க்காய் மனந்தானே பற்றுவதை விடுத்தாற் சீடா 46

மாற்றமாய்ச்சிர்க்கு வருவது மெப்படிக் குருவே
நாற்றமா ருட்ட நபுசினிச்சையே சீடா 47

இச்சை யானநபுசை யிறக்கவைப்ப தெப்படிக் குருவே
அச்சமுளநபுசி னுந்தூல மறப்பதே சீடா 48

தூலத்தை மறக்கச் சூட்சமதென்னவென் குருவே
ஆலத்தின் கற்பனை யறியாம லிருப்பதே சீடா 49

மனதினிற் கற்பனை வருவது மெப்படிக் குருவே
தகுமாம் பரத்தைத் தான்மறந் துலகப்பற்றுஞ் சீடா 50

உலகப் பற்றற்றே யுயர்வாய் நிற்கவென் குருவே
உலக விறைவன்மே லுவந்து பக்திகொள்ளற் சீடா 51

கர்ப்பக் குழியி லுருக்காணச் சமைந்ததெப்படிக் குருவே
பர்க்கில்லா வாஷிக்கும் பகரு மகஷூக்குஞ் சீடா 52

திரண்ட பிண்டமது திரமாய் வளர்ந்த தெப்படிக் குருவே
மருண்ட வறுசுவை வழங்கி யுதரத்தாலே சீடா 53

பூரண வடிவு பெற்றுப் புவியில்வந்ததென்ன குருவே
கூரது வானமலங் குடலிற் றரித்ததாலே சீடா 54

நிலையாங் குடலின்மல நிறைந்து வெளிப்பட்டதென் குருவே
அலருஞ் சடத்திற்பூத மசைவான் மனமில்லைய சீடா 55



தழையுங் குழந்தைக்குத் தகையுயிர் சேர்ந்த தெப்போ குருவே
அழகுபெறு ஹயாத்தி னசைவே ரூகாகுஞ் சீடா 56

உயிரெப்படி யுடலிற் புகுந்தது குருவே
உயிர்ஹ யாத்தினுட னெழுங்கசைவாகுமே சீடா 57

அசைவினாற் புவியி லாந்தலை கீழாய்வந்ததென் குருவே
அசைவு மனம்பெருகி யாம்பொறி வெளிப்பட்டதாற் சீடா

பொறிபுல னபுசாகப் புறத்தில்வந்ததென்ன குருவே
புரைதூலக் குணத்தாலே பொறிபுல னடத்தையே சீடா

மதலையி னபுசு வளமெத்தன்மை யென் குருவே
இதமுளசற்குண மிலங்கு நபுசுதூலஞ் சீடா 60

இளங்குழந்தைமன மில்லா மாவது மென்ன குருவே
தளருஞ் சாந்தநிலைச் சடச்செய்கை மட்டுமே சீடா 61

நன்மைதின்மைக ணற்குழந்தைக் குண்டோ குருவே
கன்மமில்லாத கனமா மனமது சீடா 62

குறித்திடு கேள்விகள் குழந்தைகட் குண்டோ குருவே
தரித்திடுஞ் சித்தபுத்தி தானில்லாமையாற் சீடா 63

கிராசையா மில்லாத்தி னிலைத்தன்மையென்னவென் குருவே
கிராமன் காத்திப னற்ற கிளர்சித்தஞ் சுவனமே சீடா 64

சித்தம் புத்தியே சேர்வது மெக்காலங் குருவே
பத்தொன்றேழு பருவமென் றுரைப்பார்கள் சீடா 65

மதலைப் பருவத்தின் மார்க்க வாஜிபேன் குருவே
பதமுயிர் நிலைமறந்து பதிநபுஸின் பலசேட்டையாஞ் சீடா

நபுசின் நபுஸின்குண மெவ்வித நடக்குமென் குருவே
துலங்கா விபுலீஸின் ஹவாதுன்யாவாய் நடக்குஞ் சீடா 67

இக்குண மிகுத்தே யென்னவாகு மென் குருவே
துக்கவிச்சை மிகுந்து தூலகுணமிகுஞ் சீடா 68

தூலகுணத் தடிப்பாற் றுயரென்ன வாகுமென் குருவே
ஆலகுணமிகுத்தே யகவறிவை யிழப்பர் சீடா 69

தெய்வவழியெனச் செப்புவது மென்ன குருவே
தெய்வ வனுக்கிரகச் சிறந்த ரூஹானல் குத்தூஸாஞ் சீடா 70

எவ்வு மறிவுகுத்து ஸெத்தன்மையானது குருவே
அவ்வற் றொருடுத்துப்போக்கு வளவற்ற தன்மையாஞ் சீடா

அவ்வலி விலங்கிய வாகாச வறிவென்ன குருவே
அவ்வனு மாகிறு மழகொன்றாய் நிறைந்ததே சீடா 72

ஒன்று யிருந்த வுவமை யென்ன வென் குருவே
ஒன்றே பலவான வுயர்தோற்ற மாகுமாஞ் சீடா 73

தோற்றத்தி னுண்மையைச்சொல்லவுவேண்டுமென் குருவே
தோற்றத்தை யெண்ணியே துயர்பட லாகாது சீடா 74

துயர்மனக் கற்பனைத் தோற்றத்தின் சாயலென் குருவே
உயர்நினைவு தள்ளி வுள்ளது மில்லையே சீடா 75

தாக நினைவினுண்மைச் சக்திக ளென்னவென் குருவே
பாகமாகு நினைவே பலதாகக் காட்டிடுஞ் சீடா 76

நினைவை மறக்க நிலையைச் சொல்லுவாய் குருவே
மனதை மறந்துமே மாதவஞ் செயவேண்டுஞ் சீடா 77

தவநிலை தன்னைத் தான்றறிந்துகொள்வ தென்குருவே
தவநிலை தெரிந்த தகமைக் காமீல்பார் சீடா 78

கெடிபுகழ் காமீலாற் கிடைப்பதென்ன வென்குருவே
கடிதான நிறைவதைக் காட்டி நிலைதருவார் சீடா 79

சரியான குருவைத் தானெப்படி யறிவதென்குருவே
சரிநிலை காண்டு தன்வாக் கொருமிப்பர் சீடா 80

வாக்கான் பிரட்டி வசப்படுத்துங் குருவென்ன வென்குருவே
வாக்காலு மனத்தாலு மருளாக நடிப்பாரே சீடா 81

உண்மைக் குருவினுயர் நிலைகாண்ப தென்குருவே
உண்மையானஹக்க னுயர்க்கஸ் புடையராஞ் சீடா 82

வேதம்பிறந்த விடமென்ன சொல்லுமென் குருவே
வேதாந்த மூலத்தின் மேனாதத்தொனியே நற்சீடா 83



நாதத் தொனியது நன்கு வெளிப்பட்டதெங்கு குருவே
வேதநாத லொடுக்க மேன்மை நிலையிலே சீடா 84

ஒடுக்க நிறைந்த வுயர்நிலை யென்னவென் குருவே
தடுக்கமில்லாத சமவெளிநினைவு சீடா 85

தானத்தை யொத்த தரமென்ன சொல்லுமென் குருவே
தானத்தனை மறந்து தவநிலை பெருதலாஞ் சீடா 86

தன்னை மறக்கத் தந்திர மென்னவென் குருவே
தன்னைமாற்றித் தறிக்க மனமிறக்குஞ் சீடா 87

விண்டகருத்தை விபரமாய்ச் சொல்லுமென் குருவே
விண்ணடைந்தபீரை மேன்மையாய்க் கேட்பது சீடா 88

மரணத்தின் வகையதை வளம்பெறச் சொல்லுமென்குருவே
மரணத்தின்றன்மை மாமூன்று விதமாகுஞ் சீடா 89

மூன்றுவிதத்தை முறைபெறச் சொல்லுமென் குருவே
சான்றமுன் றாலத்துவஞ் சாவையடையுமே சீடா 90

தூல மவுத்துக்குப்பின் றொடர்ச்சி யாவதென் குருவே
தூலத்தின் றடர்மலக்குச்சுத்த தத்துவஞ் சாகுஞ் சீடா 91

மலக்கல் மவுத்தின் வகைக்குப் பின்னுலென்ன குருவே
கலக்க மில்லாத ஹக்கான மவுத்துத்தான் சீடா 92

தூல மரணத்தாற் சுகமென்ன சொல்லுமென் குருவே
தூலத்தினுவி தொடர்நபுலானா நாஸூத்தாஞ் சீடா 93

மலக்கான தத்துவ மவுத்தென்ன சொல்லுமென் குருவே
மலக்கூத்து நன்மையை வழிபார்க்கு நற்குணச் சீடா 94

ஹக்கான மவுத்தென்று காணும்வகை யென்னகுருவே
ஹக்கான வுஜூது கத்த னிறைவாகுஞ் சீடா 95

மவுத்துக்கு முன்னே மவுத்தை யனுபவிப்பதென்ன குருவே
பவத்தூல சூட்சமம் பற்றியிறப்பதே சீடா 96

சூட்சம தேகி துஞ்சுவ தென்னவென் குருவே
சூட்சம தேகங் துய்யகாரணத்திற் படியுஞ் சீடா. 97

காரண தேகியின் கதிரகசிய மென்ன குருவே
காரண சாட்சியாய்க் காணுது கலந்தது சீடா. 98
அல்லாஹுவென்ற வரும்பொரு ளென்ன குருவே
அல்லாஹுவே யகண்டிதா கண்டஞ் சீடா. 99
காரணமான கற்பித கற்பனை யென் குருவே
காரணக் கருத்தில்லை கண்டது மெய்யில்லை சீடா. 100
கேட்டவை யாவுங் கிருபையாய்ச் சொன்னீர் குருவே
நாட்டமாய்க் கேட்டுநான் நற்கதி யடைந்தேன் வாழியே.

ஆக பாடல் 101.

ஞான சல்லாப மணி முற்றிற்று.

## விருத்தம்.

வாழிமேல் வாழி வருள் மிகுந்தோர் வாழி
வாழி திருஞான வல்லோர்கள் தாம் வாழி
வாழி சிவராஜ யோக வழியடைந்தோர் வாழி
வாழி பரிபூரண களஞ்சிய வழிநடந்தோர் வாழியே.

ஆக கூடிய பாடல் 1532.

மெஞ்ஞான பரிபூரணக் களஞ்சியம்
முற்றுப்பெற்றது.

மெஞ்ஞான பரிபூரணக் களஞ்சியம்

# பிழை திருத்த அட்டவணை.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 11 | 20 | குணமனி | குணமணி |
| 21 | 17 | மையல்வளை | மையல்வலை |
| 22 | 1 | மாதற் | மாதர் |
| „ | 17 | கூடாதோ | கூடாது |
| 31 | 7 | மிக்கவரி | மிக்கவறிவின் |
| 39 | 3 | யென்றுங் | யொன்றுங் |
| „ | 15 | லாமலிருங் | லாமலின் |
| „ | 17 | நூற் | நூல் |
| 40 | 24 | மேலவர் | மேயவர் |
| 41 | 1 | சாள் | சால் |
| 44 | 20 | படித்து | பிடித்து |
| 48 | 13 | பற்ருல் | பெற்ருவ |
| 57 | 21 | வருத்துடுங் | வருந்துங் |
| 58 | 9 | வல்லவ ணுக்கு | வல்லவனுக்கு |
| „ | 15 | ஞுன்மை | ஞுண்மை |
| 60 | 6 | சீராகக் | சீராகச் |
| 62 | 15 | மிகபர | இகபர |
| „ | 22 | யணுபு | யணுவு |
| 65 | 10 | விணங்கு | யிணங்கு |
| „ | 12 | மீணமதின் | யீனமதின் |
| 66 | 15 | போகு | போகும் |
| 67 | 27 | மனதினங் | மனதிணங் |
| „ | 28 | மியங்கியே | யிலங்கியே |
| 77 | 20 | யாஞர் | யாஞற் |
| 78 | 18 | விந்தவணு | விந்தவனு |

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 79 | 10 | பித்தியுள் | புத்தியுள் |
| ” | 28 | ஞானத் | ஞானந் |
| 80 | 3 | யுயரெண் | முயறெண் |
| ” | 11 | மே | மோ |
| 82 | 15 | மரணத்தின் | மரணந்தான் |
| ” | 23 | ளீங்கும் | ணீங்கும் |
| 83 | 3 | ஞெளிவரு | ஞெணிவரு |
| ” | 12 | நிலையா | நிலையடை |
| 87 | 8 | லொழிக்க | லொழுக்க |
| ” | 12 | னென்றுற் | னென்று |
| 88 | 5 | யுபசரனை | யுபசரணை |
| 90 | 11 | மிகச்சூட்ச | மிகச்சூட்சம் |
| 93 | 20 | செவித்தியே | செலுத்தியே |
| 94 | 11 | பறந்துகின்ற | பறந்துநின்ற |
| 98 | 7 | செய்ரீர் | செய்கிறீர் |
| ” | 20 | ரில்மைத் | இல்மைத் |
| ” | 21 | ரில்மைத் | இல்மைத் |
| 99 | 11 | சீதங்கேட்டு | சீதனங்கேட்டு |
| 100 | 16 | வரசிழந்து | யரசிழந்து |
| 101 | 16 | விடக்கற்றி | விடகட்றி |
| 106 | 23 | மிகுத்தோ | மிகுத்தே |
| 107 | 27 | யென்னும் | யெண்ணும் |
| 109 | 19 | னகயிருக்க | னகமிருக்க |
| 111 | 4 | கருனை | கருணை |
| 112 | 10 | யனுகு | யணுகு |
| ” | ” | மன்பான | லன்பான |
| ” | 14 | மனுக | மணுக |
| 113 | 9 | நாமயிட்டு | நாமமிட்டு |
| 114 | 2 | வரிலறு | மயக்கறு |
| ” | 18 | சுனை | சுணை |
| 116 | 12 | பஞ்சத்தாக் | பஞ்சத்தாற் |
| 118 | 13 | பிண்ட | பிண்டம் |



| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 119 | 8 | ஞெல்லிலை | ஞெல்லினை |
| ” | 11 | யெல்லா | யெல்லாம் |
| 122 | 19 | பாற்கொடுத்த | பால்கொடுத்த |
| 123 | 7 | தனைந்தா | தணைந்தா |
| 124 | 21 | றென்னும் | றெண்ணும் |
| 126 | 20 | தன்னியனே | தன்னியமே |
| ” | 23 | நாடுக் | நாடிக் |
| ” | 25 | சகத்தனிலே | சகந்தனிலே |
| 128 | 11 | மென | மன |
| 133 | 16 | கானுங் | காணுங் |
| 134 | 10 | நேர்மெயா | நேர்மையா |
| 146 | 4 | வாட்டு | காட்சி |
| 157 | 27 | லஃலங் | அஃலங் |
| 158 | 18 | மறைவுசெய் | மறைவுசேர் |
| 162 | 7 | ஹம்மாரு | அம்மாரு |
| ” | 21 | வேசத்தான் | வேதத்தால் |
| 163 | 15 | மடியில் | மடுவிற் |
| 164 | 28 | ஞனந்தோர் | நடந்தோர் |
| 166 | 9 | ஸிஷான் | இஹ்சான் |
| 174 | 4 | நாபத்தை | நாமத்தை |
| 177 | 12 | தொடக்க | தொடுக்க |
| 179 | 4 | டியானத்தை | தியானத்தை |
| 180 | 14 | சேர்த்திட | சேர்ந்திட |
| 182 | 10 | ழிழந்து | யிழந்து |
| ” | 21 | குப்பையான் | குப்பையால் |
| 185 | 18 | யாக்கி | நோக்கி |
| 192 | 3 | கூட்டி | காட்டி |
| ” | 10 | றவந்தொடு | தவந்தோடு |
| ” | 14 | நாடிடி | நாடி |
| 198 | 5 | தீர்க்கத்தோர் | தீர்க்கதரிசி |
| ” | 9 | அநநாளை | அந்நாளை |
| 205 | 1 | ஞான | ஞான |

பிழை திருத்த அட்டவணை முற்றிற்று.

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

## இப்புஸ்தகம் கிடைக்குமிடம்:

ஹாஜீ M. A. ஷாஹுல் ஹமீது & சன்ஸ்,
ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ்.

---

ஹாஜீ M. A. ஷாஹுல் ஹமீது & சன்ஸ்,
ஷாஹுல் ஹமீதிய்யா புஸ்தக ஷாப்,
நெ. 194, கைஸர் தெருவு, பிறக்கோட்டை கொளும்பு.

---

S. H. M. சலீம்,
நெ. 61, மார்க்கட்டு, கண்டி, சிலோன்.

---

மு. பத்ருத்தீன் லெப்பை,
மீரான் மக்காம் - தர்கா, கண்டி சிலோன்,

---

துபாஸ், முஹம்மது இப்ருஹீம் பிரதர்ஸ்,
நெ. 6, சையினுரோட்டு, ரங்கூன்.

---

மு. மு. முஹையத்தீன் மறைக்காயர்,
நெ. 67, குயின் தெருவு, பினாங்கு.

---

செ. மு. ருவுத்தர் நெய்னா முஹம்மது,
புதுத் தெருவு, முத்துப்பேட்டை.

---

26802